# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | அலகு - I அமெரிக்க விடுதலைப் போர் | 1 - 22 |
| 2. | அலகு - II 1812 ஆம் ஆண்டு போர் | 23 - 78 |
| 3. | அலகு - III ஆபிரகாம் லிங்கன் பங்கு | 79 - 106 |
| 4. | அலகு - IV தியோடர் ரூஸ்வெல்ட் | 107 - 144 |
| 5. | அலகு - V குடியேறியவர்களின் நிலப்பகுதி | 145 - 161 |

**அலகு -I**

அமெரிக்க விடுதலைப்போர் - கூட்டாட்சிகாலம் (1781-1789) - அரசியலமைப்பை உருவாக்குதல் - ஜார்ஜ் வாஷிங்டன் - உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கொள்கைகள் - கட்சி முறையின் தோற்றம் - ஜான் ஆடம்ஸ் - தாமஸ் ஜெபர்சனின் நிர்வாகம்.

**அலகு - II**

1812 - ஆம் ஆண்டுப் போர் - மன்றோ கொள்கை - ஆண்ட்ரூ ஜான்சன் - தேசியத்தின் எழுச்சி - மேற்கு நோக்கி நகருதல் - அடிமை முறை எதிர்ப்பு இயக்கம் - உள்நாட்டுப் போர்

**அலகு - III**

ஆப்ரகாம் லிங்கனின் பங்கு - புணரமைப்புத் திட்டங்கள் - தொழில் விரிவாக்கம் - தொழில் விரிவாக்கத்தின் பிரச்சனைகள் - அமெரிக்கா உலக வல்லரசாகுதல்.

**அலகு - IV**

தியோடர் ரூஸ்வெல்ட் - நிர்வாகம் - உட்ரோவில்சனின் உள்நாட்டுச் சீர்திருத்தங்கள் - முதலாம் உலகப்போர் - பொருளாதார மந்தம் - புதிய சீரமைப்புத் திட்டம் - பிராங்களின் ரூஸ்வெட்டும் இரண்டாம் உலகப்போரும்.

**அலகு - V**

குடியேறியவர்களின் நிலப்பகுதி - அமெரிக்க நீக்ரோக்கள் கெடுபிடிப்போர் - கொரியா நெருக்கடி - வியாட்நாம் போரில் அமெரிக்காவின் ஈடுபாடு - பொது உரிமை இயக்கம் - அமெரிக்கா தொழில்வளர்ச்சி உருவாகுதல்.

# அலகு - I

# அமெரிக்க விடுதலைப் போர்

பதினேழாம் நூற்றாண்டில் வட அமெரிக்காவில் அட்லாண்டிக் கடற்கரையோரமாக பதிமூன்ற ஆங்கிலக்குடியேற்றங்கள் தோன்றின. அவை விரைவில் மக்கள் தொகை மிகுந்த வளமிக்க நாடுகளாக வளர்ச்சியுற்றன. இது நாளடைவில் அவைகளை சுதந்தரமடையத்தூண்டியது. அதன் விளைவாக 1776-ல் அவை விடுதலைப் போரில் ஈடுபட்டு, சுதந்திரப் பிரகடனம் செய்து அமெரிக்க ஐக்கிய நாடுகளாக ஒருங்கிணைந்தன.

**போருக்குரிய காரணங்கள்**

அமெரிக்காவில் எழுந்த பிரச்சனைகள், ஐரோப்பியாவில் தோன்றிய சூழ்நிலைகள், இங்கிலாந்தின் ஆதிக்கக் கொள்கைகள் போன்றவைகளே புரட்சிக்குரிய மூலக்காரணங்களாகும்.

**1. அரசர்களின் கொடுங்கோலாட்சி**

இங்கிலாந்து அரசர்களின் கொடுங்கோலாட்சியும் தாய்நாட்டில் அவர்கள் அடைந்த துன்பங்களும் அவர்களை கடலுக்கு அப்பாலுள்ள பகுதிக்கு சென்று குடியேறச் செய்தன. ஆனால் அரசர்கள் தங்களுடைய அதிகாரத்தை குடியேற்றுப்பகுதிகளில் ஏற்ப்படுத்த முடியவில்லை. மேலும் மத்திய குடியேற்றங்களில் வாழ்பவர்கள் பெரும்பாலோர் ஹாலந்து, டென்மார்க், ஸ்வீடன், ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்கள் அவர்களுக்கு இங்கிலாந்து ஒரு அன்னிய நாடாகவே தோன்றியது.

**2. பொருளியல் வளங்கள்**

பொருளியல் வளங்கள் பெருகிய தன் காரணமாக குடியேற்றங்கள் தங்கள் நிர்வாகத்தை தாங்களே நிர்வகித்து கொள்ளலாம் என்ற நம்பிக்கைப் பெற்றன. பலவகை தானியங்கள் பயிரிடப்பட்டன, கப்பல்கள் கட்டப்பட்டன, வாணிபம் பெருகியது, ஆலைகள் தொடங்கப்பட்டன, அரசியலிலும் ஆங்கிலேயர்களின் தாராளக் கொள்கை மூலம் குடியேற்றங்கள் போதிய அனுபவம் பெற்றிருந்தன. இதன் விளைவாக குடியேற்ற மக்கள் அன்னிய ஆதிக்கத்தை எதிர்க்கத் தொடங்கினர்.

**3. தேசிய உணர்வுகள்**

குடியேற்றங்களிடையே தேசிய உணர்வுகள் தோன்றின. இங்கிலாந்து மூவாயிரம் மைல்கள் கடலுக்கு அப்பால் வாழ்ந்த அவர்கள் அங்குள்ள புவியில் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தங்களுடைய பண்பாட்டை வளர்த்து கொண்டனர். மேற்குப் பகுதியில் குடியேறிய மக்களின் சுதந்திர உணர்வும், தனித்து வாழும் பண்புகளும் பிராந்தியப் பற்றும் ஒரு தனி நாட்டை உருவாக்க வழிவகுத்தது.

**4. மெர்கண்டலிசம்**

18-ம் நூற்றாண்டில் இங்கிலாந்தும், ஏனைய ஐரோப்பிய நாடுகளும் பின்பற்றிய பழைய பொருளாதாரக் கொள்கை "மெர்கண்டலிசம்" எனப்பட்டது. இக்கொள்கையின் படி

குடியேற்றங்கள் தங்களது பொருளாதார வளத்தினை தாய்நாட்டடின் நலனிற்கு வழங்குமாறும் கட்டாயப்படுத்தப்பட்டனர். இவற்றை செயல்படுத்திட நாவாய் சட்டங்கள், உற்பத்தியாளர்கள் மீதான தடைச்சட்டம் போன்ற சட்டங்களும் இயற்றப்பட்டன.

**I) நாவாய் சட்டங்கள் (Navigation Acts)**

ஆங்கிலேய பாராளுமன்றம் நாவாய் சட்டங்களை இயற்றியது. அதன் மூலம் குடியேற்றங்களின் வாணிபத்திற்கு பல தடைகள் விதிக்கப்பட்டன அவையாவன

அ) வாணிபத்திற்கு, ஆங்கிலேய அல்லது குடியேற்ற நாட்டுக் கப்பல்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். கட்டணம் குறைவு என்பதால் பிற கப்பல்களை பயன்படுத்தக்கூடாது.

ஆ) புகையிலை, பாய்மரத்துண்டு போன்ற வரைமுறை செய்யப்பட்ட பொருட்களை, இங்கிலாந்தைத் தவிர பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது.

இ) அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதியாகும் அல்லது இறக்குமதியாகும் பொருட்கள் அனைத்தும் இங்கிலாந்தின் வழியாகவே செயல்பட வேண்டும் என்பனவாகும்.

**II) உற்பத்தியாளர்கள் மீதான தடைச்சட்டம் (Manufacturer's Prohibition Acts)**

ஆங்கிலேயர்களால் நிறைவேற்றப்பட்ட உற்பத்தியாளர்கள் மீதான தடைச்சட்டங்கள் குடியேற்றங்களின் தொழில்வளத்தை பாதிக்கும் வகையில் பல தடைகள் விதித்தது அவையாவன:

அ) தாய்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களை குடியேற்றங்கள் உற்பத்தி செய்யக்கூடாது (உ.ம்) (iron Act) ரும்புச் சட்டம் (1750)

ஆ) குறிப்பிட்ட சில பொருட்களை தாய்நாட்டிலிருந்து மட்டுமே இறக்குமதி செய்ய வேண்டும் என்றுமம் வலியுறுத்தியது (உ.ம்) வெல்லப்பாகு. வெல்லப்பாகு சட்டத்தின்படி (1733) (Molasses Act) இறக்குமதியாகும் வெல்லப்பாகின் மீது, ஒரு காலனுக்கு ஆறு பென்ஸ் வீதம் சுங்கவரி வசூலிக்கப்பட்டது. இதனால் தாய்நாட்டிலிருந்து மட்டுமே வெல்லப்பாகு இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உருவானது. ரோடு ஐலாந்து 80% வெல்லப்பாகினை கடத்தல் மூலம் பெற்றது.

இத்தடைகளை விரும்பாத குடியேற்ற மக்கள் கள்ளக்கடத்தலின் மூலம் தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டனர். இதனை நன்கறிந்த ஆங்கிலேய அமைச்சர்களும், அதிகாரிகளும் கண்டும் காணாததுபோல் விட்டுவிட்டனர். இந்நிலையில் இங்கிலாந்தின் மன்னரான மூன்றாம் ஜார்ஜ் சட்டங்களை நிறைவேற்றுவதில் மிகவும் கடுமையாயிருந்தார். இதனை குடியேற்ற மக்கள் விரும்பவில்லை. ஆயினும் கனடாவில் உள்ள பிரெஞ்சுக்காரர்களிடம் கொண்டிருந்த அச்சத்தின் காரணமாக மௌனமாக ஏற்றுக்கொண்டனர்

**2. ஏழாண்டுப் போர் (1756 - 63)**

ஐரோப்பாவில் நடைபெற்ற ஏழாண்டுப் போரில் இங்கிலாந்தும் பிரான்சும் பங்குபெற்றன. தோல்வி அடைந்த பிரான்சு, பாரீஸ் உடன்படிக்கையின்படி, கனடாவை இங்கிலாந்து வழங்கியது. இதனால், கனடாவிலிருந்த பிரெஞ்சுக்காரர்களிடம் அமெரிக்கர்களுக்கு இருந்து வந்த அச்சம் நீங்கியது. குடியேற்றங்களுக்கு தாய்நாட்டின் பாதுகாப்பு அவசியமற்றதாயிற்று. எனவே குடியேற்றங்கள் தங்கள் வெறுப்பினை வெளிப்படுத்தவும், தாய்நாட்டின் ஆதிக்கத்திலிருந்து விடுபடவும் முயற்சித்தனர். எனவே தான், ஒரு வரலாற்றறிஞர் "வட அமெரிக்காவில் பிரான்சின் ஆதிக்கம் மறைந்ததைத் தொடர்ந்து முதல் பிரிட்டிஷ் பேரரசும் மறையத் தொடங்கியது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

**3. முத்திரைச் சட்டம் (Stamp Act)**

அமெரிக்கர்களை செவ்விந்தியர்களிடமிருந்தும் பிரஞ்சுக்காரர்களிடம் இருந்தும் பாதுகாக்க ஒரு சிறு ஆங்கிலேய படை அமைக்கப்பட்டிருந்தது. தவிர ஏழாண்டுப் போரின் போது ஏற்பட்ட செலவில் ஒரு சிறுபகுதியை அமெரிக்கர்களிடமிருந்து வசூல் செய்யவும் பிரதம மந்தியான கிரென்வில் பிரபு (Lord Grenville) எண்ணினார். இதன் பொருட்டு "முத்திரை சட்டத்தை" வெளியிட்டார். இதன்படி செய்யப்படும் ஒவ்வொரு பத்திரத்தின் மீதும் ஒரு சிறு தொகையினை வாரியாக செலுத்த ஆணையிட்டார். இதனை ஏற்க மறுத்து மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். எட்மண்டு பர்க்கும் "பிரதிநிதித்துவம் இன்றி வரிவிதிக்கக் கூடாது" (No Taxation without Representation) என்று முழங்கினார். "முத்திரைச்சட்ட எதிர்ப்பு மாநாடு" நியூயார்க்கில் கூடியது. இதில் ஒன்பது குடியேற்றங்கள் பங்கேற்றன. ஆங்கிலேயப் பொருட்களை வாங்க மறுத்தனர். வணிகம் பாதியாகக் குறைந்தது. மேலும் முத்திரைத் தாள்கள் தீக்கிரையாக்கப்பட்டதுடன், விற்கும் அதிகாரிகளையும் விரட்டியடித்தனர். செய்தித்தாள்கள் கறுப்பு மை பூசி துவக்கம் கொண்டாடின. இறுதியாக பிரதம மந்தியான ராக்கிங்ஹாம் (Rockingham) முத்திரைச் சட்டத்தை நீக்கினார். ஆனால் 1766ல் குடியேற்றங்களின் மீது வரிவிதிக்கும் உரிமையும் அதிகாரமும் பாராளுமன்றத்திற்கு உண்டு என்பதை அறிவிக்கும் வகையில் அறிக்கை சட்டத்தை (Declaration Act) வெளியிட்டார். இச்சட்டம் குடியேற்றங்களின் மனக்கசப்பை அதிகரித்தது.

**4. பாஸ்டன் படுகொலை (1770)**

மறைமுகமான வரிவிதிப்பினை மக்கள் எதிர்க்கமாட்டார்கள் என எண்ணிய நிதியமைச்சரான "சார்லஸ் டவுண்ஷெண்ட்" (Charles Townshend) தேயிலை, கண்ணாடி, காகிதம், வர்ணக்கலவை ஆகியவற்றின் மீது வரிவித்தார். குடியேற்ற மக்கள் மீண்டும் கிளர்ச்சியில் இறங்கினர். வரிவிதிக்கப்பட்ட பொருட்களை வாங்கா இயக்கமும் எழுந்தது. கிளர்ச்சியை அடக்க இராணுவம் அனுப்பப்பட்டது. இராணுவத்திற்கும், மக்களுக்குமிடையே எழுந்த மோதலின் போது மூன்று அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். இதனை செய்தித்தாள்கள் "பாஸ்டன் படுகொலை" என வருணித்தன. இந்நிகழ்ச்சி

குடியேற்றங்களின் வெறுப்பினை வளர்த்ததுடன், தாய்நாட்டுடனான உறவையும் நலியச் செய்தது. இந்நகழ்ச்சியினை "பாஸ்டில் சிறைச்சாலையின்" வீழ்ச்சியுடன் ஒப்பிட்டுப் பேசுகின்றனர்.

**5. பாஸ்டன் தேநீர் விருந்து (1773)**

பிரதம மந்திரியான நார்த் பிரபு (Lord North) தேயிலையின் மீதான வரியைத் தவிர ஏனைய வரிகளை ரத்து செய்தார். 1773-ல் தேயிலைச் சட்டத்தின்படி, தேயிலையின் விலையை குறைக்கும் எண்ணத்துடன். நேரடியாக தேயிலையை இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு கொண்டு செல்ல கிழக்கிந்திய கம்பெனிக்கு அனுமதியும் அளித்தார்.1773 ல் மூன்று கப்பல்கள் 340 பெட்டிகளில் 25,000 பவுன்கள் மதிப்புள்ள தேயிலையை ஏற்றிக் கொண்டு பாஸ்டன் துறைமுகத்தை அடைந்தன. வரிவிதிக்கப்பட்ட தேயிலையை இறக்க மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். மாசகுசெட்லின் கவர்னரோ என்று முரண்டு பிடித்தார். இந்நிலையில் சுதந்திரதாகம் கொண்ட இளைஞர்கள் சாமுவேல் ஆடம்ஸ் (Samuel Adams) தலைமையில் செவ்விந்தியர்கள் போல் வேடம் பூண்டு கப்பலுக்குள் நுழைந்து தேயிலைப் பெட்டிகளை கடலில் வீசினர். இதனையே "பாஸ்டன் தேநீர் விருந்து" (Baston Tea Party) என்று வரலாற்றறிஞர்கள் கூறுகின்றனர். இதனால் ஆத்திரமுற்ற மூன்றாம் ஜார்ஜ் பாஸ்டன் துறைமுகத்தை மூடுமாறு ஆணையிட்டார். மாசசூசெட்டஸின் சாசனமும் பறிக்கப்பட்டது. எரிச்சலுற்ற மக்கள் போட்டி அரசாங்கத்தை அமைத்தனர்.

**6. ஆட்சியாளர்களின் தவறுகள்**

மூன்றாம் ஜார்ஜ் பாஸ்டன் துறைமுகத்தை மூடியது முதல் தவறாகும். தங்களது உரிமைகள் பறிக்கப்படுவதா விரும்பாத குடியேற்றங்கள் முதன்முறையாக தாய்நாட்டிற்கு எதிராக ஒன்று திரண்டனர். தவிர அரசரால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள். சட்டமன்றங்களுடன் அடிக்கடி மோதிக் கொண்டனர். சட்டமன்றங்கள் நிறைவேற்றும் சட்டங்களுக்கு ஒப்புதல் தராது நிராகரித்தனர். சில சமயங்களில் சட்டமன்றங்கை கூட்டாது ஒத்தி வைத்தனர். இதனை விரும்பாத சட்டமன்றங்கள் ஆளுநர்களின் ஊதியத்தை ஒதுக்கீடு செய்துதர மறுத்தன. இவை குடியேற்ற மக்களின் வெறுப்பிற்கு எண்ணெய் ஊற்றின.

**7. கியூபெக் சட்டம் (1774) (QubecAct)**

1774-ல் நார்த் பிரபு கியூபெக் சட்டத்தை வெளியிட்டார். இச்சட்டம் கனடாவிலிருந்து பிரெஞ்சுக்காரர்களுக்கு பல சமூக. சமய சலுகைகளை அளித்தது. இதனை குடியேற்ற மக்கள் தவறாக புரிந்து கொண்டனர். பிரெஞ்சுக்காரர்களின் உதவியுடன் தங்களை அழிக்க தாய்நாடு முயல்வதாக எண்ணினர். எனவே தாய்நாட்டுடனான உறவை முறித்துக் கொள்ளவும் தயாராயினர்.

### போக்கு

### பிலடெல்பியா பேரவை (1774)

மாசசூடிசமடஸின் சாசனம் ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, வர்ஜீனியா சட்டமன்றத்தின் வேண்டுகோளின்படி, ஜார்ஜியாவைத் தவிர ஏனைய குடியேற்றங்களை அனைத்தும் "பிலடெல்பியாவில்" ஒன்று கூடின, இதனை "முதலாவது கண்ட மாநாடு" என்றும் கூறுகின்றனர். இப்பேரவைக்கு ஜார்ஜ் வாஷிங்டன் தலைமை ஏற்றார். இவ்வகை, ஆங்கிலேய பாராளுமன்றத்திற்கு தங்கள் மீது வரிவிதிக்க உரிமை இல்லை என்றும், மாசசூசெட்ஸின் சாசனம் ரத்து செய்யப்பட்டது தவறு என்றும் தீர்மானங்களை நிறைவேற்றின. பிரிட்டனுடன் வணிகம் செய்ய தடை விதித்தது, ஒரு பாதுகாப்பு குழுவை அமைத்ததுடன் படையை திரட்டவும் முயன்றது.

மாசசூசெட்ஸின் ஆளுநரான தளபதி கேஜ் (Gage) என்பவர், கன்கார்டு என்ற இடத்திலுள்ள வெடிமருந்து கிடங்கினைப் கைப்பற்றும் பொருட்டு ஒரு படையை அனுப்பி வைத்தார். அப்படை ஏமாந்து திரும்பி வரும்போது லெக்ஸிங்டன் (Lexington) என்ற இடத்தில் வழிமறிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து குண்டுகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. ஏராளமான ஆங்கிலேய வீரர்கள் (250) கொல்லப்பட்டனர். எட்டு அமெரிக்கர்கள் பலியாயினர் இதைத் தொடர்ந்து போர் பரவலாயிற்று.

### இரண்டாவது கண்ட மாநாடு (1775)

1775 - ல் இரண்டாவது கண்ட மாநாடு பிலடெல்பியாவில் கூட்டப்பட்டது. இம்மாநாடு குடியேற்றங்களின் வெறுப்பினை வளர்த்த பதின்மூன்று சட்டங்களை ரத்து செய்யக் கோரி "ஆலிவ் கிளை மனுவினை" (Olive branch petition) மன்னருக்கு அனுப்பி வைத்தது. மன்னர் இதனை ஏற்க மறுக்கவே போர் பரவலாயிற்று. இம்மாநாடு ஜார்ஜ் வாஷிங்டனைத் தலைமை தளபதியாக நியமித்தது.

### அமெரிக்க சுதந்திர அறிக்கை (1776)

அமெரிக்கர்கள் "பங்கர் குன்றுகள்" என்ற பகுதியினைக் கைப்பற்றி கொண்டனர். ஆங்கிலேயத் தளபதியான கேஜ் மிகுந்த சிரமத்துடன், ஏராளமான வீரர்களை இழந்து அதனை மீட்டார். இந்நிலையில் "தாமஸ் ஸ்பெயின்" எழுதிய "பொது அறிவு" (Common sense) என்ற புத்தகத்தால் தூண்டப்பட்ட மக்கள் அமெரிக்காவை சுதந்திர நாடாக்க விரும்பினர். அவரின் கருத்துப்படி குடியேற்ற நாடுகள் தங்களைத் தாங்களே சிறந்த முறையில் ஆட்சி செய்துகொள்ள முடியும் என்றும். இப்பொழுது புதிய அரசை உருவாக்க ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது என்றும். ஐரோப்பிய சுரண்டல்களிலிருந்து விடுபட தக்க தருணம் வந்துவிட்டது என்றும் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இவரது கருத்துக்களை தேசபக்தி கொண்ட அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு சுதந்திர உணர்வு பொங்கியெழுந்தது.

1776-ம் ஆண்டு ஜூலை மாதம் 4ம் நாள் அமெரிக்கா சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது. இதற்கான "சுதந்திர அறிக்கையினை" (Declaration of Independence) தாமஸ் ஜெபர்சன் (Thomas Jefferson) என்பவர் இயற்றினார். "எல்லா மனிதர்களும் சமமாக படைக்கப்பட்டிருக்கிறார்கள். படைத்தவனால் பறிக்க முடியாத உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. வாழ்க்கை உரிமை, சுதந்திர உரிமை, மகிழ்ச்சியை நாடும் உரிமை போன்றவை இதில் இடங்கும். இவ்வுரிமைகளை அடையவே மக்களிடையே அரசுகள் நிறுவப்படுகின்றன. அரசுக்கு. ஆளப்படுபவர்களின் அனுமதியுடன் நியாயமான அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. எந்த அரசம் இந்த இலட்சியங்களை மதிக்காது அழிக்க முற்பட்டால் அவ்வரசை மாற்றியமைத்து புதிய அரசு ஒன்றை நிறுவ மக்களுக்கு உரிமையுண்டு.

இவ்வறிக்கையை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் "பிறப்புப் பதிவு பத்திரம்" என்று சிலர் கூறுகின்றர். இவ்வறிக்கை, பிரான்சு, இந்தியா போன்ற நாடுகளின் அரசியல் சட்டத்திற்கு ஒரு முன்மாதிரியாக அமைந்தது.

**யார்க்டவுன் சரணடைவு (1781)**

1780ல் ஆங்கிலேயத் தளபதியான "காரன்வாலிஸ்" (Cornwallis) அமெரிக்கத் தளபதியான கேட்டலை "காம்டன்" (Comdon) சண்டையில் வென்றார். இவர் ஆங்கிலேயக் கப்பல்களுடன் தொடர்பு கொள்ளும் எண்ணத்துடன் கடற்கரையை அடைந்தார். அங்கு எதிர்பார்த்ததற்கு மாறாக பிரெஞ்சுக் கப்பல் படை இருந்ததால் மீண்டும் நிலப்பகுதிக்குத் திரும்பினார். ஆனால் 1781ல் யார்க்கடவுன் (Yorktown) என்ற இடத்தில் அமெரிக்கப் படைகளால் சூழ்ந்து கொள்ளப்பட்டார். எனவே வேறுவழியின்றி வாஷிங்டனின் சரணடைந்தார். அத்துடன் போரும் முடிவுற்றது.

**பாரிஸ் உடன்படிக்கை (1783)**

பாரிஸில் நடைபெற்ற சமாதான பேச்சுவார்த்தைக்கு அமெரிக்காவின் சார்பாக பெஞ்சமின் பிராங்களின், ஜான் ஆடம்ஸ் (John Adams), ஜான் ஜே (John Jay) ஆகியோரும், இங்கிலாந்தின் சார்பாக அமெச்சர் ஷெல்பர்னும் (Shelburne) கலந்து கொண்டனர். அமெரிக்க சுதந்திரத்தை இங்கிலாந்து ஏற்றுக்கொண்டது. மேற்கில் மிசிசிபி வரையிலுள்ள பகுதிகளையும், வடக்கே ஐம்பெரும் ஏரிகளையும் அமெரிக்கர்கள் பெற்றனர். நியூபவுண்டுலாந்து, நோவாஸ்கோஷியா (Navascotia) நீர் பகுதிகளில் மீன்பிடிக்கும் உரிமையை அமெரிக்கா பெற்றது; மிசிசிபி நதியில் கப்பல் செலுத்தும் உரிமையை இங்கிலாந்து பெற்றது.

**விளைவுகள்**

அமெரிக்க சுதந்திரப்போர் பல அரிய விளைவுகளைத் தோற்றுவித்தது. அவையாவன:

1. அமெரிக்கா என்ற புதிய நாடு பிறந்தது; பதின்மூன்று குடியேற்றங்களும் ஒன்றாக இணைந்து ஒரு கூட்டரசை உருவாக்கினர்; ஜார்ஜ் வாஷிங்டன் அதன் முதல் குடியரசுத்தலைவரானார்.
2. அமெரிக்க சுதந்திரப்போர் பிரெஞ்சுப் புரட்சிக்கு வழிகோலியது. அமெரிக்க சுதந்திரப் போரில் பங்கு பெற்றதால் நலிவடைந்திருந்த பிரெஞ்சுப் பொருளாதாரம் மேலும் நலிவடைந்தது. போரில் கலந்து கொண்ட பிரெஞ்சு வீரர்கள், அமெரிக்காவிலிருந்து "தனி மனித சுதந்திரம்", "குடியரசு" போன்ற அரிய கருத்துக்களால் கவரப்பட்டனர்; அக்கருத்துக்கள் வேகமாகப் பரவி பிரெஞ்சுப் புரட்சியை விரைவுபடுத்தியது.
3. அமெரிக்க குடியேற்றங்களில் விடுதலை, இலத்தீன் அமெரிக்க குடியேற்றங்களின் விடுதலைக்கு வழிகாட்டியாக அமைந்தன.
4. மூன்றாம் ஜார்ஜ் மன்னரின் வல்லாட்சிக்கு முடிவுகட்ட விரும்பிய மக்கள் மன்னரின் அதிகாரத்தை வெகுவாகக் குறைத்தனர்.

**ஆங்கிலேயரின் தோல்விக்கான காரணங்கள்**

இங்கிலாந்து வலிமையான கப்பற்படையைப் பெற்றிருந்தது, கனடாவும் அவர்களுக்குச் சொந்தமாயிருந்தது, ஏராளமான அமெரிக்கர்களும் இங்கிலாந்துக்கு ஆதரவாக செயல்பட்டனர். இதற்கு மாறாக பதின்மூன்று குடியேற்றங்களும் ஒற்றுமையின்றி பிரிந்து கிடந்தன, ஆயிலும் இராணுவ வசதியோ, நிதி வசதியோ இல்லை, ஆயினும் இப்போரில் இங்கிலாந்து தோல்வியுற்றது வியப்பிற்குரியதே. அதற்கு பல காரணங்கள் துணையாயின.

1. ஆங்கிலேயர்கள் 3000 மைல்களுக்கு அப்பால் இருந்து போரினை நடத்தினர், போரிடும் நிலத்துடன் ஒப்பிடும் போது ஆங்கிலேய வீரர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை, மேலும் அவர்களுக்கு அமெரிக்காவின் நில அமைப்பு பற்றி ஏதும் தெரியாது. இதற்கு மாறாக அமெரிக்கர்கள் தங்களுக்கு பழக்கமான நிலப்பரப்பில் போர் புரிந்ததால் மிகச் சிறப்பாக செயல்பட்டன.
2. ஆங்கிலேயத் தளபதிகளான கேஜ், ஹோவ், பர்காயின் போன்றவர்கள், வாஷிங்டனுடன் ஒப்பிடும் போது திறமையற்றவர்களாகவே காணப்பட்டன. வாஷிங்டன் நாட்டுப்பற்றுடன் போராடினார்.
3. அமெரிக்காவில் குடியேறியவர்களில் பலர் ஆங்கிலேய வீரர்களுக்கு உறவினர்களாக அமைந்தனர். அவர்களுக்கு எதிராக ஆங்கிலேய வீரர்கள் முழு மனதுடன் போரிடவில்லை. தவிர ஜெர்மனிய கூலிப்படையை இறக்கியத இவர்கள் வெறுத்தனர்.
4. மூன்றாம் ஜார்ஜ் மன்னரின் பிடிவாத குணமும், முன்கோபமும் தோல்விக்கு காரணமாயின.
5. இங்கிலாந்தின் மீது கொண்டிருந்த பழிவாங்கும் உணர்வால் பிரான்சும், ஸ்பெயினும் அமெரிக்க குடியேற்றங்களுக்கு ஆதரவாக நிதி உதவியையும், படை உதவியையும் வழங்கின.

## ஜார்ஜ் வாஷிங்டன்

அமெரிக்காவின் தந்தையென போற்றப்படும் ஜார்ஜ் வாஷிங்டன், அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவராவார். இவரது செயல்கள் அமெரிக்காவிற்கு பெருமை சேர்ப்பதாக அமைந்ததுடன், மற்ற குடியாட்சித் தலைவர்களுக்கும் வழிகாட்டியாக அமைந்தன.

**தொடக்க கால வாழ்க்கை**

வர்ஜீனியா மாநிலத்திலுள்ள மவுண்ட் வர்னான் பண்ணைக் குடும்பம் ஒன்றில் பிறந்தார். போர் பயிற்சி பெற்றிருந்தார். 1774-ல் கூடிய பிலடெல்பியா மாநாட்டில் பங்குபெற்று அதன் தலைவராக இருந்தார். அமெரிக்கப்படைகளின் தலைமைத் தளபதியாகவும் பணியாற்றினார். இவரது தீவிர முயற்சியாலும், உருக்கமான பேச்சாலும் வீரர்கள் சலிக்காது போரிட்டு பெற்றியைத் தந்தனர். அரசியலமைப்புக் குழுவின் தலைவராகவும் செயல்பட்டார். 1789-ல் மிகுந்த அச்சத்துடன் முதல் குடியரசுத் தலைவராகப் பதவியேற்றார். ஜான் ஆடம்ஸ் துணைத் தலைவரானார்.

**உள்நாட்டுக் கொள்கை**

**அ) செயலர்கள் நியமனம்**

அமைச்சரவை போன்ற அமைப்பு இல்லாததால் தனக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு திறமை சான்ற பலரை "செயலர்களாக" நியமித்தார். அலெக்சாண்டர் ஹாமில்டனை கருவூலச் செயலராகவும், தாமஸ் ஜெபர்சனை வெளிநாட்டுச் செயலராகவும். எட்மண்ட் ராண்டால்ப் என்பவரை சட்டச் செயராகவும், ஹென்றி நாக்ஸ் என்பவரை போர்துறை அமைச்சராகவும் நியமித்தார். இவர்களைக் கலந்தாலோசித்தே முடிவெடுக்கும் வழக்கத்தை மேற்கொண்டார்.

**ஆ) நீதித்துறைச் சட்டம்**

அரசியலமைப்பு நீதித்துறை ஒன்றினை தோற்றுவித்ததே தவிர அதன் அமைப்பு, செயல்முறை பற்றிய விளக்கம் ஏதும் தரப்படவில்லை. இக்குறையினைக் களைய 1789-ல் நீதித்துறைச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. அதன்படி ஆறு நீதிபதிகளைக் கொண்ட தலைமை நீதிமன்றமும் 13 மாவட்ட நீதிமன்றங்களும் மூன்று சுற்றுலா நீதிமன்றங்களும் நிறுவப்பட்டன. ஜான் ஜே தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். தலைமை நீதிபதியும் ஏனைய நீதிபதிகளும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டு செனட் மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டனர். நீதிமன்றங்களின் அதிகார வரம்புகளும் குறிப்பிடப்பட்டது.

**இ) உரிமைகள் பட்டியல்**

அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட போது அதில் "உரிமைகள் பட்டியல்" இல்லாததால், அதனை ஏற்க ஐந்து மாநிலங்கள் தயக்கம் காட்டின. எனவே கூட்டாட்சிவாதிகள் பின்னர் இணைப்பதாக உறுதிகூறி அரசியலமைப்பை ஏற்கச் செய்தனர். எனவே 1789-ல் ஜேம்ஸ் மாடிசனின் தலைமையில் ஒரு குழ அமைக்கப்பட்டு "பன்னிரண்டு திருத்தங்கள்" முன்வைக்கப்பட்டன. அதில் 10 திருத்தங்களை தேவையான மாநிலங்கள் ஏற்றன.

அவையாவன, பேச்சுரிமை, எழுத்துரிமை, சமய உரிமை, அமைதியாகக் கூடும் உரிமை, ஆயுதம் ஏந்தும் உரிமை, நடுவர்களைக் கொண்டு விசாரிக்கும் உரிமை போன்றவைகளாகும். இப்பகுதி அரசியலமைப்பின் சிறப்பான பகுதியாகும்.

**ஈ) ஹாமில்டனின் நிதிக் கொள்கை**

ஹாமில்டன் 1755-ல் மேற்கிந்திய தீவுகளில் ஒரு சிறு தீவில் பறிந்தார். சட்டம் பயின்றவர். சுதந்திரப் போரில் பங்குபெற்று பீரங்கிப் படையின் தலைவரானார். வாஷிங்டனின் அந்தரங்க செயலராகவும் பணியாற்றினார். நியூயார்க் நகரத்துச் செல்வந்தரின் மகளை மணந்தார். நியூயார்க்கின் பிரதிநிதியாக பிலடெல்பியா மாநாட்டில் கலந்து கொண்டார். அரசியலமைப்பு மாநாட்டை கூட்ட வேண்டும் என வலியுறுத்தியவர்களில் இவரும் ஒருவராவார். கூட்டாட்சிக் கட்டுரைகளில் மிகுதியானவற்றை எழுதியவரும் இவரே. இவர் செல்வந்தர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டார். இவரை வாஷிங்டன் கருவூல செயலராக நியமித்தார்.

ஹாமில்டன் உருவாக்கிய நிதித்திட்டத்தை “ஹாமில்டனின் முறை” என்று கூறுகின்றனர். இது நான்க அம்சங்களை கொண்டிருந்தது. 1. தேசியக் கடனை முழுவதுமாக தருதல் 2. மாநிலங்களின் கடனை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளுதல் 3. வங்கி ஒன்றினை அமைத்தல் 4. கடன் கழிவு நிதியினை உருவாக்குதல் என்பனவாகும்.

**சாராயக் கலகம்**

மேற்கு பென்சில்வேனியாவைச் சார்ந்த விவசாயிகள், அதிகப்படியான தானியத்திலிருந்து விஸ்கி தயாரித்து விற்று வந்தனர். விஸ்கியின் மீது வரி விதிக்கப்பட்டதைக் கண்டித்ததுடன் செலுத்தவும் மறுத்து கிளர்ச்சியில் ஈடுபட்டனர். வாஷிங்டன் நான்கு மாநிலங்களிலிருந்து சுமார் 15,000 வீரர்களைத் திரட்டி, ஹாமில்டனின் தலைமையில் அனுப்பி வைத்து கலகத்தை அடக்கினார். இச்செயலால் மத்திய அரசின் பெருமை உயர்ந்தது. தன் முடிவை செயலாக்கும் திறன் அதற்கு உண்டு என்பதும் வெளிப்பட்டது.

**2. மாநிலக் கடன்களை மத்திய அரசு ஏற்றல்**

போரின் போது மாநிலங்கள் பெற்றிருந்த கடன் சமார் 21.5 மில்லியன் டாலர்களாகும். இதனை மத்திய அரசே ஏற்க வேண்டும் என ஹாமில்டன் விரும்பினார். ஆனால் கடன்தொகை மாநிலங்களுக்கிடையே பெருமளவில் வேறுபட்டிருந்தது. வர்ஜீனியா, பென்சில்வேனியா போன்ற மாநிலங்கள் பெருமளவு கடனை கழித்துவிட்டிருந்தன. எனவே இதனை கடுமையாக எதிர்த்தன. கடன் தொகையில் சிறிதும் செலுத்தாத தென்கரோலினா, மாசசூசெட்ஸ் போன்ற மாநிலங்கள் ஹாமில்டனின் முடிவை வரவேற்றன.

இறுதியாக ஹாமில்டன் தன் முடிவை செயலாக்க ஒரு வழியினைக் கண்டார். தன் திட்டம் ஒப்புக் கொள்ளப்பட்டால் “தேசியத் தலைநகரை” வர்ஜீனியாவில் அமைப்பதாக

ஜெபர்சன் மூலம் உறுதியளித்தார். அதுவரை தற்காலிகமாக தலைநகரை பென்சில்வேனியாவில் அமைப்பதாகவும் கூறி சட்டவரைவினை நிறைவேறச் செய்தார்.

இவ்வுடன்பாட்டின்படி வர்ஜீனியாவில் புதிய தலைநகருக்கான இடத்தை பொடோமக் நதிக்கரையில் வாஷிங்டன் தேர்ந்தெடுத்தார். இது கொலம்பியா மாவட்டம் என்ற பெயரில் தனி நிர்வாகத்தின் கீழ் அமைக்கப்பட்டது. புதிய தலைநகரம் வாஷிங்டனின் பெயராலேயே "வாஷிங்டன்" எனப் பெயர் பெற்றது.

**3. தேசிய வங்கி**

ஹாமில்டன் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கான வங்கி ஒன்றினைத் தோற்றுவித்தார். இது பலவிதத்தில் குறிப்பாக அரசாங்கத்துடன் தொடர்ப கொள்வதில் இங்கிலாந்து நாட்டு வங்கியைப் போலவே அமைந்தது. இருபது ஆண்டுகளுக்கு செயல்படுவதற்கான சாசனம் ஒன்றும் வழங்கப்பட்டது. அதன் மொத்த முதலீடான 10 மில்லியன் டாலரில், 1/5 பங்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. இதன் மூலம் தனியார் பொறுப்பில் வங்கி செயல்பட அனுமதிக்கப்பட்டது. அவ்வங்கிக்கு நாணயங்கள் அச்சிடவும், நிதி திரட்டவும், கிளை நிறுவனங்களை அமைத்துக் கொள்ளவும், அரசாங்கத்திற்கும், ஏனையவர்களுக்கும் கடன் தரவும் அனுமதிக்கப்பட்டது. இதன் மூலம் தேசியக் கடன்களைத் திருப்பித் தரவும், நிலையான நாணயக் கட்டுப்பாட்டினைக் கொண்டு வரவும் ஹாமில்டன் முயன்றார்.

ஹாமில்டனின் திட்டத்தை ஜெபர்சன் வன்மையாகக் கண்டித்தார். வங்கி பற்றி அரசியலமைப்பு ஏதும் கூறவில்லை என்றும், அது அரசியல் அமைப்பில் உள்ளத்திற்கு மாறாக உள்ளதாகவும் கருதினார். மேலும் மாநிலங்களின் உரிமையில் ஊடுறுவதாகவும் கூறினார். ஆனால் ஹாமில்டன் அனைத்து அதிகாரங்களையும் அரசியலமைப்பில் சேர்க்க முடியாது என்பதை விளக்கியதுடன், சட்டமன்றத்திற்குள்ள "பொதிந்துள்ள அதிகாரத்தின்படி" வங்கியை அமைக்க வழியண்டு எனவும் வாதிட்டார். அதனையொட்டி சட்டவரைவு நிறைவேற்றப்பட்டு 1791-ம் ஆண்டு வங்கி அமைக்கப்பட்டது. 1792-ல் உருவான நாணயச்சாலை சட்டத்தின்படி தங்க, வெள்ளி நாணயங்களை வெளியிட்டது. நாணயங்கள் தசாம்ச முறையில் வெளியிடப்பட்டன.

**4. கடன் கழிவு நிதி**

இறுதியாக கடன் கழிவு நிதி ஒன்றினை ஏற்படுத்தினார். இதன் மூலம் சிறிது சிறிதாக பணம் சேர்த்து தேசியக் கடனை திருப்ப முயன்றார். இது ஹாமில்டனின் கடைசி சாதனையாகும்.

தொழில் வளர்ச்சிக்காக அதிகமான பாதுகாப்பு வரி, மான்யம் போன்ற பல வசதிகளை அளித்தார். ஆனால் தொழில் வளர்ச்சியில் மக்கள் போதிய அக்கறை காட்டாததால் இவை போதுமான பலனைத் தரவில்லை.

ஹாமில்டனின் நிதித் திட்டத்தின் வெற்றிகள் அவரது திறமைக்க சான்றாக அமைந்தன. அமெரிக்கப் பொருட்களை ஐரோப்பியர்கள் விரும்பி வாங்கினர். 1817க்கு முன்

உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்கள் திருப்பப்பட்டன. சுருக்கமாகக் கூறின் சீர்கெட்டிருந்த அமெரிக்க நிதிநிலைமையை செம்மைப்படுத்தியதுடன், சேமித்து வைக்கும் நாடாகவும் மாற்றினார். ஆனால் அவரது சாதனைகள் மோதல்களைத் தோற்றுவித்ததுடன் அரசியல் கட்சிகள் தோன்றவும் காரணமாயின.

**உ. அரசியல் கட்சிகள்**

முதன்முறையாக அமெரிக்காவில் அரசியல் கட்சிகள் தோன்றின. முக்கியமான பிரச்ச்னைகளின் மக்களிடையே காணப்பட்டன கருத்து வேறுபாடுகளே இதற்கு காரணமாயின. குறிப்பாக ஹாமில்டனின் நிதிக் கொள்கையும், பிரெஞ்சுப் புரட்சியுமாகும்.

ஹாமில்டன் மக்களாட்சியில் நம்பிக்கை இல்லாதவர். மக்கள் மனம் மாறும் தன்மையுடையது என்றும், அவர்களால் சரியாக முடிவு செய்ய முடியாது என்றும் கருதினார். ஆனால் செல்வந்தவர்கள் நன்கு கற்றவர்கள், திறம்பட முடிவெடுக்கக் கூடியவர்கள் என்றும் கருதினார். மேலும் தவறான ஆட்சியால் செல்வந்தர்களுக்குத்தான் நஷ்டம் ஏற்படும் என்றும் கூறினார். சுருக்கமாகக் கூறின் செல்வந்தர்களுக்கு ஆதரவாகவே திட்டங்களைத் தீட்டினார். எனவே செல்வந்தர்களைக் கொண்ட வடக்கு மாநிலங்கள் "கூட்டாட்சிவாதிகளை" ஆதரித்தன. ஜெபர்சன் ஒரு இலட்சியவாதி மக்களை பெரிதும் மதித்தவர். தெற்கிலுள்ள விவசாயிகள் அவரை ஆதரித்தனர். நாட்டின் வலுவான பொருளாதாரத்திற்காக, ஆட்சிக்கு செல்வந்தர்களின் துணை தேவை என ஹாமில்டன் கருதினார். அதன் அடிப்படையிலேயே தனது நிதிக் கொள்கைகளை அமைத்தார். ஆனால் ஜெபர்சனின் கருத்தப்படி, ஹாமில்டனின் திட்டங்கள் அரசாங்கத்தை செல்வந்தர்களின் தயவில் நடத்துவதுபோலாயிற்று.

கட்சிகள் தோன்றக் காரணமாய் அமைந்தது பிரெஞ்சுப் புரட்சியே ஆகும். வடக்கிலுள்ள செல்வந்தர்கள் வணிக நலனை முன்னிட்டு இங்கிலாந்தை ஆதரித்தனர். ஆனால் தெற்கிலுள்ள விவசாயிகள் சுதந்திரத்தை விரும்புபவர்கள். எனவே பிரெஞ்சுப் புரட்சியை ஆதரித்தனர். தங்களை ஏய்த்துப் பிழைக்கும் ஆங்கிலேய வணிகர்களை வெறுத்தனர்.

அரசியல் கட்சிகள் எப்போதும் தோன்றின என்பதை தெளிவாகக் கூறமுடியாது. அரசியலமைப்பு உருவாக்கப்படும் போத ஏற்பட்டு, அரசியலமைப்பினை ஏற்கும் பொருட்டு கூட்டப்பட்ட, சிறப்புக் கூட்டங்களில் வளர்ச்சி பெற்று வாஷிங்டன் காலத்தில் வெளிப்பட்டது எனலாம். ஹாமில்டனை ஆதரித்தவர்கள் "கூட்டாட்சிவாதிகள்" எனவும் மேடிசன். ஜெபர்சன் போன்றவர்களைச் சார்ந்தவர்கள் "ஜனநாயக குடியரசுக்காரர்கள்" என்றும் பெர் பெற்றனர். 1791ல் வெளிப்பட்ட இக்கட்சிகளுடன் மத்திய அரசின் மாற்றங்களும், மாநில அரசின் மாற்றங்களும் தொடர்பு கொண்டிருந்தன. வாஷிங்டன் இக்கட்சிகளின் பங்கு கொள்ளாது ஒதுங்கியெ நின்றார்.

**வெளிநாட்டுக் கொள்கை**

வாஷிங்டன் வெளிநாட்டு உறவின் மூலம் அமைதியையே விரும்பினர். போர்களையும், அதனால் ஏற்படும் இழப்புகளையும் புதிய நாடான அமெரிக்காவால் சமாளிக்க முடியாது என்ற எண்ணமே இதற்குக் காரணமாகும். ஆனாலும் பல பிரச்சனைகளை சமாளிக்க வேண்டியிருந்தது. அவையாவன 1. ஆங்கிலேயர்கள் மேற்கிலிருந்து காவல் நிலையங்களை விட்டகல மறுத்தனர் 2. ஸ்பெயின் மிசிசிபி நதியின் வழியாக வாணிபம் செய்யத் தடை வித்தது. 3. பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டு உலகையே கலக்கியது.

**அ) பிரெஞ்சுப் புரட்சி**

பிரெஞ்சு மக்கள் முடியாட்சியினை எதிர்த்து கிளர்ச்சியில் இறங்கினர். அமெரிக்கர்களிடமிருந்து குறைந்தபட்ச படை உதவியாவது கிடைக்கும் என எதிர்பார்த்தனர். தொடக்கத்தில் அமெரிக்கர்கள் புரட்சியை விரும்பினர். ஆனால் 16ம் லூயியும் ஏனைய பிரபுக்களும் சிரச்சேதம் செய்யப்படவே மாறுபட்ட கருத்துக்கள் ஏற்பட்டன. ஹாமில்டனும். கூட்டாட்சியவாதிகளும் புரட்சியை கண்டித்தனர். குடியரசுவாதிகள் ஜெபர்சனின் தலைமையில் புரட்சியை ஆதரித்தனர். ஆனால் வாஷிங்டன் 1793ல் ஓர் அறிக்கை மூலம் அமெரிக்கா நடுநிலைமை வகிக்கும் என அறிவித்தார்.

பிரெஞ்சு தூதராக இருந்த "எட்மண்டு சார்லஸ் ஜெனைட்" என்பவர் வாஷிங்டனின் அறிவிப்பை மதியாது பிரான்சுக்கு ஆதரவு தேட முனைந்தார். ஆங்கிலேயக் கப்பல்களை தாக்கும்படி தூண்டினார். ஜகோப்பியன் குழுக்களை அமைத்தார். பிரெஞ்சுக் கொடியின் கீழ் போரிடும் பொருட்டு வீரர்களையும் சேர்த்தார். ஜெபர்சன் உட்பட அமெரிக்க அரசியல்வாதிகளை துச்சமாகக் கருதி செயல்பட்டார். எனவே வாஷிங்டன் அவரை நாடு திரும்புமாறு ஆணையிட்டார். நாடு திரும்பினால் தண்டனை நிச்சயம் என உணர்ந்த ஜெனைட் அமெரிக்க குடிமகனாகி அங்கேயே தங்கிவிட்டார்.

**ஆ. இங்கிலாந்துடனான உறவு**

இங்கிலாந்துடன் கசப்பான உறவே நிலவியது. ஆங்கிலேய துருப்புகள் மேற்கில் காவல் நிலையங்களை விட்டகல மறுத்தன. சுதந்திரப் போரின்போது கைப்பற்றிய சொத்துக்களை திருப்பித்தர மறுத்தனர். இந்தியப் பழங்குடியினருடன் தொடர்ப கொண்டு உதவினர். அமெரிக்க கப்பல்களில் ஆங்கிலேய மாலுமிகள் உள்ளனரா? என்று கண்டறியும் பொருட்டு அமெரிக்க கப்பல்களை அடிக்கடி தடுத்து நிறுத்தி சோதனை என்ற பெயரில் தொல்லைகள் தந்தனர். இதனால் வெகுண்ட பலர் போர்க்குரல் எழுப்பினர்.

வாஷிங்டன் தலைமை நீதிபதியும், ஆங்கிலேய அரசின் நட்புக்குப் பாத்திரமானவருமான "ஜான் ஜேவை" சிறப்புத் தூதுவராக அனுப்பி வைத்தார். அமெரிக்கர்களின் ஏமாளித்தனத்தையும், அரசியல் சூழ்ச்சித் திறனின்மையையும் பயன்படுத்திக் கொண்டு, ஆங்கிலேயர்கள் தங்களுக்கு நன்மைபயக்கும் வகையில் 1794ல்

"ஜே உடன்படிக்கையினை" மேற்கொண்டனர் அதன்படி, காவல் நிலையங்களை விட்டு வெளியேற ஒப்புக் கொண்டனர். அதற்குப் பதிலாக அமெரிக்க கப்பல்களை சோதனை செய்யும் உரிமையையும், வேறு பல வணிக உரிமைகளையும் பெற்றது. இந்தியப் பழங்குடியினரால் ஏற்பட்ட நஷ்டங்களை ஈடுசெய்வது பற்றி உடன்படிக்கை ஏதும் சொல்லவில்லை.

ஜே உடன்படிக்கை மக்கள் எதிர்த்தனர். கலகங்கள் ஏற்பட்டன. ஜேவின் புனைவடிவங்கள் தீயிலிடப்பட்டன. வாஷிங்டன் இவ்வடன்பாட்டை விரும்பவில்லை. ஆயினும் வேறு வழியில்லாததால் அதனை ஒப்புக் கொண்டார். சட்டமன்றமும் அதனை அங்கீகரித்தது.

**இ. ஸ்பெயினுடன் உறவு**

ஸ்பெயினுடனான உறவு நன்முறையில் இல்லை. சுதந்திரப் போருக்குப்பின் ஸ்பெயின் பகைமை பாராட்டியது. பிளாரிடாவில் எல்லைகளில் கோட்டைகளைக் கட்டி வலுப்படுத்திக் கொண்டது. மிசிசிபி நதியினை அமெரிக்கர்கள் வணிகத்திற்கு பயன்படுத்த தடை விதித்தது. இந்திய பழங்குடியினரையும் தூண்டிவிட்டது. வாஷிங்டன் போரினை விரும்பாது சமாதானத்தையே விரும்பினார். இந்நிலையில் பிரான்சுக்கு எதிராக இங்கிலாந்துடன் கூட்டு வைத்திருந்த ஸ்பெயின் அக்கூட்டிலிருந்து விலகியது. இதனால் இங்கிலாந்தின் பகை ஏற்பட்டது. எனவே அமெரிக்காவின் நட்பை பெற விரும்பியது.

அமெரிக்காவின் தூதராக "தாமஸ் பிங்கினி" அனுப்பப்பட்டார். அவர் பிங்கினி உடன்படிக்கை அல்லது சான் லொரான்சோ உடன்படிக்கையினை 1795ல் மேற்கொண்டார். ஜே உடன்படிக்கையால் ஏற்பட்ட இழப்பினை இவ்வுடன்படிக்கை சமன் செய்தது. இதன்படி மிசிசிபி நதி முழுவதையும் அமெரிக்கர்கள் வணிகத்திற்கு பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

**மதிப்பீடு**

வாஷிங்டன் இருமுறை தலைவராக இருந்தபின் ஓய்வ பெற்றார். இருமுறைக்குமேல் பதவி கூடாது எனக்கூறி சிறந்த பாரம்பரியத்தையும் உண்டாக்கினர். இவரைப் பெருமைப்படுத்தும் வகையில் தலைநகருக்கு "வாஷிங்டன்" எனப் பெயரிடப்பட்டது.

## கூட்டாட்சி காலம்

விடுதலை கிட்டியபின் பதின்மூன்று மாநிலங்களும் தங்களுக்கு ஏற்றதொரு அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கும் பொறுப்பினை நிறைவேற்ற வேண்டியதிருந்தது. விடுதலைப் போரின் போது இங்கிலாந்தின் ஆளுநர்கள் நாட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்டனர். இதனால் நிர்வாகம் சீர்குலைந்தது. இந்நிலையில் ஒரு மாற்று நிர்வாக முறையை உடனடியாக அமைக்க வேண்டியிருந்தது. பொதுவாக புரட்சிகள் வல்லாட்சியில் தான் முடியும். அமெரிக்காவிலும் அதற்கான சூழ்நிலைகள் இருந்தபோதிலும் தலைவர்களின் முயற்சியால் புரட்சிக்குப்பின் மக்களாட்சி ஏற்படுத்தப்பட்டது. ஒருமைப்பாட்டின் மூலம் சுதந்திரத்தைப் பாதுகாத்து, பொரளாதார முன்னேற்றத்திற்கு ஊக்கமளிக்கும் ஜனநாயக உரிமையை பாதுகாக்கும் வகையில் ஒரு அரசியலமைப்பை ஏற்படுத்தியது அமெரிக்கக் குடியேற்றங்களின் பெரிய சாதனையாகும். அச்சாதனையின் ஆரம்பத்தில் நேசக் கூட்டிணைவு (Confederation) உருவாக்கப்பட்டது. இறுதியில் கூட்டாட்சி (Federation) ஏற்படுத்தப்பட்டது.

### நேசக் கூட்டிணைவு அரசியல் சட்டங்கள் (1781)

இரண்டாவது மாநாடு புதிய அரசியலமைப்பினை உருவாக்க ஜான் டிக்கின்சன் என்பவர் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. அக்குழு நேசக் கூட்டிணைவு, அரசியல் சட்டமென்னும் முதல் அரசியலமைப்பை உருவாக்கி ஒரு உறுதியற்ற ஒன்றியத்திற்கு வழி வகுத்தது. சிறிய மாற்றங்களுடன் இவ்வமைப்பு மாநாட்டினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1777-ல் பர்கோயின் சரடோகர்வில் சரணடைந்தபின் அந்த அரசியலமைப்பு எல்லா மாமநிலங்களின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வங்கீகாரம் கிடைக்க மூன்று ஆண்டுகளுக்கு மேலாயின. ஏனெனில் வடமேற்குப் பிரதேசத்தில் ஒஹியோவிற்கும் மிஸிஸிப்பி நதிகளுக்குமிடையிலுள்ள இந்தியர்களின் நிலப்பகுதியின் மீதும் ஏழு மாநிலங்கள் உரிமை கொண்டாடின. இதனால் மாநிலங்களுக்குள் சண்டை ஏற்பட்டது. இறுதியில் வெர்ஜீனியாவும் நியூயார்க்கும் தங்கள் உரிமைகளை விட்டுக்கொடுத்த பின் 1781 இல் எல்லா மாநிலங்களும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு அங்கீகாரம் அளித்தன.

நேசக் கூட்டிணைவுச் சட்டங்கள் மாநிலங்களின் உறுதியற்ற ஒன்றியக் கூட்மைப்பை உருவாக்கியது. அதில் மத்திய அரசு வலுவற்றிருந்தது. அது மாநில அரசுகளின் உதவியுடனே அதிகாரங்களை செயற்படுத்த முடிந்தது. மத்திய அரசின் அதிகாரங்கள் அனைத்தும் ஒரு காங்கிரசிடமிருந்தது. அக் காங்கிரசின் ஒரு குழு நிர்வாக துறையாக செயல்பட்டது. அயல்நாட்டுக் கொள்கை, பாதுகாப்பு, மேற்குப் பிரதேசப் பிரச்சனைகள் போன்றவற்றைக் கவனிப்பதற்கு காங்கிரஸ் சட்டங்களை இயற்றியது. ஆனால் எல்லா முக்கிய தீர்மானங்களுக்கும் குறைந்தது ஒன்பது மாநிலங்களின் அங்கீகாரம் வேண்டும். மாநிலங்களுக்கிடையே எழும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் அதிகாரத்தை காங்கிரஸ்

பெற்றிருந்தது. அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு அனைத்து மாநிலங்களின் ஒப்புதல் தேவையாயிருந்தது.

**நேசக் கூட்டிணைவின் சாதனைகள்**

1. நேசக் கூட்டிணைவு அரசியல் சட்டங்கள் பல்வேறுபட்ட சக்திகளின் ஐக்கியத்திற்கும். முரண்பட்ட கருத்துக்களின் உடன்பாட்டிற்கும் வழிவகுத்தது.
2. இங்கிலாந்திற்கு எதிராக எல்லா மாநிலங்களையம் ஒரே அரசின்கீழ் கொண்டு வந்து போர்ப் பணிகளுக்கு இது உதவியளித்தது.
3. வடமேற்குப்பகுதியில் குடியேற்றங்கள் அமைப்பதற்கான ஒழுங்குமுறைகளை வகுத்தது, 1787ல் வடமேற்குப் பிரதேசத்திற்கான ஆணை ஒன்றை வெளியிட்டது. அங்கு இந்தியர்கள் நிலங்களை விற்பதற்கும், பள்ளிகள் தொடங்குவதற்கும், உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஏற்பாடுகளைச் செய்தது. அங்குள்ள அடிமைத்தனத்தை நீக்கியது.

**நேசக் கூட்டிணைவின் குறைபாடுகள்**

1. முதலில் காங்கிரஸ் மாநிலங்களின் குழுவாக இயங்கியது. காங்கிரசின் பிரதிநிதிகள் தங்கள் மாநில அரசுகளிடமிருந்தே ஊதியம் பெற்றதால் அவ்வரசின் நலன்களைப் பாதுகாப்பதிலேயே அக்கறை காட்டினர்.
2. சிறிய, பெரிய என்ற வேறுபாடின்றி ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு வாக்கு என்ற நியதி பெயரி மாநிலங்களைப் புறக்கணிப்பதாயிருந்தது.
3. எல்லா அரசுப் பணிகளும் காங்கிரசிடமே ஒப்படைக்கப்பட்டது. ஜனாதிபதியோ பிரதம மந்திரியோ தேர்ந்தெடுக்கப்படவில்லை. தனியான நீதித் துறையும் ஏற்படுத்தப்படவில்லை.
4. மத்திய அரசிற்கென தனி வருவாய் மூலங்கள் ஒதுக்கப்படவில்லை. நிதி தேவைப்படும்போது அவை மாநில அரசுகளை நாட வேண்டியிருந்தது. மாநிலங்கள் மறுத்ததால் மத்திய அரசு செயலற்றுப் போக வேண்டியிருந்தது.

## அரசியலமைப்பை உருவாக்குதல்

**பிலடெல்பியா மாநாடு**

இத்தகைய சூழ்நிலையில் 1785-ல் ஜார்ஜ் வாஷிங்டனின் தாயகமான மௌன்ட்வெர்னான் என்ற இடத்தில் வர்த்தகப் பிரச்சினைகளை விவாதிக்க பல தலைவர்கள் கூடினர். அவர்க்ள முயற்சியின் காரணமாக வெர்ஜீனிய சட்டமன்றம் தேசிய மாநாடு ஒன்றைக் கூட்ட இசைந்தது. அதன் பயனாக 1786-ல் அன்னாபொலிசில் ஐந்து மாநிலங்களின் பிரதிநிதிகள் கூடினர். அம்மாநாட்டில் கலந்து கொண்ட ஹாமில்டன், மாடிசன் ஆகியோரின் தூண்டுதலினால், நேசக் கூட்டிணைவு சட்டங்களை மறுபரிசீலனை செய்ய ஒரு தேசிய மாநாட்டைக் கூட்டவேண்டுமென்று காங்கிரசிற்கு வேண்டுகோள் விடுவிக்கப்பட்டது. எனவே 1787-ல் பிலடெல்பியாவில் புதிய அரசியலமைப்பினை ஏற்படுத்த

தேசிய மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அம்மாநாட்டிற்கு ரோடு ஜலண்டு தவிர பிற மாநிலங்கள் பிரதிநிதிகளை அனுப்பின. 55 பேர் கலந்து கொண்ட அம்மாநாமட்டில் வாஷிங்டன், ஹாமில்டன், டிக்கின்சன் கூட்டத்தின் தலைவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்கூட்டம் 1787 மே முதல் செப்டம்பர் வரை நடைபெற்றது.

மாநாட்டில் பிரதிநிதிகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் பரஸ்பர உடன்பாடுகளும் காணப்பட்டன. அரசியலமைப்பை மாற்றியமைப்பதா அல்லது புதிய அரசியலமைப்பை உருவாக்குவதா என்ற பிரச்சினை எழுந்தது இறுதியில் புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டுமென முடிவு செய்தனர்.

எல்லா மாநிலங்களும் இப்புதிய அரசியலமைப்புச் சட்டத்தை அங்கீகரிக்காது என்று எதிர்பார்த்து ஒன்பது மாநிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பு மாநாடு மூலம் ஒப்புதல் அளித்தபின் புதிய அரசியலமைப்புச் சட்டங்கள் அமுல்படுத்தப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. புதிய அரசியலமைப்பிற்கு மாநிலங்கள் அங்கீகாரம் பெற முயன்ற போது கடுமையான எதிர்ப்புகள் தோன்றின. 1788-இல் ஒன்பது மாநிலங்கள் அரசியலமைப்பை அங்கீகரித்தவுடன் அது அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

**அதிகாரப்பகிர்வு**

1789-ஆம் ஆண்டு கூட்டாட்சி அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது. அதில் அதிகாரங்கள் மத்திய மாநில அரசுகளுக்கிடையில் பிரிக்கப்பட்டன. மத்திய அரசிற்கு அதிகாரங்களைக் குறிப்பிட்ட பின்னர் குறிப்படப்படாத எஞ்சியுள்ள அதிகாரங்கள் அனைத்தும் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டன. அதிகாரப் பிரிவினை முறை பின்பற்றப்பட்டு இருந்தது. ஆனால் அவை முழுமையாக பிரிக்கப்படாமல் ஒன்றுக்கொன்று தடையாக இருந்து சமன் செய்யும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன. அதன் படி சட்டமன்றம் மற்றும் நிர்வாகத் துறையின் அரசியல் நடவடிக்கைகளை நீதித்துறை தடுத்து நிறுத்தும் அதிகாரம் பெற்றிருந்தது. சட்டமன்றங்கள் இயற்றிய சட்டங்களை குடியரசு தலைவர் தன்னுடைய மறப்பாணை அதிகாரம் மூலம் ரத்து செய்யலாம். அதே போல் ஜனாதிபதியின் உடன்படிக்கைகளையும் பதவி நியமனங்களையும் ஏற்கவோ மறுக்கவோ காங்கிரசிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. இவ்வரசியலமைப்பு எழுதப்பட்ட, நெகிழாத் தன்மையுடையதாகும். சட்டமன்றங்களின் பெரும்பான்மை வாக்குமூலம் அரசியலமைப்புச் சட்டங்களைத் திருத்த முடியாது. அசியலமைப்புத் திருத்தங்கள் காங்கிரசோ அல்லது மூன்றில் இரு பங்கு மாநிலங்களின் வேண்டுகோளுக்கிணங்க கூட்டப்பட்ட மாநாடுகளோதான் கொண்டுவரலாம். அதனை நான்கில் மூன்று பங்கு மாநிலங்களோ அதற்கெனக் கூட்டப்பட்ட சிறப்பு மாநாடுகளோ அங்கீகரிக்க வேண்டும்.

**குடியரசுதலைவர்**

நாட்டின் தலைமை நிர்வாகியான குடியரசுத் தலைவர் ஒரு தேர்தல் குழுவால் நான்கு ஆண்டிற்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார். அத்தேர்தல் குழுவிற்கு ஒவ்வொரு

மாநிலமும் செனடிற்கும் (மேல் சபை) பிரதிநிதிகள் சபைக்கும் (கீழ்ச்சபை) எத்தனை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றதோ அத்தனை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். கூட்டாட்சிச் சட்டமன்ற இரு சபைகளைக் கொண்டது. மேல்சபை, செனட் என்று அழைக்கப்பட்டது. அதற்கு ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒவ்வொரு மாநிலமும் இரண்டிரண்டு பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அனுக வேண்டும். கீழ்ச்சபை, பிரதிநிதிகள் சபை எனப்படும். மக்கட்தொகைக்கேற்ப பிரதிநிதிகள் இரண்டாண்டிற்கு தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். தலைமை நீதிமன்றத்தையும், கீழ் நீதிமன்றங்களையும் ஏற்படுத்தும் அதிகாரம் காங்கிரசிற்கு அளிக்கப்பட்டது. நீதிபதிகளை நியமிக்க ஜனாதிபதி அதிகாரம் பெற்றிருந்தார். அவர்கள் தங்கள் ஆயுள்காலம் வரை அப்பதிவியில் நீடிக்கலாம்.

**கூட்டாட்சி அரசியலமைப்பு**

அரசியலமைப்பு வரலாற்றில் முதன்முதலாக எழுதப்பட்ட கூட்டாட்சி அரசியலமைப்பு அமெரிக்க மக்கள் உருவாக்கி வெற்றிகரமாகச் செயல்படுத்தினர். பிற்காலத்தில் செய்யப்பட்ட திருத்தங்களும் நீதிமன்ற விளக்கங்களும் கூட்டாட்சியை வலுப்படுத்தியதுடக் மாநில உரிமைகளையும் மக்கள் உரிமைகளையும் உறுதிப்படுத்தியது.

## ஜான் ஆடம்ஸ்

வாஷிங்டனுக்குப் பிறகு துணைத்தலைவராக இருந்த ஜான் ஆடம்ஸ் குடியரசுத் தலைவராக பதவியேற்றார். இவரது காலம் குழப்பம் நிறைந்த ஒன்றாகும்.

**உள்நாட்டுக் கொள்கை**

இவர் வாஷிங்டனின் அமைச்சரவையைத் தொடர்ந்து செயல்பட அனுமதித்தார். இது அவரது முதல் தவறாகும். அவர்கள் ஹாமில்டனுக்கு ஆதரவாகவே செயல்பட்டனர். இவர் ஹாமில்டனுக்கு கருத்து வேறுபாடு கொண்டிருந்ததால் வலுவற்று விளங்கினர். இதனால் இரண்டாவது முறை தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வாய்ப்பினை இழந்தார். மேலும் இவர் புதிய இங்கிலாந்து பகுதியைச் சார்ந்தவராக இருந்ததால் தென்மாநில மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

**அ) பிற்போக்குச் சட்டங்கள்**

ஐரோப்பியாவிலிருந்து குடியேறிய மக்களில் பலர் தாராளமான கொள்கை உடையவர்களாய் இருந்தனர். குடியரசுக் கட்சியை ஆதரித்தனர். இதனை தடை செய்து குடியரசு கட்சியை ஒடுக்கும் நோக்கத்துடன் மூன்று சட்டங்களை இயற்றினர். அதனை "பின்போக்கு சட்டங்கள்" என்று கூறுகின்றனர்.

**அயலவர் சட்டம்**

நாட்டின் அமைதிக்கு ஊறு விளைவிக்கக்கூடிய அயலவர்களை சிறையிடவோ, நாட்டினின்று வெளியேற்றவோ குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இதனையடுத்து ஏராளமான பிரெஞ்சுக்காரர்கள் நாடு திரும்பினர்.

**அயலவர் குடியுரிமைச் சட்டம்**

இதன்படி அயல்நாட்டவர்கள் அமெரிக்க குடிமகனாவதற்கு அமெரிக்காவில் வசிக்க வேண்டிய காலம் 5 ஆண்டுகளிலிருந்து 14 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டது.

**அரசுத் துரோகச் சட்டம்**

இதன்படி குடியரசுத் தலைவருக்கு எதிராகவோ, அரசுக்கு எதிராகவோ சதி செய்பவர்களுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 5000 டாலர்கள் தண்டமும் செலுத்த வேண்டும். சட்டமாற்றத்தையோ, குடியரசு தலைவரையோ இகழ்ந்து கட்டுரைகள் வெளியாயின் இரண்டு ஆண்டுகள் சிறைவாசமும் 2000 டாலர்கள் தண்டமும் விதிக்க வழி செய்யப்பட்டன.

அயலவர் சட்டமும், அரசுத் துரோகச் சட்டமும் அடிப்படை உரிமைகளை பறிப்பதாகக் கூறி வர்ஜீனியாகவும், கெண்டகியும் எதிர்த்தன. ஆனால் கூட்டாட்சிவாதிகள் நீதித்துறையில் இருந்ததால் இச்சட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. எனவே இவ்விரு மாநிலங்களும், "மாநிலங்களின் உரிமைகளை" வலியுறுத்தலாயின அரசியலமைப்பை மீறும் வகையில் கூட்டாட்சி மன்றத்தால் உருவாக்கப்படும் சட்டங்கள் செல்லாது எனக்கூறும் "செல்லுபடியற்றதாக்கும் கோட்பாட்டினை" உள்ளடக்கிய சட்டங்கள் இயற்றின.

**ஆ) நள்ளிரவு நீதிபதிகள்**

ஆடம்ஸ் 1801ல் பதவியை விட்டு விலகும் முன் முதல் நாள் இரவு நீதித்துறை சட்டத்தின்படி பல நீதிபதிகளை நியமித்தார். அவர்களின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்ட "ஜான் மார்ஷலும்" அடங்குவார். இவர்களை "நள்ளிரவு நீதிபதிகள்" எனக் கேலி செய்தனர்.

**வெளிநாட்டுக் கொள்கை**

**XYZ நிகழ்ச்சி**

பிரான்சுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான உறவுகள் அறுபட்டன. ஜெ உடன்படிக்கைக்குப் பிறகு பிரெஞ்சுக்காரர்கள் அமெரிக்க கப்பல்களைத் தாக்கினர். மேலும் பிரான்சு, அமெரிக்காவில் மீண்டும் தனது ஆதிக்கத்தை நிறுவமுயலுகின்றதோ? என்ற அச்சமும் எழுந்தது. சமாதானத்தை விரும்பிய ஆடம்ஸ், ஜான்மார்ஷல், பிங்கினி,எல்பிரிட்ஸ் ஜெர்ரி ஆகியோர் அடங்கிய தூதுக்குழுவை அனுப்பி வைத்தார். ஆனால் பிரான்சின் வெளிநாட்டமைச்சரான "டாலரண்ட்" இவர்களை சந்திக்க மறுத்தார். அப்போது பெயர் குறிப்பிட விரும்பாத மூவர் தங்கள் 'XYZ' என அழைத்துக்கொண்டு இவர்களை சந்தித்தனர். அமைச்சருக்கு 2 ½ இலட்சம் கையூட்டும், அரசிற்கு கடனுதவியும் அளிக்க ஒப்புக்கொண்டால் அமைச்சரைக் காணலாம் எனக் கூறினார். இதனை அறிந்த அமெரிக்க மக்கள் கொதித்தெழுந்தனர். "நாட்டின் பாதுகாப்பிற்கெனின் லட்சம் லட்சமாக கொட்டிக் கொடுப்போம், இலஞ்சமாக ஒரு சென்ட் கூட வழங்க மாட்டோம்" என முழங்கினர். மூவர் குழு நாடு திரும்பியது. இதனையே XYZ நிகழ்ச்சி என்கின்றனர்.

1. வலிமையான கூட்டாட்சியைத் தோற்றுவித்தனர். மாநிலங்கள் கோரிய கூடுதல் உரிமைகள் மறுக்கப்பட்டன.
2. கூட்டாட்சிக்கான அரசியலமைப்பினை உருவாக்கிய பெருமை இவர்களையேச் சாரும்.
3. ஹாமில்டனின் நிதி சீர்திருத்தங்களால் பற்றாக்குறை நாடாக இருந்த அமெரிக்காவை சேமித்து வைக்கும் நாடாக்கினார். தேசிய வங்கியும் தோற்றவிக்கப்பட்டது.
4. மேற்கு பகுதியிலுள்ள நிலங்களை திறமையாக பங்கீடு செய்தனர். பழங்குடியினரையும் அடக்கி வைத்தனர்.
5. பல்வேறு பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் அடித்தளம் அமைத்துக் கொடுத்தனர்.

## தாமஸ் ஜெபர்சன்

அமெரிக்க சுதந்திர அறிக்கையைத் தயாரித்தவர் வர்ஜீனியாவின் சமயச் சுதந்திரத்திற்கான வர்ஜீனியா சட்டத்தை ஏற்படுத்தியவர். வர்ஜீனியா பல்கலைக் கழகத்தின் தந்தை" என்றெல்லாம் போற்றப்படுகிற தாமஸ் ஜெபர்சன் அமெரிக்காவின் மூன்றாவது குடியாட்சித் தலைவராவார். இவரது உள்நாட்டுக் கொள்கை வெற்றி பெற்ற அளவிற்கு வெளிநாட்டுக் கொள்கை வெற்றி பெறவில்லை எனலாம்.

### 1. ஜெபர்சனின் அரசியல் கொள்கைகள்

இவரது தேர்தலை இரண்டாவது புரட்சி என்று கூறுகின்றனர். ஜெபர்சனின் அரசியல் கொள்கைகளாவன: அரசாங்கம் குறைந்த அளவே பொறுப்புடையதாக இருக்க வேண்டும். பொதுமக்களை மிகுதியாகக் கட்டுப்படுத்தக் கூடாது. பெரும்பான்மையோரின் கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும், ஆட்சித்துறைக்கு இராணுவம் கட்டுப்பட்டிருக்க வேண்டும், சட்டத்தின் முன் அனைவரும் ஏழை, பணக்காரன் வேறுபாடின்றி சமமாக நடத்தப்பட வேண்டும், அமெரிக்க அரசு சிறு நில உடைமையாளர்களை அடிப்படையாகக் கொண்டு விளங்க வேண்டும் என்றார்.

### 2. உள்நாட்டுக் கொள்கை

#### அ) அரசியல் மாற்றங்கள்

ஜெபர்சன் அரசியலில் சில மாற்றங்களைப் புகுத்தினார். ஜேம்ஸ் மாடிசனை வெளிவிவகாரச் செயலராகவும், அல்பர்ட் கால்லடின் என்பவரை கருவூல செயலராகவும் நியமித்தார். மக்களால் வெறுக்கப்பட்ட அயலவர் சட்டம், அரசுத் துரோகச் சட்டம் ஆகியவற்றை ரத்து செய்தார். விஸ்கி மீது விதிக்கப்பட்டிருந்த வரியினை ரத்து செய்தார். இதனால் ஏற்பட்ட நஷ்டத்தை இறக்குமதியின் மீது விதிக்கப்பட்ட கூடுதல் சுங்க வரியால் சமன் செய்தார். நள்ளிரவு நீதிபதிகள் நியமிக்கப்பட காரணமாய் இருந்த, 1801ல் இயற்றப்பட்ட நீதித்துறை சட்டத்தை ரத்து செய்தார். 1802ல் ஒகியோ மாநிலம் கூட்டாட்சியில் சேர்க்கப்பட்டது. அரசாங்க வீண்செலவுகளை கட்டுப்படுத்தினார். குறிப்பாக கப்பற்படை,

இராணுவம் ஆகியவற்றிற்கான செலவுகள் குறைக்கப்பட்டன. இதனால் கிடைத்த தொகையைக் கொண்டு தேசியக்கடன்களை விரைந்து திருப்பித்தர முனைந்தார்.

**ஆ. மாடிசனுக்கு எதிரான மார்பரி வழக்கு**

1801ம் ஆண்டு நீதித்துறை சட்டம் ரத்து செய்யப்பட்டதால் அதன்படி நியமிக்கப்பட்ட நீதிபதிகள் பதவியிலிருந்து விலக்கப்பட்டனர். அவர்களுக்கு மீண்டும் பதவி வாங்கித்தர கூட்டாட்சிவாதிகள் வழக்குத் தொடுத்தனர். இவ்வழக்கை ஆராய்ந்து தலைமை நீதிபதி ஜான்மார்ஷல் அரியதொரு விளக்கத்தை அளித்தார். "சட்டமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டம் அரசியலமைப்பிற்கு முரணாக இருந்தால் அது செல்லாது எனக்கூறும் அதிகாரம் நீதித்துறைக்கு உண்டு" என்று கூறினார். இதனை "நீதி மறு ஆய்வு" என்று கூறுகின்றனர். நீதித்துறையுடனான மோதலில் ஜெபர்சன் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி பெறவில்லை எனினும் நீதிபதிகள் நியாயம் வழங்குவதில் கவனமாக நடந்து கொண்டதுடன், அரசியலிலிருந்து ஒதுங்கலாயினர்.

**இ) லூயிசியானா வாங்கப்படுதல்**

ஜெபர்சனின் ஆட்சியின் மிகச்சிறந்த நிகழ்ச்சி லூயிசியானா வாங்கப்பட்டதே ஆகும். மிசிசிபி நதிக்கு மேற்கே உள்ள பகுதியில் பிரெஞ்சுக்காரர்கள் ஒரு குடியேற்றத்தை அமைத்தனர். 14ம் லூயியின் பெயரால் லூயிசியானா எனப்பட்டது. ஏழாண்டுப் போரில் உதவியமைக்காக பிரான்சு இப்பகுதியை ஸ்பெயினுக்கு பரிசாக வழங்கியது. 1800ல் ஒரு இரகசிய உடன்படிக்கையின்படி (சான் இல் டெபான்சோ) ஸ்பெயினிடமிருந்து நெப்போலியன் மீட்டுக் கொண்டார். 1802ல் இச்செய்தி வெளிப்படவே அமெரிக்க அச்சம் கொண்டது. பிரான்சு புதிய உலகில் தன் வலிமையை பெருக்கிக் கொள்ளவும் மேற்குப் பகுதிகளுடனான வணிகத்தை அழிக்கவும் முயன்றது. எனவே பிரான்சு லூயிசியானாவை கைப்பற்ற முயன்றதால் அமெரிக்கா இங்கிலாந்துடன் கூட்டு சேரம் என எச்சரித்தார்.

நெப்போலியன், அமெரிக்காவும், இங்கிலாந்தும் கூட்டு சேரும் அபாயம் கண்டு அஞ்சினார். மேற்கிந்திய தீவுகளில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்று, மஞ்சள் காய்ச்சலாலும், நீக்ரோக்கள் தொல்லையாலும் தோல்வியுற்றார். பிரிட்டனுடன் மீண்டும் போர் எழும் சூழ்நிலை எழுந்தது. அதற்கு மிகுதியான பொருளும் தேவைப்பட்டது. இந்நிலையில் அமெரிக்காவை பகைத்துக் கொள்வதும், அமெரிக்காவிற்கு எதிராக லூயிசியானாவைக் கட்டிக்காப்பதும் இயலாது என்பதை உணர்ந்தார். மேலும் அமெரிக்காவை தனது நண்பராக்கிக் கொள்ளவும், இங்கிலாந்தின் நிரந்தர எதிரியாக்கும் எண்ணத்துடனும் லூயிசியானாவை முழுமையாக விற்க எண்ணினார்.

1803ல் ஜெபர்சன், ஜேம்ஸ் மன்ரோவை சிறப்புத் தூதுவராக அனுப்பி வைத்தார். பாரிஸஜல் நடந்த பேச்சு வார்த்தைகளின்படி 15 மில்லியன் டாலருக்கு லூயிசியானாவை விற்க பிரான்சு ஒப்புக் கொண்டது. இதனை அமெரிக்காவும் ஏற்றது.

**ஈ. ஆப்பிரிக்க நாடுகளுடன் போர்**

மத்தியத் தரைக்கடலில் சென்ற அமெரிக்க வாணிபக் கப்பல்களிடமிருந்து அல்ஜீரியா, டியூனிஸ், டிரிப்போலி போன்ற வடஆப்பிரிக்க நாடுகள் கப்பம் வசூலித்தன. டிரிப்போலியின் பாஷா அதிகமாக கப்பம் கட்டக் கூறினார். மேலும் டிரிப்போலியின் கடற்கொள்ளைக்காரர்கள் அமெரிக்க கப்பல் ஒன்றைத் தாக்கியதுடன், அமெரிக்க கொடியினையும் இழிவுபடுத்தினர். பல மாலுமிகளும் சிறைப்பிடிக்கப்பட்டன. எனவே ஜெபர்சன் ஒரு பெரும் படையினை அனுப்பி வைத்தார். இரண்டு ஆண்டுகளுக்குப்பின் டிரிப்போலியின் பாஷா மாலுமிகளை விடுவித்ததுடன் கப்பம் வாங்கவதில்லை என்ற உறுதி கூறினார்.

**உ. ஆரன்பர் விவகாரம்**

குடியாட்சியின் துணைத்தலைவரான ஆரன்பர் பெரும் தொல்லைகளுக்குக் காரணமாயிருந்தார். சுயநலவாதியான இவர் ஜெபர்சனுடன், குடியரசுக் கட்சியினருடனும் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார். இதையறிந்த கூட்டாட்சிவாதிகளில் சிலர் இவரை 1804-ல் நியூயார்க்கின் ஆளுநர் தேர்தலில் நிற்குமாறு தூண்டினர். வெற்றி பெற்றபின் புதிய இங்கிலாந்து பகுதியினை கூட்டாட்சியிலிருந்து பிரித்துவிடவும் திட்டம் தீட்டினர். ஆனால் ஹாமில்ட் தனது செல்வாக்கினைப் பயன்படுத்தி ஆரன்பர்ரை தோல்வியடையச் செய்தார். எனவே, ஆரன்பர், ஹாமில்டனை வம்புச் சண்டைக்கிழுத்தார். அதில் ஹாமில்டன் கொல்லப்பட்டார். இதனால் மக்கள் வெகுண்டெழுந்தனர். 1806-ல் லூயிசியானாவை கூட்டாட்சியிலிருந்து பிரிப்பதற்கான சதியில் ஈடுபட்டதாக துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டார். இதனால் வருத்தமுற்ற ஆரன்பர் பிரான்சில் குடியேறி எஞ்சிய காலத்தை கழித்தார்.

**3. வெளிநாட்டுக் கொள்கை**

ஜெபர்சன் வாஷிங்டனின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அமைதியான வெளிநாட்டுக் கொள்கையினை பின்பற்றினார். ஆனால் நெப்போலியனது போரால் ஐரோப்பாவில் ஏற்பட்ட மாறுதல்கள் அமெரிக்கர்களை வெகுவாகப் பாதித்தது. நெப்போலியன் கண்டத் திட்டத்தின் மூலம் இங்கிலாந்திற்கு எதிராகப் பொருளாதாரப் போரில் ஈடுபட்டார். பெர்லின் ஆணைகள் மூலம் இங்கிலாந்துடனான வணிகத்திற்கு தடை விதித்தார். இங்கிலாந்தும் பதிலுக்கு அரசவை ஆணைகள் மூலம் பிரான்சுடனான வணிகத்திற்கு தடை விதித்தது. இதனால் அமெரிக்க வணிகம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

போரில் ஈடுபட்டடிருக்கும் இரு நாடுகளையும் பொருளாதார நடவடிக்கைகள் மூலம் பணிய வைக்க முயன்றார். 1806ல் "இறக்குமின்மை சட்டத்தை" இயற்றினார். இதன்படி மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக்கூடாது என்று அறிவித்தார். இது போதிய பலனைத் தரவில்லை.

**மதிப்பீடு**

ஜெபர்சன் மக்களது உரிமையில் மிகுந்த நாட்டம் கொண்டவர். அவ்வளவில் அப்ரஹாம்லிங்கனுடன் ஒப்பிடப்படுகின்றார். ஆற்றல் மிக்கவர். இவரை மூன்றாவது முறையாக பதவி வசிக்க மக்கள் கேட்டுக் கொண்டபோது, வாஷிங்கனின் அடிச்சுவட்டை பின்பற்றி மறுத்துவிட்டார். இவரது உள்நாட்டுக் கொள்கை இவருக்கு மிகுந்த பெருமையை பெற்றுத் தந்தது. ஆனால் வெளிநாட்டுக் கொள்கை மிகுந்த மனக்கசப்பையே உண்டாக்கியது.

# அலகு - II

## 1812-ம் ஆண்டுப் போருக்கான காரணங்கள்

**முன்னுரை**

1812ம் ஆண்டு குடியரசுக் கட்சி வேட்பாளரான ஜேம்ஸ் மாடிசன் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் ஜெபர்கனின் முக்கிய அமைச்சராகப் பணியாற்றினார். இவர் அரசியலில் சிறந்த அனுபவம் பெற்றவர். ஆனால் இவருக்கு பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றிற்கு உடனடித் தீர்வ காணும் திறமையில்லை. அவருடைய அமைச்சரவையில் அமைச்சர்களிடையே ஒற்றுமை குன்றியதாலும் அவர்கள் திறமையற்றவர்களாக இருந்ததாலும் நிர்வாகத்தில் அவருக்கு கஷ்டங்கள் அதிகமாயின, மாடிசன் ஆட்சியில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆங்கிலேயர்களுடனும் இந்தியர்களுடனும் போரிட்டது. இப்போர் 1812ம் ஆண்டு போர் என அழைக்கப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நர்டுகளின் நடுநிலை உரிமைகளை மீறல், இந்திய மாநிலங்கள் மீது அமெரிக்கா மேற்கொண்ட ஆக்கிரமிப்புக் கொள்கை, அமெரிக்காவின் பேராசை ஆகியவை இப்போருக்குரிய அடிப்படைக் காரணங்களாகும்.

**நடுநிலை உரிமைகளை மீறல்**

பிரான்சிற்கும் இங்கிலாந்திற்குமிடையே ஏற்பட்ட போர், ஜெபர்சனின் ஆட்சியில் மீண்டும் ஏற்பட்டது. 1805ல் ஆஸ்டர்லிட்சில் பிரான்ஸ் பெற்ற வெற்றி நெப்போலியனை மேற்கு ஐரோப்பாவின் தலைவராக்கியது. டிரபால்கரில் நெல்சன் அடைந்த வெற்றி இங்கிலாந்தை சமுத்திரங்களின் தலைவியாக்கியது. புலிக்கும், சுறா மீனுக்குமிடையிலான இப்போரில் பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நாடுகள் ஒன்றிற்கொன்று நேரடியாக தாக்க முடியவில்லை. "பெட்டிக் கடைக்காரர்" என்று அழைக்கப்பட்ட பிரிட்டனை அழிப்பதற்காக நெப்போலியன் பெர்லின், மிலான் ஆணைகளைப் பிறப்பித்தார். அவ்வாணை பிரிட்டிஷ் பொருள்களை இறக்குமதி செய்யவும், தங்களது நாட்டின் துறைமுகங்களில் பிரிட்டிஷ் கப்பல்களை அனுமதிக்கவம் கூடாதென பிரான்சின் அதிகாரத்திற்குட்பட்ட நாடுகளுக்க உத்தரவ பிறப்பித்தது. இதற்கு எதிராக பிரிட்டிஷ் அரசு கவுன்சில் சட்டங்களை இயற்றியது இதன்படி நடுநிலை நாடுகளின் கப்பல்கள் பிரிட்டிஷ் துறைமுகத்தின் வழியாக ஐரோப்பிய நாடுகளோடு வியாபாரம் செய்யவேண்டுமென்றும், பிரெஞ்சுக் குடியேற்றங்களின் பொருள்களையும், யுத்த தளவாடங்களையும் எடுத்துச் செல்லக் கூடாதென்றும் கூறியது. இவர்களுடைய போர் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நடுநிலை உரிமைகளை மீறின. ஓர் அமெரிக்கக் கப்பல் பிரிட்டிஷ் துறைமுகத்திற்குச் சென்றால் அது பிரெஞ்சுக்காரர்களால் கைப்பற்றப்பட்டது.

ஜனாதிபதி ஜெபர்சன் போரிட்டுக் கொண்டிருக்கும் இவ்விரு நாடுகளுக்கும் நல்லதொரு பாடம் கற்பிக்க எண்ணினார். 1807ஆம் ஆண்டு வெளிநாட்டு துறைமுகங்களுக்கு அமெரிக்கக் கப்பல்கள் செல்லாதிருக்க வியாபாரத் தடை உத்தரவுப்

பிறப்பித்தார். தாங்களாகவே மேற்கொண்ட இவ்வணிகத் தடை வியாபார வளர்ச்சியை பெரிதும் பாதித்ததோடு வேலையில்லா திண்டாட்டத்தையும் அதிகரித்தது. ஆகவே வியாபாரத் தடை உத்தரவிற்குப் பதிலாக வியாபார உறவின்மைச் சட்டத்தை 1809ல் காங்கிரஸ் இயற்றியது. பிரான்ஸ், கிரேட் பிரிட்டன் ஆகி ய இரு நாடுகளில் ஏதாவது ஒன்று வியாபாரத்தடைகளை ரத்து செய்யும் போது அதனோடு மறுபடியும் வியாபாரத் தொடர்புகளை அமெரிக்கா ஏற்படுத்திக்கொள்ளும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் தடைகளை கருத்திற் கொள்ளாது அமெரிக்கர்களில் பலர் போரிடும் இவ்விரு நாடுகளோடும் வர்த்தகம் செய்து வந்ததால் இச்சட்டமானது பயனற்றுப் போனது. எனவே 1810ல் மேக்கனின் இரண்டாவது சட்ட வரைவு எல்லா வியாபாரத் தடைகளையும் ரத்து செய்ததோடு, பிரான்ஸ், கிரேட் பிரிட்டன் ஆகிய இவ்விரு நாடுகளில் ஏதாவது ஒன்று அதனது வாணிபச் சட்டத்தை ரத்து செய்தாலும், அமெரிக்க ஐக்கிய நாடுகள் போரிடும் அந்நாட்டோடு வியாபாரத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளாது எனக் கூறிற்று. நெப்போலியன் இப்போது அமெரிக்கரை ஆங்கிரேயர்களுக்கு எதிராக திருப்பத் திட்டமிட்டார். 1810ல் நவம்பர் மாதம் முதல் நாளுக்க முன்னதாகவே பெர்லின், மிலான் ஆணைகளை ரத்து செய்வதாக மாடிசனுக்கு நெப்போலியன் வாக்குறுதி அளித்தார். இவ்வாணைகள் ரத்து செய்ததன் விளைவாக பிரிட்டனும் தன்னுடைய கவுன்சில் சட்டத்தை ரத்து செய்யும் என்று கடோர் கூறினார். ஆனால் ஆணைகளை ரத்து செய்யும் எண்ணம் நெப்போலியனுக்கு இல்லாத போதிலும் அவர் பிரிட்டன் மீது பழிசுமத்துவதற்காக இவ்வாணைகளை ரத்து செய்தார். எனினும் பிரான்ஸ் தனது வியாபாரத் தடைகளை ரத்து செய்யும் என்றெண்ணிய அமெரிக்க ஐக்கிய நாடுகள் பிரான்சோடு மறுபடியும் வாணிபத்தை தொடங்கிய இங்கிலாந்துடன் வியாபாரத்திற்கு தடை விதித்தது. இது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் பிரிட்டனுக்கும் இடையே உள்ள நட்புறவைப் பாதித்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக பிரிட்டிஷ் கடற்படையினர் அமெரிக்க மாலுமிகளைத் தப்பியோடிய பிரிட்டிஷ் மாலுமிகள் என்று கூறி பிடிக்க முயன்றனர். பிரான்சுடன் மேற்கொண்ட போரினால் இங்கிலாந்திற்கு கடற்படை வீரர்கள் பெருமளவில் தேவைப்பட்டனர். கவர்ச்சிகரமான வேலை நிபந்தனைகளின் காரணமாக பல ஆங்கிலேய மாலுமிகள் தப்பியோடி அமெரிக்க கப்பல்களில் வேலை செய்தனர். இந்நிலையை தடுத்து நிறுத்துவதற்காக, ஆங்கிலக் கப்பல்களில் இருக்கிறார்களா எனத் தேடியதோடு, அமெரிக்க மாலுமிகளை தங்களவர்கள் என்று கூறி கைப்பற்றிச் சென்றனர். 1807ல் ஆங்கில போர்க்கப்பலான லியோபார்ட் அமெரிக்கப்போர் கப்பலான செசாபீக் மீது பீரங்கிப் பிரயோகம் செய்து நான்கு மாலுமிகளைப் பிடித்தது, 1811ல் பிரிட்டிஷ் போர் கப்பலான "லிட்டில் பெல்ட்டும்" "பிரசிடென்" என்ற அமெரிக்கப் போர் கப்பலும் ஒன்றிற்கொன்று தாக்குதல்கள் நிகழ்த்தியதன் விளைவாக இரு பக்கங்களிலும் உயிர் சேதங்கள் ஏற்பட்டன. இந்நிகழ்ச்சிகள் இவ்விரு நாடுகளுக்கிடையே பகையை மேலும் வளர்த்தது.

**இந்தியர்களுக்கு பிரிட்டன் உதவி**

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வளர்ச்சியைத் தடை செய்யும் நோக்குடன் இந்தியர்கள் ஓர் கூட்டணியை அமைத்ததற்குக் காரணம் ஆங்கிலேயர் அளித்த ஊக்கமே என்று அமெரிக்கர்கள் கருதலாயினர். திப்பிக்கானனோப் போரில் இந்தியர்கள் பயன்படுத்திய ஆயுதங்களில் பிரிட்டிஷ் முத்திரைகள் இருந்ததைக் கண்டுபிடித்தனர். கனடாவின் பிரிட்டிஷ் நிர்வாகம் இந்தியர்களுக்கு ஆயுத உதவி மட்டும் செய்யாமல் ஓர் அமெரிக்க மகனையோ, பெண்ணையோ அல்லது குழந்தையையோ கொல்லுவதற்கு ஆறு டாலர்கள் பரிசளிக்கிறது என்று கதைகள் பரப்பப்பட்டன. இக் கூற்றில் உண்மை இல்லாத போதிலும் இந்தியர்களின் நிலங்களைப் பறிமுதல் செய்ய வேண்டுமென்று எண்ணிய அமெரிக்கர்கள் இத்தகைய வதந்திகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து அவைகளை மக்களிடையே பரப்பினர்.

**அமெரிக்க மண்ணாசை**

ஐரோப்பிய நாடுகள் போரிட்டபோது பிரிட்டிஷ் கனடாவையும், ஸ்பெயின் புளோரிடாவையும் தங்கள் நிலப்பரப்போடு இணைத்துக் கொள்ள அமெரிக்க ஐக்கிய நாடுகள் எண்ணியது.

கனடாவை கைப்பற்ற வேண்டுமென்ற பிராங்லின், வாஷிங்டன் ஆகியோர் விரும்பினர். ஆனால் அவர்கள் ஆசை நிராசையாகிவிட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் கனடாவை கைப்பற்றிவிட்டால் அமெரிக்க கனடா எல்லைச் சிக்கல், ஆங்கிலோ-செவ்விந்திய உறவு ஆகிய அனைத்து வடமேற்குப் பிரச்சனைகளும் தீர்ந்து விடுமென்று எண்ணியது.

தெற்கு புளோரிடா, மெக்ஸிகோ ஆகியவற்றின் மீது ஸ்பெயின் ஆதிக்கத்தை செலுத்தியது. கிரேக்க இந்தியர்கள் மீது ஸ்பெயின் கொண்டிருந்த செல்வாக்கு, அமெரிக்காவின் ஆதிக்கத்தை தென்மேற்கில் வளர்வதை தடைசெய்தது. ஸ்பெயின் மற்றும் இந்திய நிலப்பரப்பின் வழியாகச் செல்லும் பிஸிஸிப்பி, மோபைல்,அப்பலேச்சிக்கோலா ஆறுகள் வழியாக எவ்வித தடையுமற்ற நாவாய்ப் போக்குவரத்து வேண்டுமென்று மேற்கு பகுதியில் குடியேறிய மக்கள் கோரினர். அவர்கள் மெக்ஸிகோ செல்வத்தைப் பற்றி மிகைப் படுத்தி அநேகக் கதைகளைப் பரப்பினர். மெக்ஸிகோ வளைகுடாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியை மட்டுமின்றி மெக்ஸிகோ முழுவதையும் தங்களது நாட்டோடு இணைத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பினர். இந்த ஏகாதிபத்தியக் கொள்கையைத் தொடர்ந்து அமெரிக்கர் 1810ல் மேற்குப் புளோரிடா குடியேற்ற மக்களை ஸ்பெயினுக்கு எதிராக கலகம் செய்யுமாறு தூண்டிவிட்டு அதனை தங்கள் நாட்டோடு இணைத்துக் கொண்டனர். 1811ல் சமாதான முறையில் புளோரிடாவிலுள்ள மோபைல் பகுதியை ஐக்கிய நாடுகளோடு இணைத்துக் கொள்ள வேண்டுமென்று ஜனாதிபதி மாடிசன் விரும்பினார். ஆனால் அவரது முயற்சி தோல்வியடைந்தது. அதே ஆண்டில் அமெரிக்க உளவுக் குழுவினர் கிழக்குப்

புளோரிடாவிலும் குழப்பத்தை ஏற்படுத்தினர். ஐரோப்பாவில் போர் தொடங்கிய போது அவர்கள் புளோரிடாவை தங்கள் நாட்டோடு இணைத்து கொள்ளத் திட்டமிட்டனர்.

**1811-ஆம் ஆண்டு தேர்தலும் போர் வெறியர்களும்**

1811-ஆம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரசுக்கு அநேக போர் வெறி பிடித்த இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பெரும்பாலும் மேற்குத் திசையிலுள்ள இப்போர் வெறியர்கள் கனடாவையும், புளோரிடாவையும் இணைக்க வேண்டுமென்ற எண்ணமுடையவர்கள். 1801 - ஆம் ஆண்டிலிருந்து வியாபார வீழ்ச்சியின் காரணமாக மேற்குப் பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டன. பொருளாதார சீர்குலைவிற்கு பிரிட்டன்தான் காரணமென்று போர் வெறியர்கள் கூறினர். அவர்கள் தங்களுடைய தலைவரான ஹென்றிக்ளே (Henry Clay) என்பவருக்கு நாட்டின் கொள்கைகளை உருவாக்குவதில் உதவி செய்து அதன் மூலம் போருக்குரிய சூழ்நிலைகளை உருவாக்கினர்.

போருக்கான காரணங்களை ஆராயும்போது ஒன்றிணைந்த பல காரணங்கள் உள்ளன. இந்தியர்களின் நிலப்பகுதிகளைக் கைப்பற்றிக் கனடா, புளோரிடா ஆகிய பகுதிகளைத் தங்கள் நாட்டோடு இணைத்துக் கொள்ள வேண்டுமென அமெரிக்கர் விரும்பினர். தெக்கும் செயின் எழுச்சியும், ஆங்கிலேயர் அவருக்கு அளித்த ஆதரவும் ஆங்கிலேயர்களை அமெரிக்க நிலப்பரப்பினின்று வெளியேற்ற வேண்டுமென எண்ணத்தை உண்டுபண்ணியது, மாலுமிகளும் நடுநிலமை உரிமைகளை மீறின. இதன் விளைவாக மேற்குப் பகுதி மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பெரும் தடை ஏற்பட்டது. ஏனெனில் அவர்கள் தங்கள் பொருள்களை அங்காடிகளில் விற்க முடியவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக தேசியப்பெருமை பாதிக்கப்பட்டதென்று ஓர் உணர்வும், ஐரோப்பிய போரை இவ்விரு நாடுகளுக்குமிடையே பகைமையை வளர்த்தது. காங்கிரஸில் மூன்று முக்கிய பிரிவினர் இருந்தனர். நியூ இங்கிலாந்தின் பிரதிநிதிகள் போரை எதிர்த்தனர். மேற்பகுதி போர் வெறியாளர்கள் போரினை ஆதரித்தனர். தென்பகுதி அங்கத்தினர்கள் இப்பிரச்சினையில் நேரடியாக ஆர்வம் காட்டவில்லை. எனினும் நாட்டுப்பற்றினால் தேசிய பெருமையை நிலைநாட்ட வேண்டுமென்ற ஆசையினால் அவர்கள் வெறியரோடு சேர்ந்தனர்.

1812-ஆம் ஆண்டு மேற்குப் பகுதியினர் போர்புரிய வேண்டுமென்று கூறியபோது தென் பகுதியினரால் அதனை தடை செய்ய முடியவில்லை. இந்நிலையில் மாடிசன் 1812-ஆம் ஆண்டு ஜூன் 18 ஆம் நாள் போர்ப் பிரகடனம் செய்தார். ஆனால் இரு நாட்களுக்கு முன்னதாகவே பிரிட்டனின் வெளிநாட்டுச் செயலாளரான காசில்ரீபிரபு பிரச்சினைகளுக்கு காரணமான கவுன்சில் சட்டங்களை ரத்து செய்ததாக அறிவித்தார். இச் செய்தியை மிகத் துரிதமாக அறிவிப்பதற்கான வசதி அக்காலத்தில் இருந்திருக்குமென்றால் போர் ஒரு வேளை ஏற்படாமல் இருந்திருக்கலாம்.

**போரின் போக்கு**

வடமேற்கு. தென்மேற்குப் பகுதிகள், கிழக்குப் பகுதி, கடல் ஆகிய நான்கு அரங்குகளில் போர் நடைபெற்றது. இப்போரில் இந்தியர்களும் ஆங்கிலேயர்களும் சேர்ந்து அமெரிக்கர்களும் எதிராகப் போரிட்டனர்.

**கனடா போர்**

கனடாவிற்கு எதிராகவே வடமேற்க அரங்கில் போர் மேற்கொள்ளப்பட்டது. வடமேற்கு அரங்கில் அமெரிக்கப் படைகளின் தன் பகுதியான ஜெனரால் ஹல் கனடாவைப் கைப்பற்றுவதற்காக டெட்ரோயிட் என்ற இடத்தில் 1812-ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆங்கிலேயர்களுக்கும் இந்தியர்களுக்கும் எதிராக தாக்குதலை மேற்கொண்டார். ஆனால் தெக்கும் செ அமெக்க எல்லைகளைக் கொள்ளையடித்ததோடு மாக்கிராக், சிக்காக்கோ பகுதிகளைக் கைப்பற்றினார். இந்தியர்களால் முறியடிக்கப்பட்டு விடுவோம் என்ற அச்சத்தால் ஹால் டெட்டிராயிட்டை விட்டு பின்வாங்கினார். திறமைமிக்க பிரிட்டிஷ் படையின் தளபதியான ஐசக்புரோக் என்பவரின் உதவியோடு தெக்கும் செ டெட்டிராயிட்டை தாக்கி, அமெரிக்கத் தளபதி ஹம் என்பவரை சரணடையச் செய்தார். இந்தியத் தலைவரான தெக்கும் செ அமெரிக்க ஆதிக்கத்திலிருந்து ஒஹியோ பகுதிகளை விடுவிக்க வேண்டுமென்று விரும்பினார். ஆனால் ஆங்கிலத் தளபதியான புரோக் கிழக்கு அரங்கு நோக்கி சென்றுவிட்டதாலும், அவருக்குப்பின் வந்த திறமையற்ற தளபதி ப்ரோக்டர் அவரோடு ஒன்றிணைந்து செயல்பட மறுத்தாலும் ஒஹியோவை மீட்பது மிகக் கடினமென்று தெக்கும் செ உணர்ந்தார். நயகராவைக் கடந்து கனடாவை நோக்கி மற்றொரு அமெரிக்கப் படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இதில் புரோக் என்பவர் அமெரிக்கப் படைகளைப் பின் வாங்கச் செய்தார்.

நியூயார்க்கிலிருந்து கனடாவை நோக்கி மேற்கொண்ட அமெரிக்கருடைய மூன்றாவது படையெடுப்பும் தோல்வி அடைந்தது ஜெனரல் வின்சுஷ்செஸ்டர் தலைமையில் 13,000 வீரர்களை கொண்ட படை ரெய்சின் ஆற்றை நோக்கி முன்னேறியது. ஆனால் ரவுண்ட்கெட், வாக் ஆகிய இந்திய இராணுவத் தளபதிகள் பிரெஞ்சு டவுன் என்ற இடத்தில் அமெரிக்கப் படைகளை முறியடித்தனர். இவ்விதமாக கனடாவைக் கைப்பற்ற வேண்டுமென்ற அமெரிக்கர்களின் முயற்சிகளை இந்தியர்கள் முறியடித்தனர்.

**தெற்கில் போர்**

தெற்கில் கிரேக்கர்கள், செமினோல்ஸ், நீக்ரோக்கள் ஆகியோர் தெக்கும் செயோடு சேர்ந்து கொண்டு அமெரிக்கரைத் தாக்கின. மிம்ஸ் கோட்டையைக் கைப்பற்றி இந்தியர்கள் அமெரிக்க எல்லைகளைத் தாக்கின. எனினும் ஜெனரல் க்ளெய்போர்ன், இந்தியர்கள் ஸ்பானிய புளோரிடாவோடு கொண்ட தொடர்பைத் துண்டித்த பின் கிரேக்க பகுதிக்குள் நுழைந்தார். அமெரிக்கரின் மற்றொரு படை புளோரிடாவிற்குள் நுழைந்து செமமினோல்ஸ் நீக்ரோக்களின் ஒன்றிணைந்த செரோக்கியர்களின் உதவியோடு தல்லா பூசா நதிக்கரையில்

ஹார்ஸ் ஷுபென்ட் என்ற இடத்தில் நடந்த போரில் கிரேக்கர்களை தோற்கடித்ததுடன் கிரேக்க நாட்டின் பெரும் பகுதியைக் கைப்பற்றின எனினும் புளோரிடா முழுவதையும் கைப்பற்ற அமெரிக்கரால் முடியவில்லை.

**தெக்கும் செயின் வீட்ச்சி**

1813ல் வடமேற்குப் பகுதியில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தாக்குதலை நடத்தியது. தளபதி ஹல் என்பருக்குப்பின் படையின் தலைவராக வந்த ஹென்றி ஹாரிசன் என்பவர் மிய்க்ஸ் கோட்டையை இந்தியர்களிடமிருந்து கைப்பற்றினார். ஆலிவர் ஹசார்ட் பெரி என்பவர் ஈரிக் ஏரியை ஆங்கிலேய்களிடமிருந்து கைப்பற்றினார். அமெரிக்கர்களுடைய இவ்வெற்றி இந்தியர்களையும் ஆங்கிலேயர்களையும் வடமேற்கிலிருந்து வெளியேற்றியது. கனடாவின் எல்லைப் பகுதியாகிய மால்டெனில் அமெரிக்கரின் முன்னேற்றத்தை தடை செய்ய வேண்டுமென்று தெக்கும் செ விரும்பினார் ஆனால் ஆங்கிலேயர்கள் மால்டனை விட்டு பின்வாங்கினர் எனினும் தெக்கு செ 1813 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5ஆம் நாள் கனடாவில் தேம்ஸ் நதிக்கரையில் அமெரிக்கப் படைகளுடன் போரிட்டார். இப்போரில் தெக்கும் செ இறந்தார். தெக்கும் செ மீதான இவ்வெற்றி நாளடைவில் ஹாரிசன் ஜனாதிபதியாகவும், ஜாக்சன் உப ஜனாதிபதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட காரணமாயிருந்தது.

**இறுதிப்போர்கள்**

கடற் போர்கள் சிறப்பாக நடைபெறவில்லை. ஈரிக் ஏரியிலும் சாம்பிளேடப்ன் ஏரியிலும் நடைபெற்ற போர்களின் அமெரிக்கர்கள் வெற்றியடைந்தனர். ஆயினும் ஆங்கிலேயர்கள் அமெரிக்கக் கப்பல்களை கடலினின்று விரட்டியடித்தனர்.

நெப்போலியனின் தோல்விக்குப்பின் அநேக பிரிட்டிஷ் படைகள் அமெரிக்கக் கடற்கரைப் பகுதிகளில் வந்திறங்கின, நியூ இங்கிலாந்தை ஏனையப் பகுதிகளின்றும் பிரிக்க வேண்டுமென்று பெரிய ஏரிகள் மீது தாக்குதல்கள் மேற்கொண்ட போது தோல்வியடைந்தனர். இரண்டாவது படையெடுப்பில் பிரிட்டிஷ் போர் வீரர்கள் வாஷ்ங்டனிலுள்ள வெள்ளை மாளிகையைத் தீக்கிரையாக்கினர். பகைவர்கள் முன்னேறி வருவதைக் கண்ட மாடிசன் அங்கிருந்து தப்பியோடினார். மூன்றாவது படை நியூ ஆர்லியன்சை அடைந்தது. ஆனால் ஜாக்சன் அதனைத் தோற்கடித்தார். கிரேக்கர்கள், ஆங்கிலேயர்கள் மீதான வெற்றி ஜாக்சனின் மதிப்பையும், செல்வாக்கையும் உயர்த்தியதோடு ஜனாதிபதியாக தோந்தெடுக்கப்படுவதற்கான வாய்ப்பினையும் அளித்தது.

**கெனட் உடன்படிக்கை**

நியூ ஆர்லியன்ஸ் போர் ஏற்படுவதற்கு இரு வாரங்களுக்கு முன்னரே போரில் ஈடுபட்ட இருபெரும் நாடுகளும் கெனட் என்னுமிடத்தில் ஒரு சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. இச்சமாதான உடப்பாட்டுச் செய்தியைத் தக்க சமயத்தில் அறிவிக்கமுடியாததால் போர் நடைபெறுவதைத் தவிர்க்க முடியாததாயிற்று. போர்

பிரகடனப்படுத்தப்பட்ட எட்டு நாட்களுக்குப் பிறகு அயல்நாட்டுச் செயலாளரான ஜேம்ஸ் மன்றோ சமாதான உடன்பாட்டிற்கான வழிகளை எடுத்துரைத்தார். கிரேட் பிரிட்டன் மாலுமிகளைக் கட்டாயமாகக் கவர்ந்து செல்வதை கைவிட மறுத்தது. மூன்று மாதங்களுக்குப்பின் ரஷியாவின் சார் அலெக்ஸாண்டர் போரில் ஈடுபட்டு நாடுகளிடையே சமாதானத்தை ஏற்படுத்த முயன்றார். மாடிசன் ரஷியாவின் தீர்மானத்தை ஏற்று சமாதான உடன்பாடு ஏற்படுவதற்காக, ஐந்து பேர் அடங்கிய ஒரு குழுவை காலாட்டின் என்பவரின் தலைமையில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்குக்கு அனுப்பி வைத்தார். ஆனால் ரஷியாவின் தலையீட்டை பிரிட்டன் விரும்பாததால் அவ்வுடன்பாட்டினை ஏற்க மறுத்தது. இந்நிலையில் வெளிநாட்டுச் செயலாளரான காசில்ரீ நேரடி பேச்சுவார்த்தைக்கான தனது விருப்பத்தை அறிவித்ததோடு ஹாம்பியர் பிரபு தலைமையில் ஒரு குழுவை அனுப்பி வைத்தார்.

சமாதான பேச்சு வார்த்தை பெல்ஜியத்திலுள்ள கென்ட் என்னுமிடத்தில் ஆரம்பமானது. நெப்போலியன் மீது பெற்ற வெற்றியின் காரணமாக பிரச்சனைக்கு உடனடியாக தீர்வு காண வேண்டுமென்று பிரிட்டன் எண்ணவில்லை. ஏனெனில் அமெரிக்காவிலும் எளிதாக வெற்றி பெறலாமென்று பிரிட்டன் எண்ணியது. ஆனால் பெரிய ஏரிகள் மீதான ஆதிக்கத்தை இழந்து போரில் தெக்கு செ இறந்த போது பிரிட்டன் தானாகவே சமாதானத்திற்கு வந்தது. கட்டாயமாக மாலுமிகளைக கவர்ந்து செல்வதைக் கைவிடவும், ஏனையத் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ளவும் முடிந்தால் கனடாவை கொடுக்கும் படியும் பிரிட்டனிடம் மாடிசன் கேட்டார். இதற்குப் பதிலாக பிரிட்டிஷ் குழு கீழ்கண்ட கருத்துக்களைக் கூறியது.

பெரிய ஏரிகளின் அமெரிக்கா எவ்விதமான படைகளையோ அல்லது போர்க் கப்பல்களையோ வைத்திருக்கக் கூடாது என்றும் குறிப்பிட்ட எல்லைப் பகுதிகள் கனடாவிற்கு வழங்கப்படவெண்டுமென்றும் பெரிய ஏரிகளுக்குத் தெற்கே முழு உரிமை பெற்ற ஓர் இந்திய ”இடைப்படு நாடு” அமைக்கப்படவேண்டுமென்றும் கூறியது. ஆனால் அமெரிக்கத் தூதுவர்கள் இதற்கு ஒப்புதல் அளிக்க மறுத்ததால் பிரிட்டன். இந்திய மாநிலம் ஒன்றை நிறுவவேண்டுமென்று தனது கொள்கையையும், அமெரிக்க இராணுவத் தலையீடு பெரிய ஏரிகளிலிருந்து அகற்றப்படவேண்டுமென்ற கோரிக்கையையும் கைவிட்டது. ஏனைய பிரச்சனைகளை நடுநிலையாளர்களின் தலையீட்டின் மூலமாக தீர்த்துக்கொள்ளலாம் என்று அமெரிக்கா கூறியது. போர் வெற்றிகரமாக முடியாததால் அமெரிக்க-பிரிட்டிஷ் உடன்படிக்கை 1814ஆம் ஆண்டு டிசம்பரின் கையெழுத்தானது.

நாங்கள் கைப்பற்றிய பகுதிகளைத் திருப்பி அளிக்க வழி செய்து கொண்ட உடன்படிக்கை கட்டாயமாக மாலுமிகளைக் கவர்ந்து செல்வது பற்றியோ நடுநிலை உரிமைகள் பற்றியோ குறிப்பிடப்படவில்லை. நடநிலைக் குழுவின் வழியாக ஏனைய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உடன்படிக்கை உதவியது. அதைத் தொடர்ந்து பல உடன்பாடுகள் ஏற்பட்டன. 1815ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட வாணிப

உடன்படிக்கையானது அமெரிக்கருக்கு மேற்கிந்தியத் தீவுகளைத் தவிர ஏனைய பிரிட்டிஷ் பகுதிகளோடு வியாபாரம் செய்யும் உரிமையை அளித்தது. பெரிய ஏரிகளில் துறைமுகங்களை அமைப்பதற்கும் போர்க் கப்பல்களை நிறுத்துவதற்கும் 1818ஆம் ஆண்டு ரஷ்பாகட் என்ற உடன்படிக்கை தடை விதித்தது. அதே ஆண்டில் ஏற்பட்ட "மீன் பிடிக்கும் உடன்படிக்கை" கனடியக் கடலில் மீன்படிக்கும் உரிமையை அமெரிக்கருக்கு அளித்தது. 1818ஆம் ஆண்டின் "எல்லை உடன்பாடு" பெரிய ஏரிகளுக்கும் ராக்கி மலைத் தொடர்ச்சிக்குமமிடையிலான 49வது அட்சரேகையை எல்லையாக அங்கீகரித்தது. 1814ஆம் ஆண்டின் உடன்படிக்கை தேவையை சமாதானத்தையும் அமைதியையும் அளித்து வெற்றி கொண்ட பகுதிகளைத் திருப்பி அளிப்பதற்கான வழிகளைச் செய்ததென்றால் அதைத் தொடாந்து ஏற்பட்ட உடன்பாடுகள் ஏனைய பிரச்சனைகளைத் தீர்த்தன.

**இரண்டாவது விடுதலைப் போர்**

1812ஆம் ஆண்டுப் போர் மூன்றாண்டுகள் நடைபெற்றது. அமெரிக்கர்களுக்கு எவ்வித அடிப்படைப் பிரச்சனைகளும் இல்லாத இப்போரில் ஐரோப்பாவில் ஆங்கிலேயர்கள் அதிகமாக பாத்தியப்பட்ட சமயத்தில் போரில் ஈடுபட்டனர். ஆனால் இப்போரின் விளைவாக பிரிட்டனுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. பிரிட்டனிடமிருந்து எவ்விதப் பகுதிகளையும் அமெரிக்க ஐக்கிய நாடுகளால் இணைக்க முடியவில்லை அதே போல் பிரிட்டனும் அமெரிக்க நிலப்பகுதிகளை இணைக்க முடியவில்லை. புளோரிடாவிலுள்ள மோபைல் பகுதியையும், இந்தியர்களிடமிருந்து ஏராளமான பகுதிகளையும் அமெரிக்கர் அபகரித்துத் தங்கள் நாட்டோடு இணைத்துக் கொண்டது தற்செயலாக நிகழ்ந்தது. அமெரிக்க மாலுமிகளைக் கட்டாயமாகக் கவர்ந்து செல்வதை கைவிடுவதாகவோ, நடுநிலை உரிமைகளை மதிப்பதாகவோ, கடல் சுதந்திரத்தை அங்கீகரிப்பதாகவோ பிரிட்டன் உறுதியளிக்கவில்லை. எனினும் அமெரிக்க வரலாற்றறிஞர்கள் 1812ஆம் ஆண்டு போரை இரண்டாவது விடுதலைப் போர் என்று கருதுகின்றனர்.

இவ்விரு போர்களுக்குமிடையே அநேக ஒற்றுமைகள் உண்டு. முதலாவது சுதந்திரமும் விரிவடைதலுமே போர்களின் அடிப்படை நோக்கமாக இருந்தன. 1776ல் அரசியல் சுதந்திரத்திற்காகவும் மேற்கிந்திய நிலப்பகுதிகளில் குறுக்கீடற்ற நில ஆதிக்கம் பெறவும் குடியேற்ற நாடுகள் பிரீட்டனோடு போரிட்டன. எந்த ஒரு ஐரோப்பிய நாட்டின் தலையீடுமின்றி, இந்திய நிலப்பகுதிக்குள் செல்லவும் கடல் போக்குவரத்து உரிமை பெறவம் 1812ல் அமெரிக்கா போரிலிறங்கியது.

இரண்டாவது 1776 ல் நடைபெற்ற விடுதலைப் போரைப் போன்றே இப்போர் ஆங்கிலேயர்களுக்கும் மூன்றாம் ஜார்ஜ் மன்னருக்கும் எதிராக ஏற்படுத்தப்பட்டதாகும். எனினும் 1812ல் போர் தொடங்கியபோது ஜார்ஜ் மன்னர் புத்தி சுவாதீனமற்றவராக இருந்தார்.

மூன்றாவதாக, 1776 ல் நடந்தது போன்றே ஐரோப்பிய நிலையை தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள அமெரிக்கா தீர்மானித்தது. பிரான்சுக்கும் பிரிட்டனுக்குமிடையிலான ஆதிக்கப் போட்டி தொடர்ந்து ஐரோப்பாவில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அமெரிக்க விடுதலைப் போரில் பிரெஞ்சுக்காரர்கள், குடியேற்ற மக்களுக்கு பெரிதும் உதவினர்.ஆனால் 1812ஆம் ஆண்டுப் போரின் போது அவர்கள் எந்தவித உதவியும் அளிக்கவில்லை.

நான்காவது 1776-ஆம் ஆண்டு போன்றே 1812ல் அமெரிக்க மக்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. ஆங்கில அரசு மீது பற்றுகொண்ட அமெரிக்கர், ஆங்கிலேயரோடு சேர்ந்து கொண்டு, ஐக்கிய நாடுகளுக்கு எதிராகப் போரிட்டனர். 1812ல் கூட்டாட்சியாளர்கள் குறிப்பாக நியூ இங்கிலாந்து மக்கள் போரை எதிர்த்தனர். குடியரசு அரசாங்கத்தின் மீது அவர்களுக்கு எவ்வித அனுதாபமும் இல்லை. மேலும் இங்கிலாந்தோடு மேற்கொண்ட போர் வியாபாரத் தடை, கட்டாயப் போர்ப் பணி போன்றவற்றை உண்டு பண்ணி தங்களின் வாணிபத்தை அழித்துவிடும் என்று அஞ்சினர்.

ஐந்தாவதாக, போர் திட்டவட்டமான முடிவுகளை ஏற்படுத்தவில்லை. விடுதலைப் போரைப் போன்றே போரில் ஈடுபட்ட இரு நாடுகளும் வெற்றிகளையும் தோல்விகளையும் பெற்றன.

இறுதியாக, போரில் ஆங்கிலேயர்கள் தங்களுக்கு உதவி செய்த இந்தியர்களுக்குத் துரோகம் இழைத்தனர். வடமேற்குப் பகுதியைக் காக்க வேண்டுமென்ற மன உறுதியால் இந்தியர்கள் அமெரிக்கரோடு போரில் ஈடுபட்டனர். கனடாவில் ஆங்கிலேயர்களுக்குப் போதிய இராணுவம் இல்லாத நிலையில் இப்பகுதியைக் கைப்பற்ற அமெரிக்க ஐக்கிய நாடுகள் எடுத்த முயற்சிகளை இந்தியர்கள் முறியடித்தனர். உண்மையில் தெக்கும் செ கனடாவை ஆங்கிலேயர்களுக்காகப் பாதுகாத்தார். இருந்த போதிலும் பாரிசில் உருவானது போன்ற ஒரு உடன்படிக்கை கென்டில் கையெழுத்தான போது ஆங்கிலேயர்கள் தங்கள் உறுதிமொழிகளை மறந்து இந்தியர்களுக்குத் துரோகம் இழைத்து அவர்களை பழிவாங்கும் அமெரிக்கர்களிடம் விட்டுச் சென்றனர்.

1812-ஆம் ஆண்டு போரினால் விடுதலைப் போரின் போது பெற்ற வெற்றிகளை ஐக்கிய நாடுகள் உறுதிப்படுத்திக் கொண்டது. இப்போரானது புரட்சிக் காலத்திலிருந்து நிலவிவந்த நாடு பிடிக்கும் கொள்கைக்கு முற்றுப்புள்ளியிட்டது. அரசியல் சதந்திரம் பெற்ற போதிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பொருளாதார பண்பாட்டுத் துறைகளில் கிரேட் பிரிட்டனையே சார்ந்தது நின்றது. அமெரிக்காவின் பெரும்பான்மையான கச்சாப் பொருட்களை பிரிட்டனில்தான் விற்க முடியும். அதே போன்று பெரும்பான்மையான செய் பொருட்களை இங்கிலாந்திடமிருந்தே தான் பெற முடியும். பிரிட்டனுக்கும் பிரான்சிற்குமிடையிலான போட்டி மனப்பான்மை அரசியல் கட்சிகளின் திட்டங்களை உருவாக்க உதவியது. ஆனால் போரின் போது இந்நிலைமை மாறியது. ஆங்கிலேயர்களுக்கு

எதிராக மேற்கொண்ட போர் நடவடிக்கைகள் காரணமாக அமெரிக்கா வியாபாரத் தொடர்பு கொள்ள ஏனைய நாடுகளை நாடியது. தற்செயலாக பிற நாகரிக பகுதிகளோடு மேற்கொண்ட தொடர்பின் காரணமாகப் பண்பாட்டுத் தொடர்பு வளர்ச்சியடைந்தது. இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் இடையிலான அரசியற் போட்டி நெப்போலியனின் வீழ்ச்சியோடு முடிவுற்றது. அதன்பின் அமெரிக்கர் சிந்தனையில் அது முக்கியப்பிரச்சினையாகத் தெரியவில்லை. மேற்குறிப்பட்ட நிகழ்ச்சிகள் அமெரிக்கரின் நோக்கங்களை விரிவுபடுத்தியதோடு, மக்கள் தங்களது தன்னம்பிக்கை, தேசிய உணர்வுகளை வளர்த்துக்கொள்ள உதவியது.

1. 1812ஆம் ஆண்டுப் போரின் காரணங்களையும் அதன் விளைவுகளையும் பற்றி ஆய்க.
2. 1812ஆம் ஆண்டுப் போரில் அமெரிக்காவும், இங்கிலாந்தும் ஏன் போரிட்டன?

## மன்றோ கொள்கை

1816-ஆம் ஆண்டுத் தேர்தலில் குடியரசுக் கட்சித் தலைவரான ஜேம்ஸ் மன்றோ ஜனாதிபதியாகக் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவருடைய காலம் "நல்விருப்ப சகாப்தம்" என அழைக்கப்படுகிறது. 1812-ஆம் ஆண்டுப் போருக்குப்பின் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தொழிலில் அபிவிருத்தியும், பொருளாதாரத்தில் வளர்ச்சியும் அடையத் தொடங்கியது. ஆனால் அதிக உற்பத்தி, பணப் பற்றாக்குறை போன்றவற்றினால் 1819ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி சிறிது காலத்திற்கு மட்டும் நிலைத்திருந்தது. 1819-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மிஸோரியை கூட்டாட்சியில் சேர்ப்பது பற்றிய பிரச்சினையை காங்கிரசில் ஆலோசித்தபோது அடிமைப் பிரச்சினை கசப்பு உணர்வை ஏற்படுத்தியது. எனினும் 1820-ல் ஏற்பட்ட உடன்பாட்டின் படி மிஸோரி ஐக்கிய நாடுகளின் மாநிலமாக இணைத்துக் கொள்ளப்பட்டது.

**ஐரோப்பிய சதித் திட்டங்கள்**

ஸ்பானிய அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் ஸ்பெயின் நாட்டின் அரசர் பெர்னான்ட் மீது விசுவாசம் கொண்டிருந்தன. நெப்போலியன் பெர்டினான்டை பதவியிலிருந்து நீக்கிவிட்டு தனது ஆதிக்கத்தை ஸ்பெயினில் நிறுவியபோது, குடியேற்ற நாடுகள் தங்கள் விருப்பப்படி தற்காலிக சுதந்திர அரசுகளை அமைத்தன. 1814-ல் பெர்னானட் மறுபடியும் பதவிக்கு வந்தபோது தற்காலிக அரசுகளால் ரத்து செய்யப்பட்டிருந்த பழைய கட்டுப்பாடுகளை குடியேற்றங்களின் வாணிபத்தின் மீது மீண்டும் புகுத்தினர். அதனால் 1817-ல் குடியேற்ற நாடுகள் புரட்சி செய்து ஸ்பானியப் படைகளை விரட்டியடித்தன. புரட்சிகளை அடக்குவதற்காக மன்னருக்கு உதவி செய்யும் ஐரோப்பிய நாடுகள் புனிதக் கூட்டினை நிறுவின. இது இலத்தீன் அமெரிக்காவைத் திருப்பக் கைப்பற்றுவதற்கு ஐரோப்பிய நாடுகள் ஸ்பெயினுக்கு உதவி செய்யும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில் தங்களது நாட்டினருகில் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கம் ஏற்படுவது தங்களின் பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிக்குமென்று அமெரிக்கா கருதியது. எல்லாவற்றிற்கும் மேலாக இலத்தீன் அமெரிக்க நாடுகளோடு வியாபாரத் தொடர்பை பெருக்கிக் கொள்ள அமெரிக்க ஐக்கிய நாடுகள் விரும்பியது. ஸ்பெயின் இந்நாடுகளின் மீது மறுபடியும் ஆதிக்கம் செலுத்தினால் அமெரிக்காவின் வாணிபத்தை பாதிக்குமென்று அமெரிக்க ஐக்கிய நாடுகள் அஞ்சியது. ஆகையால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இலத்தீன் அமெரிக்காவிற்கு ஆதரவளித்தது.

அலாஸ்காவிலிருந்து தெற்கு நோக்கி ரஷியாவின் ஆக்கிரமிப்பு அமெரிக்க வளர்ச்சிக்கு இடையூராக அமைந்தது. ரஷிய வணிகர்கள் ஸ்பெயினுக்குச் சொந்தமான கலிபோர்னியாவில் வாணிகத் தலங்களை நிறுவி சான்பிரான்சிஸ்கோவின் வட பகுதியில் ஒரு கோட்டையும் அமைத்தனர். இந்திய இனத்தவர்கள் மத்தியில் பாஸ்டன் வணிகர்களின் நடவடிக்கைகள் ரஷிய வணிகர்களுக்குத் தொல்லைகள் கொடுத்ததால் முதலாம் சார் அலெக்ஸாண்டர் 1821-ல் தான் விடுத்த அரசு ஆணை வழியாக அந்நியக் கப்பல்கள் 51-வது அட்சரேகைக்கு வடக்கே உள்ள அலாஸ்காவின் கடற்கரைப்பகுதி அருகே செல்லக்கூடாதென எச்சரிக்கை விடுத்தார். இது ஓரிகான் பகுதி நோக்கி அமெரிக்காவின் நில ஆதிக்க வளாச்சிக்கு எதிரான ஒரு மிரட்டல் என்று வெளிநாட்டுத் துறைச் செயலாளர் ஜான் சூயின்சி ஆடம்ஸ் உணர்ந்தார்.

**பிரிட்டனின் நோக்கம்**

இலத்தீன் அமெரிக்க நாடுகள் தங்களுடைய விடுதலைப் போராட்டத்திற்காக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உதவியை நாடின. 1822-ல் அமெரிக்க புதிய குடியரசுகளுக்கு தக்க சமயத்தில் அங்கீகாரத்தை அளிக்குமென்று கூறியது. இதற்கிடையில் கிரேட் பிரிட்டன் இலத்தீன் அமெரிக்காவில் ஏற்பட்ட விடுதலைப்போராட்டத்தில் அதிக ஆர்வம் காட்டியது. புதிய குடியரசோடு மேற்கொண்ட வாணிபத்தில் பயனடைந்த பிரிட்டன் மறுபடியும் ஸ்பெயின் தனது பழைய இலத்தீன் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் ஆதிக்கம் செலுத்தாதவாறு தடுப்பதில் கவனமாக இருந்தது.

இலத்தீன் அமெரிக்க விடுதலைப் பிரச்சினைகளில் ஒருமித்த கருத்துக் கொண்ட பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சரான ஜார்ஜ் கானிங் என்பவரும் லண்டனில் அமெரிக்க அமைச்சரான ரிச்சர்ட் ரஷ் என்பவரும் இலத்தீன் அமெரிக்காவை அங்கீகரிக்கும் பிரச்சினையை ஆராய்ந்தனர். இலத்தீன் அமெரிக்காவில் பிற ஐரோப்பிய நாடுகளின் தலையீட்டைத் தடைசெய்ய கிரேட் பிரிட்டனும். அமெரிக்க ஐக்கிய நாடுகளும் சேர்ந்து ஒரு கூட்டறிக்கையை வெளியிட வேண்டுமென்று கானிங் கூறினார். ஆனால், இதைப் பாராட்டிய ரஷ், இலத்தீன் அமெரிக்க நாடுகளின் சுதந்திரத்தை பிரிட்டன் அங்கீகரித்தால் தான் இந்த கூட்டறிக்கை பயன் உள்ளதாயிருக்கும் என்று சுட்டிக்காட்டினார். பிரிட்டன் ஸ்பெயினோடு

கொண்ட ஒப்பந்தத்தின் காரணமாக கானிங் இந்நிபந்தனையை ஏற்றுக் கொள்ள மறுத்தார். எனவே ரஷ் இப்பிரச்சினையை அமெரிக்க நிர்வாகத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இப்பிரச்சினை குறித்து மன்றோ, ஜெபர்சனையும் மாடிசனையும் கலந்தாலோசித்தார். கிரேட் பிரிட்டனும் அமெரிக்காவும் வெளியிடும் கூட்டறிக்கைக்கு எல்லோருமே ஆதரவு தந்தனர். ஆனால் செயலாளரான குயின்சி ஆடம்ஸ் ஐக்கிய நாடுகள் தென்திசை நோக்கி விரிவடைதலையும், இலத்தீன் அமெரிக்க நாடுகளைத் தங்கள் நாட்டோடு இணைப்பதையும் இக்கூட்டறிக்கை தடைசெய்யுமென்று அஞ்சினார். இரண்டாவது, உலகத்தின் மேற்கு பூகோளதைப் பற்றிய பிரச்சினையில் பிரிட்டனின் தலைமைப் பொறுப்பை அங்கீகரித்து அவற்றிற்கு செல்வாக்களிக்க அவர் விரும்பவில்லை.

இந்நிலையில் இலத்தீன் அமெரிக்காவில் ஐரோப்பிய நாடுகள் தலையிடும் அபாயம் எதுவும் தற்போது இல்லையென்றும் அவ்வாறு தலையீடு ஏற்பட்டால் அதனை பிரிட்டிஷ் கடற்படை தடுத்து நிறுத்தும் என்றும் அவர் நம்பியதால் மன்றோவை தனியே செயல்படும்படி வற்புறுத்தினார். அதன்படி மன்றோ 1823-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ஆம் நாள் காங்கிரசுக்கு அனுப்பிய வருடாந்திர அறிக்கையில் புகழ்பெற்ற தனது கொள்கையை சேர்த்தார்.

**மன்றோ கொள்கையின் கோட்பாடுகள்**

இக்கொள்கை சில குறிப்பிட்ட முக்கியமான கோட்பாடுகளைக் கூறியது 1) அமெரிக்க நிலப்பகுதிகளில் இனிமேல் ஐரோப்பியர்கள் குடியேற்ற நாடுகள் நிறுவக்கூடாது. 2) தற்போது அமெரிக்காவிலுள்ள ஐரோப்பிய குடியேற்றங்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தலையிடாது. 3) ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கா மீது தங்களின் அரசியல் முறைகளைத் திணிக்கவோ அல்லது அமெரிக்கக் குடியரசுகளின் சுதந்திரத்தில் தலையிடவோ அல்லது அமெரிக்க நிலப்பகுதிகளில் குடியேற்றங்கள் நிறுவவோ எடுக்கும் முயற்சிகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அமைதிக்கும், பாதுகாப்பிற்கும் தீங்கிழைக்க கூடியதாகுமென்று கருதப்படும். 4) ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்படும் போர்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இனிமேல் தலையிடாது.

மன்றோவின் அடிப்படைக் கொள்கைகள் அனைத்தும் குடியேற்ற நாடுகளின் காலமரபைச் சார்ந்ததாகும், மற்றும் ஜார்ஜ், வாஷிங்டன், ஜான் ஆடம்ஸ், தாமஸ் ஜெபர்சன் போன்றோரின் அரசியல் கருத்துக்களினின்றும் எடுத்தாளப்பட்டு, அதனை ஒரு கொள்கையாக உருவாக்கி, வரையறைகளோடு அறிவித்த பெருமை மன்றோவையே சாரும். மேலும் பழைய உலகத்திற்கும் புது உலகத்திற்குமிடையே ஒரு வேறுபாட்டைக் கோடிட்டுக்காட்டி ஒருவருக்கொருவர் தலையிடாதிருக்கும் கொள்கையை அவர் வரையறை செய்தார். துருக்கியர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் இடையே ஏற்பட்ட போராட்டத்தில் கிரேக்கர்களுக்கு ஆதரவைக் காட்ட ஜனாதிபதி மன்றோவும், பொது மக்களும் விரும்பினர். ஆனால் செயலாளரான ஆடம்ஸ் தலையீட்டால் அம்முயற்சி கைவிடப்பட்டது. ஏனெனில்

ஐரோப்பியாவில் எது நடைபெற்றாலும் அது பற்றி கவலைப்படாது. அமெரிக்கப் பிரச்சினைகளில் அமெரிக்க வழிமுறைகளையே முற்றிலும் கவனிக்க வேண்டும் என்று கருதினார். அமெரிக்க கைக்கிய நாடுகளின் எதிர்கால அரசியல் வணிக வளர்ச்சிக்குரிய இடமாக அமெரிக்கக் கண்டத்தை வைத்திருக்க வேண்டுமெனவும் ஐரோப்பியக் குடியேற்றங்களின் தோற்றம் பயங்கரமான இடையூறுகளை விளைவிக்குமெனவும் அவர் கருதினார். எனவே குறிப்பாக பிரிட்டர், ரஷியா ஆகிய நாடுகள் மேலும் குடியேற்றங்களை ஏற்படுத்துவதை தடை செய்ய விரும்பினார். இது "குடியேற்றங்கள் நிறுவாமை" என்ற ஷாத்தாக மன்றோ கொள்கையில் சேர்க்கப்பட்டது. மன்றோ கொள்கையின் இரண்டாவது அடிப்படை ஷரத்து தலையிடாமையாகும். இது இலத்தீன் அமெரிக்காவில் குடியேற்றங்கள் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்று விரும்பிய ஸ்பானிய அரசர்கள் மேற்கொண்ட முயற்சிக்கு பதிலடியாகும். அமெரிக்கா "ஐக்கிய நாடுகளுக்கே" என்ற மறைபொருள் தொனிக்க அமெரிக்கா, "அமெரிக்க மக்களுக்கு" என்ற கொள்கையை ஐக்கிய நாடுகள் வகுத்துக் கொண்டதோடு ஐரோப்பிய பிரச்சினைகளில் தலையிடாது. தங்களின் நலனை ஐரோப்பியத் தலையீடுகளினின்றும் காத்துக் கொள்ள பெரிதும் முயன்றது.

இலத்தீன் அமெரிக்காவின் நலனை முன்னிட்டு வெளியிடும் இக்கொள்கை தங்கள் பெருமையை உயர்த்தும் என்று கருதியே அமெரிக்க ஐக்கிய நாடுகள் இக்கொள்கையை அறிவித்தது ஐரோப்பிய நாடுகளின் மிரட்டல் என்பது கற்பனையே. ஐரோப்பா, மத்திய ஆசியா போன்ற நாடுகளின் பிரச்சினைகளின் ரஷியா ஈடுபட்டிருந்ததால் அமெரிக்கா மீது அது அதிக அக்கறை காட்டவோ அல்லது ஓர் ஆக்கிரமிப்புக் கொள்கையைக் கடைபிடிக்கவோ முடியாத நிலையிலிருந்தது. ஐரோப்பிய நாடுகளில் பிரான்ஸ் மட்டுமே அமெரிக்காவில் அரசியல் ஆதிக்கம் பெற முயன்றது. ஆனால் அது போரை விரும்பவில்லை. மன்றோ கொள்கை அறிவிக்கப்படுவதற்கு இரு மாதங்களுக்கு முன்னர் ஜார்ஜ் கானிங் முயற்சியின் பேரில் இலத்தீன் அமெரிக்காவிற்குப் படைகளை அனுப்பும் எண்ணத்தைக் கைவிட்டுவிடுவதாக பிரான்ஸ் ஒரு உறுதி மொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்டது. உண்மையில் அன்றைய சூழ்நிலையில் "காட்டுமிராண்ச் சட்டத்தை" ஒத்த ஒரு கொள்கையை அறிவிப்பதற்கான எவ்விதத் தேவையும் எழவில்லை. எனினும் போர்த்தந்திர வழிமுறைகளைக் கையாண்டு ஒரு நாடு நியாயமற்ற முறையில் பிற நாடுகளின் மீது உரிமை கொண்டாடலாம் என்பதைக் கண்டிக்கும் வகையில் இவ்வறிக்கை வெளியிடப்பட்டது.

1. மன்றோக் கொள்கை அறிவிப்பதற்கான அவசியம் என்ன?
2. மன்றோவின் உள்நாட்டு கொள்கை பற்றி விளக்குக.
3. ஜேம்ஸ் - மன்றோ பதவி வகித்த காலத்தை நல் உணர்வுகளின் சகாப்தம் என்பது ஏன்?

# ஆண்ட்ரு ஜாக்சன்

ரோம் நகரை நோக்கி முரட்டுக் கூட்டத்தனர் படையெடுத்தது போல், தலைநகர் வாஷிங்டனை நோக்கி தெற்கு மற்றும் மேற்குப் பகுதி சாமானிய மக்கள் தங்கள் தலைவர் பதவியேற்பு விழாவைக் காண பயணமாயினர்.

நெவின்ஸ்

அமெரிக்காவின் ஏழாவது குடியாட்சித் தலைவர். எல்லைப்புறங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் குடியரசுத் தலைவர். "சாதாரண மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அசாதாரமானவர்" என்றழைக்கப்பட்டார். இவரது ஆட்சியினை "ஜாக்சனிய மக்களாட்சி" எனறு வரலாற்றறிஞர்கள் கூறுகின்றனர். இவருக்கு "ஓல்டு ஹிக்கரி" என்ற பெயரும் உண்டு. இவரது காலம் கடின உறவு காலம் எனப்படுகின்றது.

**1. இளமைக்காலம்**

ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் தந்தை இறந்துபடவே தாயார் வீட்டு வேலைகள் செய்து இவரைக் காப்பாற்றினார். இளம் வயதிலேயே அமெரிக்க சுதந்திரப் போரில் பங்கேற்றவர். தொடக்கத்தில் கல்வியறிவில்லாதவர். மனைவியின் தூண்டுதலால் கல்வி கற்றார். சேணம் தைப்பவரின் உதவியாளராகவும், ஆசிரியராகவும் பணியாற்றினார். சட்டம் பயின்று தென்னசி மாநிலத்தின் வழக்கறிஞராகவும், மாநில தலைமை நீதிபதியாகவும் பணியாற்றினார்.

வழக்கறிஞராக பணியாற்றிய போது கட்சிக்காரர்கள் பொருளாக கொடுத்தவற்றை விற்கும் பொருட்டு வணிகத்தில் ஈடுபட்டார். அவ்வளவில் செல்வந்தர்கள் ஏழை மக்களை ஏமாற்றி பிழைப்பதை உணர்ந்தார். வங்கி அவர்களுக்கு உறுதுணையாக உள்ளதாக கருதினார். பிற்காலத்தில் வங்கிக்கு எதிராக செயல்பட இதுவே காரணமாயிற்று. பிரதிநிதிகள் சபையிலும் செனட் மன்றத்திலும் உறுப்பினராகும் வாய்ப்பினைப் பெற்றார். 1812ம் ஆண்டு போரில் "நியூ ஆர்லியன்ஸ்" என்ற இடத்தில் சிறப்பாகப் போரிட்டு பெருமையினையும், புகழினையும் பெற்றார். 1824ம் ஆண்டு குடியாட்சித் தலைவர் தேர்தலில் தோல்வியுற்றார். 1828 ம் ஆண்டு மிகுதியான வாக்குகளைப் பெற்று குடியாட்சித் தலைவரானார்.

**2. 1828ம் ஆண்டுத் தேர்தல்**

இத்தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் பெற்றதாகும். இதனை "இரண்டாவது அமெரிக்கப் புரட்சி" என்போரும் உளர். இத்தேர்தலில் ஜான் குவின்சி ஆடம்ஸிற்கு 83 வாக்குகளும், ஜாக்சனுக்கு 178 வாக்குகளும் கிடைத்தன. ஜாக்கசனின் வெற்றிக்கு பல காரணங்கள் துணைபுரிந்தன.

**a) ஐரோப்பியாவில் ஏற்பட்ட குடியாட்சி இயக்கங்கள்**

வீயன்னா மாநாடு மன்னராட்சியை மீண்டும் திணிப்பதற்கான முயற்சியில் இறங்கியது. இதனை எதிர்த்து கிரேக்க நாட்டிலும், பெல்ஜியத்திலும், பிரான்சிலும் புரட்சிகள்

வெடித்தன. இவ்வியக்கங்களின் போது வெளியான குடியாட்சி கருத்துகள் அமெரிக்கர்கள் மனதில் நன்கு பதிந்தன.

**b) எல்லைப்புற வாக்காளர்களின் ஆதரவு**

1828ல் அமெரிக்க குடியேற்றங்களின் எண்ணிக்கை 24 ஆகும். இதில் புதிதாக சேர்க்கப்பட்ட 11 மாநிலங்களும் எல்லைப்புறத்தைச் சார்ந்தவை ஆகும். அவர்கள் அரசாங்க சட்டதிட்டத்தையோ வரிவிதிப்பையோ விரும்பாது தங்களைத் தாங்களே ஆண்டு கொண்டனர். இதனால் மக்களாட்சி உணர்வ அதிகமாயிருந்தது. மேலும் இம்மாநிலங்களில், சொத்தின் அடிப்படையில் இல்லாது, வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. அவர்கள் அனைவரும் ஜாக்சனையே ஒருமுகமாக தேர்ந்தெடுத்தனர்.

**c) தொழிலாளர்களின் ஆதரவு**

1812ம் ஆண்டுப் போருக்குப் பிறகு தொழில் வளர்ச்சி ஏற்பட்டது. ஏராளமான தொழிற்சாலைகள் உருவாயின. அயல்நாடுகளிலிருந்தும் தொழிலாளர்கள் அமெரிக்காவில் குடியேறினர். இதனால் தொழிலாளர்கள் எண்ணிக்கையும், நடுத்தர மக்களின் எண்ணிக்கையும் மிகுதியாயிற்று இவர்கள் அரசியலில் பங்குபெற முயன்றனர். பல மாநிலங்களில் இவர்களுக்க வாக்குரிமை வழங்கப்பட்டது. இவர்கள் அனைவரும் ஜாக்சனின் மக்களாட்சி கருத்துகளால் கவரப்பட்டு அவருக்கே வாக்களித்தனர்.

**d) ஜாக்சனின் புகழ்**

1812ம் ஆண்டு போரில் நியூ ஆர்லியன்ஸில் பெற்ற வெற்றி இவரது பெருமையையும் புகழையும் உயர்த்தியது. அலபாமாவில் தொல்லை கொடுத்து வந்த இந்தியர்களை விரட்டியடித்து பெரும் சிறப்பு பெற்றார். இவரது செயல்பாடுகளை போற்றிப் புகழ்ந்த பொதுமக்கள் இவருக்கே வாக்களித்தனர்.

ஜாக்சன் தேர்ந்தெடுக்கப்பட்டதை மக்கள் பெரிதும் வரவேற்றனர். அவரது பதிவியேற்பு விழாவைக் காண ஏராளமான மக்கள் திரண்டு வந்தனர். தங்கள் சேறு படிந்த கால்களால் விலையுயர்ந்த இரத்தின கம்பளங்களை பாழாக்கினர். ஜாக்சன் சாதாரண மக்களின் நலனுக்கு பாடுபட உறுதி பூண்டார். "செல்வந்தர்களுக்கு கிடைத்து வந்த சலுகைகளையும் உரிமைகளையும் தடை செய்யவும், ஏழை மக்களின் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளை உடைத்தெறிந்து அவர்களது வளர்ச்சிக்கு வழிவகை செய்வதயுமே தனது குறிக்கோளாகக் கொண்டார்". இவையே "ஜாக்சனின் மக்களாட்சியின்" அடிப்படைக் கருத்துக்களாகும்.

**3. உள்நாட்டுக் கொள்கை**

**a) வெற்றி பெற்ற ஆட்சி ஆதாயப் பங்கு பெறும் முறை**

ஜாக்சன் "வெற்றி பெற்ற கட்சி ஆதாயப் பங்கு பெறும் முறையைத்" துவக்கினார். உண்மையில் இதற்கான விதை தாமஸ் ஜெபர்சன் காலத்திலேயே ஊன்றப்பட்டுவிட்டது எனலாம். தனது வெற்றிக்குப் பாடுபட்ட தனது ஆதரவாளர்களுக்கு பதவி தரும்பொருட்டு

பலரை பதவி நீக்கம் செய்தார். உயர் பதவிகளுக்கு மட்டுமல்லாது கீழ்நிலைப் பதவிகளிலும் இம்முறை செயல்படுத்தப்பட்டது. இவ்வாறு சுமார் 20% பதவிகளை தனது ஆதரவாளர்களுக்கு கொடுத்தார். இம்முறையினைத் தொடர்ந்து வந்த பல குடியரசுத் தலைவர்கள் பின்பற்றினர். இறுதியாக, கார்பீல்டு (Garfield) என்ற குடியாட்சித் தலைவரை பதவி கிடைக்காத வெறியில் ஒருவன் சுட்டுக் கொன்றதையடுத்து இம்முறை கைவிடப்பட்டது.

**b) வீட்டு அமைச்சரவை (Kitchen Cabinet)**

ஜாக்சன் முறையாக அமைக்கப்பட்ட அமைச்சரவையினைக் கலந்து ஆலோசிக்காமல் தனது நண்பர்கள், பத்திரிக்கையாளர்கள் போன்றவர்களுடன் கலந்து பேசி முக்கியமான முடிவுகளை மேற்கொண்டார் இதனையே "வீட்டு அமைச்சரவை" எனக் கேலியாக அழைத்தனர். இதில் வேன்பியூர்ன (Van Buren) என்பவர் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கதாகும். 1831க்குப் பிறகு ஜாக்சன் முறையான அமைச்சரவையை கலந்து ஆலோசிக்கும் வழக்கத்தை மேற்கொண்டார்.

**c) கால்கூனுடன் மோதல்**

துணைத்தலைவரான ஜான்.சி.கால்ஹூனுக்கும், ஜாக்சனுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன. வான்பியூரனின் வளர்ச்சி கால்கூனுக்கு எரிச்சலையூட்டியது. ஜாக்சனின் அமைச்சரவையைச் சார்ந்த ஈட்டன் சம்பிரதாய முறைப்படி திருமணம் செய்யாததால் ஒதுக்கி வைக்கப்பட்டார். ஜாக்சன் இதில் தலையிட்டு அவரை முன்புபோல் நடத்தச் செய்தார். இச்செயல் கால்கூனுக்கு பிடிக்கவில்லை. மேலும் வான்பியூரன் இங்கிலாந்தின் தூதராக நியமிக்கப்பட்டதை கால்கூன் எதிர்த்தார். இச்சமயத்தில், நியூ ஆர்லியன்ஸ் போரின்போது இரண்டு ஆங்கிலேயர்களைக் கொன்ற குற்றத்திற்காக ஜாக்சன் தண்டிக்கப்பட்ட வேண்டும் என கால்கூன் செனட்டில் பேசிய இரகசிய செய்தி வெளிப்பட்டது. இந்நிகழ்ச்சி இருவரது உறவுகளையும் நலியச்செய்தது. கால்கூன் துணைத்தலைவர் பதவியை விட்டு விலகினார். தென்கரோலினா மாநில செனட்டர் தேர்தலில் போட்டியிட்ட செனட்டரானார்.

**d) தென்கரோலினாவுடன் மோதல்**

1828ல் பாதுகாப்பு வரி விதிக்கப்பட்டது. இதனால் இறக்குமதியாகும் பொருட்களின் மீது கூடுதலான வரி விதிக்கப்பட்டது. இதனை தென்கரோலினா மாநிலம் எதிர்த்தது. இம்மாநிலத்தில் பெரும் தொழில்கள் ஏதும் கிடையாது. அப்பகுதிக்கு வேண்டிய பொருட்கள் அனைத்தும் இறக்குமதி செய்யப்பட்டது என்பதே இதற்குக் காரணமாகும். தென்கரோலினா மாநிலம் "செல்லுபடியற்றதாக்கும் கோட்பாட்டை" வலியுறுத்தியது இதன்படி கூட்டாட்சி அரசால் செய்யப்படுகின்ற சட்டங்கள் மாநில அரசிற்கு எதிராக இருக்குமேயானால், அந்தச் சட்டம் செல்லாது எனச் சொல்லும் அதிகாரம் மாநில அரசிற்கு உண்டு எனக் கூறியது. இச்சமயத்தில் கால்ஹீன் "தென்கரோலினா விளக்கங்கள்" என்ற அறிக்கையில் மாநிலங்களின் ஒப்புதல் பெற்று அமைக்கப்பட்டதே கூட்டாட்சி எனவும், மாநிலங்களின்

உரிமைகளுக்கு புறம்பாக கூட்டாட்சி சட்டமியற்றினால் அதைச் செல்லாது எனக் கூறும் அதிகாரம் மாநிலத்திற்கு உண்டு எனவும், அவசியம் ஏற்பட்டால் கூட்டாட்சியிலிருந்து பிரிந்து செல்லவும் முடியும் என்று கூறினார்.

**e) வெப்ஸர்டர்-ஹெயின்ஸ் விவாதம்**

வெப்ஸ்டர் என்பவருக்கும் தென்கரோலினாவைச் சார்ந்த இராபர்ட் ஒய் ஹெய்ன் என்பவருக்குமிடையே பிரிந்து செல்வது குறித்து விவாதம் எழுந்தது. "மாநிலங்கள் ஒன்றுபட்டு உருவாக்கிய கூட்டாட்சியிலிருந்து மாநிலங்கள் பிரிந்து செல்ல முடியும்" என ஹெய்ன் கூறினார். ஆனால் வெப்ஸ்டரின் கருத்துப்படி "மாநிலங்களிலுள்ள மக்களின் விருப்பப்படிதான் கூட்டாட்சி அமைக்கப்பட்டுள்ளது. எனவே மாநிலங்களுக்கு பிரிந்து செல்லும் அதிகாரம் இல்லை" என்றும் கூறினார். இதனால் தென்கரோலினாவின் எதிர்ப்பு அதிகமாயிற்று.

இந்நிலையில் 1832ல் ஹென்றிகிளே புதியதோர் பாதுகாப்பு வரிச்சட்டத்தை கொண்ட வந்தார். இதன் மூலம் பாதுகாப்பு வரிச்சட்டத்தில் உள்ள சில குறைபாடுகளைக் களையவும், அதிகப்படியான வரி விதிக்கவும் முயன்றார். இச்சட்டம் வேண்டுமென்றே தனக்கெதிராக இயற்றப்பட்டதாகக் கருதி தென்கரோலினா மாநிலம் எதிர்நடவடிக்கையில் ஈடுபட்டது. மாநிலத்தின் சிறப்பு மன்றத்தினைக் கூட்டி செல்லுபடியற்றதாக்கும் கோட்பாட்டை நிறைவேற்றியது. அதன்படி புதிய பாதுகாப்பு வரிச்சட்டம் தங்கள் மாநிலத்திற்குப் பொருந்தாது எனக் கூறியது. வரி செலுத்தவும் மறுத்தது. தனக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் கூட்டாட்சியிலிருந்து பிரிந்து செல்லவும் தயங்காது எனக் கூறியது. ஜாக்சன் இதனை தனக்கு விடுக்கப்பட்ட சவாலாகக் கருதி அடக்குமுறையை பயன்படுத்த எண்ணினார். இராணுவ உதவியைக் கோரும் அடக்குமுறை சட்டமும் நிறைவேற்றப்பட்டது.

நல்வினையாக 1833ல் ஹென்றிகிளே, புதியதோர் சட்டவரைவினைக் கொண்ட வந்ததார். அதன்படி படிப்படியாக பாதுகாப்பு வரியினைக் குறைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது. இதனாலும், வேற தென்மாநிலங்கள் ஆதரவாகச் செயல்படாததாலும் தென்கரோலினா செல்லுபடியற்றதாக்கும் கோட்பாட்டை விலக்கிக் கொண்டது. இந்நிகழ்ச்சி பிற்காலத்தில் உள்நாட்டுப் போரின்போது தென்மாநிலங்கள் பிரிந்து செல்வதற்கு முன் மாதிரியாக அமைந்தன.

**f) வங்கியுடனான மோதல்**

அமெரிக்காவின் இரண்டாவது தேசிய வங்கி 1816ல் தோற்றுவிக்கப்பட்டது. இருபது ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட அதன் சாசன 1836ல் முடிவடைவதாய் இருந்தது. தனிப்பட்ட காரணங்களின் அடிப்படையில் வங்கியினை அழிப்பதற்கான முயற்சியில் ஜாக்சன் ஈடுபட்டார். ஜான்சன் வணிகராயிந்தபோது பெரும் செல்வந்தர்களால் ஏமாற்றப்பட்டார். அவர்களுக்கு வங்கி துணையிருப்பதாய் நம்பினார். வங்கியின் தலைவரான நிக்கோலஸ்

பிடில் தேர்தலில் ஜாக்சனுக்கு எதிராக செயல்பட்டார். மேலும் தனியார் கட்டுப்பாட்டில் இருந்த வங்கியின் லாபம் முழுவதும் ஒரு சிலருக்கே கிடைப்பதை எதிர்த்தார். 1832ல் வங்கியின் சாசனத்தை புதுப்பிக்க "ஹென்றிகிளேவால்" கொண்டுவரப்பட்ட சட்டவரைவினை தடுப்பாணையின் மூலம் தடுத்து நிறுத்தினார்.

1832ல் நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் வங்கியை புதுப்பிக்க மறுத்து அதனடிப்படையில் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். இதனைத் தொடர்ந்து "தேசிய வங்கியில்" முதலீடு செய்யப்பட்டிருந்த அரசாங்கப் பணத்தை திரும்பப் பெற்று மாநில வங்கிகளின் முதலீடு செய்தார்.

தேசிய வங்கியிலிருந்த குறைகளைக் களைவதை விடுவித்து அதனை அழித்தது தவறு என அறிஞர்கள் கருதுகின்றனர். நிக்கோலஸ் பிடிலின் தலைமையில் வங்கி சிறப்பாக பணிபுரிந்தது என்று கூறலாம். தேசிய வங்கி அழிக்கப்பட்டதையடுத்து மாநில வங்கிகள் மிகுதியாகத் தோன்றின. அவை மிகுதியான கடன்களை வழங்கியதுடன், ஏராளமான காகிதப் பணத்தையும் வெளியிட்டன. இதனால் 1837ல் பணிவீக்கமும், பொருளாதார பீதியும் ஏற்பட்டன.

**f) இந்தியர்களுடனான மோதல்**

பழங்குடியினரை அச்சுறுத்தியும், ஆசை வார்த்தை காட்டியும் மிசிசிபி ஆற்றுக்கு அப்பால் விரட்டினார். இதன்பொருட்டு சுமார் 94 உடன்படிக்கைகளையும் மேற்கொண்டார்.

ஜார்ஜியா மாநிலத்தில் "செரோக்கிகள்" என்ற நாகரீகப் பழங்குடியினர் வாழ்ந்து வந்தனர். அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு ஒரு உடன்படிக்கையின்படி, கூட்டாட்சி அரசாங்கத்திடம் கொடுக்கப்பட்டது. பழங்குடியினர் வாழ்ந்த இடத்தில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்த ஜார்ஜியா அவ்விடத்தை பெற்றிட முயன்றது. பழங்குடியினரை பாதுகாக்க கூட்டாட்சி இராணுவம் அனுப்பி வைக்கப்பட்டது. செரோக்கிகளுக்கும் ஜார்ஜியாவிற்குமிடையேயான வழக்கு தலைமை நீதிமன்றத்தின் முன் வைக்கப்பட்டது. வழக்கினை விசாரித்த தலைமை நீதிபதி ஜான்மார்ஷல் தீர்ப்பு கூறினார். "ஜார்ஜியா, பழங்குடியினர் விவகாரத்தில் தடையிடக்கூடாது" என்றார். இதனையடுத்து ஆண்ட்ருஜாக்சன் கூட்டாட்சிப் படைகளை விலகிக் கொண்டதுடன், மார்ஷலின் தீர்ப்பையும் கேலி செய்தார். "மார்ஷல் தீர்ப்பு கூறிவிட்டார். அதனை அவரே நிறைவேற்றட்டும்" என்றார். பின்னர் பழங்குடியினரை நயத்தாலும், பயத்தாலும் அகற்றினார்.

**g) மேஸ்வில் சாலை சட்டவரைவு**

1830ல் கெண்டகியில், லெக்சிங்டனிலிருந்து மேஸ்வில் வரை ஒரு சாலை அமைக்க நிதி ஒதுக்கி கூட்டாட்சி அரசு ஒரு சட்டவரைவை நிறைவேற்றியது. அதனையே "மேஸ்வில் சாலை சட்டவரைவு" என்றழைத்தனர். இதனை ஆண்ட்ரு ஜாக்சன் எதிர்த்தார். கூட்டாட்சி நிதியினை மாநிலங்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்தக்கூடாது என்றும் கூறினார். இதனால்

மேற்கு மாநிலங்களில் இவரது செல்வாக்கு குறைந்தாலும் கிழக்கு மற்றும் தெற்கு மாநிலங்கள் இதனை வரவேற்றன.

**i) பணவீக்கமும் பீதியும்**

தேசிய வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்த அரசாங்கப் பணத்தை மாநில வங்கிகளில் முதலீடு செய்தார். இதனால் தேசிய வங்கிகள் மூடப்பட்டன. அவை பொதுமக்களிடம் கொடுத்திருந்த கடன் தொகையை வசூலித்தனர். மக்கள் மாநில வங்கிகளில் கடன் பெறலாயினர். இதனால் பணப்புழக்கத்தில் சுணக்கம் ஏற்பட்டது. மாநில வங்கிகளின் எண்ணிக்கை பெருகியது. ஆவை தங்கள் விருப்பிற்கேற்ப காகித நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டனர். காகித நாணயத்தின் மதிப்பு குறைந்தது. வெளிநாட்டவர்கள் வாங்க மறுத்தனர். பொருளாதாரமந்தம் ஏற்பட்டது. விலைகள் வீழ்ந்தன. தொழிற்சாலைகள் மூடப்பட்டன, வேலையில்லாத் திண்டாட்டமும் எழுந்தது. இந்நிலையில் இவரது இரண்டாவது பதவிக்காலம் முடிவுற்றது.

வெளிநாட்டுக்கொள்கை (அ) மிரட்டல் கொள்கை

நெப்போலியனின் கண்டத் திட்டதால் அமெரிக்கக் கப்பல்கள் அழிக்கப்பட்டன. இதற்கு ஈடாக 25 மில்லியன் பிராங்குகளை வழங்க பிரான்ஸ் ஒப்புக்கொண்டது. இத்தொகையை வழங்குவதில் பிரான்சு காலதாமதம் செய்து வந்தது. எனவே பிரான்சுக்கு எதிராக போர் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அமெரிக்காவில் வாழும் பிரெஞ்சுக்காரர்களின் சொத்துக்களையும், பிரெஞ்சு நாட்டுப் பொருட்களையும் பறிமுதல் செய்யுமாறு காங்கிரஸிற்கு அறிவுரை கூறினார். இதனையடுத்து பிரான்சு அத்தொகையினை வழங்க முன்வந்தது. ஆனால் ஜாக்சன் மன்னிப்புக் கோர வேண்டும் என்ற நிபந்தனையையும் விதித்தார். இறுதியில் இங்கிலாந்தின் தலையீட்டால் இப்பிரச்சனை தீர்ந்தது.

**மதிப்பீடு**

மக்களால் பெரிதும் மதிக்கப்பெற்ற தலைவர்களில் ஆன்ட்ரு ஜாக்சனும் ஒருவராவார். இவர் தனது செயல்பாடுகளால் குடியாட்சித் தலைவர் பதவியினை வலிமையானதோர் அங்கமாக உருவாக்கினார். தடுப்பாணை உரிமையினை பன்னிரு முறைகள் பயன்படுத்தினார். தேசிய வங்கியினை அழித்ததை பொருளாதார வல்லுநர்கள் குறை கூறுகின்றனர்.

1. அமெரிக்க வரலாற்றில் ஆண்ட்ரூ ஜாக்சனின் ஆட்சி கால சிறப்பு என்ன?
2. ஜாக்சனின் பதவி காலத்தில் அவரது உள்துறை பணிகளைப் பற்றி எழுதுக.
3. அமெரிக்க குடியரசு தலைவராக ஜாக்சன் ஆற்றிய பணிகளை மதிப்பிடுக.

## மேற்கு நோக்கி விரிவடைதல்

பதின்மூன்று மாநிலங்களைக் கொண்ட அமெரிக்க ஐக்கிய நாடுகள் அட்லாண்டிக் கடற்கரைக்கும் அப்பலேச்சியன் மலைகளுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியை பெற்றிருந்தது. இந்திய இனத்தவர்களுக்குச் சொந்தமன மேற்குப் பகுதிகளில் பிரெஞ்சுக்காரர்களும், ஸ்பானியர்களும் ஆங்காங்கே தனித்தனியான குடியேற்றங்களை அமைத்திருந்தனர். அப்பலேச்சியனிலிருந்து மிஸிஸிப்பி வரையுள்ள நிலப்பகுதிகள் தங்களுக்குச் சொந்தமானதென்று பிரெஞ்சுக்காரர்களும், புளோரிடா, மெக்ஸிகோ போன்ற மாநிலங்கள் தங்களது அதிகாரத்திற்குட்பட்டவை என்று ஸ்பானியரும் கூறி அவற்றின் மீது உரிமை கொண்டாடினர். எனினும் அவர்களது கருத்துக்கள் இந்தியர்களோடு ஒன்றுபட்டு விளங்கியதால் இந்தியர்கள் இந்நாட்டுக் குடியேற்றத்தினரின் மீது எவ்வித வேறுபாடும் கொள்ளவில்லை இந்த நிலையில் இதுவரை இந்த மேற்கத்திய அரசுகள் தங்களுடையதென்று அனுபவித்து வந்த பகுதிகளை அமெரிக்க ஐக்கிய நாடுகள் கைப்பற்ற எண்ணியது. எனவே அவர்கள் இந்தியர்களைத் துன்புறுத்தி அவர்களின் நிலப்பகுதிகளை இணைத்து கொண்டனர்.

**லூசியானாவை விலைக்கு வாங்குதல்**

1803ல் அமெரிக்க ஐக்கிய நாடுகள் லூசியானாவை பிரான்சிடமிருந்து விலைக்கு வாங்கியது. இதுவே அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மேற்கு நோக்கிய முன்னேற்றத்திற்கு முதல்படி என்று கூறலாம். 1763-ஆம் ஆண்டின் இறுதியில் மிஸிஸிப்பிக்கு மேற்குப்பகுதியில் அமைந்துள்ள லூசியானாவை, பிரான்ஸ் தனது நேச நாடான ஸ்பெயினுக்கு் கொடுத்தது ஒருசில வெள்ளைக் குடியேற்றங்கள், பாதுகாப்பு நிலைகள், வியாபாரத் தலங்கள் தவிர மற்ற பகுதிகளில் ஸ்பானியர்கள் உரிமை கொண்டிடாடிய போதிலும் அந்நிலப்பரப்புகளைத்தும் இந்தியர்களின் உடைமைகளாகவே நிகழ்ந்தன. 1800ல் சான் இல்டிபென்சோ இரகசிய உடன்படிக்கையின்படி பிரான்ஸ் அந்நிலப்பகுதிகளைத் திரும்பப் பெற்றது. அதற்குப்பதிலாக இத்தாலியிலுள்ள டஸ்கனியையோ அல்லது அதற்குச் சமமான பகுதிகளையோ ஸ்பெயின் அரசன் நான்காம் சார்லஸின் மருமகனுக்குக் கொடுக்க நெப்போலியன் முன்வந்தார். அதன்படி 1802ல் லூசியானா பிரான்ஸின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது.

ஸ்பெயினைப் போன்று வலிமையற்ற நாடொன்றிற்க அந்நிலப்பகுதி சொந்தமாயிந்தவரை அமெரிக்க ஐக்கிய நாடுகள் அதன் மீது ஆர்வம் காட்டவில்லை. அமெரிக்கர் மிஸிஸிப்பி உட்பட பல நிதிகளை போக்குவரத்திற்குப் பயன்படுத்தியதோடு உற்பத்திப் போருட்களை நியூ ஆர்லியன்ஸ் வழியாக ஏற்றுமதி செய்தனர். வாய்ப்பு ஏற்படும் போது அதனை இணைத்துக்கொள்ளலாம் என்றும் எண்ணினர். ஆனால் நெப்போலியன் ஒரு புதிய குடியேற்றப்பேரரசை அமெரிக்காவில் நிறுவி, ஹெயிட்டி தீவின் தானியக் களஞ்சியமாக லூசியானாவை மாற்ற விரும்பிய போது புதிய பிரச்சினைகள் தோன்றின. மிஸிஸிப்பி நதியை அமெரிக்க மக்களின் கப்பற்போக்கவரத்திற்கு தடைசெய்து அவர்களின்

மேற்கு நோக்கிய முன்னேற்றத்தை நெப்போலியன் தடைசெய்து விடுவார் என்ற அஞ்சினர். அமெரிக்காவில் பெரியதொரு வல்லரசொன்றின் ஆதிக்க வளர்ச்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்த ஜெபர்சன் பூர்வீக மக்களின் நிலப்பகுதிகளை ஆக்கிரமித்து, நாட்டை விரிவாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். தான் ஒரு பிரெஞ்ச ஆதரவாளராக இருந்தபோதிலும் அந்நாட்டின் வளர்ச்சியைத் தடைசெய்ய இங்கிலாந்தோடு ஒரு நேச உடன்பாடு செய்ய விரும்பினர். இந்நிலையில் மேற்கிலள்ள குடியேற்றங்கள் போர் புரிய விரும்பின. இதனைப் பயன்படுத்தி லூசியானாவின் ஒரு பகுதியாக கருதப்பட்ட நியூ ஆர்லியன்சையும் மேற்குப் புளோரிடாவையும் விலைக்கு வாங்க ஜேம்ஸ் மன்றோ என்பவரை ஒரு விசேஷ தூதுவராக ஜெபர்ஷன் பிரான்சிற்கு அனுப்பினார்.

நெப்போலியன் பிரிட்டனோடு சமாதான உடன்பாடு செய்தபின் தனது அதிகாரத்தை லூசியானாவில் நிலைநாட்டும் முயற்சிகளை மேற்கொண்டார். முதற்படியாக, அவர் கிளர்ச்சியில் ஈடபடவிருந்த நீக்ரோக்கள் நிறைந்திருந்த சாந்தோ டோமிங்கோ என்னுமிடத்தில் அதிகாரத்தை ஏற்படுத்த எண்ணி லெக்லெர்க் என்பவரின் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். நீக்ரோக்களின் தலைவரான தௌசெயின்ட் கைது செய்யப்பட்டபோதிலும் நீக்ரோக்களின் தீவிர எதிர்ப்பும் மஞ்சள் நோயினால் ஏற்பட்ட அழிவும் நெப்போலியனின் முயற்சிகளை முறியடித்தன. இச்சமயத்தில் ஆங்கிலேயர்கள் நியூ ஆர்லியன்ஸ் மாநிலத்தை கைப்பற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்று அறிந்து நெப்போலியன் அப்பகுதியை ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின்கீழ் விடுவதைவிட, அதனை அதிக விலைக்கு விற்று விடுவதே அறிவுடமை ஆகுமென்று எண்ணினார்.

அமெரிக்கத் தூதுக்குழு பேச்சுவார்த்தைக்காக பிரான்ஸ் வருவதற்கு முன்பே, லூசியானாவை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு விட்டுக் கொடுக்கும் என்ற கருத்தை நெப்போலியன் தனது அமைச்சரான டாலிராண்டிடம் தெரிவித்தார். இதை அறிந்த ஜெபர்ஷனுக்கு நல்ல பயனளிக்கும் வாணிபத்தால் ஏற்பட்டமகிழ்ச்சி ஒரு புறமிருக்க நிதி மற்றும் சட்ட ஒழுங்கு விதிமுறைகள் அவரை துயரத்தில் ஆழ்த்தின.

இருந்தபோதிலும் அந்நிலப்பகுதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக உடன்பாடு ஒன்றை பிரான்சும் அமெரிக்காவும் செய்து கொண்டன. அதன்படி பிரான்ஸ் லூசியானாவை அமெரிக்காவிற்கு 15,000,000 டாலருக்குக் கொடுத்தது. ஆனால் புளோரிடா அவ்விற்பனையில் இடம் பெறவில்லை. இப்பகுதியில் குடியேறுபவர்களுக்கும் இந்தியர்களுக்கும் ஐக்கிய கூட்டிணைவு அரசியலமைப்பு விதிகளின் படி அனைத்து உரிமைகளையும் அவர்களுக்கு ஐக்கிய நாடு வழங்க உறுதியளித்தது. செனட் இவ்வுடன்படிக்கையை அங்கீகரித்தவுடன் 1803-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அமெரிக்கா அந்நிலப்பகுதியை தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டது.

நியூ ஆர்லியன்ஸைப் பெற வேண்டுமென்று விரும்பிய அமெரிக்க ஐக்கிய நாடுகள் எட்டு இலட்சம் சதுர மைல்கள் பரப்பளவு கொண்ட மிகப் பரந்த நிலப்பரப்பைப்

பெற்றுக்கொண்டது. அந்நிலப்பரப்பு நாளடைவில் பதின்மூன்ற மாநிலங்களாகப் பிரிக்கப்ட்டது. ஐக்கிய நாடுகள் பெற்ற இவ்வாணிப வெற்றி அமெரிக்க வரலாற்றில் குறிப்பிடத்தக்கதோர் இடத்தினைப் பெற்றுள்ளதாகக் கருதப்படுகின்றது. ஏனெனில் இது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பரப்பளவை இருமடங்காக்கியது. நியூ ஆர்லியன்ஸ் என்ற முக்கிய துறைமுகத்தை அமெரிக்க நாடுகள் பெற்றதோடு உலகத்திலேயே மிகப்பெரிய நதிப்பள்ளத்தாக்கினை தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தது. இவ்வாறாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் அடைந்த வெற்றி நாட்டின் எல்லையை மேலும் விரிவடையச் செய்தது. லூசியானாவின் எல்லைகள் வரையறை செய்யப்படாததால் தங்கள் அதிகாரத்திற்குட்படாத பிற நிலப்பகுதிகளில் மீது உரிமை கொண்டாடி, அதனை தங்கள் நாட்டோடு சேர்த்துக் கொள்வதற்காக அமெரிக்க மக்கள் இதனைப் பயன்படுத்திக் கொண்டனர். லூசியானா அமெரிக்காவின் கீழ் இல்லாதிருந்ததால் டெக்ஸாஸ், கலிபோர்னியா, ஓரிகான் ஆகிய மாநிலப் பகுதிகளை அமெரிக்க ஐக்கிய நாடுகளோடு இணைத்துக் கொள்வதற்கும், பசிப்பிக் கடற்கரைப் பகுதிகளை அடைவதற்கும் கஷ்டமாக இருந்திருக்கும்.

எனினும் பிரான்சிடமிருந்து லூசியானாவை விலைகருப் பெற்றமை ஒரு நெறியற்ற செயல் என்பதை மறுக்க முடியாது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் லூசியானாவை அதன் உண்மையான உரிமையாளரிடமிருந்து வாங்கவில்லை. ஒரு சிலப் பிரதேசங்களையும் குடியேற்றத் தலங்களையம் லரோப்பியர் பெற்றிருந்த போதிலும் அவை அனைத்தும் சிதறுண்டே கிடந்தன. உண்மையிலேயே அமெரிக்க ஐக்கிய நாடுகள் பூர்வீக இந்தியருக்குச் சொந்தமானதென்றால் அது மிகயைாகாது. உடன்படிக்கையின் மூன்றாவது ஷரத்துப்படி அமெரிக்க மக்களுக்க வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளையும், சலுகைகளையும் பூர்வீக இந்தியர்களுக்கும் அளிக்க அமெரிக்க ஐக்கிய நாடுகள் வாக்குறுதி அளித்தது. ஆனால் இவ்வாக்குறுதியானது உடன்பாட்டு விதிகளை மீறுவதன் வழியாகவும், பூர்வீக இனத்தவரை அழிப்பதன் மூலமாகவுமே நிறைவேற்றப்பட்டதெனலாம். எல்லாவற்றிற்கும் மேலாக ஸ்பெயினிடமிருந்து நெப்போலியன் கவர்ந்த நிலப்பகுதியைத்தான் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பெற்றுக்கொண்டது.

ஸ்பானியர்களுக்கு டஸ்கனியைக் கொடுப்பதாக பிரான்ஸ் கூறிய நிபந்தனையின் பேரிலேயே லூசியானாவை பிரான்ஸ் ஸ்பெயினிடமிருந்து பெற்றுக்கொண்டது. ஆனால் பிரான்ஸ் தான் அளித்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றவில்லை. மேலும் லூசியானாவை மூன்றாவது ஒரு ஆதிக்கத்திடம் மாற்றுவதில்லையென்று பிரான்ஸ் ஸ்பெயினிடம் உறுமி அளித்திருந்தது. ஆனால் அது இவ்வாக்குறுதியை புறக்கணித்தது. மேலும் நாட்டின் நிலப்பகுதிகளைச் சட்டமன்ற அவைகளின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே நிர்வாகத் தலைமை விற்க முடியுமென்று பிரெஞ்சு அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது. அமெரிக்க அரசியலமைப்பும் இத்தகைய இலாபகரமான வாணிபத்திற்கு அனுமதி

வழங்கவில்லை. திருட்டுப் பொருட்களை முறைகேடாகப் பெற்றவர்கள் அமெரிக்கர்கள் என்பதில் ஐயமில்லை.

லூசியானாவை அமெரிக்கா பெற்றதிலிருந்து அப்பகுதிகளைப் பற்றி ஆராய குடியரசுத் தலைவர் ஜெபர்சன் பல பயணக் குழுக்களை அனுப்பினார். 1804-ல் லீவிஸ், கிளார்க் என்பவர்கள் தலைமையில் செயல்பட்ட ஆராய்ச்சிக் குழு மிசௌரி நதியை அடைந்து பின்னர் கொலம்பியா நதிக்கரை வழியாக பசிபிக் மகா சமுத்திரத்தைச் சென்றடைந்தது. 1806ல் பைக் தலைமையில் மற்றொரு குழு ராக்கி மலை வரை அமைந்துள்ள பகுதிகளை ஆராய்ந்தது. இவ்வாய்வுகளின் விளைவாக மேற்குப் பகுதியிலள்ள இந்திய நாடுகளின் அரசியல் நிலையைப் பற்றி தெளிவாக அறிந்து கொண்டதால் அமெரிக்கர் மேற்குத் திசை நோக்கி சென்று. பூர்வீக இனத்தவரை அவர்களின் கிராமங்களிலிருந்து விரட்டியடித்து, அந்நிலப் பகுதிகளில் குடியேறினர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குத் தென் பகுதியில், மெக்ஸிகோ வளைகுடாவின் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள புளோரிடாவில் செமினோலியர்கள் வாழ்ந்து வந்தனர். ஆனால் அப்பகுதி ஸ்பெயின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தது. இவ்வளமாக பகுதியை இணைக்க வேண்டுமென்று அமெரிக்கா வெகுகாலமாக விரும்பியது. ஆனால் புளோரிடா ஸ்பெயினுக்குச் சொந்தமானதாக இருந்ததால் லூசியானாவை விலைக்கு வாங்கும் போது புளோரிடா இடம் பெறாதென்று பிரான்ஸ் கூறியது எனினும் லூசியானாவின் கொள் விலையில் புளோரிடா இடம் பெற்றது என்று அமெரிக்கா உரிமை கொண்டாடியது. எனவே மேற்குப் புளோரிடாவையாவது இணைக்க வேண்டுமென்று அமெரிக்கா எண்ணியபோது ஸ்பெயின் எதிர்ப்பினைத் தெரிவித்தது. பின்பு இலத்தீன் அமெரிக்காவில் எழுந்த புரட்சியினை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அமெரிக்க மக்கள் மேற்குப் புளோரிடாவிற்குள் நுழைந்து 1810- அமெரிக்கக் கலகக்காரர்கள் மேற்குப் புளோரிடாவின் சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தி அப்பகுதியை அமெரிக்காவுடன் இணைத்துக் கொள்வதற்கு விண்ணப்பித்தார்கள். அவர்களின் வேண்டுகோளை ஏற்று குடியரசுத் தலைவர் மாடிசன் அப்பகுதியை அமெரிக்காவுடன் இணைத்தார்.

கிழக்குப் புளோரிடா ஸ்பெயின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தது. 1817ல் குடியரசுத் தலைவர் மன்றோவின் ஆணைக்கிணங்க ஜாக்சன் இப்பகுதிகளைத் தாக்கினார். ஸ்பெயின் அமைச்சர் டிஓனிஸ் இழப்புகளுக்கு நஷ்ட ஈடு கேட்டார். ஆனால் இது இந்தியர்களுக்கு எதிரான தற்காப்பு நடவடிக்கையாக இரந்ததால் இந்த ஆக்கிரமிப்பு நியாயமானது என்று செயலாளரான ஜான் குயின்சி ஆடம்ஸ் கூறினார். மேலும் இப்பகுதியில் அமெரிக்காவின் தலையீட்டை இந்தியர்கள் தடைசெய்ய முன்வந்ததால் கிழக்குப் புளோரிடா முழுவதும் அமெரிக்காவுடன் இணைக்கப்படுமென்று அவர் அச்சுறுத்தினார். எனவே இப்பகுதியைப் போரிட்டு இழப்படைவிட விற்றுவிடுவதே நல்லதென்று ஸ்பெயின் கருதியது. நீண்டகாலப் பேச்சு வார்த்தைகளுக்குப் பின் இரு நாடுகளும் 1819ல் ஆடம்ஸ் ஓனிஸ் என்ற ஒரு

உடன்படிக்கையைச் செய்து கொண்டன. அதன்படி மேற்குப் புளோரிடாவையும், மொபைல் பகுதியையும் அமெரிக்கா கைப்பற்றியதை ஸ்பெயின் அங்கீகரித்து கிழப்புக் புளோரிடாவை அமெரிக்காவிற்குக் கொடுத்தது. மேலும் ஓரிகன் பகுதி மீதான தனது எல்லா உரிமைகளையும் ஸ்பெயின் இழந்தன. அதற்குப் பதிலாக அமெரிக்கா டெக்ஸாஸ் மீதான உரிமைகளை அதற்கு வழங்கியது. ஸ்பெயினுக்கு எதிராக கிளர்ச்சி செய்து தன்னுடைய மக்களின் கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்வதாக அமெரிக்கா அறிவித்தது. இவ்வாறாக ஸ்பெயின் தன்னுடைய வளமான பகுதிகளை இழந்தது. ஆனால் அதற்குப் பதிலாக எவ்வித நஷ்டஈடும் பெறவில்லை. வெளிநாட்டின் நிலப்பகுதியைப் பெற்றுக்கொண்ட ஐக்கிய நாடுகள் அதற்குப் பதிலாக தனது மக்களுக்கே இழப்பீடு வழங்கியது.

**வெளிப்படை விதி**

1818-ல் பிரிட்டனோடு செய்த உடன்படிக்கை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் கனடாவிற்குமிடையிலான எல்லைகளை நிர்ணயித்தபோது 1819ல் ஸ்பெயினோடு செய்த உடன்படிக்கை புளோரிடாவை அமெரிக்காவிற்கு வழங்கியது. அமெரிக்கத் தலைவர்களில் குறிப்பாக ஜான்குயின்சி ஆடம்ஸ் இது வடஅமெரிக்கா முழுவதையும் அமெரிக்க ஐக்கிய நாடுகளோடு இணைத்துக் கொள்வதற்கான முயற்சியின் முதற்கட்டம் என்று கூறினார். ஐரோப்பிய குடியேற்றங்கள் ஒரு வளரும் நாட்டின் அருகிலிருப்பது நகைப்பதற்குரியதென்றும் எவ்வாறு மிஸிஸிப்பி நதியானது கடலில் விழவேண்டுமோ அவ்வாறே இப்பகுதிகள் அனைத்தும் அமெரிக்க ஐக்கிய நாடுகளோடு ஒன்றிணைவது இயற்கை நியதியாகும் என்றும் அவர் கூறினார். இத்தகைய ஏகாதிபத்தியக் கொள்ளையே நாளடைவில் வெளிப்படை விதி என அழைக்கப்பட்டது. எவ்வாறாயினும் 1845ல் "ஜனநாயக மீட்டாய்வு" என்ற பத்திரிக்கையின் பதிப்பாசிரியரான ஜான் சுல்லிவான் என்பவர் அதற்கு "விரிவடைதலும் இணைத்தலும்" எனப் பெயரிட்டார். வெளிப்படை விதி என்பதற்கு அநேக அமெரிக்கர் தாங்கள் மேற்கொண்ட நிலப்பறி நடவடிக்கைகளுக்கு முன்போலவே அறநெறி மற்றும் கருத்தியல் சார்ந்த விளக்கம் தரலாயினர். தங்களது நாகரீகம் உலகிலேயே மிகச் சிறந்ததாக இருப்பதால் தங்கள் நிறுவனங்களின் நலனுக்காகவும், மக்களின் முன்னேற்றத்திற்காகவும் நாட்டின் எத்திசையிலும் முன்னேறிச் செல்லலாம் என்று தாங்களே வகுத்துக் கொண்ட நெறிதான் வெளிப்படை விதியாகும். உயர்ந்த இனம், சுயநலம் போன்றவற்றின் அடிப்படையில் அமைந்த இந்நெறிமுறைக் கொள்கை ஓர் ஆக்கிரமிப்பின் விரிவாக்கமே ஆகும்.

**காரணங்கள்**

அமெரிக்காவில் நிலவிய சூழ்நிலைகளும் மக்களின் சுய ஆர்வமும் வெளிப்படை விதியை அறிவிப்பதற்கான முக்கிய காரணங்களாக அமைந்தன. வெகுகாலமாக இந்திய அரசுகள் அனைத்தும் தமக்குள் ஐக்கிய இணைவுகளை ஏற்படுத்திக் கொண்டதாலும் அல்லது பிற ஐரோப்பிய நாடகளோடு உடன்படிக்கைகளைச் செய்ததாலும் அமெரிக்க

ஐக்கிய நாடுகளின் மேற்கு நோக்கி விரிவடைதலுக்கு பெரும் தடையாக இருந்தன.ஆனால் தெக்கும் செயின் வீழ்ச்சியும், அவரின் முயற்சியால் எழுந்த ஐக்கியத்தின் அழிவும் இந்தியர்களின் ஒருங்கிணைந்த வலிமைக்கு ஒரே பேரதிர்சியாக அமைந்தது. 1812ஆம் ஆண்டின் போருக்குப் பின் அமெரிக்க ஐக்கிய நாடுகளோடான பிரச்சினைகளை சமாதான முறையில் தீர்த்திக் கொள்ள பிரிட்டன் விரும்பியது. பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடகள் தங்களுடைய நிலங்களை, அமெரிக்காவிற்கு விற்றன. பூர்வீக இனத்தவர்கள் தங்களுக்குள் ஒன்றுமையின்றி வலிமை இழந்து காணப்பட்டார்கள். வெளிநாடுகளின் உதவியின்றி வலிமை இழந்து காணப்பட்டார்கள். வெளிநாடுகளின் உதவியின்றி அவர்களால் அமெரிக்காவின் விரிவடைதலைத் தடைசெய்ய முடியவில்லை. இந்நிலையில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பூர்வீக இனத்தவர்களுடைய நிலப் பகதியை கைப்பற்ற முனைந்தது.

மத்திய மேற்குப் பகுதிகளுக்கு அப்பால் உள்ள டெக்ஸாஸ், கலிபோர்னியா, ஓரிகான் போன்ற பகுதிகளை 1848-ல் கைப்பற்றினர். அதற்கு முன் மிஸிஸிப் பள்ளத்தாக்குப் பகுதிகளைப் பூர்வீக இனத்தவரிடமிருந்து கைப்பற்றி அதை தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டனர். முதலில் அதிகமாக நிலப் பகுதிகளை பெற வேண்டுமென்ற பேராசையால் ஏராளமான மக்கள் குடியேறதூர மேற்கு, தூரத் தென் பகுதிகள் போன்றவற்றிற்குச் சென்றனர்.

ஆய்வுப் பயணம் செய்வோர், வணிகர்கள், சமயப் பரப்பாளர்கள் போன்றோர்கள் அளித்த மதிப்பீடுகளெ குடிபெயர்தலுக்கு உதவின. 1805ல் லீவிஸ், கிளார்க் என்பவர்களின் தலைமையில் இயங்கி ஆய்வுக்குழு பசிபிக் கடற்கரையை சென்றடைந்தது. 1807ல் பை தலைமையில் செயல்பட்ட குழு ஸ்பெயினின் அதிகாரத்தின் கீழிருந்த நியூ மெக்ஸிகோவை அடைந்தது. 1820ல் மேஜர் லாங் என்பவர் புவியியல் வல்லநர்களை கொலராடோ நாட்டிற்கு அழைத்துச் சென்றார். ஆய்வுப் பயணம் செய்தோர் பரப்பிய கதைகள் மூலம் பூர்வீக இனத்தவரோடு வெள்ளையர்கள் வியாபாரத் தொடர்பு மேற்கொள்வதற்கும், அவர்களது நிலப்பகுதிகளைப் கைப்பற்றுவதற்கும் தூண்டு கோலாக அமைந்தன. இந்தியர்களிடமிருந்து உரோமங்களை வாங்குவதற்காக ராக்கி மௌண்டன் பர் நிறுவனம் பலர் அடங்கிய குழுககளை வேலையில் அமர்த்தியது. மேற்கத்திய நாடுகளைச் சுற்றிக் கைப்பற்றிக் கொண்ட அமெரிக்க மக்கள் து மேற்குப் பகுதிகளுக்க குடிபெயர வழிகளைக் கொண்டு பிடித்தனர். ஏரிகான் பகுதியின் "தட்டைத்தலை" இந்தியர்களின் விண்ணப்பித்திற்கிணங்க மெதாடிஸ்ட் பிரிவினர் கிறிஸ்தவ சமயப் பிரச்சாரக் குழு ஒன்றை மேற்கே அனுப்பி வைத்தனர். தங்கள் சமயத்தைப் பரப்புவதால் சிறிதளவே அவர்கள் வெற்றி பெற்றாலும், குடியேற்ற ஏகாதிபத்தியக் கொள்கைகளைப் பரப்புவதில் அவர்கள் மிகப் பெரிய வெற்றி பெற்றார்கள்.

இந்நிகழ்சிகளோடு இணைந்த பல சம்பவங்கள் நிகழ்ந்தன. மன்றோ கொள்கையை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கான தீர்மானம் எழுந்ததோடு அதிகமான நிலப்பகுதிகளைக்

கைப்பற்றுவதில் அடிமைமுறை ஆதரவாளர்களுக்கும், எதிர்பாளர்களுக்குமிடையே போட்டி ஏற்பட்டது. நியூ மெக்ஸிகோவையும் கலிபோர்னியாவையும் தங்களின் ஆதிக்கத்தின்கீழ் வைத்திருந்த ஸ்பானியர்கள் தங்கள் பேரரசின் எல்லையை விரிவுபடுத்த முயன்றனர். ஓரிகான் பகுதியின் குடியேற்றத்தை விருத்தி செய்ய பிரிட்டன் முன்வந்தது. "வெளிப்படைவிதி" வழியாக மன்றோ கொள்கையைப் புகுத்தி ஸ்பெயின், பிரிட்டன் போன்ற நாடுகளின் முயற்சிகளை முறியடிக்க அமெரிக்க ஐக்கிய நாடுகள் முனைந்தது. இச்சமயத்தில் நாடு இருபெரும் பிரிவாகப் பிரிந்தது. ஒரு பிரிவினர் அடிமை முறையை வரவேற்க மற்றொரு பிரிவினர் அதனை எதிர்த்தனர். தங்கள் வலிமையை வலுப்படுத்துவதற்காக அவர்கள் அதிக நிலப்பகுதிகளை அடையும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். நிலப்பகுதிகளைக் கைப்பற்றுவதிலும் குடியேற்றங்களை ஏற்படுத்துவதிலும் இவ்விரு பிரிவினரிடையே ஏற்பட்ட போட்டி நாட்டின் எல்லையை விரிவடையச் செய்தது.

**குடியேற்றங்களின் படி நிலைகள்**

மேற்குப் பகுதிகளில் குடியேற்றங்களை நிறுவுவதில் பல்வேறு நிலைகள் உள்ளன. உரோமங்களைச் சேகரிப்போரும் வியாபாரிகளும் முதன்முதலில் இந்தியப் பகுதிகளுக்குள் நுழைந்தவராவர். அவர்களை அடுத்து வந்தவர்கள் எல்லைப்புற மக்களாவர். அவர்கள் மிருகங்களை வேட்டையாடியும், தானியங்களைப் பயிரிட்டும் குடிசைகளில் வாழ்ந்தனர். வேட்டையாடுவதற்கான கொடிய மிருகங்கள் இல்லாத போது அவர்கள் அப்பகுதியை விட்டு வெளியேறியவுடன் விவசாயிகள் குடியேறினர். இக்குடியானவர்கள் விளை நிலங்களில் பயிர் செய்ததோடு வீட்டு மிருகங்களையும் பேணி வளர்த்தனர். சில வேளைகளில் அவர்களும் தங்களது வயல்களை விற்றுவிட அவ்விடங்களில் நிரந்தர குடியேற்ற மக்கள் குடியேறினர். அந்நியர் குடிபெயர்தலும் இப்பகுதிகளில் குடியேற்றங்கள் அமைக்கப்படுவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும். வெள்ளைக் குடியேற்ற நிலப்பகுதியில் மக்கள் தொகை மிகவும் அதிகரித்த போது அவர்கள் குடியேற்றங்களை அமைக்கலாயினர். இது போன்ற குடியேற்றங்கள் கூட்டுக் குடியேற்ற அமைப்பை ஏற்படுத்தின.

**நெடும் பயணம்**

1841- ஆண்டு மே மாதம் தூரமேற்கு நோக்கிய குடிபெயர்தல் ஆரம்பமாயிற்று. கான்சாஸ் என்னுமிடத்திலுள்ள சாப்லிங்குரோவில் வெள்ளையர்கள் சிலர் ஒன்று கூடி, வெகுதூரமான பகுதிகளில் குடியேறும் நோக்குத்துடன் மிசௌரியிலிருந்து கலிபோர்னியாவுக்கு ஓரிகானுக்கும் செல்லுகின்ற பாதைகள் பிரிகின்ற இடமான போர்ட்ஹால் என்ற இடத்தை அடைந்தனர். கலிபோர்னியா, ஓரிகான் பகுதிகள் தட்ப வெப்ப நிலையும் வளமான வயல்வெளிகளும் குடியேற்ற மக்களைக் கவர்ந்தது. பசிபிக் மகாசமுத்திரக்கரையோரங்களில் குடியேற்றங்கள் அதிகரித்தபோது மார்மான்ஸ் என்றழைக்கப்பட்ட சமயப் பிரிவினர் தங்கள் விருப்பப்படி சுதந்திரமாக வாழவும் தங்கள் கடவுளைத் தனியாக வழிபடவும் ஐயோவாவிற்குள் நுழைந்து, பெரிய உப்பு ஏரிக்கு கிழக்குப்

பகுதியிலுள்ள சமவெளியில் ஒரு புதிய குடியேற்றத்தை நிறுவினர். அது நாளடைவில் உட்டா மாநிலம் என்று அழைக்கப்பட்டது.

**டெக்ஸாஸ் பரட்சி**

லூசியானாவை விலைக்கு வாங்கும் போது டெக்ஸாஸ் லூசியானாவின் ஒரு பகுதி என்று அமெரிக்க ஐக்கிய நாடுகள் அதன் மீது உரிமை கொண்டாடியது. ஆனால் 1819ல் கையெழுத்தான புளோரிடா உடன்படிக்கையின்படி டெக்ஸாஸ் மீதான உரிமையை அமெரிக்க ஐக்கிய நாடுகள் கைவிட்டு அதனை ஸ்பெயினிடம் ஒப்படைத்தது. இவ்வுடன்படிக்கையின்படி சபைன் நதி அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் ஸ்பெயினுக்கும் எல்லையாக இருந்தது. சிறிது காலத்திற்குப் பின் மெக்ஸிகோ ஸ்பெயினுக்கு எதிராகக் கலகம் செய்து சுதந்திரத்தைப் பெற்றது. டெக்ஸாஸ் மெக்ஸ்கோ குடியரசின் மாநிலங்களின் ஒன்றாகியது.

1819ல் மிசோரியின் ஓர் அடிமை வியாபாரியனா மோஸஸ் ஆஸ்டின் என்பவர் டெக்ஸாஸ்ல் ஒரு குடியேற்றத்தை நிறுவுவதற்கான அனுமதியை ஸ்பெயினிடமிருந்து பெற்றார். ஸ்பெயின் அரசு, குடியேற்றம் அமைப்பதற்கான பகுதியை வெகுமதியாகக் கொடுத்ததோடு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அப்பகுதிக்கு வரி விலக்கு அளித்தது. அதற்குப் பதிலாகக் குடியேற்ற மக்கள் அனைவரும் கத்தோலிக்க மதத்தை ஏற்றுக்கொண்டு மெக்ஸிகன் நாட்டின் குடிகளாக வேண்டுமென்ற வற்புறுத்தியது. இதே போன்ற சலுகைகள் பிற அமெரிக்க மக்களுக்கும் கொடுக்கப்பட்டன. இருந்த போதிலும் அமெரிக்க மக்களின் எண்ணிக்கை அதிகரித்த போது அவர்கள் மெக்ஸிகோ அரசிற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார்.

**எதிர்ப்புக்குரிய காரணங்கள்**

1. அமெரிக்கக் குடியேற்ற மக்கள் மெக்ஸிகோ அரசிடம் விசுவாசம் காட்டாமல் ஐக்கிய நாடுகள் மீது விசுவாசம் காட்டினர். 2) மெக்ஸிகோவின் அதிகாரத்திற்குட்பட்ட கொஹியிலா மகாணத்தின் பகுதியாக டெக்ஸாஸ் மாற்றப்பட்டதால் அவர்கள் தன்னாட்சிக்காப் போராடினர். 3) ஐக்கிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருளகளின் மீது சுங்கவரி கொடுக்க அமெரிக்க மக்கள் மறுத்தனர். 4) மெக்ஸிகோ அரசின் அடிமை ஒழிப்புச் சட்டத்தை 1829 ல் அவர்கள் எதிர்த்தார்கள். 5) மேலும் அதிகமான அமெரிக்க மக்கள் இப்பகுதிக்குள் குடியேறுவதை தடை செய்யும் சட்டத்தை எதிர்த்தார்கள்.

1836ல் குடியேற்ற மக்கள் கிளர்ந்தெழுந்து தங்களுக்கென்று ஓர் சுதந்திர அரசை அமைத்துக் கொண்டனர். மெக்ஸிகோ அதிபரான சாந்தா அன்னா கிளர்ச்சியாளர்களை அலாமொ என்ற இடத்தில் தோற்கடித்த போதிலும் அவர் சான ஜோசிந்தா என்ற இடத்தில் அமெரிக்கர்களால் தோற்கடிக்கப்பட்டார். இப்போது குடியேற்ற மக்கள் டெக்ஸாஸை ஒரு குடியரசு நாடாக்கி சாம்ஹவுஸ்டன் என்பவரைக் குடியரசுத் தலைவராக இணைத்துக் கொள்வதற்காக அவர்கள் விண்ணப்பித்த போது ஜாக்சன் தயங்கினார். அடிமை முறையை

எதிர்த்த வடபகுதி மாநிலங்க்ள ஐக்கிய நாட்டோடு டெக்ஸாஸ் போன்ற அடிமையை பாதுகாக்கின்ற மாநிலங்கள் இணைவதை எதிர்த்தன. டெக்ஸாஸை ஐக்கிய நாட்டோடு இணைத்து கொள்வது. குடியரசுத் தலைவர் தேர்தலில் தனக்கு சாதகமான சூழ்நிலையை பாதிக்கும் என்றும் மெக்ஸிகோவோடு போர் ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாகுமென்றும் ஜாக்சன் அஞ்சினார். தனது விருப்பத்திற்கு மாறாகவே டெக்ஸாஸ் ஐக்கிய நாடுகளோடு இணைவதைத் தவிர்த்த அவர் 1837 -ல் டெக்ஸாஸின் சுதந்திரத்தை அங்கீகரித்தார்.

**ஓரிகான் குடியேற்றம்**

ராக்கீஸ் மலைத்தொடருக்கு மேற்குப்பகுதியில் ரஷியாவிற்கு சொந்தமான அலாஸ்காவிற்கும், மெக்ஸிகோவின் உடைமையாக விளங்கிய கலிபோர்னியாவிற்கு இடைப்பட்ட மிகப் பரந்த நிலப்பகுதியான ஓரிகான் நாட்டின் மீது அமெரிக்கர்களும் ஆங்கிலேயர்களும் உரிமை கொண்டாடினர். ஆமெரிக்கர் இந்நிலப்பரப்பின் மீது உரிமை கொண்டாடுவதற்கு பல காரணங்கள் உண்டு. இப்பகுதி முறைப்படி முறையே 1803, 1819, 1824ல் அமெரிக்கா பெற்றுக்கொண்டது. லீவிஸ், கிளார்க் என்பவர்களின் தலைமையின்கீழ் செயல்பட்ட புவியியல் ஆய்வாளர்கள் இந்நிலப்பகுதிக்கு வருகை தந்தனர். நியூ இங்கிலாந்து வணிகர்கள் சீனாவோடு வியாபாரத் தொடர்பு கொண்டிருந்தபோது முக்கிய நதித் தொடர்பான கொலம்பியா நதியைக் கண்டுபிடித்து அப்பகுதி மக்களோடு வாணிபத் தொடர்பை வளர்த்துக்கொண்டனர். எல்லாவற்றிற்கும் மேலாக அமெரிக்க உரோக கம்பெனி கொலம்பியா நதியின் முகத்துவாரத்திலுள்ள ஆஸ்டூரியாவில் ஒரு வணிக நிலையத்தை நிறுவியது. புதிய நாடுகளைக் கண்டுபிடிக்க பிரான்சிஸ்டிரேக், ஜேம்ஸ்கூக், ஜார்ஜ்வேன்கூர் மற்றும் வடமேற்குக் கம்பெனி மேற்கொண்ட கடற்பயணத்தையும் அவர்களின் வியாபாரத் தொடர்பையும் அடிப்படையாகக் கொண்டு பிரிட்டன் அப்பகுதி மீது உரிமை கொண்டாடியது.

1818-ல் இவ்விரு அரசுகளும் இப்பகுதியை தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்ள முயற்சி செய்தன. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் 49 வது அட்சரேகை வடக்கு நோக்கி பரந்துகிடந்த எல்லா நிலப்பகுதிகளையும் இணைத்துக் கொள்ள விரும்பியதாலும் அதே நேரத்தில் பிரிட்டன் கொலம்பியா நதிகரை தெற்கிலுள்ள பகுதிகளை இணைக்க விரும்பியதாலும் எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக பத்தாண்டு கால ஒப்பந்தத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதன்படி இவ்விரு நாட்டினரும் இந்நிலப்பரப்பின் எப்பகுதிக்கும் செல்லலாமென்று கூறப்பட்டது. இப்பத்தாண்டு கால முடிவில் இவ்விரு அரசுகளும் தங்கள் கூட்டு அதிகாரத்தை, கால வரையறையன்றி நீடிக்க முடிவு செய்தன. ஆனால் ஓராண்டு கால முன்னறிவிப்பின் பேரில் இந்த ஏற்பாட்டை ரத்து செய்யவும் ஒப்புக் கொண்டன.

இதைத் தொடர்ந்து ஆங்கிலேய வணிக நிறுவனங்கள் தங்களது கவனத்தை ஓரிகான் நாட்டின் மீது செலுத்தி அதிகாரத்தை நிலைநாட்டின. ஹட்சன்பே கம்பெனி அப்பகுதியில் வியாபாரத் தலங்களை நிறுவி விவசாயத்தில் ஆர்வம் காட்டியது. ஆனால் 1841ஆம்

ஆண்டிற்குப்பின் ஏராளமான அமெரிக்க மக்கள் அப்பகுதியில் குடியேறினர். சிலர் கலிபோர்னியாவிற்கு சென்றனர். 1845ல் கொலம்பியா நதிக்கும் தெற்கிலுள்ள ஓரிகானில் அமெரிக்கர் தங்களது அதிகாரத்தை நிலை நாட்டிய போது நதியின் வட பகுதியில் ஆங்கிலேயர் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். சமாதான ஒப்பந்தத்திற்கான முயற்சிகளும் தோல்வியில் முடிவடைந்தன.

**குடியரசுத் தலைவர் போல்க்கும் வெளிப்படை விதியும்**

1843 ஆம் ஆண்ட குடியரசுத் தலைவர் தேர்தலின் போது டெக்ஸாஸ், ஓரிகான் ஆகிய பகுதிகளை இணைப்பதையும் தங்களது முக்கிய கொள்கைகளில் ஒன்றாக அரசியல் கட்சிகள் கூறின விக் கட்சி வேட்பாளரான ஹென்றிக்ளே என்பவர் டெக்ஸான் ஓரிகான் ஆகிய பகுதிகளை இணைப்பதை எதிர்த்து முதலில் அறிக்கை வெளியிட்டார். பின்பு அவர் வேட்பாளராக நியமிக்கப்பட்டவுடன் அது பற்றி கருத்து தெரிவிப்பதைத் தவிர்த்தார். ஜனநாயகக் கட்சியினர் நாட்டை விரிவாக்க வேண்டுமென்று விரும்பியஜேம்ஸ் போல்க் என்பவரை தங்களது கட்சியின் வேட்பாளராக நியமித்தார். அக்கடட்சியின் பட பகுதியைச் சார்ந்தவர்கள் எவ்வித அடிமை முறையும் இல்லாது ஓரிகான் பகுதியை இணைக்கும்படி வேண்டினர். ஆனால் தென்பகுதியைச் சார்ந்தவர்கள் டெக்ஸாஸை இணைத்து இப்பகுதியில் அடிமை முறையை ஆதரிக்க வேண்டுமென்று விரும்பினர். ஜனநாயகம் கட்சியினர் $54^0$ 40" அட்சரேகை வரை பரந்து கிடந்த ஓரிகான் பகுதியை ரஷியாவின் அலாஸ்கா எல்கை வரை விரிவுபடுத்த வேண்டுமென்று எண்ணினர். எனவே "ஐம்பத்து நான்கு" நாற்பது அல்லது போர் என்ற வீர முழக்கம் செய்தனர். போல்க்கின் வெற்றி, வெளிப்படை விதிக்கு ஆதரவாக மக்கள் அளித்த தீர்ப்பு எனக் கருதப்பட்டது.

**டெக்ஸாஸ் இணைக்கப்படல்**

ஹென்றி ஹாரிசனுக்குப் பின்னர் குடியரசுத் தலைவர் ஜான் டெய்லர் டெக்ஸாஸை இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். எனவே டெக்ஸாஸ், மெக்ஸிகோவிற்கு எதிராக பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் உதவியை நாடியது. ஆடிமை வாணிபத்தை ஆதரித்ததால் இந்நாடுகள் இப்பிரச்சினையில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. எனினும் இப்பகுதியில் ஐரோப்பிய ஆதிக்கங்கள் தங்களது செல்வாக்கை நிலைநாட்டக் கூடுமென்று அமெரிக்கர் அஞ்சினர். மேலும் டெக்ஸாஸைத் தங்களோடு இணைத்துக் கொள்வதன் மூலம் தங்கள் நாட்டின் வலிமையையும் மூல வளங்களையும் பெருக்கிக் கொள்ள முடியுமென்று பலர் எண்ணினர். அடிமை முறையை ஆதரிப்போர் தங்களது கொள்கை வலிமை பெற டெகஸாஸ் இணைவை வற்புறுத்தினர். ஜனாதிபதி டெய்லரும் டெக்ஸாஸ் இணைவை ஆதரித்ததோடு 1844 ல் காங்கிரசில் இதற்கான ஓர் தீர்மானத்தை கொண்டு வந்தார். ஆனால் அடிமை வாணிப எதிர்பாளர் இத்தீர்மானத்தை எதிர்த்ததால் இதனை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே 1845ல் ஜனாதிபதி பதவிக்கு போல்க் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் டெக்ஸாஸை ஐக்கிய நாடுகளோடு இணைப்பதற்கான ஒரு

கூட்டுத் தீர்மானத்தை டெய்லர் கொண்டு வந்தார். இத்தீர்மானம் வெற்றி பெறவே டெக்ஸாஸ் ஐக்கிய நாடுகளோடு சேர்த்துக் கொள்ளப்பட்டது.

**ஓரிகான் குடியமைப்பு**

இணைப்புக் கொள்கையை ஆதரித்து அதன்மூலம் தேர்தலில் போல்க் வெற்றி பெற்றதால் ஓரிகான் பகுதியை முன்னிட்டுப் போர் ஏற்படலாமென்று உணர்ந்த கிரேட் பிரிட்டன் நடுவர் குழு வழியாக பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முயன்றது. ஓரிகானில் அமெரிக்க அதிகாரத்தை நிறுவ வேண்டுமென்று எண்ணிய குடியரசுத் தலைவர் போல்ப் பிரிட்டனின் கருத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தார். எனினும் கிரேட் பிரிட்டனுடன் ஒரு கடற்போரில் ஈடுபட விரும்பவில்லை. இதனால் ஐக்கிய நாடுகள் ஆக்ரமித்து பகுதியிலிருந்து பின் வாங்கியதோடு 49-வது அட்சரேகையிலிருந்து இவ்விரு நாடுகளும் தங்களது நிலப்பரப்புகளைப் பங்கிட வேண்டுமென்ற கருத்தினைத் தெரிவித்தது. இக்கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டதாக ஓரிகானில் மன்றோ கொள்கையை கையாண்டு, அமெரிக்க குடியேற்ற மக்களைப் பாதுகாக்க போல்க் தீர்மானித்தார். 1846ல் கூட்டு ஆதிக்கத்தை ஒழிப்பதற்காகவும், சமாதான முறையில் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்புவதாகவும் அமெரிக்கா பிரிட்டனிடம் தெரிவித்து. பிரிட்டனும் அமெரிக்கத் தானியம் தேவைப்பட்டதோடு ஓரிகானில் தங்களின் உரோக வாணிப இலாபகரமற்றதாக இருப்பதை உணர்ந்த பிரிட்டன் 1846 ஆம் ஆண்டு ஓர் உடன்பாடு செய்ய முன் வந்தது. அதன்படி அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் பிரிட்டிஷ் கனடாவிற்கும் எல்லையாக 49-வது அட்சரேகை கொள்ளப்பட்டது. இவ்வெல்லை ராக்கீ மலைத்தொடருக்கும் கிழக்கிலிருந்து பசிபிக் சமுத்திரம் வரை நீட்டப்பெற்றதால் ஓரிகான் பகுதி இரு பிரிவாக்கப்பட்டது. எனினும் வான்கூவர் தீவு பிரிட்டிஷ் கனடாவிற்குச் சொந்தமாக்கப்பட்டது.

இது ஐக்கிய நாடுகளுக்கு கிடைக்கப்பெற்ற பெரும் இலாபமாகும். விக் கட்சிப் பிரிவினர் இங்கிலாந்தோடு போரினை எதிர்த்ததாலும், அத்தகைய போரின் விளைவுகள் நிச்சயமற்றதாகக் தோன்றியதாலும் தெற்கில் மெக்ஸிகோவிற்கு எதிராக அமெரிக்கப்படைகள் ஈடுபடுத்தபட்டதாலும் போல்ப் இவ்வுடன்படிக்கைக்கு ஒப்புதல் தெரிவித்தார்.

**மெக்ஸிகோ போருக்கான காரணங்கள்**

குடியரசுத் தலைவர் போல்க் மெக்ஸிகோவிற்கு எதிராகப் போரில் ஈடுபட்டார். மெக்ஸிகோ பகுதியை பெறவேண்டுமென்ற பேராசையே போருக்கான அடிப்படைக் காரணமாகும். கலிபோர்னியாவும் நியூ மெக்ஸிகோவின் பகுதியாக விளங்கின ஆனால் அமெரிக்கர் இப்பகுதிகளை தங்களது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவர விரும்பினர். அப்பகுதி மக்களின் பலர் இந்தியரே எனினும் வளமான நிலப்பரப்பும், தோலும், தங்கமும் நிறைந்த இப்பகுதியில் அமெரிக்கர்கள் ஏராளமாகக் குடியேறினர். அவர்கள் ஐக்கிய நாட்டுடன் இணைவதற்காக மெக்ஸிகோவிற்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். 1845-

ஆம் ஆண்டில் ஓர் அமெரிக்கப்படை கலிபோர்னியா மீது படையெடுத்தது. அமெரிக்காவின் இத்தகைய ஆக்கிரமிப்பும் ஏகாதிபத்திய நோக்கமும் மெக்ஸிகோவை அச்சுறுத்தியது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் டெக்ஸாஸை இணைத்து அமெரிக்கக் குடியேற்ற மக்களை குடியேற அனுமதித்ததின் விளைவாக மெக்ஸிகோவின் மாநிலமாகிய டெக்ஸாலை இழந்தது. இதனால் 1845 - ல் மெக்ஸிகோ ஐக்கிய நாடுகளுடன் தனது ராஜாங்கத் தொடர்பை துண்டித்தது. ஐக்கிய நாடு தான் புதிதாக இணைத்துக் கொண்ட டெக்ஸாஸ் மாநிலத்தின் பகுதியாக மெக்ஸிகோவின் பெரும் பகுதியை சொந்தம் கொண்டாடியதால் நிலைமை மேலும் மோசமாகியது. டெக்ஸாஸ் மாநிலத்தின் பகுதியாக மெக்ஸிகோவின் பெரும் பகுதியை சொந்தம் கொண்டாடியதால் நிலைமை மேலும் மோசமாகியது. டெக்ஸாஸ், மெக்ஸிகோவின் ஒரு மாநிலமாக விளங்கியபோது நியூசெஸ் நதி அதன் தென் எல்லையாக அமைந்தது. ஆனால் இந்நதிக்கு தெற்காக ஓடிய எல்லையாக அமைந்தது. ஆனால் இந்நதிக்கு தெற்காக ஓடிய ரியோகிராண்ட் நதி தென் எல்லையாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று ஐக்கிய நாடுகள் விரும்பியது. இதற்கு மாறாக வடபகுதியில் சபைன் நதிதான் எல்லா நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்ட எல்லையாக வேண்டுமென மெக்ஸிகோ விரும்பியது. இவ்விரு நாடுகளுக்கும் இடையே ராஜந்திர உறவு பற்றாக்குறையினால் போரைத் தவிர்ப்பது இயலாததாயிற்று.

பணத்தைப் பெறுவதற்காக எழுப்பப்பட்ட கோரிக்கை இப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியது. மெக்ஸிகோ பிரச்சினையில் தலையிட்ட அமெரிக்கர்கள் பெரும் இழப்பிற்குள்ளாயினர், 20 இலட்சமம் டாலர்களுக்கு அதிகமாக நஷ்டஈடு தரவேண்டுமென ஐக்கிய நாடுகள் மெக்ஸிகோவை வற்புறுத்தியது. இதேர போன்று பிரான்சும், இங்கிலாந்தும் நஷ்டஈடு தரவேண்டுமென்று மெக்ஸிகோவை கட்டாயபடுத்தின. மேக்ஸிகன் அரசு மூன்று லட்சம் டாலர்களை ஐக்கிய நாடுகளுக்கு நஷ்ட ஈடாகச் செலுத்திய பின் தனது இயலாமையை அதனிடம் தெரிவித்தது. எனினும் அது ஐக்கிய நாடுகளின் கோரிக்கையை மறுக்கவில்லை.

தனது நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு மெக்ஸிகோ அரசு மேற்கொண்ட பல கட்டுப்பாடுகள் அமெரிக்க வாணிபத்தை பாதித்தது. குடியரசுத் தலைவர் போல்க் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தூதுக்குழுவை மெக்ஸிகோவிற்கு அனுப்பினார். டெக்ஸாஸை அநியாயமாகக் கொள்ளையடித்தவரோடு பேச்சுவார்த்தை நடத்த அவ்வரசு விரும்பவில்லை. எனவே போல்க் போர் புரியத் தீர்மானித்தார்.

**மெக்ஸிகன் போரின் போக்கு**

உடனே போல்க் நியூசெஸ் நதியின் தென் பகுதியிலுள்ள மெக்ஸிகோ பகுதிக்கு ஜெனரல் ஐக்காரி டெய்லர் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். இதனால் போர் ஆரம்பமாயிற்று, போரில் மூன்று முக்கிய முற்றுகைகள் இடம் பெற்றன. அவைகள் முறையே வட மெக்ஸிகோ நோக்கி ஐக்காரி டெய்லர் மேற்கொண்ட படையெடுப்பும், மெக்ஸிகோ நகர்

நோக்கி வீராகுரூஸிலிருந்து ஜெனரல் வின்பில்ட் ஸ்காட் மேற்கொண்ட படையெடுப்பும், கலிபோர்னிய மீதான ஸ்டீபன்கீர் படையெடுப்பும் ஆகும். டெய்லர் தலைமையிலான படை ரியோகிராண்ட் நதியைக் கடந்து மான்டெரியைக் கைப்பற்றியதோடு சாந்தா அன்னாவின் தலைமையின் கீழ் இயங்கிய மெக்ஸிகோ படையை டட்யூவிஸ்தா என்ற போரில் முறியடித்தது. வீராகுரூஸைக் கைப்பற்றிய ஸ்காட், சாந்த அன்னாவை தோற்கடித்து, மெக்ஸிகோ நகரைக் கைப்பற்றினார். இதற்கிடையில் கீர்னி, நியூமெக்ஸிகோவைக் கைப்பற்றினார். பின்பு மேற்கு நோக்கி முன்னேறிய அவர் கடற்படையின் உதவியோடு கலிபோர்னியாவையும் கைப்பற்றினார். அமெரிக்க வெற்றிகளால் மெக்ஸிகோவின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அழிவுற்றன.

**குவாடலும் இடால்கோ ஒப்பந்தம்**

மெக்ஸிகோ மீதான வெற்றிக்கு டெல்யரும், ஸ்காடட்டும் காரணமாக இருந்தபோதிலும் அவர்கள் விக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்ததால் போல்க் அவர்களை நம்பவில்லை. அத்துடன் அவர்களுக்கு அதிக மதிப்பளிக்கவும் அவர் விரும்பவில்லை. ஆகவே ஸ்காட்டின் படையோடு அயல்நாட்டுத் துறை தலைமைக் குமாஸ் தாவான நிர்கோலஸ் டிரிஸ்ட் என்பவரை உடன்பாடு ஒன்றை ஏற்படுத்த, போல்க் அனுப்பினார். அதன்படி டிரிஸ்ட் குவாடலூப் இடால்கோ ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

இவ்வுடன்படிக்கையின் ஷரத்துக்கள்படி மெக்ஸிகோ, கலிபோர்னியாவையும் நியூ மெக்ஸிகோவையும் ஐக்கிய நாடுகளுக்குக் கொடுத்ததோடு டெக்ஸாஸின் தென் எல்லையாக ரியோகிராண்ட் நதியை ஏற்றுக்கொண்டது. அதற்குப் பதிலாக ஒன்றரைக் கோடி டாலர்களைக் கொடுத்து 32,50,000 மக்களின் உரிமைகளை ஏற்றுக் கொள்வதற்கா ஐக்கிய நாடுகள் ஒப்புக்கொண்டது. இவ்வுடன்பாடு சிறப்பு வாய்ந்தது. மெக்ஸிகோவின் நிலப்பரப்பு பாதியாகக் குறைக்கப்பட்டது. அது ஒரு வலிமை குன்றிய நாடாக்கப்பட்டது பசிபிக் எல்லையோரமாக கலிபோர்னியா பகுதி உட்பட, மெக்ஸிகோவின் வட மாநிலங்கள் அனைத்தையும் ஐக்கிய நாடுகள் இணைத்துக் கொண்டது 1853 ல் கிலா நதிக்கு தென்பகுதியிலமைந்த மெக்ஸிகோவின் பெரும் பகுதியை ஒரு ரெயில் பாதை அமைக்க வேண்டுமென்பதற்காகவே ஒரு கோடி டாலருக்கு மெக்ஸிகோவிடமிருந்து அமெரிக்கா வாங்கியது. இரண்டாவதாக, இப்பகுதியில் அமெரிக்கர் அதிக அளவில் குடியேறுவதற்கும் இந்தியர்கள் வெளியேறுவதற்கும் இது தூண்டுகோலாக அமைந்தது. மூன்றாவதாக, மார்மமானியர்கள் தாங்கள் ஐக்கிய நாடுகளின் எல்லைக்குள் இருப்பதை உணர்ந்தவர்கள் ஆகையால் அவர்கள் கிரேட் சால்ட் ஏரி பகுதிக்குக் குடியேறினார். ஆனால் மெக்ஸிகோ இப்பகுதியை ஐக்கிய நாடுகளிடம் இழந்துவிட்டதால் அவர்கள் மீண்டும் அமெரிக்க நிர்வாகத்தின்கீழ் வந்தனர். எனவே அவர்கள் அந்நாட்டு குடிமகனாகும் வரை துன்பத்தை அனுபவித்து வந்தனர். இறுதியில் இது அடிமை முறை பிரச்சினையை மறுபடியும் எழுப்பியது. ஏராளமான நிலப்பகுதிகள் கைப்பற்றப்படவே அடிமை முறையின் எதிர்ப்பாளரும், ஆதரவாளரும் முறையே தங்களது அதிகாரத்தையும் குடியேற்றங்களையும்

விரிவுபடுத்துவதில் போட்டியிட்டனர். இதுவே உள்நாட்டுப் போர் தோன்றுவதற்குக் காரணமாயிற்று.

**அலாஸ்கா வாங்கப்படல்**

அலாஸ்காவை வாங்கியதன் மூலம் அமெரிக்க ஐக்கிய நாடுகள் மேலும் விரிவடைந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின இடையில் ரஷியா அலாஸ்காவை இணைத்தது. ஆனால் ஏகாதிபத்தியக் கொள்கைகளில் ரஷியா சோர்வடைந்தது. இப்பகுதியை நிர்வகித்த ரஷிய அமெரிக்கக் கம்பெனி உரோக வாணிபம் இலாபரமற்றதென்று கண்டது. கம்பெனி உரோம வாணிபம் இலாபகரமற்தென்று கண்டது. ஐரோப்பிய, ஆசிய பிரச்சினையில் ஈடுபட்ட ஸார் மன்னர் அலாஸ்காவில் தனது முழு கவனத்தையும் செலுத்த முடியாதென்று கண்டணர்ந்தார். ஆங்கிலேயர்கள் அல்லது மார்மானியர்கள் அப்பகுதியை கைப்பற்றி விடுவார்களோ என்ற ஓர் அச்சமும் நிலவியது.

மேற்குறிப்பிட்ட காரணங்களால் ரஷியா 72 லட்சம் டாலர்களுக்கு இப்பகுதியை விற்க முன்வந்தது. குடியரசுத் தலைவர் ஜான்சன் 1867ல் அலாஸ்காவை விலைக்கு வாங்கும் உடன்படிக்கையில் கையெழுத்திட்டார். அந்த அலாஸ்கா உடன்பாடு ரஷியரை அமெரிக்காவிலிருந்து வெளியேற்றியதோடு இராணுவப்பாதுகாப்பையும், கனிவளங்களையும் ஐக்கிய நாட்டிற்கு வழங்கியது.

வெளிப்படை விதியின் செயலாற்றலின் காரணமாக ஐக்கிய நாடுகள் பரந்த விலையுயர்ந்த நிலப்பகுதிகளைப் பெற்றது. ரியோகிராண்ட் நதிக்கும் வடபகுதியிலுள்ள நியூ மெக்ஸிகோவையும், கலிபோர்னியா, ஓரிகான் ஆகிய பகுதிகளையும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இணைத்துக் கொண்டது. அட்லாண்டிக், பசிபிக் ஆகிய இரு பகுதிகளிலும் உரிமை பாராட்டி கண்டம் முழுவதும் அதிகாரம் செலுத்தக் கூடிய ஒரு பெரிய ஆதிக்கமாக ஐக்கிய நாடுகள் எழுந்தது. இக்கொள்கையின் தொடர்ந்த செயலாற்றல் காரணமாக இலத்தீன் அமெரிக்காவில் மட்டுமின்றி கிழக்காசியாவிலும் அமெரிக்கர் ஆக்கிரமிப்புக் கொள்கையை மேற்கொண்டனர். இவ்விரிவடைதல் கொள்கை எவ்வித ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்புடையது அன்று அவர்களுக்கு ஆதரவளித்த இந்தியர்களும் மெக்ஸிகோ மக்களும் நாளடைவில் அவர்களின் பேராசைக்கு இரையாயினர். அமெரிக்கா தனது விரிவடைதல் கொள்கையை நிறைவேற்ற சதித் திட்டங்களையும், படையெடுப்புகளையும், வன்முறைகளையும் மேற்கொள்ள வேணடியிருந்தது கொள்கை அடிப்படையில் வெளிப்படை விதி என்பது அதிர்ஷ்டமற்ற மக்கள் மீது அமெரிக்க நாகரிகத்தின் நலன்களை விரிவடையச் செய்வதாகும். ஆனால் செயல்முறையில், பூர்வீக மக்களை அழித்து அவர்களின் நிலப்பகுதிகளைக் கைப்பற்றுவதே இக்கொள்கையின் பொருளாக அமைந்தது. இவ்வாறாக இக்கொள்கையானது ஏகாதிபத்திய, குடியேற்றக் கொள்கையைவிட மிக மோசமானதாகும். ஏனெனில் ஏகாதிபத்திய, குடியேற்ற கோட்பாடுகள் அம்மக்களை வாழ்வதற்காவது அனுமதித்தது எனலாம்.

1. மேற்றிசை விரிவாக்கம் அதன் விளைவுகள் பற்றி எழுதுக.
2. மேற்கத்திய விரிவாக்கத்திற்கு கூட்டரசு எடுத்த பங்கினை விளக்குக.

## அடிமைப் பிரச்சினை

1848-ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் விக் கட்சி வேட்பாளரான ஜெனரல் ஜக்காரி டெய்லர் தோந்தெடுக்கப்பட்டார். ஆனால் 1850 ல் அவர் இறக்கவே உதவி குடியரசுத் தலைவர் பில்மோர் குடியரசுத் தலைவரானார். 1852, 1856 ஆகிய ஆண்டுகள் முறையே ஜனநாயகக் கட்சியின் சார்பாக பியர்சும், ஜேம்ஸ் புக்கானனும் குடியரசுத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களை தொடர்ந்து குடியரசுத் கட்சி வேட்பாளரான ஆப்ரகாம் லிங்கன் குடியரசுத் தலைவரானார். மேற்குறிப்பிட்ட குடியரசுத் தலைவர்களின் நிர்வாகத்தின் போது இனப் பிரச்சினைகளும், அடிமை முறை எதிர்ப்பு இயக்கங்களும் தோன்றின.

விடுதலைப் பிரகடனம் அறிவிக்கப்பட்ட போது மாசசூகெட்ஸ் தவிர ஏனைய மாநிலங்களில் அடிமை முறை இருந்தது. ஐரோப்பிய வணிகர்களுக்கு அடிமை வாணிபம் ஒரு இலாபகரமான தொழிலாக இருந்ததால் ஆப்பிரிக்காவிலுள்ள ஏழை நீகரோக்களை வேட்டையாடிப் பிடித்து மேற்கிந்தியத் தீவுகளுக்கும், ஆங்கிலக் குடியேற்றங்களுக்கும் அனுப்பி அங்கு அடிமை அங்காடிகளில் விற்கப்பட்டனர் அவர்களை வெள்ளை நிலச்சுவான்தார்கள், குறைந்த கூலியில் தங்களுடைய பெரிய பண்ணைகளில், புகையிலை, நெல், கரும்புத் தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தெற்கில் பருத்தியே முக்கிய விளைபொருளாக விளங்கியது. பருத்தியின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே சென்றது. பூர்வீக இனத்தவர்கள் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் விரட்டப்படவே வெள்ளை நிலச்சுவான்தார்கள் அப்புதிய பகுதிகளில் குடியேறினர். பொருள்களின் விலை உயர்ந்ததால் அடிமை வியாபாரம் இலாபகரமாக இருந்தது. எனவே ஆப்பிரிக்காவிலிருந்து அதிகமான அடிமைகளை இறக்குமதி செய்தனர் வெள்ளையர்கள் பருத்தியின் உற்பத்தியை அதிகரித்தனர். இதனால் நிலச்சுவான்தார்களின் செல்வாக்கு நாளுக்குநாள் வளர்ந்தது.

வீடுகளில் வேலை செய்கின்ற வேலைக்காரர்களென்றும வயல் வெளிகளில் பணிபுரிகின்றவர்களென்றும் அடிமைகளில் இரு பிரிவினர் இருந்தனர். வீடுகளில் வேலை செய்கின்றவர்கள் தங்களது எஜமானர்களின் வீடுகளில் உணவு பரிமாறுபவர்களாகவும், உணவு சமைப்பவராகவும், வண்டியோட்டுபவராகவும், தாதியராகவும், தோழியராகவும் பணியாற்றினர். வயல் வெளிகளில் வேலை செய்கின்றவர்கள் பண்ணைகளில் பயிர் செய்தல், வீடுகள் கட்டுதல், சாலைகள் அமைத்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இவ்வேலைக்காரர்கள் அனைவரும் வரிசையாக அமைக்கப்பட்ட குடிசைகளில் தங்கினர். ஆடிமைகளைக் கண்காணித்து அவர்களைத் தங்கள் அதிகாரத்தின்கீழ் வைத்திருக்க எஜமானர்கள், மேற்பார்வையாளர்களை வேலையில் அமர்த்தினர். அவர்களின் செல்வாக்கு அடிமைகளை வேலை வாங்குவதைப் பொருத்தே

இருந்தது. எனவே மேற்பார்வையாளர்கள் நீக்ரோக்களை அடிக்கடி சாட்டையால் அடித்துத் துன்புறுத்தி வந்தனர்.

மனிதன் சுதந்திரமாமக வாழும் உரிமையை இவ்வடிமை முறை மறுத்தது. அடிமைமுறை, "தனது திறமையையும் சக்தியையும விருத்தி செய்ய வேண்டுமென்ற தொழிலாளியின் ஆர்வத்தையும், தன் மதிப்பையும் தடை செய்வதோடு, அதனைத் தவறாக வழி நடத்தி அவனது உரிய நோக்கத்தைக் குறைத்து விடுகின்றது என்றும் நாட்டிற்கும் உலகிற்கும் உகந்தவர்களாக வாழவேண்டுமென்ற மனிதனின் எல்லா இயற்கைத் தன்மைகளையும் தடை செய்து விடுகின்றன" என்றும் F.L. ஓலம்ஸ்டெட் குறிப்பீடுகின்றார்.

அடிமை முறையில் பல தீமைகள் இருந்த போதிலும் தென் பகுதி தலைவர்கள் எஜமானர்களுக்கும் அடிமைகளுக்கும் நன்மை பயப்பது இம்முறை எனக் கூறினர். சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டபோதுதான் அடிமை முறை நிறுவப்பட்டதென்று தென்மாநில மக்களின் சமுதாய வளர்ச்சி என்ற நூலில் பிட்ஸ்ஹக் என்பவர் அடிமை முறையை ஆதரித்துள்ளார். முற்காலத்தில் அடிமை முறை மக்களின் நாகரிகங்களோடு இணைத்து காணப்பட்டது. அடிமைகளின் உழைப்பினால் கலைகளோடு கூடிய பல கட்டிடங்கள் எழுப்பப்பட்டன. புத்தி கூர்மையற்ற நீக்ரோக்களால் வெள்ளையர்களோடு சமுதாயத்தில் போட்டியிட முடியவில்லை. அவர்கள் வறுமையினால் பட்டினி, பிணி மற்றும் வயோதிக் காலத்தில் தங்களைக் காப்பாற்ற எஜமானர்களின் உதவி தேவை என்பதை உணர்ந்திருந்தார்கள். வட மாநிலங்களில் விடுதலை பெற்ற நீக்ரோ அடிமைகள் ஆப்பிரிக்கப் பகுதியில் வாழும் நீக்ரோக்கள் ஆகியோரின் நிலையைவிட தென்மாநில அடிமை நீக்ரோக்களின் நிலை சற்று உயர்வாகவே இருந்தது. சுயநலம், வெள்ளையரின் இனம் மேம்பட்ட தன்மை இவற்றின் அடிப்படையில் எழுந்த இக்கருத்துக்கள் ஓர்புறச் சார்பானவையாகும்.

**அடிமை முறை எதிர்ப்பு இயக்கம்**

பலருடைய பொருளாதாரம் பற்றிய சிந்தனைகளும் ஒரு சிலரின் மனிதாபிமான இரக்கமும் அடிமை முறை எதிர்ப்பு இயக்கங்கள் தோன்ற காரணமாயின அடிமை முறை தங்களது வளர்ச்சியைத் தடை செய்கின்றதென்றுணர்ந்து வட மாநில வெள்ளையர்கள். தென் மாநில வெள்ளையர்களுடன் போட்டியிட நேர்ந்தது. அடிமைகள் தங்களது எஜமானர்களை தேசிய அரசியலில் செல்வந்தர்களாக்கி செல்வாக்கு உள்ளவர்களாக்கினர்.

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புரோட்டஸ்டாண்டு பிரிவைச் சார்ந்த குவேக்கர்கள் என்றழைக்கப்பட்ட நண்பர் கழகத்தினர் அடிமை முறையை ஒழிப்பதற்காகப் போராடி தோல்வியுற்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அடிமை முறையை எதிர்த்த அமெரிக்கரில் குறிப்பிடத்தக்கவர் வில்லியம் லாயிட் காரிசன் என்பவர் தன்னுடைய அறப்போர் வழியாக நாட்டை அடிமை முறைக்கு எதிராகக் கிறர்ந்தெழச் செய்தார். 1831ல் லிபரேட்டர் என்ற அடிமை முறை எதிர்ப்பு இயக்க பத்திரிக்கையை பாஸ்டனில் வெளியிட்டார்.

சுதந்திரப் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ளபடி வாழ்க்கையின் குறிக்கோள். தன்னுரிமை பெறுதல், நற்பேறு நாடுதல் போன்ற கொள்கைகள் வெள்ளையர்களுக்கு மட்டுமின்றி கறுப்பவர்களுக்கும் உரியதாகுதென்று கூறினார். அரசியலமைப்பு அடிமை முறையை அங்கீகரித்ததால் அவர் அதனை "மரணத்தோடு செய்து கொண்ட உடன்படிக்கையென்றும் நரகத்தோடு கொண்ட ஒப்பந்தமென்றும்" கண்டனம் தெரிவித்தார். ஆனால் பாஸ்டன் மக்களுக்கு அடிமைகள் மீது எவ்வித அனுதாபமும் இல்லாததால் காரிசனை தாக்கினார். அடிமை முறையைத் தாக்கிய கிளர்ச்சியாளர்களில் விட்டியர், வாங்பெல்லோ, எமர்சன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். 1852ல் திருமதி. ஹாரியட் பீக்சர் ஸ்டோவ் என்பவர் மிகப் பிரசித்திப்பெற்ற நூலான "அங்கிள் டாம்ஸ் கேபின்" என்பதை வெளியிட்டார். அவர் அடிமையை ஒரு களங்கமற்ற மனித உருவாகச் சித்தரித்துக் காட்டி, அக்களங்கமற்ற எளிய உள்ளம் கொள்ளையிடும் கொடிய எஜமானுக்கு இரையாவதைத் தெளிவாக எடுத்துக் காட்டினார். அவருடைய புத்தகம் அநேக அமெரிக்க மக்களைக் கவர்ந்தது.

அடிமைமுறை எதிர்ப்புக்குழு தலைவர்களின் முயற்சியால் வட்டார அடிமை முறை ஒழிப்புக் குழுக்கள் ஏற்படலாயின. விடுதலைக்கட்சி, அடிமை முறையை ஒரு மாநிலப் பிரச்சினையாக கருதிய போதிலும் ஐக்கிய நாடுகள் சட்டம் நடைமுறையிலிருந்து புதிய நிலப்பகுதிகளில் அடிமை முறையை ஒழிக்க வேண்டுகோள் விடுத்தது. பழைய மாநிலங்களில் வழக்கததிருக்கும் அடிமை முறையில் தலையிடுவதை "சுதந்திர மண்" கட்சி விரும்பவில்லை. ஆனால் அடிமை முறையை புதிய பகுதிகளில் புகுத்தப்படுவதை இவர்கள் எதிர்த்தார்கள். இக்கட்சியின் கொள்கைகளும் பணிகளும் விரைவில் பிசுபிசுத்துப் போனபோதிலும், குடியரசுக் கட்சி எழ அடிப்படைக் காரணமாக அமைந்திருந்தது.

**மிசௌரி சமரச உடன்பாடு**

தங்கள் நிலைமையை வலுப்படுத்திக் கொள்ளை மேற்கொண்ட முயற்சியினால் புதிய குடியேற்றங்களை நிறுவுவதிலும் புதிய நிலப்பகுதிகளை இணைத்துக் கொள்வதிலும் வட, தென் மாநிலங்கள் போட்டியிட்டன. புதிய நிலப்பகுதிகளில் இணைக்கப்படும் போதும், புதிய மாநிலங்களை உருவாக்கும் போதும் தேசிய அரசியலில் வல்லமை சமநிலையை ஏற்படுத்த இம்மாநிலங்கள் முயற்சிகள் செய்தன. இப்பிரச்சினைகள் அனைத்தும் சமரச உடன்பாடுகள் மூலம் தற்காலிகமாகத் தீர்த்துவைக்கப்பட்டாலும், அதனை முற்றிலும் ஒழிக்க முடியாததால் பிரிவினை எண்ணம் பயங்கர வளர்ச்சியுற்று நாட்டின் ஒருமைப்பாட்டை அச்சுறுத்தியது.

மேசன் டிக்சன் எல்லைக்கோடும் ஓஹியோ நதியும் அடிமை முறையைக் கொண்ட தென்மாநிலங்களுக்கும், அம்முறையில்லாத வட மாநிலங்களுக்கும் எல்லையாக இருந்தது. லூசியானாவைக் கைப்பற்றிய பின் பல புதிய குடியேற்றங்கள் தோன்றின. 1818ல் அடிமை முறையை ஆதரித்த மிசௌரி மாநிலம், மாநில அந்தஸ்து பெற விண்ணப்பித்த போது அடிமை முறையை எதிர்த்து, ஆதரித்த மாநிலங்களுக்கிடையிலான அதிகார நிலைக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலை உருவாயிற்று. அடிமை முறை வளர்ச்சியின் காரணமாகவும்

அதனால் வட, தென் மாநிலங்களின் அதிகார நிலைமையில் ஏற்பட்ட மாறுதல்களினாலும் காங்கிரஸ் ஒரு நெருக்கடியான நிலையை முதன்முதலாக எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

வட மாநிலங்களைவிட தென் மாநிலங்களிலிருந்தே அநேக மக்கள் தங்களுடைய அடிமைகளோடு மிசௌரினில் குடியேறினர். இது மிசௌரியை ஓர்அடிமை நிலப்பகுதியாக்கிற்று. 1819-ல் அடிமைமுறையைக் கொண்டிருந்த மாநிலமாக அலபாமாவும் ஐக்கிய நாடுகளோடு சேர்த்துக்கொள்ளப்பட்டது. அதிகமான அடிமை மாநிலங்களை இணைத்து கொள்வதால் சமநிலை பாதிக்கும் என வடபகுதி அஞ்சியது. எனவே 1819-ல் நியூயார்க்கைச் சார்ந்த டால்மட்ஜெ என்பவர் மிசௌரிக்குள் மேலும் அதிக அடிமைகள் அனுமதிக்கப்படுவதைத் தடை செய்யவும், அடிமைகளுக்கு படிப்படியாக விடுதலை வழங்கவும் மிசௌரி மசோதாவைக் கொண்டு வந்தார். ஆனால் இம்மசோதாவை செனக் சபை நிராகரித்தது. இதற்கிடையில் மாசசூசெட்சிலிருந்த மெயின் பகுதி பிரிந்து தனி மாநிலமாக இணைய விண்ணப்பித்தது. இது ஒரு சமரச உடன்பாட்டிற்கான வாய்ப்பை நல்கியது. மிசௌரியை ஓர் அடிமை நாடாகவும் மெயினை ஒரு சுதந்திர நாடாகவும் ஏற்று செனட் சபையில் வட, தென் மாநிலங்களின் சமநிலையை 12:12 என்ற விகிதத்தில் பாதுகாப்பது என்று முடிவு செய்யப்பட்டது. தாமஸ் என்பவர் கொண்டவந்த திருத்த சட்டவரைவு அடிமை மாநிலமான மிசௌரியைத் தவிர, மிசௌரியின் தெற்கு எல்லைக்கு இணையான 6.30க்கு வடக்கே லூசியானா பகுதியில் அடிமை முறை தடை செய்யப்பட வேண்டும் என்று நிர்ணயித்து. இவ்வாறு 1820ல் மிசௌரி ஒரு அடிமை மாநிலமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

குடியரசுத் தலைவர் மன்றோவின் நிர்வாகத்தின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட மிசௌரி உடன்பாடு வட, தென் மாநிலங்களுக்கிடையே சமநிலையை நிலைநாட்டியது. காலப்போக்கில் அது தென்பகுதியை விட பகுதி மாநிலங்களுக்கு அதிகப் பயன்பளை அளிப்பது போலத் தோன்றியது. தேற்கின் தாழ்நிலைப் பகுதிகள் வழியாக இவ்விரு நாடுகளுக்குமிடையான எல்லையை அது நிர்ணயித்தது. இருமடங்க மாநிலங்களையும் செனட் அங்கத்திழனர்களையும் பெறலாம் என வடமாநிலங்கள் கண்டுணர்ந்தன. மேலும் ஓர் அடிமை மாநிலத்தை இணைப்பதில் பெற்ற வெற்றியினால் தெற்கு தன்னை மறந்தது என்றே கருதவேண்டும். எனினும் இப்பிரச்சினைக்கு இச்சமரச உடன்பாடு ஒரு நிலையான தீர்வு அளிக்கவில்லை.

### 1850 - ஆம் ஆண்டின் சமரச உடன்பாடு

தெற்கு, மேற்கு நோக்கி நாடு விரிவடைவதால் பிரிவினைக் கொள்கை வலுப்பட்டது. வட, தென் மாநிலங்கள் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட மாநிலங்களில் தங்கள் செல்வாக்கினை நிலை நாட்ட ஒன்றுக்கொன்று போட்டியிட்டுக் கொண்டன.

டெக்ஸாஸ், புளோரிடா போன்றவை அடிமை மாநிலங்களாக ஏற்றுக் கொண்ட பிறகு தெற்கில் 15 அடிமை மாநிலங்களுக்கு வடக்கில் 13 மாநிலங்கள் என்ற விகிதத்தில் இருந்தது. எனினும் ஓரிகானைப் பெற்ற பின்னர் வடபகுதி திருப்பதியடைந்தது. மெக்ஸிகள் போரானது அதிக அடிமை மாநிலங்களைப் பெறுவதற்கான தென் மாநிலங்களின் சதியென்று வடபகுதியினர் அஞ்சினர். குடியரசுத் தலைவர் போல்கன் மெக்ஸிகோ பகுதியினை பெறுவதற்கான இருபது லட்சம் டாலர்களை காங்கிரசிடம் கேட்டபோது பென்சில்வேனியாவை சார்ந்த டேவிட் வில்மட் என்பவர் வில்மட்ஷரத்து என்ற ஒரு புதிய திருத்தத்தைக் கொண்டு வந்தார். அது மெக்ஸிகோவிடமிருந்து பெறும் பகுதிகளில் அடிமை முறை புகுத்தப்படக்கூடாது என்று கூறியது. இதனை செனட் நிராகரித்த போது வட, தென் மாநிலங்களுக்கிடையே போட்டி மனப்பான்மையும், வெறுப்புணர்ச்சியும் உண்டாயிற்று.

உண்மையில் புதிய பிரச்சினைகள் தோன்றி மீண்டும் சிக்கல்களை உண்டாக்கின. அவைகள் பின்வருமாறு: 1) மெக்ஸிகோ போரின் விளைவாக பரந்த நிலப்பகுதிகளை அமெரிக்க ஐக்கிய நாடுகள் பெற்றது. அடிமை முறை எதிர்ப்பாளர்கள் தங்களுடைய செல்வாக்கை மெக்ஸிகோ வழங்கிய பகுதிகளில் நிலைநாட்ட முயன்றனர். வில்மட் ஷரத்து அடிமை முறையைக் கட்டுப்படுத்த முயன்றது. அது ஏற்றுக்கொள்ளப்படவில்லையெனினும் தங்களை இப்பகுதியிலிருந்து ஒதுக்கி விடுவதற்கான வடமாநிலத்தவர் செய்யும் சதி என அடிமைகளை வைத்திருந்தவர் அஞ்சினர். 2) ஓரிகான் பகுதியில் ஒரு சீரான அரசை நிறுவுமாறு குடியரசுத் தலைவர் போல்க் காங்கிரசை பணித்தார். காங்கிரஸ் அவருடைய கருத்துரையை ஏற்றுக்கொண்டபோதிலும் வடமேற்குச் சட்டத்தின் அடிமைமுறையற்ற கோட்பாடுகளை இப்பகுதியில் நடைமுறைக்குக் கொண்டு வருவதெனத் தீர்மானித்தது. ஓரிகானிலிருந்து அடிமை முறையை ஒழித்ததால் தென் பகுதியினர் ஆத்திரமடைந்தனர். 3) யோவா, விஸ்கான்சின் முதலிய சுதந்திர மாநிலங்களைச் சேர்த்துக் கொண்டதின் விளைவாக வட, தென் மாநிலங்களின் வல்லமைச் சமநிலை அவற்றின் மாநிலங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை 15:15 என்றிருந்தது இந்நிலையில் கலிபோர்னியா ஒரு சுதந்திர மாநிலமாக உருப்பெற்று, தன்னை ஐக்கியத்திற்குள் சேர்த்துக்கொள்ளுமாறு வண்டியது. அப்படி சேர்த்துக்கொண்டால், செனக்டில் தெற்கின் செல்வாக்கு குறையும் சூழ்நிலை உருவாகியது. 4) கொலம்பிய மாவட்டத்தில் அடிமை முறையும், அடிமை வாணிபமும் வளர்ந்தோங்கியது. இம்மாவட்டம் தேசிய அரசின் ஆளுகைக்குட்பட்ட கூட்டிணைவுப் பகுதியாகையால் அப்பகுதியிலிருந்து அடிமை முறை ஒழிக்கப்பட வேண்டுமென்று அடிமை விடுதலைக் கோட்பாட்டினர் கோரினார்கள். 5) இச்சமயத்தில் அடிமைகளின் அநேகர் தென் பகுதியிலிருந்து வட பகுதிக்கு விடுதலையாளர்களின் உதவியினால் தப்பிச் சென்றனர். இவ்வாறு தப்பிச் சென்ற அடிமைகளை திரும்பப் பிடித்து ஒப்படைக்கும் பொறுப்பை அரசு அதிகாரிகள் மேற்கொண்டனர். ஆனால் சுதந்திர மாநிலங்களின் ஒத்துழைப்பின்மையால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாமற்போயிற்று.

எனவே பண்ணையாளர்கள் தாங்கள் பெரும் நஷ்டத்திற்குள்ளாக்கப்பட்டதாகக் கருதினர். 6) இந்நிலையில் டெக்ஸாஸ் எல்லை பற்றி ஒரு சச்சரவு உருவாயிற்று. ரியோகிராண்ட் தோன்றுமிடம் தான் தனது மேற்கு எல்லையென்று இம்மாநிலம் கூறியது. இக்கோரிக்கை, நியூ மெக்ஸிகோவின் பெரும் பகுதியை அடிமை மாநிலத்திற்கு கொடுக்கும் என்பதால் தெற்கு இதனை ஆதரித்தது. ஆனால் நியூமெக்ஸிகோவின் எந்தப் பகுதியும் டெக்ஸாஸிற்கு கொடுக்கப்பட் கூடாது என்று வடக்கு கூறியத. 7) 1848 ஆண்டு தேர்தலின் போது ஜனநாயகக் கட்சியினர் மிக்சிகன் என்ற வட மாநிலத்தை சார்ந்த லீவிஸ் காஸ் என்பவரைத் தங்கள் வேட்பாளராக நியமித்தனர். லீவிஸ் காஸ் வட மாநிலத்தைச் சார்ந்தவராக இருந்த போதிலும் அடிமை முறை பற்றிய தனது கொள்கையில் தென் மாநில மக்களின் கருத்துக்களைக் கொண்டு விளங்கினார். பல அடிமைகளைத் தனது அதிகாரத்தின்கீழ் வைத்திருந்தும் அடிமை முறைக்கு எவ்வித ஆதரவான கொள்கையையும் கொண்டிராத லூசியானாவைச் சேர்ந்த ஜெனரல் ஜக்காரி டெய்லர் என்பவரை விக் கட்சியினர் தங்களது வேட்பாளராக நியமித்தனர். தேர்தலில் டெய்லர் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசியலமைப்புச் சட்டங்களை வகுத்துக்கொண்டு, ஐக்கிய நாடுகளுடன் இணைவதற்கு விண்ணப்பிக்குமாறு கலிபோர்னியா, நியூமெக்ஸிகோ மாநிலங்களுக்கு அவர் கருத்துரை வழங்கினார். வெகு விரைவிலேயே இவ்விரு மாநிலங்களும் ஐக்கிய நாடுகளுடன் இணைய விரும்பின இதன் விளைவாக தேசிய அரசு மீதான தனது செல்வாக்கை இழந்தாக தென மாநிலங்கள் எண்ணின.

வட, தென் மாநிலங்களிடையே சமரசத்திற்கு நான்கு முக்கிய கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன 1) அடிமைகள் அவர்தம் எஜமானர்களின் உடைமைகளாகக் கருதப்படல் வேண்டும். மாநிலப் பகுதிகளுக்குள் தங்களுடைய உடைமைகளை எவ்வித தடைகளுமின்றி எடுத்துச் செல்வதற்கு மக்களுக்கு உரிமை வழங்கப்படல் வேண்டும். 2) வில்மட் ஷரத்தின்படி புதிய நிலப்பகுதிகளிலிருந்து அடிமை முறை ஒழிக்கப்பட வேண்டும். 3) மிசௌரி சமரசக் கோடான $36^{0}30$-ஐ பசிபிப் பெருங்கடல் வரை நீட்ட வேண்டும். 4) அடிமை முறையை வைத்துக் கொள்வதா அல்லது வேண்டாமா என்ற பிரச்சினை புதிய மாநிலப் பகுதிகளில் தீர்மானத்திற்கு விடவேண்டும். மாநில அரசியலமைப்புச் சட்டங்களை இயற்றும் போது அவர்கள் அடிமை முறைக்கு எதிராகவோ, ஆதரவாகவோ வாக்களிக்கலாம். ஸ்டீபன் A. டக்டஸ் என்பவர் இக்கருத்தை வெளியிட்டார். ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் மக்கள் இப்பிரச்சினைக்கு முடிவுகாண வேண்டியிரந்தால் இதனை அவர் மக்களின் உயர் அதிகாரம் என அழைத்தார். ஆனால் அவரது எதிர்பாளர்கள், நிரந்ரமான வெள்ளைக் குடியேற்ற மக்கள் இல்லாத மாநிலங்களின் புதிதாக வந்தவர் அல்லது அனுமதியின்றி புதிய பகுதிகளுக்குள் குடியேறியவர் என்ற காரணத்தால் அதற்கு அனுமதியின்றிக் குடியேறியவர் என்ற காரணத்தால் அதற்கு அனுமதியின்றிக் குடியேறுவோர் அதிகாரம் என்று குறிப்பிட்டனர்.

இத்திட்டத்தைப் பற்றி நடைபெற்ற பெரும் விவாதத்தில் கல்ஹூன், சீவார்ட், வெப்ஸ்டர், ஹென்றிக்ளே போன்றோர் பங்கு கொண்டனர். அமைதி, ஒற்றுமை போன்றவற்றை நிலைநாட்ட வேண்டுகோள் விடுத்த ஹென்றிக்ளே, பிரிந்து செல்வதற்கு மாநிலங்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று கூறினார். அடிமைப் பிரச்சினை குறித்து வட மாநிலங்களோடு எவ்வித சமரச உடன்பாடு கொள்வதையும் கல்ஹூன் ஆதரிக்கவில்லை. இந்நிலையில் சீவார்ட் எல்லாவித அடிமை முறைகளையும் கண்டனம் செய்தார். தேவை ஏற்பட்டால் அடிமை முறையை ஆதரித்து ஐக்கியத்தின் ஒற்றுமையைக் காக்க வெப்ஸ்டர் வேண்டினர். இவ்வாறாக இப்பிரச்சினைக்கு முரணான கருத்துக்களே தலைவர்கள் மத்தியில் நிலவிய போதிலும், சில குறிப்பிட்டசூழ்நிலைகள் சமரசத்திற்கு வழிவகுத்தன. முதன் முதலில் மிதவாதிகளான க்ளே, டக்ளஸ் போன்றவர்களின் கருத்துக்கள் மக்கள் மத்தியில் பெரும் ஆதரவு பெற்றன. இரண்டாவதாக, ஐரோப்பிய சந்தையில் அமெரிக்க தானியங்களுக்கு அதிக தேவை ஏற்பட்டால் அடிமை முறைக்கு கட்டுப்பாடு விதித்துத் தங்களுடைய வருவாயை இழக்க மக்கள் விரும்பவில்லை. மூன்றாவதாக, பிரிந்து செல்லுதல் பற்றி ஆராய "நாஷ்வில்" என்ற இடத்தில் கூடிய தென் மாநிலங்கள் எவ்வித முடிவும் எடுக்காது தங்கள் கூட்டத் தொடரை ஒத்தி வைத்தன. இது அவர்கள் சமரசத்திற்குத் தயாராக உள்ளனர் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது. நான்காவதாக, ஜனாதிபதி டெய்லரின் இறப்பு இரு பிரிவினரையும் துயரத்தில் ஆழ்த்தியத. அவருக்குப்பின் பதவியேற்ற மிதவாதியான மில்லார்ட் பில்மோர் வட, தென் மாநிலங்களை ஒன்றிணைக்க முயற்சி செய்ததன் விளைவாக 1850 ஆம் ஆண்டு சமரச உடன்பாடு உருவானது.

மேற்குறிப்பிட்ட உடன்பாட்டின் ஷரத்துக்கள் பின்வருவன: சுதந்திர மாநிலமாக கலிகோர்னியா ஐக்கிய நாடுகளுடன் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். இதன் விளைவாக தெற்கின் பதினைந்து மாநிலங்களுக்கு எதிராக வடக்கு பதினாறு மாநிலங்களைக் கொண்டு இருந்ததால் வட மாநிலங்களுக்கு செனட்டில் பெரும்பான்மை கிடைத்தது. மெக்ஸிகோ பிரிவின் பிற பகுதிகள் உட்டா, நியூமெக்ஸிகோ பிரதேசங்களாக அமைக்கப்படவேண்டும். இப்பகுதிகளில் உருவாகும் மாநிலங்கள் அவற்றின் அரசியலமைப்புச் சட்டம் நிர்ணயித்தபடி அடிமை முறையோ அல்லது அடிமை முறை இன்றியோ ஐக்கிய நாடுகளுடன் இணைத்துக் கொள்ளப்படவேண்டும். நியூ மெக்ஸிகோ மீதான தனது நில உரிமையை விட்டுக் கொடுப்பதற்காக டெக்ஸாஸிற்கு ஒரு கோடி டாலர் இழப்பீடாக கொடுக்கப்பட வேண்டும். கொலம்பியா மாவட்டத்தில் அடிமை வாணிபம் ஒழிக்கப்படவேண்டும். ஆனால் அடிமை முறை அங்கு அனுமதிக்கப்பட்டது. தப்பி ஓடும் அடிமைகளைப் பிடித்து அவர்களின் எஜமானர்களிடம் திரும்ப ஒப்படைப்பது பற்றி ஒரு கடுமையான சட்டம் கொண்டவரப்பட்டது.

இந்த சமரசம் தெற்கைவிட, வட மாநிலங்களுக்கு மிகவும் சாதகமாக அமைந்தது. கலிகோர்னியாவை இணைத்துக்கொண்டதின் விளைவாக வடக்கிற்கு செனட்டில் பெரும்பான்மை இடங்கள் கிடைத்தன. மேக்ஸிகோ பிரிவின் பிற பகுதிகளிலிருந்து அதற்கு

அதிக மாநிலங்கள் பெறும் வாய்ப்பு இருந்தது. கூட்டிணைவு மாவட்டமாகிய கொலம்பியாவில் அடிமை வாணிபம் முழுமையாகத் தடை செய்யப்பட்டது. இதற்கெதிராக தப்பியோடும் அடிமைகளை மீண்டும் கைது செய்வதற்கு கடுமையான சட்டத்தை தென் மாநிலங்கள் பெற்றன. அதோடு அடிமை மாநிலமாகிய டெக்ஸாஸிற்கு ஒரு கோடி டாலர் கொடுக்கப்பட்டது. உள்நாட்டுப் போர் ஏற்படுவதை இவ்வுடன்படிக்கை தள்ளி வைத்தது. இது தென் மாநிலங்களுடன் ஏற்படவிருந்த மோதலைச் சமாளிக்கும் வலிமையையும் கால அவகாசத்தையும் வட மாநிலங்களுக்கு அளித்தது.

**உள்நாட்டுப் போருக்கான காரணங்கள்**

**பொதுவான காரணங்கள்**

பிரிவு மன்பான்மை உள்நாட்டுப் போருக்கு வழி வகுத்தது. தட்பவெப்ப நிலை, மண் வளம், உற்பத்தி முதலியவற்றில் ஒன்றிற்கொன்று மாறுபட்ட இரு பூகோளப் பகுதிகளாக இயற்கையே ஐக்கிய நாடுகளைப் பிரித்தது. சுதந்திர மனப்பான்மை மற்றும் புதிய அனுபவங்களைப் பெற விருப்பமுடைய ஐரோப்பிய இன மக்கள் இப்பகுதிகளில் குடியேறினர். தேசிய மற்றும் பிரிவினை சக்திகள் எப்போதும் ஒன்றுக்கொன்று எதிராகச் செயல்படும் அவல நிலையை இது உருவாக்கியது. இவ்விரு சக்திகளுக்குமிடையே ஒரு சமரசத்தை ஏற்படுத்தும் முயற்சியாக அரசியலமைப்புச் சட்டத்தின் கூட்டாட்சிக் கோட்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. எனினும் போட்டி நிலை நீக்கப்படவில்லை. தேசிய மனப்பான்மையும், தேசிய சட்டங்களும், குறுகிய சக்திகளோடு ஒன்றுபட முடியாத போது மாநிலங்கள், மாநில உரிமைகள் மூலம் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்ட முயன்றன. குடியரசுத் தலைவர் ஆடம்ஸின் நாட்டுத் துரோகச் சட்டங்களுக்கு எதிரான வெர்ஜினி கென்டக்கித் தீர்மானங்களும் குடியரசுத் தலைவர் ஜாக்சனின் சுங்க வரிச் சட்டங்களுக்கெதிரான தென் கரோலினா தெளிவுரையும் செல்லுபடியற்றாக்கும் கோட்பாட்டினை ஏற்படுத்தியது மற்றும் மாநிலங்கள் தங்கள் சுதந்திரக் கருத்துக்களை நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சியாகவும் இருந்தது. அடிமை முறைப்பிரச்சினை மூலம் இக்கருத்துக்கள் வலிமை பெற்றன. உண்மையில் உள்நாட்டுப் போர் இதுவரை செயல்பட்டுவந்த பிரிவினை சக்திகளின் முற்றிய நிலையாக இருந்தது.

மக்களின் தன்னிச்சை மனப்பாங்கைவிட, விட, தென்பகுதிகளுக்கிடையே நிலவிவந்த பொருளாதாரப் பூசல்கள்தான் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தொழிற் புரட்சி வட பகுதியை தொழில்மயமாக்கியது. இது முதலாளித்துவ வகுப்பைச் சார்ந்த வியாபாரிகள், உற்பத்தியாளர்கள் மற்றும் வங்கியாளர்களைத் தோற்றுவித்தது. வணிக வகுப்பைச் சார்ந்தவர்கள் தொழிற்கூடங்கள், வாணிபம், காப்பீடு, வங்கி, அந்நியச் செலவாணி போன்றவைகளை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். தங்கள் தொழில் நலன்களைப் பேணிப் பாதுகாத்து அவைகளை விருத்தி செய்ய அரசியலமைப்பு, வலிமை மிக்க மத்திய அரசு மற்றும் கிழக்குப் பகுதியை, மேற்குடன் இணைக்க இருப்புப் பாதை

போன்ற உன் தேவையெனக் கோரினர். ஆனால் இதற்கு மாறாக தென் பகுதியினர் விவசாயிகளாகவும் பெரும் நிலச்சுவான்தார்களாகவும் இருந்தனர். பருத்தி, புகையிலை மற்றும் இதர முக்கிய கச்சாப் பொருட்களை நாடுகளிலும் விற்றனர். காப்பு வரிகளினால் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியான பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்க நேரிட்டது. இதன் விளைவாக ஐக்கிய நாடுகள் அடிப்படை வருவாயைத் தாங்கள் கொடுத்த போதிலும் வட மாநில நிதியாளர்களால் சுரண்டப்படுவதாக தென் பகுதியினர் எண்ணினார். தங்கள் நலனைப் பாதுகாக்கும் முயற்சியில் காப்புச் சுங்கவரி, தேசிய வங்கி, நெகிழும் தன்மையுடைய அரசியலமைப்பு, கிழக்கையும் மேற்கையும் இணைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு அபிவிருத்து முயற்சிகள் போன்றவைகளை அவர்கள் எதிர்த்தனர். உண்மையில் இப்பிரச்சினைகள் அனைத்தும் முன்பு ஹாமில்டன், ஜெபர்சன் போன்றோர்கள் கடைபிடித்த கொள்கைகளுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் அடிப்படையில் தோன்றியதாகும். பிற்காலத்தில் இம்முரண்பாடு விக் கட்சியினருக்கும் ஜனநாயகக் கட்சியினருக்குமிடையே நிலவிவந்த கருத்து வேறுபாடாகவும் பின்னர் வட, தென் மாநிலங்களுக்கிடையே ஏற்பட்ட ஒரு சிக்கலாகவும் நிலையாக நீடித்து விட்டது.

வடக்கின் தொழில் முறைக்கும், தெற்கின் விவசாய முறைக்கும் இடையே போட்டி ஏற்பட்டதென்றால் அதற்கான அடிப்படைக் காரணமாக அமைவது அடிமைப் பிரச்சினையாகும். முனிதாபிமான நெறிமுறையற்ற உணர்ச்சியே அடிமை முறைக்குக் காரணம் என்று பலர் கருதினர். ஒரு சில வெள்ளையர்கள், குறிப்பாக குவேக்கர் நண்பர் கழகத்தைச் சார்ந்தவர்கள் நெறிமுறை அடிப்படையில் அடிமை முறையை எதிர்த்தது உண்மையே! எனினும் அடிமை முறை காரணமாகவே போர் ஏற்பட்டது என்று கருதுவது உண்மையல்ல. ஐக்கிய நாடுகளின் பிரிவினைச் சச்சரவில் அடிமை பாதிக்கப்பட்டானே தவிர அதன் காரணமாக பிரச்சினை எழவில்லை. அமெரிக்கர் பூர்வீக இந்தியரை மிகவும் கடுமையாக நடத்தினர் என்பது யாவருக்கும் தெரிந்த உண்மை. இந்நிலையில் அவர்கள் திடீரென்று கருணை மிக்கவர்களாக மாறினர் என்பதும், ஆப்பிரிக்க நீக்ரோக்களிடம் அன்பை காட்டினர் என்பதும், நம்பமுடியாத ஒன்றாகும். இரண்டாவதாக தென் மாநிலங்களில் நீக்ரோக்கள் இழிவாகக் கருதி கொடுமைப்படுத்தப்பட்டனர் என்றால் இதே போன்ற சூழ்நிலைதான் வடபகுதியிலும் நிலவி இருந்தது. வெள்ளை தொழிலாளிகூட கறுப்பு தொழிலாளி தன்னுடன் போட்டியிடுவதை விரும்பவில்லை. போர்வழியாக ஐக்கியத்தைக் காப்பாற்ற ஜனாதிபதி லிங்கன் முற்பட்ட போதுங்கூட அடிமை முறையை ஒரு பிரச்சினையாகக் கருதவில்லை, தனது பதவி ஏற்பு தொடக்கச்சொற்பொழிவின் போது, அடிமை முறை நிலவி இருக்கின்ற மாநிலங்களோடு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தலையிடவது தன்னுடைய நோக்கமல்லவென்று அவர் கூறினார். அவர் அடிமை முறையை ஒழித்தாரென்றால் வேறுபாடான இரு பொருளாதார முறைகளை பின்பற்றிய வட, தென் மாநிலங்களுக்கிடையே நிலவிய தகராறைத் தீர்ப்பதற்கும் ஐரோப்பிய

தாராளக் கொள்கையினரின் ஆதரவைப் பெறுவதற்கும் ஆகும். நான்காவதாக, தென்பகுதியும் அடிமை முறையை நீக்க முன் வந்ததென்றே கூறவேண்டும். உள்நாட்டுப் போரின் போது ஆங்கிலேயர்கள் தங்களுக்கு உதவி செய்வதாக இருந்தால்அடிமைத் தனத்தை ஒழித்துவிடுவதாக தென்பகுதி புரட்சி மாநிலங்களின் தலைவராகிய ஜெபர்சன் டேவிட் கூறினார். அடிமை முறையைப் பாதுகாக்க வேண்டுமென்று போராடியிருந்தால் அதற்கு அவர் மறுத்து இருப்பார். எனினும் அடிமை முறையானது ஒரு தேசியப் பிரச்சினையாக்கப்பட்டதோடு அரசியல், பொருளாதார, அறநெறி அடிப்படைகளில் வலுப்பட்டது. ஏனெனில் தென்மாநிலங்களின் செல்வாக்கும், வளமும் அடிமைகளை அடிப்படையகாக் கொண்டே அமைந்திருந்தன. அடிமைகளை வைத்திருந்த தென்பகுதி எஜமானர்களின் அரசியல் பொருளாதாரச் செல்வாக்கை அழிப்பதற்கும், அதே நேரத்தில் வட மாநிலங்களின் அரசியல், பொருளாதார நிலையை உறுதியான அடிப்படையில் நிலை நாட்டவும் வேண்டுமெனில் அடிமை முறையை ஒழிக்க வேண்டியதாக இருந்தது. ஐந்தாவதாக, தங்களது சுயநலத்தை அதிகரிக்க மேற்கொள்ளும் முயற்சிகளனைத்தையும் நன்னெறி சார்ந்த செயல்களென அழைப்பதே அமெரிக்கருடைய வழிமுறையாக இருந்தது அடிமை முறை ஒழிப்பு, அறநெறி தழுவியதாகக் காணப்பட்டதால் ஐரோப்பிய நாடுகளின் அனுதாபத்தைப் பெற்றுக் கொண்டதில் வியப்பில்லை. ஆனால் கருத்தளவில் இது தென்மாநிலங்களைத் தற்காப்பு நிலையில் வைத்தது.

உண்மையில் வல்லமைச் சமநிலை பிரச்சினையே போருக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. வேறுபட்ட இரு பொருளாதார அமைப்புகளிடையே எழுந்த தகராறு, தேசிய அரசை யார் கட்டுப்படுத்துவது என்ற ஆதிக்கப் போட்டிக்கு வழிவகுத்தது. வட, தென் மாநிலங்களின் முன்னேற்றம் அவை காங்கிரஸில் பெற்றுள்ள பெரும்பான்மையின் அடிப்படையிலும் கூட்டிணைவின் அதிகாரங்களைக் கைப்பற்றுவதிலும் இருந்தது. தங்களது சுய முன்னேற்றத்திற்காக இவ்விரு பிரிவினரும் அரசியல் கட்சிகள், அடிமைகள், புதிய மாநிலங்களைச் சேர்த்தல் போன்றவற்றை கருவியாகப் பயன்படுத்தினர்.

காங்கிரசில் வல்லமைச் சமநிலையை நீடித்த வரையில் இவ்விரு பிரிவுகளிடையே பிளவு எதுவும் ஏற்படவில்லை. ஆனால் வட மாநிலங்கள் காங்கிரசில் பெரும்பான்மை பெற்றபின், ஐக்கிய நாடுகள் அரசியலில் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்குரிய நம்பிக்கை தென்மாநிலங்களுக்கு சிறிதளவும் இல்லை. எனவே அவர்கள் உள்நாட்டுப் போரில் ஈடுபட தீர்மானித்தனர்.

**உடனடிக் காரணங்கள்**

1850 ஆம் ஆண்டிறக்குப் பிறகு பத்து வருடங்களாக தொடர்ந்து நிகழ்ந்த பல நிகழ்ச்சிகள் போருக்கு வழிவகுத்தன. பிராந்திய நலன்களைப் பாதுகாக்கும் வகையில் போடப்பட்ட ரயில் பாதைத் திட்டங்கள் தென் மாநில மக்களின் ஆர்வத்தைப் பாதித்தன. 1850 லிருந்து ரயில் பாதைகள் போடப்பட்டன. இதில் தென் மாநிலங்கள் முழுமையாகப்

புறக்கணிக்கப்பட்டன. வடகிழக்கு, வடமேற்கு ரெயில் பாதைகளனைத்தும் நேரடியாக இணைக்கப்பட்டபோது வட, தென் ரயில் பாதைகளைப் பொறுத்தமட்டில் இணைப்பு முறை கடைபிடிக்கப்படவில்லை. தொன்றுதொட்டே மேற்குப் பகுதி தனது உற்பத்திப் பொருட்களை விற்பதற்கு தென் பகுதியை சார்ந்து இருந்தது. அதற்காகப் பொருட்கள் நதிகள் வழியாக தென் பகுதி துறைமுகங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன. ஆனால் ரெயில் பாதைகள் போடப்பட்டவுடன் பொருள்களைக் கிழக்குப் பகுதியிலுள்ள அங்காடிகளில் எளிதில் விற்க முடிந்ததோடு வடக்கிலுள்ள துறைமுகங்கள் வழியாகப் பொருட்களை ஏற்றுமதி செய்யவும் முடிந்தது. தற்செயலாக இப்போக்குவரத்து முறையானது மேற்குப்பகுதி, தென் பகுதியோடு கொண்ட தொடர்பை துண்டித்ததோடு மேற்கு, வடக்கு மாநிலங்கள் தமக்குள் தொடர்பு கொண்டு காங்கிரசில் செயல்படவும் வழி செய்தது. இப்புதிய தொடர்பு தென் பகுதிக்குப் பாதகமாக இருந்தது.

இரண்டாவதாக, 1850க்குப் பின்னுள்ள பத்தாண்டு காலத்தில் வாணிபத்திற்கும் வேளாண்மைக்குமிடையே போட்டி மூண்டது. அந்நாட்களில் தொழில் மற்றும் வேளாண்மைப் பொருட்களுக்கு தேவை அதிகமாக இருந்தது. ஆகையால் இரு பிரிவுகளுமே தங்களுடைய உற்பத்தியையும், விநியோகத்தையும் அதிகரிக்க முயன்றபோது தொழிலாளர்களும் அதிகம் தேவைப்பட்டனர். ஐரோப்பாவிலிருந்து ஐக்கிய நாடுகளுக்கு குடிபெயர்தல் ஒரே சீராக இருந்ததாக வடமாநிலங்களுக்கு தொழிலாளர்கள் பெறுவது பற்றிய பிரச்சினையே எழவில்லை. ஆனால் இதற்கு மாறாக அடிமை இறக்குமதி செய்யும் வாய்ப்பை தென்மாநிலங்கள் இழந்ததோடு இப்போதிருக்கும் அடிமைகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டன.

மூன்றாவதாக, 1854 ஆம் ஆண்டின் கான்சாஸ் நெப்ராஸ்கா சட்டம் இதுவரை வட, தென் மாநிலங்களிடையே நிலவி வந்த சமாதானத்திற்கு முற்றுப்புள்ளி வைத்ததோடு இவ்வினப் பூசலுக்கு பதிவு வடிவம் தந்தது. 1850 ஆம் ஆண்டு உடன்பாட்டைக் காப்பாற்றுவதாக உறுதி கூறிய ஹென்றி க்ளே போன்ற அரசியல்வாதிகள் அரசியலை விட்டு வெளியேறவே இவ்வுடன்பாட்டிற்கு எவ்வித மதிப்பும் அளிக்காத இளம் தலைவர்கள் தோன்றினர். அவர்களின் அதிகச் செல்வாக்கு மிக்கவர் இல்லினாய்ஸ் செனட்டரான ஸ்டீவன் A டக்ளஸ் என்பவராவார். தனது தாய் மாநிலத்தின் செல்வாக்கை உயர்த்துவதற்கு சிக்காக்கோ நகரை ஒரு ரயில்வே மையமாக மாற்ற வேண்டுமென்று அவர் விரும்பினார். இந்நேரத்தில் பசிபிக் மகா சமுத்திரம் வரை ரெயில் பாதை ஒன்று அமைக்க வேண்டுமென்ற தீர்மானம் இருந்தது. வடக்கு வழியாகவோ சிக்காககோ வழியாகவோ தெற்கு வழியாகவோ அப்பாதை அமைக்கப்படலாம் என்று யோசனை கூறப்பட்டது. சிக்காக்கோவை முடிவிடமாகக் கொண்ட மத்திய தடத்தை அமைப்பதில் அவர் தீவிரமாக ஈடுபட்டார். அவரது திட்டத்தின்படி லூசியானாவின் வட பகுதியிலுள்ள கான்சாஸ் நெப்ராஸ்கா என்றழைக்கப்பட்ட "பிரய்ரீஸ்" புல்வெள்கனின் வழியாக அப்பாதை அமைக்கப்படவேண்டும்.

ஆனால் அப்பகுதியில் மக்கள் இன்னமும் குடியேறாதது அதற்கு இடையூராயிருந்தது. ஆகவே அந்நிலப்பரப்பை பல பகுதிகளாகப் பிரித்து அவைகளை அரசின் அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவரும் போது மக்கள் அவ்விந்தியப் பகுதிகளுக்குள் எவ்விதத் தடையுமின்றி செல்லமுடியும். அதே நேரத்தில் அவரது மத்திய தடத்திட்டத்திற்கு தென் பகுதி மக்களின் ஆதரவைப் பெறுவது இன்றியமையாததாக இருந்தது. இக்கருத்துக்களை மனதிற்கொண்ட அவர் 1) மிசௌரி உடன்பாட்டின்படி மேல் லூசியானாவை கான்சாஸ், நெப்ராஸ்கா என்னும் இரு பகுதிகளாகப் பிரிக்க எண்ணினார். அவ்வாறு பிரிக்கும் போது ஒன்று அடிமைப் பகுதியாகவும் மற்றொன்று சுதந்திரப் பகுதியாகவும் விளங்கும். 2) அதே நேரத்தில் மிசௌரி ஒப்பந்தம் ரத்து செய்யப்படவேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மக்களே, தங்கள் பகுதிகளுக்கு அடிமை முறை வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதை தீர்மானிக்க வேண்டும். இவ்வாறு அடிமை முறையானது ஓர் உள் மாநிலப் பிரச்சினையாகிவிடும் என்று கருதப்பட்டது. இதன்படி அடிமை முறையற்ற நெப்ராஸ்கா மாநிலத்தையும் பசிபிக் ரெயில் பாதையையும் வட பகுதி பெறும் என்றும் கான்சாஸ் என்ற அடிமை மாநிலத்தையும் மிசௌரி ஒப்பந்தத்தை ரத்து செய்வதால் ஏற்படும் நலன்களையும் தெற்கு பெறும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. தென் பகுதி தலைவரும் தனது இராணுவச்செயலாளருமான ஜெபர்சன் டேவிஸ் என்பவரின் தூண்டுதலினால் குடியரசுத் தலைவர் பியர்ஸ் 1854ல் அதைச் சட்டமாக்கினார்.

1854 ஆம் ஆண்டு சட்டம் மிசௌரி ஒப்பந்தத்தை ரத்து செய்ததோடு அடிமை முறையை விரிவுபடுத்துதல் மற்றும் தென் மாநிலங்கள் விரிவடைதல் போன்ற பிரச்சினைகளுக்கு மறுபடியும் இடமளித்தது. கான்சாஸ் தெற்குடன் இணைக்கப்பட்டதால் செனட் சபையில் சம எண்ணிக்கை பெற்றது. இதனால் வட மாநிலங்கள் டக்ளசு மீது நம்பிக்கைத் துரோகி எனக் குற்றம் சாட்டினர். அதனால் அவர் குடியரசுத் தலைவர் பதவியைப் பெறுவதற்குரிய வாய்ப்பை இழந்தார். இரண்டவதாக, இச்சட்டம் கான்சாஸ் பகுதி மீது ஆதிக்கம் செலுத்துவதற்காக வட, தென் மாநிலங்களிடையே போட்டியை ஏற்படுத்தியது. ஐயோவா, நெப்ராஸ்காவை ஒரு சுதந்திர நாடாக வட மாநிலத்திற்கு அளித்தது. அதனால் தெற்கு கான்சாஸின் தென் பகுதியைக் கைப்பற்றி அடிமை முறையைப் புகுத்த திட்டமிட்டனர். இத்திட்டத்தை முறியடிக்க வட மாநிலங்கள் முயன்றன. தனித்தனி மாநாடுகளைக் கூட்டிய இவ்விரு பிரிவினரும் அடிமை முறை ஆதரவு மற்றும் அடிமை முறை எதிர்ப்பு அரசியலமைப்புகளை வரைந்தனர். இதனால் இவ்விரு பிரிவினரும் ஆயுதம் தாங்கி நான்கு மாதங்கள் போரிட்டனர். "குருதிகொட்டும் கான்சாஸ்" (Bleeding Kansas) என்றழைக்கப்படும் இந்நிகழ்ச்சி பிராந்திய வேற்றுமையை வளர்த்தது. தென் பகுதி ஐக்கிய அமைப்பிலிருந்து விலகிய பின்பு கான்சாஸ் ஒரு சுதந்திரப் பகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. மூன்றாவதாக, இச்சட்டம் கட்சி அமைப்பில் புரட்சியை ஏற்படுத்தி பிராந்திய அடிப்படையில் கட்சியின் அமைப்பை மாற்றியமைத்தது. விக் கட்சியினர் வட,

தென் பகுதியினராகப் பிரிந்தனர். இச்சட்டத்தை ஆதரித்த ஜனநாயக கட்சியினர் நெப்ராஸ்கா எதிர்ப்பு ஜனநாயக கட்சியினரென்று அழைக்கப்பட்டனர். அடிமை முறையை எதிர்த்த சுதந்திர மண் கட்சி, வடக்கு விக் கட்சி மற்றும் நெப்ராஸ்கா எதிர்ப்பு ஜனநாயகக் கட்சியினரில் ஒரு சிலர் ஒரு பொதுக் கட்சியை அமைக்கும் நோக்கத்துடன் 1854ல் குடியரசுக் கட்சியை அமைத்தனர். அக்கட்சி மிசௌரி உடன்பாட்டை ரத்து செய்ததைக் கண்டித்தது. மேலும் கான்சாஸ் நெப்ராஸ்கா சட்டமும், அடிமைச் சட்டமும் ரத்து செய்யப்பட வேண்டுமென்று வற்புறுத்தியது. மற்றும் அடிமை முறை பரவுவதை வன்மையாக எதிர்த்தது. இதனால் வட, தென் மாநிலங்களுக்கிடையே பிரிவினை ஏற்பட்டது.

நான்காவதாக, ட்ரட்ஸ்காட் வழக்குத் தீர்ப்பு நீதித்துறையின் பாரபட்சமற்ற போக்கில் அடிமை முறை எதிர்ப்பாளர்கள் கொண்டிருந்த நம்பிக்கையைக் குலைத்தது. மிசௌரியைச் சார்ந்த ட்ரட்ஸ்காட் என்னும் அடிமை சுநத்திர மாநிலங்களான இல்லினாய், மினசோட்டா ஆகியவைகளில் தனது எஜமானனுடன் வாழந்து வந்தவன். தன்னுஜடய எஜமானனின் மரணத்திற்குப் பிறகு சுதந்திர மாநிலங்களில் வாழ்ந்து வந்தமையால் தான் ஓர் சுதந்திர மனிதனாகி விட்டேன் என்ற அடிமை முறை எதிர்ப்பாளர்களின் உதவியோடு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தான். ஆனால் மிசௌரி உயர் நீதிமன்றமும், கூட்டிணைவு சர்க்குயிட் நீதிமன்றமும் அவனுடைய வழக்கைத் தள்ளுபடி செய்தன. எனவே அவன் தலைமை நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்தான். நீதிபதி மார்ஷலுக்குப் பிறகு தலைமை நீதிபதியாக பதவியேற்ற ரோஜர் B. டானி அவ்வழக்கை விசாரித்து நீக்ரோக்களனைவரும் அரசியலமைப்பு விளக்கத்தின்படி வெள்ளையர்களின் உடைமைகளன்றி அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடிமகன்கள் அல்லவென்று தீர்ப்பு வழங்கினார். சுதந்திர மாநிலத்தில் வாழ்ந்த போதிலும் ட்ரட்ஸ்காட் இன்னமும் ஓர் அடிமைதான் என்று திட்டவட்டமாக வரையறுத்துக் கூறினார். மேலும் எந்த ஒரு குடிமகனுடைய உடைமையையும் அமெரிக்க காங்கிரஸ் பறிக்க இயலாது என்ற அரசியலமைப்பின் ஐந்தாவது திருத்தத்தை மிசௌரி உடன்பாடு மீறியதால் அது அரசிலமைப்புக்கு எதிரானதென்றும் தீர்ப்பில் கூறப்பட்டது. இதன் மூலம் எந்த ஒரு பகுதியிலிருந்தும் அடிமை முறையை நீக்குவதற்கு காங்கிரசிற்கு அதிகாரமில்லையென்றும் அடிமை ஒருவன் அமெரிக்கரின் உடைமையே என்ற கல்ஹெனின் கூற்று சரியானதென்றும் எடுத்துரைக்கப்பட்டது. வட மாநிலத் தலைவர்கள் இத்தீர்ப்பைத் தென் மாநிலங்களின் சதி எனக் கண்டனம் செய்து அதனை ஓர் அரசியல் பிரச்சினையாக்கினர்.

ஐந்தாவதாக, 1860 ஆம் ஆண்டின் குடியரசுத் தலைவர் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளரான ஆபிரகாம் லிங்கன் வெற்றி பெற்றார். இவ்வெற்றி தேசிய அரசில் தங்களது செல்வாக்கை குறைப்பதாக தென் மாநிலங்கள் எண்ணின. எனவே 1861ல் அவை ஐக்கிய கூட்டிணைவை விட்டுப் பிரிந்து சென்ற ஒரு போட்டி அரசை அமைத்தன. இதுவே உள்நாட்டுப் போருக்கான உடனடிக் காரணமாகும்.

1. அடிமை முறை பற்றியும் அடிமை முறை எதிர்ப்பு இயக்கங்கள் பணிகள் பற்றியும் எழுதுக.
2. அடிமை முறை ஒழிப்புக்கு என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

# உள்நாட்டுப் போர்

தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் லிங்கன் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதன் விளைவாக தென் மாநிலங்கள் கூட்டிணைவை விட்டு விலகி ஓர் நேசக் கூட்டிணைவை அமைத்தன. இது உள்நாட்டுப் போர் ஏற்பட வழி வகுத்தது. வட, தென் மாநிலங்களுக்கிடையே ஏற்பட்ட இப்போரின் இறுதியில் தென் மாநிலங்கள் தோற்கடிக்கப்பட்டு, கூட்டிணைவோடு இணைந்தன. வட மாநிலங்களில் வெற்றியின் விளைவாக பிரிவினைமுறை மற்றும் அடிமை முறைப் பிரச்சினைகளுக்கு வன்முறையில் இறுதித் தீர்வு காணப்பட்டது.

லிங்கனும், தென் மாநிலங்களின் பிரிவினையும்

லிங்கனின் இளமை வாழ்க்கை

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மிகச் சிறந்த குடியரசுத் தலைவர்களில் ஒருவரான ஆபிரகாம் லிங்கன் 1809ல் கென்டக்கி என்னுமிடத்தில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தார். புதிய வாழ்வைத் தேடி லிங்கன் குடும்பத்தினர் மேற்கில் குடிபெயர்ந்தனர். தனது ஏழாவது வயதிலிருந்து 21 வயது வரை இவர் இந்தியானா என்னுமிடத்தில் தனது பெற்றோரோடு வாழ்ந்து வந்தார். பின்பு அவருடைய குடும்பம் ஸ்பிரிங் பீல்ட் என்னுமிடத்திற்கு குடிபெயர்ந்தது. தன் சுயமுயற்சியினால் லிங்கன் பல துறைகளில் தேர்ச்சி பெற்றார். இல்லினாய் மாநில சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விக் கட்சி உறுப்பினரான லிங்கன் அடிமை முறையை தீவிரமாக எதிர்த்தபோதிலும் அதனை ஒழிக்க முயலவில்லை. 1847 ஆம் ஆண்டு முதல் 1849ஆம் ஆண்டு வரை வாஷிங்டனில் பணியாற்றினார். 1860 ஆம் ஆண்டின் தலைவர் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளரான லிங்கன் நியூ ஜெர்சி தவிர ஏனைய எல்லா மாநிலங்களிலும் வெற்றி பெற்றார். தனது தொடக்கவுரையில் தப்பியோடிய அடிமைகள் பற்றிய சட்டத்தைச் செயல்படுத்துவதாகவும் அடிமை முறை உள்ள மாநிலங்களில் தலையிடுவதில்லை என்றும் ஜனாதிபதி லிங்கன் வாக்குறுதியளித்தார். தேர்தலில் வட மாநிலத்தவர் பெற்ற வெற்றி தென் மாநிலத்தவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

ஆகையால் 1861 ஆம் ஆண்டில் தென் மாநிலங்கள் பல கூட்டாட்சியை விட்டுப் பிரிந்து அலபாமா மாநிலத்திலுள்ள மாஸ்ட்கோமாரி என்னுமிடத்தில் ஜெபர்சன் டேவிஸ் என்பவர் தலைமையில் அமெரிக்க நேசக் கூட்டிணைவை ஏற்படுத்தின. பின்பு வெர்ஜீனியாவின் ரிச்மாண்ட் அதன் தலைநகராக்கப்பட்டது. கூட்டிணைவு அரசுக்கு எதிரான மாநிலங்கள் ஒரு பெரும் படையைத் திரட்டி கூட்டிணைவு அரசின் சொத்துக்களைக் கைப்பற்றியதோடு அதன் அதிகாரத்தையும் எதிர்த்தன.

தேர்தலில் குடியரசுக் கட்சியின் வெற்றி தென் மாநிலத்தவரின் நிரந்தர தோல்வி எனவும், கூட்டாட்சி நிர்வாகத்தில் தென் மாநிலங்கள் தங்களது செல்வாக்கை இழந்துவிட்டன எனவும், குடியரசு வாதிகள் அடிமைகளை விடுதலை செய்பவர்கள் எனவும்,

வட மாநிலங்களில் நலனுக்காக அவர்கள் நீக்ரோக்களின் ஆட்சியை தென் மாநிலங்களில் நிறுவ முயலுவதாகவும் கருதி தென் மாநிலங்கள் கூட்டிணவிலிருந்து பிரிந்து செல்ல விரும்பின. வட மாநிலங்களில் அதிகாரத்தினின்று விடுபட்டால்தான் அடிமை முறையை விரிவுபடுத்த முடியுமென்று எண்ணி தென் மாநிலங்கள் ஐரோப்பிய ஆதரவை நாடியது.

தென் மாநிலங்கள் கூட்டாட்சியிலிருந்து பிரிந்து செல்வதைத் தடுக்க குடியரசுத் தலைவர் புக்கானன் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. 1861 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 ஆம் நாள் லிங்கன் பதவியேற்றபோது போர் தவிர்க்க முடியாததென்று கண்டுணர்ந்தார். நேசக் கூட்டிணைவு அரசுதான் முதலில் தாக்குதல் தொடுத்தது என்பதை நிலைநாட்ட போர்ட் சம்டர் என்னுமிடத்தில் முற்றுகையிட்டிருந்த படைகளுக்கு லிங்கன் உதவி இராணுவத்தை அனுப்பினார். ஆனால் இராணுவ உதவிக்குச் சென்ற கப்பல்களை போர்ட் சம்டரை சென்றடைவதற்கு முன்பே நேசக் கூட்டிணைவுப் படைகள் அவற்றைக் கைப்பற்றிக் கொண்டன. இதனால் போர் தொடங்கியது.

## போரின் போக்கு

### போருக்கு முன் வட, தென் மாநிலங்களின் நிலை

போரின் ஆரம்பத்தில் இரு பிரிவினருமே, தங்களது எதிரிகளின் வலிமையைக் குறைவாக மதிப்பிட்டதோடு மட்டுமின்றி தாங்கள் விரைவில் வெற்றியடைவோம் என்று எதிர்பார்த்தனர். தென் பகுதியினர் கூட்டாட்சியில் நம்பிக்கை கொண்டிருக்கின்றனரென்றும் ஒரு சில தீவிரவாதிகளே போரிடுவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனரென்றும் வட பகுதியினர் கருதினர். ஆனால் தென் பகுதியினர் தங்களுக்கு ஒரு பெரும் எதிர்ப்பு வருமென்று எதிர்பார்க்கவில்லை.

வடபகுதியினரின் இராணுவத்தின் எண்ணிக்கை தென் பகுதியினரின் எண்ணிக்கையைவிட மிகவும் அதிகமாக இருந்தது. வட பகுதியினர் ஏராளமான மூல வளங்களைப் பெற்றிருந்தனர். ஆனால் தென் பகுதியினர் அதிக உற்பத்திப் பொருட்களை பெற்றிருந்தனர். வட பகுதி தென் பகுதியைவிட இரு மடங்கு அதிக நீளமான ரயில் பாதைகளைப் பெற்றிருந்தது. எனவே இராணுவ வீரர்களையும், யுத்த தளவாடங்களையும் மிகத் துரிதமாகக் கொண்டு செல்வது அவர்களுக்கு எளிதாக இருந்தது. வட பகுதியினர் பண்ணைகளையும், தொழிற்சாலைகளையும் ரயில் பாதைகள் வழியாக ஒன்றிணைத்தனர். அதற்கு மாறாக உற்பத்திப் பொருள்களுக்காக இறக்குமதியை எதிர்பார்த்திருக்கும் ஒரு பெரும் பண்ணையாகவே தென் பகுதி தென்பட்டது.

எல்லாவற்றிற்கும் மேலாக வெளிநாடுகளின் நல்லுறவையும் அனுதாபத்தையும் வடபகுதி பெற்றது. பருத்தி ஏற்றுமதி செய்கின்ற காரணத்தாலும் அனுதாபத்தின் அடிப்படையிலும் பிரிட்டனும், பிரான்சும் தனக்கு உதவ முன்வரும் என்று தென் பகுதி எதிர்பார்த்தது. ஆனால் அதில் அது ஏமாற்றமடைந்தது. அவ்வாண்டு பருத்தி உற்பத்தியின் பெரும் பகுதியை முன்பே ஏற்றுமதி செய்தது. மேலும் இந்தியாவிலிருந்தும் எகிப்திலிருந்தும்

அதிகமான பருத்தியை இங்கிலாந்து இறக்குமதி செய்தது. தென் பகுதியினருக்கு உதவலாம் என்று பிரான்ஸ் எண்ணிய போதிலும் பிரிட்டிஷ் கடற்படையின் ஆதரவின்றி அதனால் ஒன்றும் செய்ய இயலவில்லை. பெரும் ஐரோப்பிய நாடுகளில் ஏதாவது ஒன்று தென் பகுதியை அங்கீகரித்திருந்தால் வட பகுதியினருடைய படைகள் முறியடிக்கப்பட்டிருக்கும். ஆனால் இது நிகழவில்லை. இவ்வாறாக கடலாதிக்கமின்மை வெளிநாடு ஆதரவின்மை போன்ற பிரதிகூலங்களுக்கிடையே தெற்கு நேசக்கூட்டிணைவு போராடியது.

**ஆரம்ப போர்க்கள நடவடிக்கைகள்**

போர்ட்சம்டர் நேசக் கூட்டிணைவு ஆதிக்கத்தின் கீழ் வந்த பின் தென் பகுதித் துறைமுகங்களை முற்றுகையிடும்படி லிங்கன் ஆணையிட்டார். இதன் விளைவால் தென் பகுதிக்கும் ஐரோப்பாவுக்குமிடையே உள்ள தொடர்பு அறுந்தது. ஆனால் 1861ல் நேசக்கூட்டிணைவுப் படைகளால் புல்ரன் என்னுமிடத்தில் வட பகுதியினர் முறியடிக்கப்பட்டனர். 1862ல் மேற்கில் மறுபடியும் போர் ஆரம்பமாயிற்று மிஸிஸிப்பியை தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர வேண்டுமென்ற உறுதியான திட்டத்துடன் U.S. கிராண்ட் என்பவரின் தலைமையின் கீழ் வட மாநில இராணுவத்தினர் போர்ட் ஹென்றியையும் ஷிலோனையும் கைப்பற்றினர். மற்றொரு கூட்டிணைவு இராணுவப் பிரிவு நியூ ஆர்லியன்ஸை கைப்பற்றியது. நேசக் கூட்டிணைவு இராணுவத்தின் மீது கொண்ட வெற்றியின் காரணமாக 1863ல் தளபதி கிராண்ட் தென் பகுதியினரின் முக்கிய இராணுவ கேந்திரப் பகுதிகளான விக்ஸ்பர்க், சட்டநூகா ஆகிய இடங்களைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார். இக் குறிப்பிடத்தக்க வெற்றி, மிஸிஸிப்பி ஆற்றுப் பகுதியின் மீது வடமாநிலத்தவர் ஆதிக்கம் செலுத்த வழி வகுத்ததோடு, தென் மாநிலங்கள் மேற்கத்திய நாடுகளோடு கொண்ட தொடர்பையும் துண்டித்தது. 1864ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கிராண்ட் கூட்டாட்சிப் படைகளின் தலைமை அதிகாரத்தைப் பெற்றார். அவர் மேற்குப் பகுதியைவிட்டு சென்ற பிறகு தளபதி ஷெர்மன் என்பவர் கிழக்குப் பகுதியில் அட்லாண்டா என்னுமிடத்தைக் கைப்பற்றினார்.

கிழக்கு அரங்கில் ஏற்பட்ட போரில் வெற்றியும் தோல்வியும் மாறிக் கொண்டே இருந்தது. 1862 ல் கூட்டிணைவுப் படைகள் இரண்டாவது முறையாக ரிச்மாண்டைத் தாக்கின. ஆனால் அது இரண்டாம் புல்ரன் போரில் தோற்கடிக்கப்பட்டது. இப்போது தளபதி லீ என்பவரின் தலைமையின் கீழ் செயல்பட்ட நேசக் கூட்டிணைவுப் படைகள் பென்சில்வேனியா மீது ஆக்கிரமீட்பைத் தொடர்ந்தது. ஆனால் அது ஆன்டிட்டாம் என்னுமிடத்தில் நடைபெற்ற போருக்குப்பின் பின்வாங்கியது. அதே ஆண்டில் லிங்கன் விடுதலை அறிக்கையை வெளியிட்டார். கிளர்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மாநிலங்களில் அடிமைகளாக இருந்தவர்களனைவரும் 1863 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாளிலிருந்து விடுதலை பெற்றவராவார் என்று அவ்வறிக்கை கூறியது. ரிச்மாண்டை

சென்றடைய வேண்டுமென கூட்டிணைவுப் படைமூன்றாவது முறையாக முயன்றும் பிரடிடரிக்ஸ்பர்க் என்னுமிடத்தில் அது தோற்கடிக்கப்பட்டது. இதற்கிடையில் 1863 ஆம் ஆண்டு தென் பகுதி படைத் தளபதியான லீ, சான்சலர்ஸ் வில்லா என்னுமிடத்தில் வெற்றி பெற்ற பின்பு பென்சில்வேனியா நோக்கி முன்னேறி வந்தார். ஆனால் தளபதி மீட் என்பவர் தலைமையின் கீழ் கூட்டிணைவுப் படைகள் தென் மாநிலப் படையை கெட்டிஸ்பர்க் என்னுமிடத்தில் தோற்கடித்தது. 1863ல் போரில் புதுத் திருப்பம் ஏற்பட்டது. கெட்டிஸ்பர்க், விக்ஸ்பர்க் என்னுமிடங்களில் வட பகுதி இராணுவத்தினர் பெற்ற வெற்றியும், அடிமைகள் விடுதலையும் நேசக் கூட்டிணைவிற்கு உதவ வேண்டுமென கிரேட் பிரிட்டனும் பிரான்சும் கொண்டிருந்த திட்டத்தைக் கைவிடச் செய்தன. 1865ல் தளபதி கிராண்டும் ஷெர்மனும் அப்போமடாக்ஸ் என்னுமிடத்தில் தளபதி லீயைத் தோற்கடித்தனர். இது போரின் முடிவாகவும் நேசக் கூட்டிணைவின் அழிவாகவும் அமைந்தது.

**வட, தென் மாநிலங்களின் உள்நாட்டு நிலை**

நான்காண்டு காலமாக நடந்த உள்நாட்டுப் போரினால் ஆட்சிமுறை, இராஜாங்கத் தொடர்பு, மக்களின் வாழ்க்கை போன்றவை பாதிக்கப்பட்டன.

**அரசியல் நிலைகள்**

போரினால் பல இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் லிங்கன் தான் ஒரு சிறந்த குடியரசுத் தலைவர் என்பதை நிரூபித்துக் காட்டினார். போர்த் தந்திரங்களைக் கையாளுவதிலும் தளபதிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் அவர் பெருந் தவறுகளைச் செய்த போதிலும் நாட்டு மக்களின் உணர்வுகளை நன்கு அறிந்திருந்தார். குடியரசு கட்சியினரும் வட பகுதி ஜனநாயகக் கட்சியினரும் அவருக்கு ஆதரவளித்தனர். "காப்பர் ஹெட்ஸ்" என்றழைக்கப்பட்ட மிதவாதிகளுகம், தீவிரவாதிகளும் அவரது போர்க்காலக் கொள்கைகளைத் தாக்கிய போதிலும் ஜனாதிபதி லிங்கன் தைரியத்துடன் இடையூறுகளை எதிர்நோக்கினார். அரசியலமைப்பையும், ஐக்கிய நாட்டையும் காப்பற்ற சிவில் உரிமைகளை நிறுத்தி வைத்தல், இராணுவ சட்டத்தை நடைமுறைப் படுத்துதல் போன்றவற்றை செய்தார். மீண்டும் 1864ல் லிங்கன் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜெபர்சன் டேவிஸ் நேசக் கூட்டிணைவிற்குத் தலைவரானார். அவரது அமைச்சரவையில் பொதுவாக செல்வாக்கற்றவர்களே இடம்பெற்றிருந்தனர். 1861ல் மாண்ட் கொமரியில் நடைபெற்ற மாநாட்டில் தென் மாநிலங்கள் ஒரு அரசியலமைப்பை உருவாக்கினர். அதன் ஷரத்துகளின்படி ஜனாதிபதி பதவி காலம் ஆறு வருடம். அவர் ஒரு முறை மட்டும் பதவியிலிருக்க முடியும். அதன் பிறகு மறுபடியும் தேர்தலில் நிற்பதற்கு அவர் தகுதியற்றவராவார் எனக் கூறப்பட்டது. ஒரு சட்ட வரைவை முழுமையாக நிராகரிக்காமல் அதன் ஒரு பகுதியைத் தடுத்து நிறுத்தும் தடுப்பதிகாரம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. ஐக்கிய நாட்டில் இருப்பது போன்று இரு அவைகளைக் கொண்ட காங்கிரஸ் அமைக்கப்பட்டது. தலைமை உயர்நீதிமன்றத்தையும், மாவட்ட நீதிமன்றங்களையும்,

நீதித்துறை கொண்டிருந்தது மாவட்ட நீதிமன்றங்கள் செயல்பட்ட போதிலும் போரின் காரணமாக தலைமை உயர்நீதிமன்றம் அமைக்கப்படவில்லை. மாநிலங்களின் உரிமைகளுக்கு அரசியலமைப்பு அதிக முக்கியத்துவம் அளித்தது. அடிமை முறையை ஆதரித்து அந்நிய அடிமை வியாபாரத்தைத் தடை செய்தது நேசக் கூட்டிணைவின் பண உதவியோடு பாதுகாப்பான சுங்கவரி முறையையும், உள்நாட்டு முன்னேற்றத்தையும் உருவாக்க அரசியலமைப்பு வழி செய்தது. எனினும் தென் பகுதி அரசு திறம்பட செயல்படவில்லை. மாநிலங்கள் தங்களது உரிமைகளைப் பாதுகாக்க விழைந்தன. ஆனால் போரின் விளைவாக மத்திய அரசுக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டது. தங்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதில் மாநிலங்கள் காட்டிய ஆர்வம் போரை நடத்துவதற்குத் தேவையான ஆதரவைப் பெறுவதற்கு நேசக் கூட்டிணைவுக்கு தடையாக இருந்தது.

**வெளிநாட்டுத் தொடர்பு**

போரை நடத்துவதற்கு தேவையான இராஜதந்திரத்தின் முக்கியத்துவத்தை கூட்டிணைவு மற்றும் நேசக் கூட்டிணைவு அரசுகள் உணர்ந்தன. இவ்விரு அரசுகளும் இந்திய இனத்தவரைப் போரில் ஈடுபடுத்திய போதிலும் அவர்களில் பெரும்பான்மையோர் நேசக் கூட்டிணைவுக்கு ஆதரவாகவே போரிட்டனர். இந்தியர்களுக்கு சொந்தமான நிலப் பகுதிகளை கூட்டிணைவு அரசு அபகரித்ததால் அவர்களுடன் அது பகையை வளர்த்துக் கொண்டது. ஐரோப்பிய நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ் போன்றவை உள்நாட்டுப்போரில் அதிக ஆர்வம் காட்டின. ஐக்கிய நாடுகள் பிரிக்கப்பட்டு அது வலிமை இழந்தால் கடலாதிக்கத்தில் தனக்குப் போட்டியாக அமெரிக்கா இராது என இங்கிலாந்து எண்ணியது. அதே போன்று பிரான்ஸ் மெக்ஸிகோவில் தனது மேலாண்மையை நிலைநாட்ட முடியுமென எண்ணியது. இவ்விரு நாடுகளுக்கும் தென்மாநிலத்தில் உற்பத்தியாகும் பருத்தி தேவையாய் இருந்தது. அதோடு வட மாநில மக்கள் தென் மாநிலக் குடியானவர்களைச் சுரண்டி வாழ்கின்றவர்கள் என்று ஐரோப்பிய நாடுகள் கருதின. தென் பகுதியில் வாழ்கின்ற வெள்ளையர்கள் ஆங்கில பிரபுக்களைப் போன்று சிறந்த பண்பாடுமிக்க விவசாயிகளென்றும் நிலச்சுவான்தாரர்களென்றும் அவர்கள் நம்பினார். எனினும் தென் மாநிலங்களுக்கு உதவி செய்வதற்கான கட்டாய நிலை இங்கிலாந்திற்கு ஏற்படவில்லை. இங்கிலாந்தின் ஒத்துழைப்பு இல்லாததால் பிரான்ஸ் தென் மாநிலங்களுக்கு உதவி செய்ய முடியாத நிலையில் இருந்தது. 1862ல் கூட்டிணைவு படைகளுக்கு எதிராக மேரிலாந்தில் தளபதி லீ வெற்றி பெற்ற போது நேசக் கூட்டிணைவு நாடுகளை அங்கீகரிப்பது பற்றி இங்கிலாந்து தீவிரமாக ஆராய்ந்தது. ஆனால் ஆன்டிட்டாம் போர்க்களம் கூட்டாட்சிக்கு ஆதரவாக அமைந்த போது இங்கிலாந்து அந்த எண்ணத்தைக் கைவிட்டது.

பிரிட்டன் மீது போர் தொடுத்தால் பிரிந்து சென்ற மாநிலங்கள் கூட்டிணைவோடு மறுபடியும் சேர்ந்துவிடும் என்று மாநிலச் செயலாளரான சீவாட் கருதினார். ஆனால் லிங்கன்

இதற்கு இணங்கவில்லை. ஐரோப்பிய ஆதிக்கங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் போர் வட மாநிலத்திற்குப் பெரும் அழிவை ஏற்படுத்துமென்றும் வெளிநாட்டு உதவியை தென்மாநிலங்கள் பெறுவதற்கு அது பெருமளவில் உதவி செய்யுமென்று லிங்கன் கருதினார். எனினும் சில நிகழ்ச்சிகள் பிரான்ஸ், இங்கிலாந்து போன்றவற்றுடன் அமெரிக்க ஐக்கிய நாடுகள் கொண்டிருந்த தொடர்பில் பல சிக்கல்களை ஏற்படுத்தின. 1861ல் சான் ஜோசிந்டோ என்ற அமெரிக்கக் கப்பல், பிரிட்டனுக்குச் சொந்தமான "டிரன்ட்" என்றழைக்கப்பட்ட நீராவிக் கப்பலை தடுத்து நிறுத்தியதோடு நேசக் கூட்டிணைவின் ஆணையாளர்களான மேஸன், ஸ்லைடன் என்பவர்களைச் சிறைப்பிடித்தது. இது கடல் சுதந்திரத்திற்கு எதிரான நடவடிக்கையென்று இங்கிலாந்து கண்டித்ததோடு ஆணையாளர்கள் விடுவிக்கப்பட வேண்டுமென வற்புறுத்தியது. போர் ஏற்பட்டுவிடும் என்று அஞ்சி இங்கிலாந்தின் கோரிக்கைக்கு ஐக்கிய நாடுகள் அடிபணிந்தது. இங்கிலாந்து, பிரான்ஸ் போன்றவற்றில் போர்க் கப்பல்களைக் கட்டுவதற்கு நேசக் கூட்டிணைவு முயற்சி செய்த போது மற்றொரு பிரச்சினை ஏற்பட்டது. அவ்வாறு கட்டப்பட்ட நேசக் கூட்டிணைவின் கப்பல்களில் குறிப்பாக "அலபாமாவை, அமெரிக்க கப்பல்கள் நாசமாக்கியது. அமெரிக்கர்களுடைய எதிர்ப்பினால் இங்கிலாந்தும் பிரான்சும் நேசக் கூட்டிணைவிற்கு போர்க் கப்பல்களை அனுப்ப மறுத்தன.

**படை திரட்டுதல்**

நேசக் கூட்டிணைவும், கூட்டிணைவும் முறையே 1862, 1863 ஆம் ஆண்டுகளில் கட்டாய இராணுவச் சேவையைச் செயல்படுத்தின. இதனை எதிர்க்கும் மூலமாக ஆங்காங்கே கிளர்ச்சிகள் நடைபெற்றன.

**அடிமைகள் விடுதலை**

கூட்டாட்சியின் ஐக்கியத்தைக் காப்பதே லிங்கனின் முக்கிய நோக்கமாக இருந்ததால் அடிமை முறையை ஒழிப்பதில் அவர் அதிக ஆர்வம் காட்டவில்லை. வட மாநிலங்களில் அடிமைகளை விடுதலை செய்வதற்கு ஏற்பட்ட எதிர்ப்பினாலும் கூட்டிணைவோடு இணைந்து செயல்பட்ட மாநிலங்களின் ஆதரவை இழக்க நேரிடும் என்பதாலும் அடிமைகளை விடுதலை செய்ய அவர் தயங்கினார். எனினும், தனது அதிகாரங்களை பயன்படுத்தி 1863ல் அடிமைகள் விடுதலைச் சட்டத்தை இயற்றி, அதன் மூலம் எதிர்ப்பு மாநிலங்களிலுள்ள எல்லா அடிமைகளும் விடுதலை பெற்றதாக அறிவித்தார். ஆனால் நடைமுறையில் அடிமை முறையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இச்சட்டத்தின் வழியாக தீவிரவாதிகளின் ஆதரவையும் ஐரோப்பிய நாடுகளின் அனுதாபத்தையும் பெற்று நேசக் கூட்டிணைவை வலிமையற்றதாக்க முடியுமென லிங்கன் எதிர்ப்பார்த்தார்.

**போர்க்கால நிதி நிலைமை**

போரிலீடுபட்ட அரசுகளிடையே நிதி நிலை வேறுபட்டு காணப்பட்டது. கூட்டிணைவு நாடுகள் நாணய முறையையும், கருவூலத் துறையையும் கொண்டு விளங்கிற்று. ஆனால்

நேசக் கூட்டிணைவு இம்முறையைப் புதிதாகப் புகுத்தியது. வட மாநிலங்கள் தென் மாநிலங்களைவிட ஏராளமான அளவில் தங்கத்தையும், வெள்ளியையும் வைத்திருந்தது. இவ்விரு அரசும் போரை நடத்த அதிக வரி விதித்தல், காகிதப் பணத்தைப் புழக்கத்தில் விடுதல், அதிக நிதி எழுப்ப பத்திரங்கள் விற்றல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

**மக்களின் வாழ்க்கை முறை**

போரின் விளைவாக வட மாநிலங்களின் பொருளாதாரம் ஆரம்பத்தில் பாதிக்கப்பட்ட போதிலும் விரைவில் அவை பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்தது. போர்க் கருவிகள், உணவு, உடைகளுக்கு அதிகத் தேவை ஏற்பட்டதால் தேவையை பூர்த்தி செய்ய அரசு தனியார் துறைகளிடம் தாக்கீது கொடுத்தது. பணப்புழக்கமும் அதிகரித்தது. பொருள்களின் தேவை அதிகரித்ததால், விலையும் உலா இலாபமும் அதிகமாக கிடைத்தது. உணவு தானியங்களின் உற்பத்தியை பெருக்க வழி செய்யப்பட்டது. இராணுவம், இராணுவத்தளவாடங்கள் போன்றவற்றை கொண்டு செல்வதற்கு இரயில் பாதை அமைக்கப்பட்டது. இதனால் வட மாநில மக்களின் வாழ்க்கை நிலை அதிகமாக பாதிக்கப்படவில்லை.

ஆனால் தென் மாநில மக்கள் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வட மாநிலங்களைவிட, தென் மாநில மக்கட் தொகை மிகவும் குறைந்தது. பருத்தி, புகையிலை மற்றும் கச்சாப் பொருள்களை ஏற்றுமதி செய்ய முடியாததால் அநேக விவசாயப் பண்ணைகள் செயலற்றுப் போயின. உற்பத்தி குறைந்ததால் விலைவாசி உயர்ந்தது. ரயில் பாதைகளைச் செப்பனிடுவதற்கு முடியாததால் பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்வது கடினமாக இருந்தது. இவ்வாறு தென் மாநில மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

**போரின் விளைவுகள்**

நான்காண்டு காலமாக நீடித்த உள்நாட்டுப் போர் 1865ல் முடிவுற்றது. ஆறு இலட்சம் பேர் உயிரிழந்தனர். விவசாயப் பண்ணைகள் புறக்கணிக்கப்பட்டன. தொழிற்சாலைகள்- அழிக்கப்பட்டன. ரயில் பாதைகள் சேதப்படுத்தப்பட்டன. கப்பல்கள் கைப்பற்றப்பட்டன. பல பிரச்சினைகளுக்கு முடிவு கண்ட இப்போர் வேறு பல புதிய பிரச்சினைகளை உருவாக்கியது. உயிருக்கும் உடைமைக்கும் அழிவு ஏற்பட்ட போதிலும் உள்நாட்டுப் போரின் விளைவாக ஐக்கிய நாடுகளில் அரசியல் ஐக்கியமும் பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டது.

போரினால் சீரமைப்புப் பிரச்சினை ஏற்பட்டது. ஏராளமான நிலப் பகுதிகள் பாதிக்கப்பட்டன. மக்களின் பொருளாதாரம் சீர் குலைக்கப்பட்டது. தென் மாநில உயர்குடி மக்கள் தங்களின் செல்வாக்கை இழந்தனர். சட்டத்தின்படி அடிமைகள் விடுதலை செய்யப்பட்ட போதிலும் அவர்களுக்குப் புனர் வாழ்வோ அல்லது விடுதலை வாழ்வோ கொடுக்கப்படவில்லை. வட மாநிலங்களுக்கு பெரும் பிரச்சினையாக மாறியது. ஏல்லாவற்றிற்கும் மேலாக ஐக்கிய நாடுகள் உள்நாட்டுப் போரினால் பிரிட்டன், பிரான்ஸ்

மற்றும் இந்திய இன மக்களோடு கொண்ட தொடர்பு பாதிக்கப்பட்டது. இங்கிலாந்தில் கட்டப்பட்ட நேசக் கூட்டிணைவின் போர்க் கப்பலான அலபாமா, ஷெனன்டோவா, புளோரிடா போன்றவைகள் ஐக்கிய நாடுகளின் கடலாதிக்கத்தைப் பெரிதும் பாதித்தன. வாஷிங்டன், லண்டனிடம் நஷ்ட ஈடு கோரியது. நடுநிலையாளர் குழுவின் மூலம் இப்பிரச்சினை தீர்க்கப்படுவது வரையிலும் நாடுகளுக்கிடையிலான இராஜாங்கத் தொடர்பு சீர்குலைந்து காணப்பட்டது. போரினால் ஏற்பட்ட சூழ்நிலையை பயன்படுத்தி, பிரான்ஸ் மெக்ஸிகோவிற்குப் படைகளை அனுப்பி அதனைக் கைப்பற்றி ஆஸ்திரிய இளவரசர் மாக்ஸ்மிலியனை மெக்ஸிகோவின் மன்னராக்க முயன்றது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் போர் முடிவுற்ற பின்னர் மன்றோ கொள்கையின் அடிப்படையில் மெக்ஸிகோவில் தலையிடப் போவதாகக் கூறி பிரெஞ்சுப் படைகளைப் பின்வாங்கும்படிச் செய்தது. இதனால் அமெரிக்கா பிரான்சுடன் கொண்ட உறவு பாதிக்கப்பட்டது. இப்போரினால் இந்திய இன மக்கள் அவல நிலையடைந்தனர். இந்தியர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள உள்நாட்டுப் போரில் நேசக் கூட்டிணைவோடு சேர்ந்து கொண்டு தங்களுக்குத் தாங்களே அழிவை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

**அரசியல் விளைவுகள்**

கூட்டிணைவின் வெற்றி ஐக்கியத்தின் வலிமையையும் தேசிய அரசின் மேலாண்மையையும் நிலைநாட்டியது. இதனால் கூட்டிணைவு முறையில் தேசியம், பிரிவினை முறை ஆகியவற்றின் அடிப்படையில் பிரச்சினைகள் எழுந்தன. மாநிலங்களுக்கு பிரிந்து செல்லும் உரிமை மறுக்கப்பட்டது.

லிங்கன் வெளியிட்ட 1863 ஆம் ஆண்டின் அறிக்கை மாநிலங்களில் அடிமை முறையை ஒழித்தது. ஜனாதிபதியின் போர்க்கால அதிகாரங்களினடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள இச்சட்டம் தெற்கு மாநிலங்களை கஷ்டப்படுத்துவதற்கும், ஐரோப்பிய நாடுகளின் அனுதாபத்தைப் பெறவேண்டுமென்பதற்காகவுமே வெளியிடப்பட்டது. போருக்குப்பின் அடிமை ஒழிப்பு நடவடிக்கைக்கு அரசியலமைப்பு முக்கியத்துவம் கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டது. ஐக்கிய நாட்டின் அதிகாரத்திற்குட்பட்ட எல்லா பகுதிகளிலும் அடிமை முறை ஒழிக்கப்படுவதற்கு அரசியலமைப்பின் 13வது திருத்த சட்ட வரைவு உதவியது. 14வது திருத்த சட்ட வரைவு விடுதலை செய்யப்பட்ட நீக்ரோக்களை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடிமக்களாக்கிற்று. எந்த ஒரு மாநிலமும் சட்டத்தின் அடிப்படையிலின்றி எந்த ஒரு குடிமகனுடைய உயிருக்கோ, உரிமைக்கோ, உடைமைக்கோ பங்கம் விளைவிக்கக் கூடாதென்று இத்திருத்த சட்ட வரைவு மேலும் கூறிற்று. இப்பிரச்சினைகளில் மாநிலங்கள் கூட்டாட்சி நீதிமன்றத்திற்கு பொறுப்பாயிருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தியது. உள்நாட்டுப் போரின் விளைவாக உருவான இத்திருத்த சட்ட வரைவுகள் அரசியலமைப்பில் ஒரு புரட்சியை தோற்றுவித்தன.

**பொருளாதார விளைவுகள்**

உள்நாட்டுப் போரினால் பொருளாதார மாற்றம் ஏற்பட்டது. போர்க்கால தேவைகளினால் தொழிற்சாலைகளும் வாணிகமும் வளர்ச்சியடைந்தன. தேவை அதிகரித்தபோது பொருட்களின் விலை உயர இலாபமும் அதிகரித்தது. எனவே ஐக்கிய அரசு அதிக அளவில் போர்க்கருவிகள், உணவுப் பொருட்கள் மற்றும் துணிகள் பெற தொழிலதிபர்களை வேண்டியது. பொருள்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்ல ரயில் பாதைகள் உதவின. ஆனால் தேவைக்கேற்ற அளவில் தொழிலாளர்கள் கிடைக்காததால் தொழிலதிபர்கள் நவீன இயந்திரங்களின் மூலம் உற்பத்தியை அதிகரிக்க முயன்றனர். ஏராளமான நிலங்கள் விவசாயத்திற்கு கொண்டுவரப்பட்டன. புதிய சுரங்கங்கள் வெட்டப்பட்டன. ஏராளமான தொழிற்கூடங்கள் நிறுவப்பட்டன.

இதற்கிடையில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க காங்கிரஸ் சட்டங்களை இயற்றியது. தென் மாநிலங்கள் தேசிய சட்ட மன்றத்திலிருந்து வெளியெறியமையால் கடும் எதிர்ப்புகளின்றி இவற்றை செயல்படுத்த முடிந்தது. 1863ல் காங்கிரஸ் ரேசிய வங்கி சட்டத்தை இயற்றியது. போர்ப் பத்திரங்களைவிற்பது தான் இதனுடைய உடனடி நோக்கமாக இருந்த போதிலும் நாளடைவில் ஒரு சிறந்த சீரான நாணய முறை ஏற்படுவதற்கு இது காரணமாயிருந்தது. புதிதாக இயற்றப்பட்ட சுங்கச் சட்டங்கள் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வரியை அதிகரித்தது. இந்நடவடிக்கை வெளிநாட்டுப் போட்டியிலிருந்து உள்நாட்டுப் பொருட்களுக்குப் பாதுகாப்பளித்தது. தொழிலக உற்பத்தியை ஊக்குவிக்கவும், தொழிலாளர்களைக் கவரவும், தொழிற்சாலைகளுக்கு மட்டுமின்றி, வெளிநாட்டிலிருந்து குடியேறியவர்களுக்கும் நிலங்கள் இலவசமாகக் கொடுக்கப்பட்டன. உள்நாட்டுப் போரின் போது இயற்றப்பட்ட சட்டங்கள் அந்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. நிலச் சுவான்தார்களும் அடிமை எஜமானர்களும் இதுவரை பெற்று வந்த தலைமையை தொழிலதிபர்களும் வணிகர்களும் பெற்றார்கள். இது தொழில் வளர்ச்சிக்கு வழிவகுத்த போது விவசாயிகளின் நிலையை தாழ்த்தியது. இப்போர் தொழில் மற்றும் விவசாயம் இவற்றிற்கிடையிலான பிரச்சினைகளை நீக்கியதால் இது அமெரிக்க வரலாற்றில் உண்மையில் ஒரு திருப்பமாக அமைந்துள்ளது.

1. அமெரிக்காவில் நடைப்பெற்ற உள்நாட்டுப் போருக்கான காரணங்கள் யாவை?
2. உள்நாட்டுப் போரில் வடக்கு மாநிலங்கள் வெற்றி பெறக் காரணங்களை எழுதுக.

# அலகு - III

## ஆப்ரகாம் லிங்கன் 1861- 1865

"ஒரு நாடு தனக்குள்ளே பிளவுபட்டால் நிலைத்து நிற்க முடியாது. இந்த அரசாங்கம் பாதி அடிமைமுறை உடையதாகவும், பாதி சுதந்திரம் பெற்றதாகவும் எப்போதும் இருக்க முடியாது என்று நம்புகிறேன்".

ஆபிரகாம் லிங்கன்

அமெரிக்க வரலாற்றில் ஆபிரகாம் லிங்கனின் ஆட்சிக்காலம் மிக முக்கியமான காலகட்டமாகும். நாட்டின் ஐக்கியத்தைக் காப்பாற்றிய பெருமை அவருக்கு உண்டு. அதற்காக தனது உயிரை பணயம் வைத்தார். Log Cabin எனப்படும் மர வீட்டில் பிறந்த இவர் தனது திறமையினாலும், உழைப்பினாலும் ஒரு உயர்ந்த நிலைக்கு உயர்ந்தவர். இவரது பேச்சுக்கள், எழுத்துக்கள் என்றென்றும் மனித இனத்திற்கு பயன்படக்கூடியதாக உள்ளது. இவர் அமெரிக்கத் தலைவர் மட்டுமல்ல. ஒரு உலகத் தலைவர் ஆவார்.

1809ஆம் ஆண்டு கெண்டகியில் பிறந்தவர். இவரது தந்தை தாமஸ் லிங்கன் ஒரு எல்லைப்புறவாசி. லிங்கன் பள்ளிக்கல்வியை ஒழுங்காக கற்க முடியவில்லை. இவரது பெற்றோர் முதலில் இண்டியானாவுக்கும், பின்னர் இல்லினாய் மாநிலத்திற்கும் குடிபெயர்ந்தனர். முதலில் ஒரு கடையில் குமாஸ்தாவாக பணிபுரிந்தார். பின்னர் தானே ஒரு கடை நடத்தினார். 1832ல் செவ்விந்தியர்களுக்கு எதிரான போரில் கேப்டனாக பணியாற்றினார். சர்வேயராகவும், போஸ்ட்மாஸ்டராகவும் பணிபுரிந்தார். பகுதிநேரம் மாணவராக சட்டம் பயின்றார். பின்னர் வழக்கறிஞர் ஆனார்.

லிங்கன் சுயநலமற்றவர், நேர்மையாளர், புத்தி கூர்மையானவர், சிறந்த பேச்சாளர் எப்போதும் பழங்கதைகளைக் கூறி மக்களை கவரும் ஆற்றல் உடையவர். சுதந்திரத்தின் மீது அளவிலா பற்றுதலும், மற்றவர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதில் பொறுமையும் உடையவர். வெள்ளையரானாலும் சரி, கறுப்பரானாலும் சரி யாருக்கு அநீதி இழைக்கப்பட்டாலும் அதை பொறுத்துக் கொள்ளமாட்டார். அதனால்தான் இவர் அடிமைமுறையை எதிர்த்தார். அடிமைகள் சுரண்டப்படுவதையும் கண்டித்தார். இவர் ஒரு அடிமை ஒழிப்பு வாதி அல்லர். ஆனால் நீக்ரோக்களின் அடிமைமுறைபற்றி தாங்களே முடிவுசெய்து கொள்ளலாம் என கருத்துத் தெரிவித்தார். ஆனால் போரின்போது இவரது கருத்து மாறியது. கூட்டாட்சி ஐக்கியத்தை காப்பாற்ற வேண்டும் என நினைத்த போது தனது கருத்துக்கள் மாறியது. அடிமைகளை விடுவித்து கூட்டாட்சி ஐக்கியத்தை பாதுகாக்க முடியும் என்று நம்பினார்.

லிங்கனின் அரசியல் வாழ்க்கை முதன்முதலில் இல்லினாய் மாநில சட்டமன்ற விக்கட்சியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து ஆரம்பமாகிறது. 1834 முதல் எட்டு ஆண்டுகள் அப்பதவி வகித்தார். பின்னர் 1846ஆம் ஆண்டு கூட்டாட்சி சட்டமன்றம் காங்கிரஸ் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். இக்காலகட்டத்தில் அடிமை முறையை அகற்ற

வேண்டும் என்று கருத்து தெரிவித்தார். இக்கருத்தை வலியுறுத்தும் குடியரசுக் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். 1858இல் இல்லினாய் மாநில செனட் உறுப்பினர் பதவிக்கு டக்ளசை எதிர்த்து போட்டியிட்டார். டக்ளசுடன் மேடைகளில் விவாதங்களில் ஈடுபட்டார். இந்த விவாதங்களின் அவரது பேச்சாற்றல் இவரை ஒரு தேசியத் தலைவராக்கியது. எனவே 1860ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றார். 1864ஆம் ஆண்டு தேர்தலிலும் வென்றார்.

ஆபிரகாம் லிங்கன் 1861இல் பதவி ஏற்கும் முன்பே 1860 டிசம்பர் மாதம் தென்கரோலினா மாநிலத்தின் தலைமையில் தென்மாநிலங்கள் கூட்டாட்சியிலிருந்து பிரிந்து சென்றன. நியுயார்க்கைச் சேர்ந்த வில்லியம் சீவார்ட்டை தனது வெளியுறவுச் செயலராக நியமித்தார். தென்மாநிலங்களுக்கு அவகாசம் கொடுத்தும் பிரிந்துசென்ற அம்மாநிலங்கள் கூட்டாட்சியை ஏற்க மறுத்தன. எனவே 1863 ஜனவரி முதல் தேதி அடிமைகள் விடுதலைப் பிரகடனத்தை வெளியிட்டார். தென்பகுதி அடிமைகள் விடுதலை பெற்றனர். அவர்கள் கூட்டாட்சிப் படைகளுக்கு உதவியும் புரிந்தன.

"ஒரு வீடு தனக்குள்ளே பிளபட்டால் நிலைத்து நிற்க முடியாது. இந்த அரசாங்கம் பாதி அடிமைமுறை உடையதாகவும், பாதி சுதந்திரம் பெற்றதாகவும் எப்போதும் இருக்க முடியாது என்று நம்புகிறேன்" என்று 1858இல் அவர் கூறியது கூட்டாட்சியை எப்படியும் காப்பாற்றியாக வேண்டும் என்ற எண்ணத்தில்தான். லிங்கன் அடிமை ஒழிப்பு சம்பந்தமாக விரைந்து செயலாற்றவில்லை என நியுயார்க் டிரிப்யூனியன் பத்திரிக்கையின் ஆசிரியர் ஹோராஸ் அவருக்குப் பதில் எழுதினார் லிங்கன்.

"என்னால் ஒரு அடிமையைக் கூட விடுவிக்காமல் கூட்டாட்சியை காப்பாற்ற முடியும். அதை நான் செய்யமாட்டேன். எல்லா அடிமைகளையும் விடுதலை செய்துவிட்டு கூட்டாட்சியை காப்பாற்ற முடியும். இதை என்னால் செய்ய முடியும். பலமுறை விடுதலை செய்துவிட்டு மீதி பேரை அப்படியே விட்டுவிடலாம். இதையும் என்னால் செய்ய முடியும்" என்று லிங்கன் கூறியது அவரது உறுதித்தன்மையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. அவர் இரண்டாம்முறை பதவி ஏற்கும்போது கூறிய கருத்துக்கள். "யாரிடமும் துவேஷம் வேண்டாம். அனைவரிடத்தும் அறவழியில் நடப்போம்" என்ற அவரது கருத்து அவரது சகிப்புத்தன்மையை வெளிப்படுத்துவதாக உள்ளது. அதேபோல்மக்களாட்சியின் மகத்துவத்தை எடுத்துக் கூறும் போது "அது மக்களுடைய மக்களால், மக்களுக்காக அமைக்கப்படும் ஆட்சி" எனக் கூறுவது உலகம் முழுமைக்கும் கூறப்பட்டுள்ள உண்மையாகும்.

உள்நாட்டுப் போர் தவிர்க்க முடியாததாகி விட்டது. அமெரிக்க ஐக்கியத்தைக் காக்க இறுதி வரை முயற்சித்தார். போரின் மத்தியில் அடிமை ஒழிப்பு பிரகடனத்தை வெளியிட்டு தென்பகுதி நீக்ரோ அடிமைகள் அனைவரையும் விடுதலை செய்தார். இறுதியில்

கூட்டாடட்சிக்கே வெற்றி அமெரிக்க ஐக்கியத்தைக் காப்பாற்றி விட்டார். அமெரிக்க வரலாற்றில் லிங்கன் அழியாப் புகழ் பெற்றார்.

போரில் தோல்வியடைந்த தென்பகுதி பல வழிகளிலும் சீரழிந்தது. யாரிடமும் காழ்ப்புணர்ச்சி காட்டாமல் பரிவுடன் நடந்தார். தென் மாநிலங்களை புனரமைப்பதற்கு தனது திட்டத்தை வெளிப்படுத்தினார். அதுவே அவரது 10 சதவீத திட்டமாகும். 1863 டிசம்பரில் பொது மன்னிப்பு மற்றும் புனரமைப்பு பேரறிக்கையினை வெளியிட்டார். 1860ம் வருட வக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களில் பத்து சதவீதம் பேர் கூட்டாட்சிக்கு விசுவாசமாக நடந்து கொள்வதாக வாக்குறுதி அளித்ததால் அந்த மாநிலங்களில் பதிய அரச நிறுவப்படும். கூட்டாட்சியுடன் இணைத்துக் கொள்ளப்படும் என்பதே பத்து சதவீத திட்டமாகும்.

லிங்கன் ஒரு வெற்றி பெற்றவர் போல் நடந்து கொள்ளவில்லை. ராபர்ட் லீ சரணடைந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு லிங்கன் பொதுமக்களிடம் உரையாற்றியதுதான் அவரது கடைசிப்பேச்சாக இருந்தது. ஏப்ரல் 13, வியாழக்கிழமை இரவு லீ சரணடைந்ததைக் கொண்டாட வாஷிங்டன் விழாக்கோலம் பூண்டிருந்தது. ஏப்ரல் 14ல் தனது கடைசி அமைச்சரவை கூட்டத்தைக் கூட்டினார். கடல் முற்றுமைகை எடுத்துவிட முடிவு செய்யப்பட்டது. அமைதிவழியில் மனதைச் செலுத்தி புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார். குடியரசு கட்சியைச் சேர்ந்த தீவிரவாதிகள் தென்பகுதியை தண்டித்து ஆக வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தனர். குடியரசுக் கட்சியின் முக்கிய தலைவர்கள் தேடியஸ் ஸ்டீவன்சும், பெஞ்சமின்வேடும் பத்து சதவீத திட்டத்திற்கு மாற்றாக வேறு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தனர். இதற்கு லிங்கன் தனது மறுப்பாண்மைப் பயன்படுத்தி ஒப்புதல் அளிக்க மறுத்து விட்டார். ஏப்ரல் 14 இரவு தனது குடும்பத்தாருடன் வாஷிங்டன் நகரில் உள்ள போர்டு நாடக அரங்கில் அமெரிக்கன் கஸின் நாடகம் பார்த்துக் கொண்டிருக்கும் போது ஜான்வில்க்ஸ் பூத் என்ற வெறியனால் சுட்டுக் கொல்லப்பட்டார். மனிதகுலத்திற்கு, நல்வாழ்விற்கு உழைத்த ஒரு மாபெரும் மனிதர் கொல்லப்பட்டு விட்டார். உலகம் ஒரு மாபெரும் மனிதரை இழந்துவிட்டது.

இவரது மனைவி பெயர் மேரி. இவர் மறைந்த போது அவருடைய இரண்டு குழந்தைகள் ராபர்ட் 21 வயது. டேட் 12 வயது உடையவர்களாக இருந்தனர். ராபர்ட் அமெரிக்க ராணுவத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

லிங்கன் தான் ஒரு ஜனாதிபதி என்று எப்போதும் நடந்து கொண்டதில்லை. எந்த நேரமும் யாரும் அவரை சுலபமாகச் சந்திக்கலாம். வெள்ளை மாளிகையில் இருந்த கடைசிச் சிப்பந்தியின் பெயர் வரைக்கும் அவருக்குத் தெரியும். தமது வசீகரம் மிக்க எளிமையாலும், புத்திக்கூர்மையாலும் அவர் மக்களை கவர்ந்திருந்தார். குறிப்பாக அமெரிக்க நீக்ரோ சமூகத்தின் நடமாடும் கடவுளாகவே அவர் இருந்தார்.

# புனரமைப்புத் திட்டங்கள் 1865-1877

**ஆண்ட்ரூ ஜான்சன்**

ஆபிரகாம் லிங்கன் மறைந்தவுடன் துணைஜனாதிபதி ஆண்ட்ரூ ஜான்சன் ஜானதிபதியாக பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்ட்டார். இவருக்கு மக்கள் ஆதரவு கிடையாது. இவர் பதவியேற்ற போது காங்கிரஸ் கூடவில்லை. 1964 டிசம்பரில் தான் சபை கூடுவதாக இருந்தது. அதற்குள் லிங்கனின் பத்து சதவீத திட்டத்தை அமல்படுத்த நினைத்தார். இவர் தென்பகுதியைச் சேர்ந்த டென்னஸி மாநிலத்தவர். இவர் சொந்தமாக அடிமைகளை வைத்திருந்தார். வெள்ளையர்களையும், கறுப்பர்களையும் என்றுமே இவர் சமமாக நினைத்ததும் இல்லை. நீக்ரோ பிரச்சினையில் அவ்வளவு ஆர்வம் காட்டியதும் இல்லை. ஆனால் லிங்கன் மரணத்தினால் இவர் துணை ஜனாதிபதியான பின்னர் லிங்கனின் திட்டத்தை நிறைவேற்ற நினைத்தார். இவர் ஏற்கனவே ஜனநாயகக் கட்சியிலிருந்து குடியரசுக் கட்சிக்கு வந்தவர். இவருக்கு இரு கட்சியிலும் செல்வாக்கு இல்லை.

குடியரசுக் கட்சிக்கு காங்கிரசில் நல்ல பெரும்பான்மை இருந்தது. மேலும் குடியரசுக் கட்சியில் தீவிரவாதிகளின் செல்வாக்கு நிறைந்திருந்தது. ஜான்சனின் கொள்கைகளை தடுத்து நிறுத்தி தங்கள் திட்டத்தை நிறைவேற்ற காங்கிரசைப் பயன்படுத்திக் கொண்டனர். தேடியஸ் ஸ்டீவன்ஸ், சார்லஸ் சம்னர் என்ற இரண்டு புகழ் பெற்ற குடியரசு கட்சியின் தலைவர்கள் ஜான்சனின் திட்டத்திற்கு முட்டுக்கட்டை போட்டனர்.

ஜான்சன் பொது மன்னிப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டார். தென்மாநில தீவிரவாதத் தலைவர்கள், உயர் அதிகாரிகள், செல்வந்தர்கள் போன்றவர்கள் தவிர ஏனைய அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. வாக்குரிமையும் வழங்கப்பட்டது.

லிங்கனின் பத்து சதவீத திட்டப்படி நடந்து கொண்ட வர்ஜினியா, டென்னிசி, அர்கான்சாஸ், லூயிசியானா அரசுகளை ஜான்சன் அங்கீகரித்தார். தென்மாநிலங்களில் இராணுவ ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். அந்த மாநிலஙகளில் அரசியலமைப்புப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டது. கூட்டாட்சிக்கு விசுவாசமாக நடந்து கொள்வதாக வாக்குறுதியளித்த வெள்ளையர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. தென்மாநில சட்டமன்றங்கள் பிரிவினைவாதத் தீர்மானத்தை ரத்து செய்வதற்கும், பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கும் சம்மதித்தன. டெக்சாஸைத் தவிர அனைத்து மாநிலங்களும் இந்த ஏற்பாட்டிற்குச் சம்மதித்தன. இதன்படி தேர்தல்கள் நடத்தப்பட்டன. பிரதிநிதிகள் சபைக்கும், செனட் மன்றத்திற்கும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் 1865 டிசம்பரில் சபை கூடிய போது இவர்களை ஏற்றுக்கொள்ள குடியரசுக் கட்சியினர் மறுத்துவிட்டனர். ஜான்சனின் புனரமைப்புத் திட்டங்களையும் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். ஏனென்றால்

உள்நாட்டுப் போரில் தீவீரமாகச் செயல்பட்ட பல தலைவர்கள் புதிதாக கூட்டாட்சி காங்கிரஸ் சபைக்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தனர்.

தென்மாநிலங்களில் புதிய சட்டமன்றங்கள் அமைக்கப்பட்டன. ஆட்சி அதிகாரம் வழங்கப்பட்டது. ஆனால் அவர்கள் நீக்ரோக்களை சமமாக நடத்தாமல் சில சட்டங்கள் மூலம் பல கட்டுப்பாடுகளை விதித்தார்கள். இந்தச்சட்டங்களுக்குக் "கருப்புச்சட்டங்கள்" எனப் பெயர். நீக்ரோக்கள் உயர்பதவி வகிக்க முடியாது. ஜீரிகளாகப் பணிபுரிய முடியாது. ஆயுதம் வைத்துக் கொள்ளக்கூடாது. வாக்குரிமையையும் பயன்படுத்தக்கூடாது என்பதுதான். மேலும் நீக்ரோக்கள் வேலையில்லாமல் இருக்கக்கூடாது என்றும், அப்படி சோம்பேறியாகத் திரிந்தால் கைது செய்யப்பட்டு மீண்டும் பண்ணைகளுக்கு அடிமைகளாக அனுப்பப்டுவர். இந்த கருப்புச் சட்டங்கள் மறைமுகமாக அடிமைமுறையை கொண்டு வருவது போல் இருந்தன.

காங்கிரசில் பெரும்பான்மை பலம் பெற்றுள்ள குடியரசு கட்சியினர் ஜான்சனின் திட்டத்திற்குப் பதிலாக தாங்களே புதிய புனரமைப்புத் திட்டத்தைத் தயாரித்தனர். தேடியஸ் ஸ்டீவன்ஸ் இத்திட்டங்களை தயாரித்தார். நீக்ரோக்களைப் பாதுகாக்க சில திட்டங்களை கொண்டுவரப்பட்டன. இதற்காக 15 பேர் அடங்கிய குழுவினர் தங்கள் திட்டங்களை தயாரித்து காங்கிரசுக்கு அனுப்பினார்கள். அதை ஜான்சன் ஏற்க மறுத்தார்.

பதினான்காவது அரசியல் சட்டதிருத்த மசோதா கொண்டு வரப்பட்டது. அதன்மூலம் தென்மாநிலங்கள் இயற்றிய கருப்புச் சட்டங்கள் யாவும் ரத்து செய்யப்பட்டன. நீக்ரோக்களுக்கு வாக்குரிமையை மறுத்தால் அம்மாநிலங்கள் காங்கிரசுக்கு அனுப்பும் பிரதிநிதிகள் குறைக்கப்பட வேண்டியிருக்கும். சிவில் உரிமை சட்டம் ஜான்சனால் மறுக்கப்பட்டது. ஆனால் அது மீண்டும் நிறைவேற்றப்பட்டது. நீதிமன்றங்களில் வெள்ளையர்களையும் நீக்ரோக்களையும் சமமாகக் கருத வேண்டும். எந்த மாநிலமும் குடிமக்களின் உரிமைகளைப் பறிக்கும் வகையில் சட்டங்கள் இயற்றக்கூடாது. தென்மாநிலங்களின் கடன்களுக்கு கூட்டாட்சி பொறுப்பேற்காது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த பதினான்காவது சட்டத்திருத்தத்தை டென்னசி தவிர பிற தென்மாநிலங்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தன. டென்னசி 1866 ல் கூட்டாட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. ஆனால் இத்திருத்தத்திற்கு மொத்தத்தில் நான்கில் மூன்று பங்கு மாநிலங்கள் ஆதரவு தெரிவித்ததால் 1868 முதல் அமுலுக்கு வந்தது.

**புனரமைப்புச் சட்டங்கள் 1867**

டென்னசி தவிர பிற தென்மாநில அரசுகள் கலைக்கப்பட்டன. ராணுவ ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். அவருக்கு உதவ கூட்டாட்சிப்படையும் அனுப்பப்பட்டது. புதிய வாக்காளர்கள் பட்டியலில் நீக்ரோக்கள் இடம் பெற்றனர். அடின்படி தேர்தல் நடத்த அனுமதிக்கப்படும். 14வது அரசியலமைப்புத் திருத்தத்தை புதிய அரசுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டது. இதன்படி ஆறு மாநிலங்கள் வட, தென் கரோலினா,

லூசியானா, அலபாமா, புளோரிடா, 1868 ஜூன் மாதத்தில் கூட்டாட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. 1870 இல் மீதியுள்ள ஜார்ஜியா, மிசிசிபி, டெக்ஸாஸ், வர்ஜீனியாவும் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

ஜான்சனை பழி வாங்குவதற்காக குடியரசுக் கட்சியினர் இரண்டு சட்டவரைவுகளைக் கொண்டுவந்தனர். செனட்டின் அனுமதியின்றி உயர் அதிகாரிகளை பதவி நீக்கம் செய்ய ஜனாதிபதியால் முடியாதபடி "பதவிக்காலச் சட்டம்" கொண்டு வரப்பட்டது. மேலும் ஜனாதிபதி தனது இராணுவத்திற்கான ஆணைகளை படைத்தளபதி கிராண்ட் மூலமே அனுப்ப வேண்டும் என்பதற்காக "படைத்தலைமைச் சட்டம்" கொண்டு வரப்பட்டது.

ஜான்சன் தனக்கு எதிராகச் செயல்பட்ட தளபதி எட்வின் ஸடன்டன் என்பவரை 1867 ஆகஸ்டில் பதவி நீக்கம் செய்தார். இதனை செனட் ஏற்றுக்கொள்ளவில்லை. பதவிக்காலச் சட்டத்தை மீறியதாக ஜான்சன் மீது துரோககுற்ற விசாரணை நடத்த தீர்மானிக்கப்பட்டது. நீதிபதி சேஸ் விசாரணை நடத்தினார். வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. வெற்றி பெற 3 வாக்குகள் தேவை. ஒரு வாக்கு குறைந்ததால் துரோக குற்ற விசாரணை தோல்வியடைந்தது. ஜான்சனின் பதவி தப்பியது. 1968, ஜனாதிபதி தேர்தலில் படைத்தளபதி யுலைசங் கிராண்ட் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**கருப்புப் புரமைப்பு**

தென்மாநிலங்களில் தீவிர குடியரசுக்கட்சியினர் அமைத்த அரசாங்கங்கள் சில புனரமைப்புச் சட்டங்களை கொண்டு வந்தன. அவற்றிற்கு கருப்புப் புனரமைப்புச் சட்டம் எனப்படும். புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், மேற்பார்வையிடவும் வடமாநிலங்களிலிருந்து அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இவர்களை "கம்பளபையினர்" என்று தென்மாநிலத்தவர்கள் அழைத்தனர். இவர்கள் பெரும்பாலும் பழைய இராணுவத்தினர். இவர்கள் தென்பகுதியை விரும்பினார்கள் மற்றும் ஆசிரியர்கள், மதபோதகர்கள், நீக்ரோக்களுக்கு கல்வி கற்பிக்க விரும்பியவர்கள் கூட்டாட்சி அதிகாரிகள், வணிகர்கள் அடங்குவர். ஒரு கம்பளப்பையினுள் தங்கள் உடமைகளை அடைத்து சுமந்து கொண்டு வந்த இவர்களை "கம்பளபையினர்" என அழைத்தனர். மற்றொரு பிரிவு "ஸ்காலாவாக்ஸ்" என அழைத்தனர். இவர்கள் புனரமைப்புப் பணிகளில் கம்பளபையினருக்கு ஒத்துழைத்த தென்பகுதி பண்ணையார்கள், வியாபாரிகள் போன்றவர்கள் இவர்களை உதவாக்கரைகள் என்று தென்மாநிலத்தவர்கள் அழைத்தனர். சந்தர்ப்பவாதிகள் பணத்துக்காகவும், பதவிக்காகவும் வடமாநில வெள்ளையர்களுக்கு ஆதரவாக செயல்பட்டவர்கள்.

கார்பெட் பேக்கர்களும், ஸ்காலாவாக்குகளும் தென்மாநில அரசியலில் செல்வாக்கு பெற்றிருந்தனர். இவர்களுக்கு ஆதரவாக "விடுதலை பெற்றோர் பணிமனையும்" கூட்டாட்சி சங்கமும் செயல்பட்டனர். போரில் பாதிக்கப்பட்ட விளைநிலங்கள் மீட்கப்பட்டன. இருப்புப் பாதைகள், பாலங்கள், சாலைகள் செப்பனிடப்பட்டன. மருத்துவமனைகளும்,

பள்ளிக்கூடங்களும் கட்டப்பட்டன. கட்டாயக்கல்வி அமுலாக்கப்பட்டது. பல புதிய தொழில்கள் தொடங்கப்பட்டன.

தென்பகுதி வெள்ளையர்கள் தங்கள் அதிகாரம், ஆதிக்கம் மறைந்தது குறித்து சகித்துக் கொள்ள முடியாமல் தவித்து வந்தனர். வெள்ளை இளைஞர்கள் நீக்ரோக்களை அச்சுறுத்துவதற்காக ரகசியமாக கூ கிளக்ஸ் கிளான் என்ற இயக்கத்தைத் தொடங்கினர். வெள்ளை உடை தரித்து, முகமூடி அணிந்து கொண்டு கம்பளப்பையினர் தங்கியிருக்கும் முகாம்களைத் தாக்கினர். நீக்ரோக்களை வாக்களிக்க விடாமல் தடுத்தனர். நீக்ரோக்களை அச்சுறுத்தினர். வீடுகள் கொளுத்தப்பட்டன. வன்முறையில் நீக்ரோக்கள் கொள்ளப்பட்டன. வன்முறையில் நீக்ரோக்கள் கொள்ளப்பட்டனர். இந்த ரகசிய சங்கத்தை ஒடுக்க இராணுவத்தைப் பயன்படுத்த ஜனாதிபதி அதிகாரம் வழங்கினார். 1872ல் ஜனாதிபதி கிராண்ட் பொது மன்னிப்பு சட்டத்தை வெளியிட்டு சிலரைத் தவிர தென்மாநிலத்தவர் அனைவருக்கும் அரசியல் உரிமைகள் வழங்கப்பட்டன. 1876 தேர்தலில் ஜனநாயக கட்சியினர் தென்மாநிலங்களில் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றினர்.

ஆட்சிக்கு வந்தது நீக்ரோக்களை ஒடுக்குவதற்காக "ஜிம்குரோ சட்டங்கள்" கொண்டுவந்தனர். ஜிம்குரோ என்பது நீக்ரோக்களுக்கு வெள்ளையர்கள் வைத்து பெயராகும். துலைவரி கட்டினால் தான் வாக்குரிமை என கட்டுபாடுகள் விதிக்கப்பட்டன. நீக்ரோக்கள் குடியிருக்க தனி தெருக்களும், பள்ளிகளும் அமைக்கப்பட்டன.

1876 தேர்தலில் ஜனநாயகக் கட்சியினர் சாமுவேல் டில்டென்னை நிறுத்தினார்கள். குடியரசுக்கட்சியினர் ரூதர்போர்டு ஹேய்ஸ்சை நிறுத்தினார்கள். தேர்வாளர் குழு வாக்குகளில் 185 பெற்றால் வெற்றி பெறலாம். டில்டன் 184 ஹேய்ஸ் 165 பெற்றனர். ஆனால் டல்டன் 2.5 இலட்சம் மக்கள் வாக்குகள் பெற்றார். 20 தேர்வாளர் குழு வாக்குகள் குழப்பத்தில் இருந்தன. 1877ல் இச்சிக்கலைத் தீர்க்க ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு 20 வாக்குகளையும் ஹேய்ஸ் வெற்றி பெற அளித்தன. இதற்கு சில திரைமறைவு வேலைகள் நடைபெற்றன. அதுவே 1857 சமரசம் ஆகும். வடபகுதி குடியரசுக் கட்சியினர் சமாதானத்தை விரும்பினர். தென்பகுதி ஜனநாயக் கட்சியினர் வடபகுதி முதலீடுகளை எதிர்பார்த்தனர். எனவே ஜனநாதிபதி பதவியை இப்போது குடியரசுக் கட்சியினருக்கு விட்டுக் கொடுத்தனர். கூட்டாட்சிப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்டனர். புனரமைப்பு முடிந்தது. மீண்டும் தென்பகுதியில் வெள்ளையர்கள் ஜனநாயகக் கட்சி செல்வாக்குப் பெற்றது. நீக்ரோக்கள் கைவிடப்பட்டனர்.

**யுலைசெஸ் கிராண்ட்**

உள்நாட்டுப்போரின் வெற்றிக்குக் காரணமான கூட்டாட்சி படைகளிழன் தளபதி கிராண்ட் ஒரு திறமையான தளபதி. ஆனால் மோசமான நிர்வாகி என்று பெயர் எடுத்தார். இவர் அரசியல் விவகாரங்களில் அவ்வளவு அக்கறை காட்டியதில்லை. ஒரே ஒரு தடவை தான் ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்திருக்கிறார். மனிதர்களை எடைபோடுவதில்

திறமையற்றவர். தன்னை புகழ்கிறவர்களை எளிதில் நம்பிவிடுவார். தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று தெரியாமல் இருப்பார். இவர் குடியரசுக் கட்சியின் பெரும் பணக்காரர்களினால் நியமிக்கப்பட்டவர். எனவே இந்தக் காலகட்டத்தில் தங்களுடைய தொழிற்துறை, பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ள விரும்பினார்கள்.

கிராண்டின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவரது நண்பர்கள் ஊழல் மூலம் பணம் திரட்டலாயினர். ஜேகௌல்ட், ஜிம்பிஸ்க் என்ற இரண்டு பணக்காரர்கள் 1869ஆம் ஆண்டு தங்கத்தை வாங்கி விற்பதில் பெரும் பணம் சேர்த்தனர். கிரிடிட் மொபிலியர் என்ற ஒரு நிறுவனம் யூனியன் பசிபிக் ரயில்பாதை நிறுவன பங்குதாரர்களால் உருவாக்கப்பட்டது. ரயில்பாதைகள் அமைக்கும் பணிகளை இந்நிறுவனம் அரசிடம் எடுத்தது. ஆனால் அப்பணியைச் செய்ய கிரிடிட் மொபிலியர் கம்பெனிக்கு வழங்கினார். தங்களுக்குள்ளே பணத்தை எடுத்துக்கொண்டு யூனியன் பசிபிக் ரயில்வே கம்பெனியை திவாலாக்கி விட்டனர். ஆனால் கிரிடிட் மொபிலியர் கம்பெனியோ 23 மில்லியன் டாலர்கள் லாபம் சம்பாதித்தது. இதற்காக காங்கிரசின் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் அனைவருக்கும் கையூட்டு வழங்கப்பட்டது கண்டறியப்பட்டது. இவ்விசயத்தில் துணை ஜனாதிபதி பால்பாக்ஸ் சம்பந்தப்பட்டிருந்தது தெரியவந்தது.

இரண்டாம்முறையும் குடியரசுக்கட்சியின் பெரும் செல்வந்தர்களின் உதவியினால் கிராண்ட் ஜனாதிபதியானார். இம்முறையும் அவரது நண்பர்கள் ஊழலில் திளைத்தனர். 1873ல் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதிக்கும் சம்பள உயர்வு தரும் மசோதாவை நிறைவேற்றினார். இந்த சம்பள உயர்வையும் பின்தேதியிட்டு எடுப்பது என்பதை பொதுமக்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இதனை திரும்பப்பெற வலியுறுத்தி வெற்றி பெற்றனர்.

இருந்தபோதும் ஊழல்கள் வளர்ந்து கொண்டேயிருந்தன. ட்வீடு ரிங் நிறுவனத்தின் தலைவர் 100 மில்லியன் டாலர்கள் நியுயார்க் நகரில் கொள்ளையடித்துச் சென்றுவிட்டு ஐரோப்பாவிற்குத் தப்பிச் சென்று விட்டார். சில நேர்மையான அரசியல்வாதிகளால் இந்த ஊழல்கள் வெளிக்கொணரப்பட்டன. இப்படி நியாயமாக நடந்து கொண்டதற்காக பதவியிழந்தவர் நிதித்துறை செயலர் பென்ஜமின் பிரிஸ்டோ ஆவார். விஸ்கிக்கு தீர்வை வரி செலுத்தாமல் கோடிக்கணக்கான டாலர்கள் சுருட்டப்பட்டன. இதனை விசாரிக்க குழு அமைத்து விசாரித்த போது கிராண்டின் தனிச்செயலர் டாப்காக் சம்பந்தப்பட்டிருந்தது தெரியவந்தது. அதேபோல் படைத்துறைச் செயலர் பெல்நாப் சிவப்பிந்தியர் வாழும் ஒதுக்கப்பட்ட இடங்களை வர்த்தகம் செய்ய சிலருக்கு அனுமதியளித்திருந்தார்.

வெளியுறவுச் செயலர் ஹாமில்டன்பிஸ் கியுபாவுடன் ஒரு மோதல் ஏற்படுவதை தவிர்த்தார். அதேபோல் இங்கிலாந்துடன் சுமூகமாக பிரச்சனையைத் தீர்த்தார். அமெரிக்காவிலிருந்து கொண்டு கனடா மீது தாக்குதல் நடத்திய ஐரீஸ் தேசியவாத குழுவினரின் நடவடிக்கைகளினால் இங்கிலாந்து அதிருப்தி கொண்டிருந்தது. உள்நாட்டுப்

போரின்போது தென்பகுதியினர் சில தனியார் கப்பல்களை பிரிட்டனிடமிருந்து பெற்று தாக்குதல் நடத்தியதில் ஏற்பட்ட சேதங்களுக்கு நஷ்டஈடு தருவது தொடர்பாக வாஷிங்டனில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இரண்ட நாடுகளுக்கு ஜெனிவாவில் உள்ள ஒரு நடுவர் குழு விசாரணைக்குச் சம்மதித்தனர். இதில் 15 மில்லியன் டாலர்கள் அமெரிக்காவிற்கு நஷ்டஈடாக இங்கிலாந்து தர வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டது. பிரிட்டிஷ் பிரதமர் கிளாட்ஷ்டோன் இதனை ஏற்றுக் கொண்டார். வெளிவிவகாரத்துறையில் இப்படி சில வெற்றிகள் கிராண்ட்டின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்டன.

1. அமெரிக்க உள்நாட்டுப் போருக்குப்பின் நடைபெற்ற தென்மாநிலங்களின் சரமைப்புப் பணியில் இருந்த பிரச்சினைகளைக் கூறுக.
2. உள் நாட்டு போருக்குப்பின் மேற்கொள்ளப்பட்ட புணரமைப்பு திட்டங்கள் பற்றி எழுதுக.

## தொழில் விரிவாக்கமும் விவாசய எதிர் இயக்கமும்

1865ஆம் ஆண்டிலிருந்து 1900 ஆம் ஆண்டு வரை தொழில், விவசாயம் போன்ற துறைகளில் பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளை விட மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்து ஐக்கிய நாடுகள் விரைவாக முன்னேறியது. "உள்நாட்டுப் போர் முடிவிற்குப்பின் வந்த காலக் கட்டத்தில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நிகழ்ந்த அறிவியல் மற்றும் நவீன கண்டுபிடிப்புகளில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் வாழ்க்கை வசதிகள் பெருகுவதற்கான வாய்ப்புகள் ஆகியவை போன்று உலக நாகரிக வரலாற்றில் வேறு எந்த நிலப்பகுதியிலும் நிகழ்ந்ததில்லை என்று எட்வர்ட் அட்கிசன் என்பார் பொருத்தமாகவே கூறியுள்ளார். அப்போது குடியரசுக் கட்சியே அதிக செல்வாக்குடன் திகழ்ந்தது ஜனாதிபதி கிராண்டு, ஹேயஸ், கார்பீல்ட், ஆர்தர் போன்றவர்கள் இக்கட்சியைச் சார்ந்தவர்கள் 1885ல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளாரான, கிளீவ்லாண்ட் வெற்றி பெற்றார். நான்காண்டுகளுக்குப் பின் குடியரசுக் கட்சி வேட்பாளரான பெஞ்சமின் ஹாரிசன் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1892ல் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான கிளீவ்லாண்ட் மறுபடியும் ஜனாதிபதியானார் எனினும் 1896ல் குடியரசுக் கட்சியை சார்ந்த மெக்கின் லீ ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### பெரும் வாணிகமும் கூட்டு வாணிகமும்

மக்களின் பொருளாதார சமூக வாழ்வை முற்றிலும் மாற்றியமைத்த தொழிற்புரட்சி உள்நாட்டுப் போருக்கு முன்பே ஆரம்பமாயிற்று. எல்லாத் துறைகளிலும் ஏற்பட்ட அதன் பெரும் வளர்ச்சிக்கு பல காரணங்கள் இருந்தன. ஐக்கிய நாடு பரந்த நிலப்பரப்பும் கனி வளமும் பொருள் வளமும் நிறைந்து சிறந்த தட்ப வெப்ப நிலையும் பெற்றிருந்தது. நவீன இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாகவும் அடிமை முறை ஒழிக்கப்பட்டதாலும் தொழ்ற்சாலைகளுக்கு வேலை செய்ய தொழிலாளர்கள் அதிகம் வந்ததாலும் உற்பத்தியை

பெருக்க முடிந்தது இரண்டாவதாக "முதலீட்டிற்குத் தேவையான மூலதனத்தை நாடு பெற்றிருந்தது. அரசியல் நிலையில் உறுதி தன்மை, குறைந்த வரி விதிப்பு, அதிக சேமிப்பு, நிர்வாகத் தலையீடின்மை போன்றவை முதலீடு செய்வதற்கு அதிக அளவு ஊக்கத்தை ஐரோப்பியர்கள் ஆசிய ஆப்பிரிக்க மக்களிடமிருந்து சுரண்டி பணத்தை அமெரிக்காவில் முதலீடு செய்தனர். மூன்றாவதாக அங்காடி வசதிகளை ஐக்கிய நாடுகள் பெற்றிருந்தது. ஐரோப்பாவில் அமெரிக்கப் பொருட்களுக்கு நிரந்தரத் தேவை இருந்தது. போக்குவரத்து வசதிகள் இருந்ததால் பொருட்களைத் தொழிற் கூடங்களிலிருந்து சந்தைகளுக்கு எடுத்துச் செல்வது எளிதாக இருந்தது. நான்காவதாக முதலீடு செய்ய விரும்பும் மக்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதே அமெரிக்காவின் நோக்கமாகும். இதுவே அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது.

விஞ்ஞானத்தில் ஏற்பட்ட முன்னேற்றமும், அதிக உற்பத்தியை பெருக்க கையாண்ட வழிமுறைகளும் தொழில் துறையை வளர்ச்சியடையச் செய்தது. கனரகத் தொழிற் துறைகளான இரும்பு, எ∴கு எண்ணை இயந்திரங்கள் போன்றவை நெசவு, மரம் உணவுப்பதனிடுதல் போன்ற இலகுரகத் தொழில் துறைகளை விட மிக விரைவாக வளர்ந்தன. எ∴கு அதிக அளவில் உற்பத்திச் செய்யப்பட்டமையாலும், மின்னஸோடட்டாப் பகுதியிலுள்ள மெஸாபியில் சுரங்கங்கள் தோண்டப்பட்டதால் எ∴குக்கு எழுந்த தேவையும் தொழிலக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தன. சுரங்கங்கள் தோண்டப்பட்டன. தொழிற்சாலைகள் பல நிறுவப்பட்டன நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் சுத்திரிப்பு சாலைகள் அமைக்கப்பட்டன. விவசாய இயந்திரங்கள் உற்பத்தி செய்யப்பட்டமையாலும் மேற்குப் பகுதியின் பெரும் சமவெளிகள் விவசாயத்தின் கீழ் கொண்டு வரப்பட்டமையாலும் விவசாயப் பொருள்களின் உற்பத்தி அதிகரித்தது. ஆரம்பத்தில் டெக்ஸாஸ் மாநிலத்தில் மட்டிலும் இருந்த கால்நடை வளர்ப்பு நாளடைவில் மற்ற பகுதிகளிலும் விரிவாக்கப்பட்டது. வங்கிகள் நிலையான நாணய முறையைப் பின்பற்றியதோடு கடன்களையும் தந்து உதவியது. விரிவான சாலைகளை அமைக்க திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அட்லாண்டிக் கரையிலிருந்து பசிபிக்சமுத்திரப் பகுதிகளுடன் தொடர்பு கொள்ள இரயில் பாதைகள் போடப்பட்டன. கப்பல், மோட்டார் வண்டிகள், விமானங்கள் ஆகியவை பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. தந்தி, தொலைபேசி போன்றவை நாடெங்கிலும் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேற்குறிப்பிட்ட துறைகளில் ஏற்படுத்தப்பட்ட பெரும் வளர்ச்சி, மக்களை வளம் பெறச் செய்ததோடு, அமெரிக்க ஐக்கிய நாடுகளை உலக நாடுகளிலே வலிமை வாய்நத நாடாக வலுப்பெறச் செய்தது.

தொழில்மயமாதலின் ஆரம்ப காலத்தில் பெரும்பான்மையான தொழிற்சாலைகளை சிறு முதலாளிகளோ அல்லது சிறு கூட்டுக்குழுக்களோ சொந்தமாக வைத்திருந்தன. ஏராளமான தொழில் நிறுவனங்களுக்கிடையே நிலவிய கடும் போட்டி காரணமாக விலைக் குறைப்பு, ஆதாய இழப்பு ஆகியவை ஏற்பட்டு 1837ம் ஆண்டில் பெரும் திகில் தோன்றியது.

இதனை நிவர்த்தி செய்ய வாணிப நிறுவனங்கள் கூட்டுச் சேரவேண்டியதன் அவசியத்தை உணர்ந்தன. பெரும் வியாபார வளர்ச்சியை ஆதரிப்பதை தனது கொள்கையாகக் கொண்டிருந்த குடியரசுக் கட்சி பெரும் வணிக வர்க்கத்தினருக்கு முழு ஆதரவளித்தது. வெளிநாட்டுப் போட்டியிலிருந்து தொழில் துறைகளைக் காக்க குடியரசு நிர்வாகம் வெளிநாட்டுப் பொருட்கள் மீது அதிக சுங்க வரியை விதித்தது. உள்நாட்டு தொழிற் துறைகளுக்க சலுகைகளும், வெகுமதியும் அளித்தது. அரசின் இந்நடவடிக்கைகள் பெரும் வியாபார நிறுவனங்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தன.

தொழிலகக் கூட்டு நிறுவனத்தில் மூன்று படிவங்கள் இருந்தன. முதலாவதாக, விளைபொருள் சேமிப்பு தொகுதி என்பது ஒரு வகை வியாபார அமைப்பாகும். இதன் அங்கத்தினர்கள் உற்பத்தியளவு, விநியோகம் இவற்றின் அடிப்படையில் கிடைகக்சுடிய வியாபார ஆதாயத்தை தங்களுக்குள் பங்கீட்டுக் கொண்டு பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்த முயன்றனர். ஆனால் 1890 ம் ஆண்டிற்குள்ளாக இயற்றப்பட்ட சட்டங்கள் குறிப்பாக மாநிலங்களுக்கிடையிலான வாணிபச் சட்டம் விளைபொருள் சேமிப்பு தொகுதிக்கு பதிலாக பொருள் கூட்டு நிறுவனமுறை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன. கூட்டு நிறுவன முறை என்பது மற்றொரு வியாபார அமைப்பாகும். இதில் பங்குதாரர்கள் தங்களுடைய மூலதனத்தை கூட்டு நிறுவனக் குழுவிடம் ஒப்படைத்து அதற்குரிய பத்திரத்தையும் அதன் பயனாகக் கிடைக்கும் நிதி அனுகூலத்தையும் பெற்றுக் கொள்கின்றனர். கூட்டு நிறுவனக் குழுவினர் வியாபாரம் நடத்தும் முழு அதிகாரத்தையும் பெற்றிருந்தனர். உண்மையில் கூட்டு வாணிப நிறுவனம் என்பது ஒரு வகையான வியாபார அமைப்பாகும். விரிவான நோக்கில் பார்க்கும் போது எந்த ஒரு முற்றுரிமையையும் பெரும் வாணிகக்கழகத்தையும் கூட்டு வாணிப நிறுவனம் எனக் கூறலாம். ஷெர்மன் கூட்டு நிறுவனத் தடை சட்டம் கூட்டு வாணிப முறைக்கு தடையாக எழுந்தது. எனவே அதற்குப் பதிலாக சார்புப் பங்கு கம்பெனிகள் என்பவை பெரும் மூலதனத்தைக் கட்டுப்படுத்தி அல்லது சொந்தமாக வைத்துக் கொண்டு பிற நிறுவனங்கள் மீது மேலாதிக்கம் செலுத்தும் ஓர் அமைப்பாகும்.

1. அமெரிக்க ஐக்கிய நாட்டில் பெரு வாணிபத்தின் வளர்ச்சியைக் குறிப்பிடுக.
2. பெருந்தொழில் முறை எழுச்சியுற உதவிய காரணங்களை விவரிக்க.
3. பெரும் வாணிப வளர்ச்சிக்கான காரணங்கள் யாவை?
4. தொழில் வளர்ச்சி மற்றும் வாணிப வளர்ச்சியை விவரி?

## விவசாயக் கிளர்ச்சியும் பொது மக்கள் இயக்கமும்

## (Agrarian Unrest and Populist Movement)

முதலாளித்துவத்திற்கு எதிராக விவசாயிகள் எழுச்சியுற்றதற்கு இரு அடிப்படைக் காரணங்களுண்டு. முன்பு விவசாயத்தில் ஆர்வம் காட்டிய விவசாயிகள் வாழ்க்கைத் தரம் தொழிலாளிகளை விட மேம்பட்டிருந்தது. ஆனால் தற்பொழுது அவர்கள் சமுதாயத்தில் தங்கள் நிலை தாழ்ந்து இருப்பதை உணர்ந்தனர். இரண்டாவதாக, பெரும் வாணிகத்தின் விளைவாக சமுதாயத்தில் பாதிக்கப்பட்டவர்கள் விவசாயிகளாகவே இருந்தனர். பெரும்பான்மையான அவர்களது கோரிக்கைகள் நியாயமானதாகவே இருந்தது. விளை பொருள்களை அங்காடிகளுக்கு கொண்டு செல்ல அவர்கள் இரயில் பாதைகளை நம்பியிருந்தனர். ஆனால் பொருட்களின் விலையில் பெரும்பகுதி பொருள்களைக் கொண்டு செல்வதற்காக செலவிடப்பட்டது. அவர்களது இரண்டாவது கோரிக்கையானது வங்கிகள் காப்பீட்டு நிறுவனங்களுக்கெதிராக இருந்தது. நிலங்கள், இயந்திரங்கள் மற்றும் உரங்களை வாங்குவதற்கு கடன் தேவைப்பட்டபோது அவர்கள் அதிக வட்டிக் கடனை வங்கிதாரர்களிடமிருந்து பெற்றனர். மூன்றாவது கோரிக்கை வணிகர்களுக்கெதிரானதாக இருந்தது. விளைபொருட்களுக்கு குறைந்த விலையும், இயந்திர உற்பத்திப் பொருட்களுக்கு அதிக விலையும் நிர்ணயம் செய்வதற்கு வணிகர்களும் தூண்டு கோலாக இருந்தனரென்று விவசாயிகள் கருதினர். இவ்விதமாக தாங்கள் பல வழிகளில் சுரண்டப்படுவதாக அவர்கள் நம்பினர்.

புதிய கருவிகளும், புதிய விவசாய முறைகளும் உற்பத்தியைப் பெருக்கியது. எனினும் புதிய கருவிகளை வாங்குவதற்கு முடியாமல் விவசாயிகள் தவித்தனர். அதிக உற்பத்தியின் விளைவாக விவசாய பொருளின் விலை பெரும் வீழ்ச்சியுற்றது. மேலும் பொருட்களை விற்பதற்காக அங்காடிகளுக்கு செல்ல பணம் ஏராளம் செலவிட வேண்டியதாயிற்று. பெருமளவில் பொருள்களை வியாபாரத் தலங்களுக்குக் கொண்டு சென்றவர்களுக்கு மட்டுமே தள்ளுபழ வலுகைகள் வழங்கப்பட்டது. தரினயங்களின் தரத்தை நிர்ணயிப்பதிலும் அவைகளின் அளவை நிறுத்தலிலும் விவசாயிகள் எளிதாக ஏமாற்றப்பட்டனர். சுருங்கக்கூறின் உற்பத்தியாளர்கள் நியாயமான விலையைப் பெறாதபோது தரகர்களே பெரும்பான்மையான இலாபம் பெற்றனர்.

**கிரேன்ஜ் (The Grange)**

நியாயம் பெற பல காலமாக மேற்கொண்ட பயனற்ற போராட்டத்திற்குப் பின்னர் ‘கிரேன்ஜ்’ என்று சிறப்பாக அழைக்கப்பட்ட பண்ணை மனையை ஆலிவர் H. கெல்லி என்பவர் 1867 ஆம் ஆண்டில் ஏற்படுத்தினர். விவசாயிகள் மத்தியில் கூட்டுறவை வளர்த்தல், சிறந்த கல்வி வசதிகளை அளித்தல், சுற்றுலா, விரிவுரைகள், கூட்டங்கள் போன்ற சமுதாய பொழுதுபோக்கு வசதிகளை அளித்தல் போன்றவை இதன் ஒருசில நோக்கங்களாகும். இவ்வமைப்பு எவ்வளவு துரிதமாக வளர்ந்ததென்றால் 1874-ல் இதன்

உறுப்பினர்கள் இல்லினாய்ஸ், விஸ்கான்சின், ஐயோவா, மின்னசோட்ட சட்டமன்றங்களில் ஆதிக்கம் செலுத்தினர்.

இக்கட்சியினரால் கட்டுப்படுத்தப்பட்ட சட்டமன்றங்கள் இருவகைப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்த முயன்றது. இச்சட்ட மன்றங்கள் பொருட்களைக் கொண்டு செல்வதற்கும், கிட்டங்கிகளில் சேர்த்து வைப்பதற்கும் தேவையான கூலியை நிர்ணயிப்பதற்கும், சட்டங்களை இயற்றின. விவசாயிகள் மத்தியில் கூட்டுறவு இயக்கங்களை ஆரம்பித்தன. இச்சட்டங்கள், தலைமை நீதிமன்றத் தீர்ப்புக்களையும் கூட்டு நிறுவனங்களின் எதிர்ப்புகளையும் மீறி விவசாயிகளுக்கு நன்மை பயத்தன.

பண்ணைக் காவல்களின் வீழ்ச்சிக்குப் பிறகு தோன்றிய வட மேற்குக் கூட்டு (North Western Alliance), விவசாயிகள் கூட்டு போன்ற தொழிற்சங்கங்கள் குறைந்த செலவில் போக்குவரத்தை ஏற்படுத்துதல், இரயில் பாதைகளை ஒழுங்குப்படுத்துதல், நாணயத்தை அதிகமாகப் புழக்கத்திலிடுதல், வட்டியின்றி கடன்பெற வங்கியை சீர்திருத்தியமைத்தல், தொழிற்கூடங்கள் மீது அதிகக் கட்டுப்பாடுகளை விதிக்கும் வரிவிதிப்புக் கொள்கை ஆகியவற்றிற்காகப் போராடின. ஆனால் இவ்வமைப்புகளும் வலிமை இழந்தன.

**பாப்புலிஸ்ட் கட்சி**

விவசாயிகள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட இயக்கங்களில் பாப்புலிஸ்ட் கட்சி முக்கியமானதாகும். 1891ல் சின்சின்னாட்டியில் தொடங்கிய இக்கட்சிக்கு முதலில் மக்கள் கட்சி என்று பெயர். நெப்சாஸ்காவில் ஒமாஹா என்னுமிடத்தில் நடைபெற்ற மாநாட்டில் "ஒமாஹா மேடை" என்றழைக்கப்பட்ட தங்களது கோரிக்கைகள் அடங்கிய ஒரு சாசனத்தை வெளியிட்டனர். எல்லாப் பொருளாதார துறைகளிலும் அரசுக் கட்டுப்பாடுகள் விரிவாக்கப்பட வேண்டுமென இக்கட்சி கோரியது. இரயில் பாதைகளை தந்தி ஆகியவற்றை அரசே மேற்கொண்டு நடத்துதல், தபால் சேமிப்பு வங்கிகளை நிறுவுதல், அதிக பணத்தை புழக்கத்தில் விடுதல், நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல், வரையறுக்கப்பட்ட வருமான வரி முறையைப் புகுத்தல், நேரடி மக்களாட்சி முறைகளான மக்கள் முயற்சி, மக்கள் வாக்கெடுப்பு போன்றவற்றை அறிமுகப்படுத்தல் ஆகியவைகளே இதன் முக்கியத் திட்டங்களாக இருந்தன. ஜனநாயகக் கொள்கைகளை கொண்டு விளங்கிய போதிலும் பாப்புலிசமானது யூத முதலாளிகளுக்கெதிராக இன வெறுப்புக் கொள்கையை கையாண்டது. எனினும் வெள்ளையர் கறுப்பர்களிடையே ஒற்றுமையை வளர்க்கவும் நாட்டின் மூன்றாவது அரசியல் கட்சியாக தோன்றுவதற்கும் முயன்றது. தென் பகுதிகளிலும் பெரும் சமவெளிப் பகுதிகளிலும், ராக்கி மாநிலங்களிலும் இக்கட்சி அதிக செல்வாக்குப் பெற்றது. ஆனால் இக்கட்சி ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தது.

இருந்தபோதிலும் விவசாயிகள் ஆதரவினால் "பாப்புலிசம்" வளர்ந்தது. இக்கட்சியில் தலைசிறந்த தலைவர்கள் இக்னேஷியஸ் டோனல்லி, ஜேப்ஸ் வீவர், ஜெரிசிப்சன்

போன்றவர்களாவர். முந்திய தலைமுறையில் அமெரிக்காவில் "நோ நத்திங்ஸ்" (Know Nothings) என்ற கட்சி உருவாகிறது. தங்களது கட்சியைப் பற்றி இக்கட்சியைச் சார்ந்தவர்களிடம் ஏதாவது வினா எழுப்பினால் அவர்கள் "தங்களுக்கு ஒன்றும் தெரியாது" என்று பதில் அளிப்பது வழக்கம். எனவே இக்கட்சியானது ஒன்றுமறியாதவர் கட்சி என்று அழைக்கப்பட்டது. இக்கட்சியின் முயற்சியால் இரயில் பாதைகளும் உள்நாட்டு வாணிகமும் பொது அமைப்பின்கீழ் கொண்டுவரப்பட்டன. வங்கியும், நாணயமும் சீர்திருத்தியமைக்கப்பட்டன. விவசாயிகளின் நலனைப் பேணுவதையே தேசிய கட்சிகளின் நோக்கமாக இருந்தது. தியோடர் ரூஸ்வெல்ட், உட்ரோ வில்சன் போன்றோர் காலத்தில் அபிவிருத்திச் சட்டங்கள் இயற்றப்படுவதற்கு இவைகள் அடிகோலின.

பாப்புலிஸ்ட் கட்சியின் வீழ்ச்சிக்குப் பல காரணங்களுண்டு. அதனுடைய இடதுசாரித் திட்டங்களும் வெள்ளையர், கறுப்பர் ஒற்றுமைக் கொள்கையும் பொது மக்களிடம் எவ்விதச் செல்வாக்கும் பெறவில்லை. தனியார் துறையில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த அமெரிக்கர், பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் தலையீட்டை விரும்பவில்லை. நீக்ரோக்களை வெள்ளையர்கள் வெறுத்ததால் இவர்கள் அரசியலில் வெள்ளையர்களோடு ஒத்துழைக்க மறுத்தனர். இரண்டாவதாக, கிழக்கு மாநிலங்களிலிருந்து எவ்வித ஆதரவும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. மூன்றாவதாக, ஜனாதிபதி தேர்தலில் ஏற்பட்ட தோல்வியால் இக்கட்சி செல்வாக்கிழந்தது. இறுதியாக, விவசாயிகளே இக்கட்சி மீது கொண்டிருந்த ஆர்வத்தை இழந்தனர். ரஷியாவிலும், அர்ஜெண்டினாவிலும் அறுவடை தவறியதால் தானியங்களுக்கு அதிக விலை கிடைத்ததைக் கண்டு திருப்தியடைந்தனர். இதனால் தங்களது கோரிக்கைகளை எடுத்துரைக்க மூன்றாவது கட்சி தேவையற்றது என்று விவசாயிகள் கருதினார்கள்.

**தொழிலாளர் அமைப்பு**

முதலாளித்துவத்திற்கு எதிராக தங்களது நலனைப் பாதுகாக்க தொழிற் சங்கங்கள் அமைக்கப்படுவதன் அவசியத்தை தொழிலாளர்கள் உணர்ந்தனர். தொழிற்சாலைகளனைத்தும் தொழிலாளர்களின் நலனில் அக்கறை எதுவும் காட்டாது இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு இயங்கின. இதனால் தொழிலாளிகள் தங்கள் நலனை காப்பதற்காக சங்கங்கள் அமைக்க விரும்பினர்.

தொழிற்கூடங்கள் இயந்திரமயமாக்கப்பட்டமையாலும் மூலதனம் ஒருங்கமைக்கப்பட்டமையாலும் தொழிலாளிகள் முதலாளிகளின் தயவில் இருந்து வந்தனர். வேலை நிபந்தனைகள் மிகவும் திருப்தியற்றதாகவே காணப்பட்டன. பெண்களும் குழந்தைகளும் சிரமமான வேலைகளில் அமர்த்தப்படடனர். வாரத்தில் ஆறு நாட்களிலும் நாள் ஒன்றுக்கு சராசரி 10 மணி நேரம் வேலை செய்தனர். பணியில் அமர்த்துவோர் தொழிலாளர்களுக்கு தொழிற்சாலைகளில் பாதுகாப்பளிப்பதில் அக்கறைக்காட்டடாததால்

விபத்துக்கள் அதிகம் ஏற்பட்டது. விபத்திற்குள்ளாக்கப்பட்டவர்களுக்கு எவ்வித இழப்பீடும் கொடுக்கப்படவில்லை.

**சங்கங்களின் தோற்றம்**

உள்நாட்டுப் போரின்போது இருந்த கைவினைஞர் சங்கங்களைவிட 1870ல் அதன் எண்ணிக்கை உயர்ந்தது. இதற்கிடையில் தொழிலாளர்கள் ஒரு தேசிய தொழிலாளர் சங்கத்தை 1866ஆம் ஆண்டு தோற்றுவித்தனர். இது 1870லிருந்து தொழிலாளிகளுக்கு ஊதிய உயர்வு, குறைந்த நேரவேலை, பணிப் பாதுகாப்பு ஆகியவற்றை பெற்றுத்தர இயலாததாலும், மக்களின் ஆதரவின்மையாலும் அவை நலிவுற்றன.

தேசிய தொழிற்சங்கத்தின் வீழ்ச்சிக்குப்பின் "உழைப்பு உயர்நிலை வீரர்கள்" (Knights of Labour) செலவாக்குப் பெற்றனர். ஓர் இரகசியக் குழுவாக 1869-ல் பிலடெல்பியாவில் அமைக்கப்பட்டு பௌடர்லி (Powderly) என்பவரின் தலைமையின் கீழ் தொழிலாளர்களின் தேசிய சங்கமாக இது தோன்றியது. பல தொழிற்சங்கங்களுக்குப் பதிலாக பெரியதோர் அமைப்பு ஏற்பட வேண்டுமென இது விரும்பியது. தொழிலாளிகள் அனைவரும் இதில் உறுப்பினரானார்கள். நீக்ரோக்களும் வெள்ளையர்களும் திறமை பெற்றோரும், திறமையற்றோரும், ஆண்களும், பெண்களும் இதில் இடம் பெற்றார்கள். தொழிலை அடிப்படையாக்க கொள்ளாது, வாழும் பகுதியை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர்களின் சிறுகிளைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. சிறு கிளைக் குழுக்கள் பிரதிநிதிகளை மாவட்டக் குழுக்களுக்கு அனுப்ப, அவைகள் பொதுக் குழுவிற்கு பிரதிநிதிகளை அனுப்பின. தாங்கள் உருவாக்கிய செல்வத்தை முழுமையாக அனுபவிக்கவும், தங்கள் அறிவு, நல்லொழுக்க சமுதாயப்பண்புகளை வளர்க்கத் தேவையான ஓய்வைப் பெறவும் இச்சங்கம் விரும்பியது. இச்சங்கத்தின் கொள்கைகள் பலரைக் கவர்ந்தன ஆனால் 1866-ல் சீராக்கப்பட்ட வணிக அமைப்பு மற்றும் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு, எட்டு மணி நேர வேலையை பொதுவாகப் பின்பற்ற மேற்கொண்ட முயற்சி தேர்வியுற்றது. அவ்வமைப்பும் வீழ்ச்சியடைந்தது.

உழைப்பு வீரர்கள் அமைப்பு செல்வாக்கிழந்த பிறகு சாமுவேல் சாப்பர்ஸ் என்பவர் 1881ல் பிட்ஸ்பர்க்கில் அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு ஒன்றை தோற்றுவித்தார். இச்சங்கமானது தனித்தியத்திற்கும் கைவினைச் சங்கங்களின் ஆதரவைப் பெற்றிருந்தது. வாரத்திற்கு ஆறு நாட்கள் வேலையையும் நாள் ஒன்றிற்கு எட்டு மணி நேர உழைப்பையும், சிறந்த ஊதியத்தையும், குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவரை தடை செய்யவும் இது கோரியது. இவைகளைப் பெற வேலை நிறுத்தம் புறக்கணிப்பு ஆகியவை அடிக்கடி கையாளப்பட்டன. போராட்டத்தாலும் கூட்டு உடன்பாட்டாலும் இவ்வமைப்பானது நாள் ஒன்றிற்கு எட்டு மணி நேர வேலை என்ற முறையை பல ஆலைகளில் ஏற்றுக் கொள்ளச் செய்தது. தொழிலாளர் சங்கத்தில் சேரக்கூடாது என்று தொழிலாளர்களைக் கட்டாயப்

படுத்திய நேர்மையற்ற தொழிலாளர் ஒப்பந்தங்களைக் கட்டாயப் படுத்திய நேர்மையற்ற தொழிலாளர் ஒப்பந்தங்களை இது ஒழித்தது.

தொழிலாளர் நிறுவனங்கள் தங்கள் கோரிக்கைகளை நிறை வேற்றிக் கொள்ள பொதுவாக வேலை நிறுத்தங்களையும் புறக்கணிப்பையும் (Boycott) மேற்கொண்டனர். ஆனால் இவ்வேலை நிறுத்தம் கூட்டாட்சிப் படைகளால் நசுக்கப்பட்டது. முதலாளிகள் தொழிலாளர் களைப் பல வகையில் துன்புறுத்தினர். தொழிற்சங்கங்களின் முயற்சிகளை முதலாளிகள் முறியடித்தனர்.

## கூட்டு வணிக நிறுவன எதிர்ப்புச் சட்டங்கள்

## (Anti Trust Legisation)

விவசாயிகள், தொழிலாளர்கள் மத்தியில் வளர்ந்த அதிருப்தியும் கழகங்கள் மற்றும் கூட்டு வாணிப நிறுவனங்களுக்கு எதிராக அவர்கள் மேற்கொண்ட போராட்டடங்களும், பெரும் வணிக நிறுவனங்களின் செயல்முறையில் தலையிட கூட்டாட்சியையும் மாநில அரசுகளையும் கட்டாயப்படுத்தின. எனவே கூட்டு வணிக நிறுவன எதிர்ப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

**கூட்டு வணிக நிறுவனத் தடைச் சட்டங்கள் இயற்றப்படுவதற்கான காரணங்கள்**

விவசாயிகளும், தொழிலாளர்களும் சமுதாய சீர்திருத்த வாதிகளும் கூட்டு வணிக அமைப்பை மாற்றியமைக்க வேண்டுமென அரசைக் கட்டாயப்படுத்தினர். கூட்டு வணிக அமைப்பை ஒழுங்குபடுத்துவதற்காகப் போராட முற்றரிமை எதிர்ப்புக் கட்சியானது அமைக்கப்பட்டது. பொருளாதார அதிகாரம் குவிக்கப்படுதலைப் பற்றியும் விலையேற்றத்தைப் பற்றியும் அதிக அக்கறை கொண்ட அவர்கள் விலையில் வீழ்ச்சியை ஏற்படுத்தவும், உற்பத்தியாளர்கள் மத்தியில் போட்டியை வளர்க்கவும், அரசுக் கட்டுப்பாடு நிலைநாட்டப் படவேண்டுமென்றும் வற்புறுத்தினர். போராட்டத்தின் விளைவாக மாநில அரசுகள் பெரும் வணிபங்களை ஒழுங்குப்படுத்தும் நோக்கத்தோடு தானியக் களஞ்சியக் கட்டணம், இரயில் பாதைக் கட்டணம் ஆகியவற்றை நிர்ணயம் செய்தன. ஆனால் நீதித் துறையானது மாநில நடவடிக்கைகளைச் செல்லாததாக்கிற்று. 1886ஆம் ஆண்டு வாபஷ் வழக்கில் (Wabask case) தங்களது எல்லைகளுக்கப்பால் பொருள்களைக் கொண்டு செல்வதற்கான கூலியை நிர்ணயிப்பதற்கு மாநிலங்களுக்குரிமை இல்லையென நீதிமன்றப் தீர்ப்ப வழங்கியது. மேலும் 1889 ஆம் ஆண்டின் மின்னசொட்டாரேட் வழக்கில் மாநிலங்கள் நிர்ணயித்த கூலி நியாயமானதா என்பதை மன்றமே தீர்மானிக்க வேண்டுமென கூறிற்று. மாநிலங்களின் ஒழுங்குமுறைக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்புக்கள் அமைந்தமையால், கூட்டாட்சி சட்டமன்றங்கள் சட்டமியற்ற வேண்டியதின் அவசியத்தைத் தலைவர்கள் வற்புறுத்தினர். அதற்காக இரு குழுக்கள் அமைக்கப்பட்டன. கட்டணங்கள் சட்டமியற்ற வேண்டியதின் அவசியத்தைத் தலைவர்கள் வற்புறுத்தினர். அதற்காக இரு குழுக்கள் அமைக்கப்பட்டன கட்டணங்களைக் குறைக்க வேண்டுமாயின், தனியார் இரயில் போக்குவரத்து

நிறுவனங்களுக்குப் போட்டியாக தேசிய அரசு இரயில் பாதைகளை நிர்வகிக்க வேண்டுமென 1874-ஆம் ஆண்டில் வின்டம் குழு கூறியது. மாநிலங்களுக்கிடையிலான வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த, காங்கிரஸ் சட்டங்களை இயற்ற வேண்டுமென எல்லாம் குழு கருத்துத் தெரிவித்தது.

அதன்படி 1887ல் உள்நாட்டு வணிகச் சட்டம் இயற்றப்பட்டது. இரயில்வேத் துறைகள் தங்களது கட்டணங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டுமென்றும் இக்கட்டணம் நியாயமானதாக இருக்க வேண்டுமென்றும் இச்சட்டம் கூறியது. இச்சட்டமானது பல்வேறு இரயில் பாதைகளுக்கிடையிலான சூதாட்டத்தன்மை கொண்ட ஒப்பந்தங்களையும் பொருள்களைக் கடத்துபவர்களுக்கு தள்ளுபடி கொடுத்தலையும், அதைத் தொடர்ந்து ஏற்படுகின்ற கட்டண வேறு பாட்டினையும் தடை செய்தது. இரயில் பாதைகளின் முறையீடுகளை விசாரிக்க ஐந்து உறுப்பினர் கொண்ட ஓர் உள்நாட்டு வணிக்குழு அமைக்கப்பட்டது. உள்நாட்டு வாணிபம் மத்திய அரசின் அதிகார எல்லைக்குட்பட்டிருந்தால் மாநிலங்களால் அதனை ஒழுங்குபடுத்த முடியவில்லை.

**ஷெர்மன் கூட்டு வணிகத் தடைச் சட்டம் (Sherman Anti-Trust Act)**

உள்நாட்டு வாணிகச் சட்டம், இரயில் பாதை கம்பெனிகளின் முறையற்ற நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தவறியது. ஆகவே 1889ல் செனட்டரான ஷெர்மன் கூட்டு வணிக அமைப்பின் செயல்முறையை ஒழுங்குபடுத்தும் நோக்கத்தோடு கூட்டு வணிக நிறுவனத் தடை மசோதாவைக் கொண்டு வந்தார். அது நிறைவேற்றப்பட்டு அவர் பெயராலே ஷெர்மன் கூட்டு வணிக நிறுவனத் தடைச் சட்டம் என்றழைக்கப்பட்டது. இச்சட்டத்தின் ஷரத்துக்கள் பின்வருமாறு.

(1) கூட்டு நிறுவனம் அமைத்தல் என்ற நோக்கோடு செய்யப்படும் ஒவ்வொரு ஒப்பந்தமும் சட்டத்திற்கு புறம்பானது (2) வாணிபத்தில் ஏகபோக உரிமையை நிலைநாட்டுபவர்களுக்கு அபராதம் அல்லது சிறைத் தண்டனையளிக்கப்படும் (3) வாணிபத்தை ஒன்றிணைத்து கட்டுப்படுத்தும் எந்த ஒரு ஒப்பந்தமும் சட்டத்திற்குப் புறம்பானது. (4) வாணிபத்தைக் கட்டுப்படுத்துவதற்காக ஏற்படுத்தப் பட்ட கூட்டு நிறுவனங்களை கூட்டாட்சி அதிகாரிகள் கலைக்கலாம். (5) இச்சட்டத்தின் ஷரத்துக்களை மீறுகின்றவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் சர்க்கியூட் நீதிமன்றங்களுக்குக் கொடுக்கப்பட்டன.

கூட்டு வணிக நிறுவன நடவடிக்கைகளுக்கு எதிரான பொது மக்கள் எதிர்ப்பும், நிவாணரத்திற்கான பொதுக் கோரிக்கையுமே ஷெர்மன் கூட்டு வணிக நிறுவனத் தடைச் சட்டம் இயற்றப்படுவதற்கான காரணமாகும். ஆனால் இச்சட்டத்தைத் திறம்பட செயல்படுத்துவது பற்றி ஜனாதிபதி ஹாரிசனும், கிளீவ்லாண்டும் அதிக அக்கறை காட்டவில்லை. தமக்குள்ளே கூட்டு அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்ட கம்பெனிகள் மீது

வழக்குத் தொடர்வதில் கூட்டாட்சி அதிகாரிகள் அதிக ஆர்வம் காட்டவில்லை. நீதித்துறை இச்சட்டத்திற்கு குறுகிய விளக்கம் தந்து சட்டத்தின் வலிமையை இழக்கச் செய்துவிட்டது.

ஆனால் நாளடைவில் நிர்வாகத் தன்மையில் ஒழுங்கையும் மாற்றத்தையும் கொண்டுவர வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்ததின் விளைவாக ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் வாணிகத் தொழிற்துறை ஒன்றையும் கூட்டு நிறுவனக் கழகம் ஒன்றையும் 1903ல் உருவாக்கினார் விசாரணை செய்து வாணிக் கூட்டுகள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இவ்விரு துறைகளும் கொடுக்கப்பட்டது. 1903ல் இயற்றப்பட்ட எல்க்கின் சட்டம் (Elkin's Act) இரகசியத் தள்ளுபடி கொடுத்தலும் அதனை ஏற்றுக் கொள்ளுதலும் சட்டத்திற்குப் புறம்பானவை எனக் கூறிற்று. வடபகுதி காப்பு கம்பெனிக்கும் (Northern Securities Company) ஐக்கிய நாடுகளுக்குமிடையிலான 1904ஆம் ஆண்டின் வழக்கில், தலைமை உயர் நீதிமன்றம் வாணிகத்திற்குத் தடையாக பங்குதாரர்கள் கம்பெனி (Holding Company) வணிகக் கூட்டு ஒன்றை அமைத்துள்ளது எனத் தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பால் ஊக்கம் பெற்ற ரூஸ்வெல்ட்டும், டாப்ட்டும் (Taft) ஷெர்மன் கூட்டு வணிக நிறுவனத்தடைச் சட்டத்தை செயல்படுத்தி அநேகக் கம்பெனிகளுக்கெதிராக நடவடிக்கை எடுத்தனர். ஜனாதிபதி வில்சனும் முற்றுரிமையை ஒழிக்க பெரு முயற்சியை மேற்கொண்டார். நேர்மையான போட்டியை ஊக்குவிக்கவும் குற்றவாளிகளைத் தண்டிக்கவும் தொடர்ந்து பல சட்டங்கள் இயற்றப்பட்டன. பெரும் வாணிபங்களை எப்போதும் கண்காணித்து அவைகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அரசின் உறுதியான திட்டத்தின் அடிப்படையில் தான் கூட்டு வணிக நிறுவனத் தடைச் சட்டத்தின் வெற்றி அமைந்திருந்தது.

## அமெரிக்கா உலக வல்லசை ஆகுதல் 1898

இலத்தீன் அமெரிக்காவில் ஸ்பெயினின் ஆதிக்கத்தில் இருந்த குடியேற்ற நாடுகள் ஒவ்வொன்றிலும் புரட்சிகள் ஏற்பட்டன. விடுதலையடைந்தன இறுதியாக ஸ்பெயினின் கட்டுப்பாட்டில் கியுபா, ப்யூட்ரிட்டோரிகோ பிலிப்பைன்ஸ், குவாம் ஆகிய குடியேற்றங்கள் இருந்தன. இச்சமயம் அமெரிக்கா முழுவதும் நாடு விரிவடைய வேண்டும். வலிமையான கடற்படை உருவாக வேண்டும் என்ற சிந்தனை ஓங்கியிருந்தது. வாணிப பெருக்கத்திற்கும், கடற்படை பெருக்கத்திற்கும் ஸ்பானிய குடியேற்றங்களில் உள்ள பகுதிகள் தேவையென அமெரிக்கா உணர்ந்தது. அமெரிக்கா மிக நீண்ட காலமாகவே கியுபா பகுதியில் தனது கவனத்தைத் கொண்டிருந்தது. வேலையில்லா நீக்ரோக்களை குடியமர்த்தவும், கரும்புத் தோட்டங்களை கைக்கொள்ளவும். அமெரிக்க முதலீட்டை பாதுகாப்பதற்கும் அமெரிக்கா திட்டமிட்டுருந்தது. ஆனால் நீண்ட தொலைவில் இருந்த ஸ்பெயின் தனது குடியேற்ற நாடுகளைத் திறமையுடன் கட்டுப்படுத்த முடியவில்லை. உள்நாட்டு குழப்பங்கள் அதிகரித்தன. இந்நிலையில் 1868-1878ல் பத்தாண்டுகள் போர் நிகழ்வுகள் நடைபெற்று

இருந்தன. கியுபாவின் புரட்சிகர வாதிகளுக்கு அமெரிக்க அரசாங்கம் உதவவில்லை. வர்ஜினியஸ் என்ற கப்பல் கியூபாவிலிருந்த அமெரிக்கர்களை அமைத்துவரச் சென்றபோது இக்கப்பல் கைப்பற்றபட்டு அதிலிருந்து எட்டு அமெரிக்கர்களை கொன்றது. ஸ்பெயின் அரசாங்கத்தின் இச்செயல் மன்னிப்பு கேட்டுக் கொண்டதாலும் இழப்பீடு தர சம்மதித்ததாலும் போர் ஏற்படவில்லை.

1895ல் கியூபாவில் மீண்டும் பரட்சி வெடித்தது. புரட்சித்தலைவன் ஜோசேமார்டியை அடக்க நினைத்த ஸ்பானிய தளபதி வலேரியானோ வேய்லர் கடுமையான நடவடிக்கை மேற்கொண்டார். 1896 ல் நகரங்களில் தண்டனை முகாம்கள் அமைத்து புரட்சிக்காரர்களை அடைத்து படுகொலை செய்தான். இச்செயல்கள் அமெரிக்க மக்களை பாதித்தது. அங்குள்ள மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. எனவே கியூபா புரட்சியாளர்களை ஆதரிக்க அமெரிக்கா முடிவ எடுத்தது. இதற்குமேலும் சில காரணங்களும் இருந்தன.

**பத்திரிக்கைகளின் பங்கு**

அமெரிக்கச் செய்தி பத்திரிக்கைகள் ஸ்பானியர்களின் கொடுஞ்செயல்களை விரிவாக வெளியிட்டு வந்தன. அசோசியேட்டடு பிரஸ் என்ற நிறுவனம் இச்செய்திகளை வெளியிட்டன. இது அமெரிக்கர்களின் உணர்வுகளைத் தூண்டிவிட்டது. அமெரிக்க வணிகரும், செல்வந்தர்களும் தங்கள் முதலீடுகள் காப்பாற்றப்பட வேண்டும். கியூபாவில் வாழ்ந்த வர்த்தகர்களின் நலன்கள் காக்கப்பட வேண்டும் என அமெரிக்க அரசாங்கத்தை நெருக்குதல் தந்தனர்.

இந்நிலையில் ஜனாதிபதி மெக்கன்லி சில நடவடிக்கைகள் மேற்கொண்டார். ஸ்பானிய அரச கியூபாவின் மீது தனது ஆட்சியுரிமையை இழந்துவிட்டது என்றும், அங்கு வாழ்ந்து வரும் அமெரிக்க மக்களின் உயிரும் உடமையும் பாதுகாக்கப்படவில்லையென்றும் ஸ்பெயின் மீது குற்றம் சாட்டினார். புரட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும்படியும், அதற்கு அமெரிக்கா நடுநிலையாளராக இருக்கத் தயார் என்றும் கூறினார். ஸ்பெயின் இவரது கோரிக்கையை நிராகரித்தது.

இறுதியில் போர் முளுவதற்கு இரண்டு நிகழ்ச்சிகள் நடந்தன. ஒன்று ஸ்பானிய தூதர் டிலோமின் கடிதம். மற்றொன்று மெய்ன் கப்பல் பிரச்சனை வாஷிங்டனில் ஸ்பானிய தூதராக இருந்த ருபைடிலோம் ஒரு முட்டாள்தனமான காரியம் செய்தார். தான் ஒரு நண்பரும் எழுதிய கடிதத்தில் ஜனாதிபதி மெக்கன்லியைப் பற்றி "அரசியல் வாதியாகப் பார்ப்பவர்", "பாமரமக்களின் பாராட்டுதலுக்கு ஏங்குபவர்", "ஸ்பெயினுக்கு விசுவாசத் துரோகம் செய்தவர்" என்றெல்லாம் விமர்சித்து எழுதியிருந்தார். இந்தக் கடிதம் எப்படியோ வில்லியம் ராண்டால்ப் ஹார்ஸ்ட் என்ற பத்திரிக்கை ஆசிரியருக்குக் கிடைத்தது. இதனை தனது ஸநியுபார்க் ஜர்னல்" என்ற பத்திரிக்கையில் பிரசரித்து விட்டார். இதனைப் படித்த அமெரிக்க

மன்னர் ஆவேசமடைந்தனர். ஸ்பெயினுடன் போர்தொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்தது.

இரண்டாவதாக 1898 பிப்ரவரி 15ம் தேதி கியூபாவில் உள்ள ஹவானா துறைமுகத்தில் நின்று கொண்டிருந்த 'மெயின்' என்ற அமெரிக்க போர்க் கப்பல் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. 260 அமெரிக்கர்கள் இறந்தனர். இச்செயல் ஸ்பெயினுக்கு எதிராக அமெரிக்காவின் கோபத்தை அதிகரிக்கச் செய்தது. கப்பற்படை துணைச்செயலராக இருந்த தியோடர் ரூஸ்வெல்ட் கியூபாவின் மீது போர் தொடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். மக்கென்லியும் ஒத்துக்கொண்டார். ஏப்ரல் 1898இல் போர் பிரகடனம் செய்யப்பட்டது.

போரில் அமெரிக்க கடற்படை முக்கியப் பங்காற்றியது. மே 1, 1898இல் கடற்படை தளபதி ஜார்ஜ் டிவே (George Deway) மணிலா வளைகுடாவில் இருந்த ஸ்பானிய கடற்படையை தோற்கடித்தார். அமெரிக்கத் தரப்பில் ஒருவர் கூட இழக்கவில்லை. இரண்டாவதாக சாண்டியாகோ துறைமுகத்தில் இருந்த ஸ்பானிய கப்பல்கள் தாக்கப்பட்டனர். ஒரு சில அமெரிக்கா வீரர்களே கொல்லப்பட்டனர். சாண்டியாகே எளிதாக கைப்பற்றப்பட்டது. இவ்வெற்றி செய்தி பாஸ்டனிலிருந்து சான்பிரான்ஸிஸ்கோ வரை பரவியது. அடுத்ததாக ப்யுரிட்டோரிகேவும் வீழ்ந்தது. இங்கு இறங்கிய அமெரிக்க கடற்படையினர் 'நிலாச் சாப்பாட்டிற்கு உல்லாசமாக்ச செல்வது பொல சென்றனர்' என்ற சொல்லப்பபடுகின்றது.

இப்போர் டிசம்பர் 10, 1898 ஆம் நாள் பார்சில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி முடிவிற்கு வந்தது. 1. கியூபாவின் மீதான உரிமையை ஸ்பெயின் கைவிட்டது. 2. பிலிப்பைன்ஸ் பியுட்டோரிகோ, பசிபிக் கடலில் உள்ள குவோம் ஆகிய தீவுகள் அமெரிக்காவிற்கு கிடைத்தது. 3. கியூபா தற்காலிகமாக அமெரிக்க ராணுவ ஆட்சியின்கீழ் கொண்டு வரப்பட்டது.

இப்போர் பத்து வாரங்களில் முடிவுற்றது. அமெரிக்காவிற்கு எளிதான முறையில் கிடைத்த வெற்றியாகும். உலக நாடுகளில் அமெரிக்காவின் புகழ் வளர்ந்தது. இப்போரில் பங்குகொண்ட டுவேயும், தியோடர் ரூஸ்வெல்ட்டும் தேசிய வீரர்களாக விளங்கினர். அமெரிக்கா ஓர் உலக வல்லரசு என்பதை இப்போர் அறிவித்தது. தூரகிழக்கில் அமெரிக்கா தனது ஆதிக்கத்ததை நிலை நாட்டவும். வாணிபத்தைப் பெருக்கவும் பிலிப்பைன்ஸ் தீவுகள் சிறந்த தளமாக பயன்பட்டது. இப்போரின் வெற்றியினால் மெக்கன்லி நிர்வாகம் சீனாவில் திறந்த வெளிக் கொள்கையை உருவாக்கி அங்கு அமெரிக்காவின் ஆதிக்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்தது. மெக்கன்லியின் பதவிகாலம் அமெரிக்க வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட ஜனாதிபதி மெக்கன்ஸி 1901, செப்டம்பர் 6 ம் தேதி நியுயார்க் மாநிலம் பப்பலோ என்ற இடத்தில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றார். மக்களுடன் கைகுலுக்குவதிலும், பேசுவதிலும்

ஆர்வமுடைய அவர் தன்னைச் சுட வந்தவனிடமே கைகுலுக்கும் போது சுடப்பட்டார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் எட்டு நாட்கள் கழித்து செப்டம்பர் 14, 1901 ல் மரணமடைந்தார். "நான் விடை பெறுகிறேன். இது கடவுளின் செயல்" என்று அவர் கடைசியாக உதிர்த்த வார்த்தைகள் அமெரிக்க மக்களை சோகத்தில் ஆழ்த்தியது.

அமெரிக்கா உலக விவகாரங்களில் தலையிடுவது ஒரு தவிர்க்க முடியாத செயலாக இருந்தது. சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையை வடிவமைத்தது. முதல் ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டனின் தனித்திருத்தல் கொள்கையின் மூலம், ஐரோப்பிய நாடுகளின் தலையீடு இல்லாமல் அமெரிக்க தனது நிலப்பரப்பில் முழுமையான ஆதிக்கத்தை ஏற்படுத்துவது என்ற முறையில் செயல்பட்டது. அதன் விளைவாக அமெரிக்காவின் கிழக்குக்கரையிலிருந்து மேற்க்குக்கரை வரை நிலப்பரப்புயாவும் முழுமையாக கைக்கொள்ளப்பட்டு ஒரு நிறைவுபெற்ற நாடாக அமெரிக்கா விளங்கியது. இதற்கிடையில் 1812ம் ஆண்டு போரும், மெக்ஸிகோவுடன் ஏற்பட்ட போரும் அமெரிக்காவின் விரிவாக்கத்திற்கு அடிகோலிய போர்கள் எனலாம். தனது தொழிற்புரட்சியின் மூலமாக ஒரு செல்வந்தர் நாடாக அமெரிக்கா மாறியது. பொருளாதார வளர்ச்சியின் காரணமாக அருகில் உள்ள தென் அமெரிக்க நாடுகளில் முதலீடு செய்வது தவிர்க்க முடியாததாக இருந்தது. முதலீடுகளைக் காப்பாற்றவும், அந்த நாடுகளில் நிலையான அரசை அமைக்கவும் அமைதியை நிலை நாட்டவும் அமெரிக்காவின் தலையீடு அவசிமானதாக அமைந்தது. இதனாலேயே ஸ்பெயினுடன் போர் வேண்டிய சூழ்நிலை, அதில் பெற்ற வெற்றியினால் கடல் கடந்த பகுதிகளில் கிடைத்த நிலபரப்புகள் அமெரிக்கா மேலும் விரிவடைய வாய்ப்புகள் ஏற்படுத்தித் தந்தன. இவ்விரிவாக்கத்திற்கு உற்பத்திப் பொருட்கள் விற்கவும் மற்றும் மூலப்பொருட்கள் பெறவும் கடல் கடந்த பிரதேசங்கள் தேவைப்பட்டது. வர்த்தக மற்றும் பாதுகாப்பு காரணங்களுடன் அமெரிக்க மக்களின் சிந்தனையும், இராணுவ சக்தியும் சரியான சமயத்தில் ஒன்றிணைந்த போது அமெரிக்கா கடல் கடந்த பகுதிகளில் விரிவடைவது எளிதாக முடிந்தது. அமெரிக்கா உலக வல்லரசாக மாறுவதற்கு பல காரணங்கள் ஒத்துழைத்தன. முதலாவது அமெரிக்கா ஒரு தன்னிறைவு பெற்ற நாடாக மாறியது. தொழிற்துறையிலும், வேளாண்துறையிலும் ஏற்பட்ட அபரிதமான வளர்ச்சியின் காரணமாக முழுமையான தன்னிறைவு பெற்ற நாடாக மாறியது. பிற நாட்டினருக்கு உதவக்கூடிய அல்லது அந்நாடுகளில் முதலீடு செய்யக்கூடிய அளவு செல்வம் நிறையப் பெற்றிருந்தது. இதனால் தனது விரிவாக்கத்தை நடைமுறைபடுத்த வாய்ப்புகள் ஏற்பட்டன.

இரண்டாவதாக உலகெங்கும் நாடுகள் ஏகாதிபத்ய போட்டியில் ஈடுபடலாயின. மூலப்பொருட்களைப் பெறவும் செய்பொருட்களை விற்கவும் சந்தைகள் தேவைப்பட்டன. இங்கிலாந்து பல குடியேற்ற நாடுகளை ஏற்படுத்த முயன்றது. பிரான்ஸ் ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை நிறுவியது. பல ஐரோப்பிய நாடுகள் சீனாவை பங்கு போட்டன. எனவே

அமெரிக்காவும் துரகிழக்கு நாடுகளின் விவகாரங்களில் தலையிட வாய்ப்புகளை ஸ்பானிய அமெரிக்கப் போர் உருவாக்கித்தந்தது.

மூன்றாவது அமெரிக்கா ஒரு பேரரசு ஒன்றை நிறுவி உலகின் தலைமை இடத்தை பெற வேண்டும் என்ற எண்ணம் பல தலைவர்களிடம் இருந்தது. ஹென்றி கெபட்லாட்ஜ் ஆல்பர்ட் பவரிட்ஜ், தியோடர் ரூஸ்வெல்ட் போன்றோர் பேரரசுக் கொள்ளைக்கு ஆதரவு தந்தனர்.

நான்காவது அமெரிக்கா தனது கடற்படையை பெருக்க வேண்டியதின் அவசியத்தை "வரலாற்றில் கடற்படையின் செல்வாக்கு" என்ற நூலில் ஆல்பிரட் தேயர் மோகன் என்பவர் விவரித்திருந்தார். அமெரிக்கா ஒரு வலிமைமிக்க நாடாக வேண்டுமானால் வெளிநாடுகளில் வணிக நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். அந்த வணிக நிலையங்களைப் பாதுகாக்க கப்பற்படை அவசியம் தேவை என்பதை மக்கள் உணர்ந்தனர். 1881ம் ஆண்டிலிருந்தே கப்பல்கள் கட்டுவதற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டது. நீராவி சக்தியினால் இயங்கும் வலிமையான கப்பல்கள் கட்டப்பட்டன. கப்பல் படையின் வளர்ச்சி அமெரிக்கா வல்லரசாக மாறுவதற்கு வழிவகுத்தன. கிறிஸ்தவ மத பிரச்சாரங்கள். தங்கள் மதத்தை புதிய நாடுகளில் பரப்ப திட்டமிட்டனர். எனவே அவர்களும் அமெரிக்கா கடல் கடந்த பிரதேசங்களை பெற வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

வெளியுறவுச் செயலர் ஜேம்ஸ்பிளைனின் திட்டப்படி அமெரிக்க ஆதிக்கம் அமெரிக்கக் கண்டம் முழுவதும் ஏற்பட வேண்டும் என்பதாகும். பனாமா கால்வாய் பகுதியை அமெரிக்காவே ஏற்க வேண்டும் எனக் கருதினார். தென் அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பை உருவாக்க முயற்சி செய்தார். நியுபோர்ட் என்ற இடத்தில் கடற்படைக் கல்லூரி நிறுவ ஏற்பாடு செய்தார்.

**கடல் கடந்த பிரதேசங்களில் ஆதிக்கம்**

**அலாஸ்கா**

கடல் கடந்த பிரதேசங்களில் ஆதிக்கம் செலுத்தும் முதலாவது நிகழ்வு உள்நாட்டுப் பேருக்குப் பின் ஜான்சன் நிர்வாகத்தில் வெளியுறவு செயலராக இருந்த வில்லியம் கீவர்ட் என்பவரால் தொடங்கி வைக்கப்பட்டது. பசிபிக் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த திட்டமிட்ட அவர் 1867இல் ரஸ்யாவிடமிருந்து அலாஸ்கா பகுதியை 7.2 மில்லியன் டாலருக்கு விலைக்கு வாங்கினார் பசுபிக் பெருங்கடலில் உள்ள மிட்வே தீவுகளையும் சேர்த்துக் கொண்டார். இக்காலகட்டத்தில் மேலும் தீவிரமாக கவனம் செலுத்த வழியில்லாமல் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சமோவா

1878 ஆம் ஆண்டு சமோவாவுடன் செய்து கொண்ட ஒரு ஒப்பந்தத்தின்படி கடற்படை தளம் ஒன்று பகோபகோ என்ற இடத்தில் அமைக்கப்பட்டது. சமோவாமின் மீது ஜெர்மனியும் இங்கிலாந்தும் அக்கறை காட்டின. இம்மூன்று நாடுகளும் ஒரு

ஒப்பந்தத்திற்குட்பட்டன. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இந்த தீவு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. அதன்படி பகோபகோ தளம் இருக்கக் கூடிய டியுடுலியா அமெரிக்காவிற்கு கிடைத்தது. அடுத்ததாக ஹவாய் தீவுகளைக் கைப்பற்ற அமெரிக்கா திட்டமிட்டது. ஹவாயின் தலைநகர் ஹானலுலுவில் அமெரிக்க மக்கள் அதிகம் குடியேறியிருந்தனர். மேலும் பேர்ல் துறைமுகத்தையும் கைக்கொள்ள அமெரிக்கா விரும்பியது. ஹவாயுடன் இரண்டு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. ஹவாய் அமெரிக்காவின் பாதுகாப்பிற்குட்பட்டது.

**ஹவாய்**

ஹவாயில் குடியேறியவர்கள் கரும்பு மற்றும் அன்னாசி பழ சாகுபடியில் ஈடுபட்டு பொருளாதாரத்திலும் அரசாங்கத்திலும் செல்வாக்கு பெற்றனர். 1891இல் பதவியேற்ற புதிய அரசி விலியோகலானி என்பவர் அமெரிக்கர்களின் ஆதிக்கத்தை விரும்பவில்லை. அமெரிக்கர்கள் 1893இல் ஒரு கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அமெரிக்க கப்பற்படையும் அவர்களுக்கு உதவத் தயாராக இருந்தது. இதனால் அரசி அகற்றப்பட்டு அமெரிக்கர் ஒருவர் குடியரசுத் தலைவராக்கப்பட்டார். இந்த புதிய அரசை கிளீவ்லாந்த் அங்கீகரித்தார். ஆனால் ஹவாயை அமெரிக்காவுடன் இணைக்க மறுத்துவிட்டார். பின்னர் மெக்கன்லி ஆட்சி காலத்திதல் 1898இல் காங்கிரசின் இரண்டு சகைளும் கொண்ட கூட்டுக் கூட்டத்தில் ஹவாய் இணைப்பு மசோதா நிறைவேற்றப்பட்டது. ஆனால் 1859ல் தர்ன ஹவாய் அமெரிக்காவின் ஐம்பதாவது மாநிலமாக சேர்த்துக் கொள்ளப்பட்டது.

**பிலிப்பைன்ஸ்**

1898 ஆம் ஆண்டு நடைபெற்ற ஸ்பானிய அமெரிக்கப்போரின் வெற்றியினால் பிலிப்பைன்ஸ், பியுரிட்டோரிக்கா, குவாம் போன்ற பகுதிகள் அமெரிக்காவிற்கு கிடைத்தன. கியூபா அமெரிக்காவின் சார்பு நாடானது. 1898 ஆம் ஆண்டு ஸ்பெயினும் அமெரிக்காவும் பாரீஸ் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டன. அதன்படி பிலிப்பைன்ஸ் அமெரிக்காவிற்கு விற்கப்பட்டது. ஸ்பானிஸ் அமெரிக்கப்போரில் பிலிப்பினோக்கள் போரிட்டனர். பழைய எஜமானன் போய் புதிய எஜமானனாக அமெரிக்கா வந்துள்ளது என எண்ணினர். அமெரிக்காவிலும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளை இணைத்துக் கொள்வதில் கருத்து வேற்றுமை நிலவியது. இந்த ஒப்பந்தம் செனட்டில் மூன்றிவ் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அப்படி நிறைவேறுமா என சந்தேகம் இருந்தது. பிரியன் இந்த ஒப்பந்தத்தை எதிர்த்தார். அமெரிக்கா கியூபாவை விடுவிக்க ஒரு போர் செய்து மீட்டது. அதே நேரத்தில் மற்றொரு போர் செய்து ஏழு மில்லியன் பில்ப்பினோக்களை அமெரிக்காவின் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வருவது ஒன்றுக்கொன்று முரண்பாடு அல்லவா என வாதிட்டார். இருந்தபோதும் சீனாவில் ஐரோப்பியநாடுகளின் ஆக்கிரமிப்பு நிகழ்வுகள் இப்போது நடந்து கொண்டிருப்தால் கட்டுப்பாட்டில் இருப்பதுதான் நல்லது என நினைத்து ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டனர். பிலிப்பைன்ஸ் அமெரிக்காவின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது.

வில்லியம் ஹோவர்ட் டப்ட் முதல் அமெரிக்க கவர்னரானார். அமெரிக்க நாகரீக முறை பிலிப்பைன்ஸில் அமலாக்கப்பட்டது. நவீன கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டன. பிலிப்பினோக்கள் "நம்முடைய சிறிய சகோதர்கள்" என்ற டப்ட் அழைத்தார். 1916 ம் ஆண்டு ஜோன்ஸ் சட்டப்படி சுய நிர்ணய அரசாங்கம் அமைக்கப்பட்டது. படிப்படியாக முழு சுதந்திரம் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஜனாதிபதி உட்ரோவில்சன் ஆட்சியில் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் 1920ல் முதல் உலகப் போரின் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது. 1934ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒரு திட்டப்படி 194இல் சுதந்திரம் வழங்கலாம் என கூறப்பட்டது. இச்சமயம் இரண்டாம் உலகப்போர் ஏற்படவே அதுவும் தள்ளிப் போடப்பட்டது. மேலும் அமெரிக்க சர்க்கரை ஆலை முதலாளிகள் விரைவிலேயே பிலிப்பைன்சுக்கு சுதந்திரம் வழங்கிட வேண்டும் என விரும்பினர். ஏனெனில் பிலிப்பைன்ஸ் நாட்டு சர்க்கரை விலை குறைவாக இருப்பதால் தங்களுடைய லாபம் குறைவதாகக் கருதினார்.

**அனைத்து அமெரிக்க உணர்வு**

அமெரிக்காவின் வெளியுறவுச் செயலர் ஜேம்ஸ் பினைன் தனது வெளிநாட்டுக் கொள்கையாக "அனைத்து அமெரிக்க உணர்வு" என்ற கோட்பாட்டை உருவாக்கினார். இதன்படி அமெரிக்கக் கண்டத்திலுள்ள அனைத்து அமெரிக்க நாடுகளும் ஒன்றுக்கொன்று பயன்பெறும் வகையில் பொதுவான பொருளாதார உறவுகளை வளர்த்துக் கொள்ள முடியும். இந்த எண்ணத்தின் அடிப்படையில் 1889 அக்டோபர் 2ம் தேதி வாஷிங்டன் நகரில் அனைத்து அமெரிக்க நாடுகளின் மாநாடு கூட்டப்பட்டது. இதில் பத்தொன்பது அமெரிக்க சுதந்திர நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். வணிகத்துறையில் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் தென் அமெரிக்க நாடுகளுக்குமிடையே ஒத்த அளவிலான காப்புவரிகளை விதித்துக் கொள்ள முடிவ செய்யப்பட்டது. மேலும் பொதுவான வெள்ளி நாணயம் கண்டங்களுக்கிடையேயான இரயில் பாதைகளை அமைத்தல், பொதுவான அளவை முறை விவாதிக்கப்பட்டது. இவ்வமைப்பில் தலைமையகம் வாஷிங்டன் நகரில் அமைக்கப்ட்டது.

**டாலர் ராஜதந்திரம்**

டாலர் ராஜதந்திரம் என்ற கொள்கையினால் அமெரிக்க முதலீட்டாளர்கள் பயன்பெற்றனர். அதே நேரத்தில் சின்னஞ்சிறு நாடுகள் யாவும் பயன்பெற்றன. அந்நாடுகளில் நல்ல நிர்வாக முறை கொண்டுவரப்பட்டது. கல்வி வளர்ச்சி, மருத்து வளர்ச்சி, சுகாதாரம், சாலைகள், வேளாண்மையில் புதிய தொழில் நுட்பம் போன்றவை கடைபிடிக்கப்பட்டு மக்களின் வாழ்க்கைதரம் மேம்பட்டது. அமெரிக்க முதலீட்டாளர்கள் நல்ல லாபம் அடைந்தனர். உலக பார்வைக்கு அமெரிக்கா வெளிவிவகாரங்களை மட்டும்தான் கட்டுப்படுத்துகிறது என்ற எண்ணமே நிலவியது.

**வெனிசுலா**

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் டாலர் ராஜதந்திரம் பயன்படுத்தப்பட்டது. மேலும் அனைத்து அமெரிக்க உணர்வின் அடிப்படையிலும் இந்நாடுகளுடன் அமெரிக்கா தனது உறவை வளர்த்துக்கொண்டது. கரீபிய கடல் பிராந்தியத்தில் இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் உள்ள கயானாவிற்கும் வெனிசுலாவிற்குமிடையே எல்லைப் பிரச்சினை இருந்தது. 1895ம் ஆண்டு ஜனாதிபதி கிளீவ்லாந்த்மன்றோ கோட்பாட்டின்படி இங்கிலாந்து அமெரிக்க கண்டத்தில் தலையிடுவதை விரும்பவில்லை. வெளியுறவு செயலர் ஒலினே பிரிட்டனுக்கு ஒரு குறிப்பு அனுப்பினார் அதில் பிரிட்டனின் தலையீட்டை அமெரிக்கா எதிர்க்கும் என குறிப்பிட்டிருந்தார். இச்சமயத்தில் பிரிட்டன் ஆப்பிரிக்கா பகுதியில் சில பிரச்சினைகளின் ஈடுபட வேண்டியிருந்தது.

இந்த பிரச்சனையை தென்அமெரிக்கப் பிரச்சினையுடன் ஒப்பிடும் போது தென்அமெரிக்கப் பிரச்சனை பெரிதாகப்படவில்லை. எனவே அமெரிக்காவுடன் சமாதானமாகப் போக முடிவு செய்தது. பிரிட்டன் அரசியல் நிபுணர் ஜோசப் சேம்பர்லெய்ன் அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்தார். இவரது இரண்டாவது மனைவி ஒரு அமெரிக்க பெண்மணியாவார். 1899ம் ஆண்டு ஒப்பந்தம் ஏற்பட்டது அது அமெரிக்கா மன்றோ கோட்பாட்டின்படி தென்அமெரிக்க நாடுகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளை பிரிட்டன் ஒத்துக்கொண்டது. மேலும் அமெரிக்காவும், பிரிட்டனம் இந்த நட்புறவு ஒப்பந்தத்தின் மூலம் பின்னாளில் இவ்விரண்டு நாடுகளும் இணைந்து செயல்பட வழிவகுத்தது.

**கரீபிய கடல் பிராந்திய நாடுகள்**

கரீபிய கடல் பிராந்தியத்தில் உள்ள கியூபா காஸ்டாரீகா, டொமினிகன் குடியரச, ஹாய்த்தி, நிகாருகுவா போன்ற நாடுகள் அமெரிக்க முதலீடுகள் அதிக அளவில் செய்யப்பட்டன. கரும்புத்தோட்டங்கள், பழத்தோட்டங்களில் அமெரிக்கர்கள் முதலீடு செய்தனர். இவர்களை பாதுகாக்க அமெரிக்க அரசு தலையிட வேண்டியதாயிற்று. கரீபிய கடல் பிராந்தியம் அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு முக்கியமாகக் கருதப்பட்டது. 1914ல் பனாமா கால்வாய் திறக்கப்பட்ட பிறகு இப்பகுதி இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக கருதப்பட்டது. 1902ல் கியூபா அமெரிக்க ஆளுநர் லியோனர்ட்வுட் என்பவரின் ஆளுகைக்குட்பட்டது. அமெரிக்க படைகள் 1917 லிருந்து 1922 வரை கியூபாவில் தங்கியிருந்தன.

ஹாய்த்தி மற்றும் சான்டோடாமின்கோ ஆகிய இரு நாடுகளும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டிற்கு வந்தன. அமெரிக்க கடற்படை 1915 முதல் 1934 வரை இங்கு தங்கின. 1904ல் அமெரிக்க நிதி ஏஜென்ட் ஒருவர் சான்டோடாமின்கோவில் சுங்க வருவாயை வசூலிக்கும் பொறுப்பேற்றார். மற்றொரு ஒப்பந்தத்தின்படி இப்பகுதிகளில் அமெரிக்கா தலையிட அனுமதித்தது. அதன்படி அமெரிக்கப்படைகள் 1916 முதல் 1924 வரை தங்கின.

நிகாருகுவாவில் அமெரிக்கா அதிக அளவில் முதலீடு செய்தது. 1912 முதல் 1925 வரை அமெரிக்காவின் தலையீடு அங்கு தேவைப்பட்டது. மீண்டும் 1927 முதல் 1935 வரையிலும் அமைக்க படைகள் அங்கு இருக்க வேண்டியதாயிற்று.

**சீனாவுடன் திறந்த வாயில் கொள்கை**

தூரகிழக்கு நாடுகளுடன் அமெரிக்க வர்த்தகம் பெருக ஆரம்பித்தது. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகள் சீனத் துறைமுகங்களை குத்தகைக்குப் பெற்றுக் கொண்டது. மேலும் அங்கு சுங்கவரி வசூலிக்கவும் ரயில் பாதைகள் அமைக்கவும் சீனப் பகுதிகளுக்குள் நுழைய விரும்பியது. ஆனால் எல்லா பகுதிகளும் ஐரோப்பிய நாடுகளினால் வளைத்துக் கொள்ளப்பட்டிருந்தன. ஜனாதிபதி மெக்கன்லியின் வெளியுறவுச் செயலர் ஜான்ஹே சீனாவின் வாயில்கள் அனைத்து நாடுகளின் வர்த்தகத்திற்கும் திறந்து விடப்பட வேண்டும் என அறிக்கை 1899 செப்டம்பரில் வெளியிட்டார்.

ஒவ்வொரு அரசம் சீனாவில் பெற்றுள்ள செல்வாக்கு மண்டலங்களில் பிற அரசுகளின் நலன்களையும் உரிமைகளையும் மதிக்க வேண்டும். எல்லா மண்டலங்களிலும் இறக்குமதி வரி வசூலிக்கும் உரிமை சீன அதிகாரிகள் வசமே இருக்க வேண்டும். துறைமுகக் கட்டணம், ரயில் கட்டணங்களில் பிற அரசுகளுக்கிடையில் பாரபட்சம் காட்டக்கூடாது என்பது முக்கியமான அம்சமாகும். அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளுடன் சேராமல் சீனாவுடன் தனிப்பட்ட முறையில் உறவினை வளர்த்துக்கொள்ள முடிவ எடுத்தது. 1900 ஆண்டு ஐரோப்பிய நாட்டு சக்திகளுக்கு எதிராக சீனாவில் பாக்ஸர் கலவரங்கள், குத்துச்சண்டை வீரர்கள் கலகம் ஏற்பட்டது. அதை அடக்க அமெரிக்கா உட்பட ஒரு கூட்டு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. ஐரோப்பிய நாடுகள் தங்கள் படைகளை நிரந்தரமாகவே தங்கச் செய்தது. இப்போது அமெரிக்க வெளியுறவுச் செயலர் தனது இரண்டாவது அறிக்கையை வெளியிட்டு சீனாவின் ஒற்றுமையையும் ஒருமைபாட்டையும் கட்டிக்காக்கும் பொறுப்பு அமெரிக்காவிற்கு உள்ளது என எடுத்துக் கூறினார். மேலும் குத்துச் சண்டை வீரர்கள் கலகத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு சீனா நஷ்டஈடு தர வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. அதன்படி அமெரிக்காவிற்கு கிடைத்த நஷ்டஈட்டுத் தொகையை அமெரிக்காவில் சீன மாணவர்கள் படிப்பதற்கு உதவித்தொகையாக வழங்கப்பட்டது. இந்தத் திறந்த வாயில் கொள்கையின் மூலம் சீனாவில் தலையிடும் உரிமையை அமெரிக்கா பெற்றது. அமெரிக்கா உலக வல்லரசு என அழைக்கவும் வழி ஏற்பட்டது.

**வாத, பிரதிவாதங்கள்**

அமெரிக்கா ஒரு பக்கம் தனது ஆதிக்கத்தை பல நாடுகளில் செலுத்த ஆரம்பித்த பொழுது, அமெரிக்காவின் இந்த ஏகாதிபத்ய கொள்கை தவறான வழிமுறையாகும் என அமெரிக்கர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அமெரிக்கா, இங்கிலாந்தின் ஏகாதிபத்யத்தற்கு எதிராக புரட்சி செய்து சுதந்திரம் பெற்ற நாடு எனவே அமெரிக்க பிற நாடுகளை

கைப்பற்றலாமா? என கேள்வி எழுப்பினர். அமெரிக்காவின் ஏகாதிபத்ய கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்களின் முக்கியமானவர்கள் முன்னாள் ஜனாதிபதிகளான குரோவர் கிளீவ்லாந்தும், பென்ஜமின் ஹாரிசனும் ஆவார்கள். இவர்களுடன் பாப்புலிஸ்ட் இயக்கத் தலைவர் வில்லியம் ஜென்னாப்ஸ் பிரையனும் சேர்ந்து கொண்டார். ஜனநாயகக் கட்சியினர், குடியரசுக் கட்சியின் தாராளவாதிகள், தொழில் சங்க தலைவர்களில் சாமுவேல் கோம்பர்ஸ் தொழிலதிபர்களில் ஆண்ட்ரூ கார்னகி மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், நாகலாசிரியர்கள் மற்றும் பிலிப்பைன்ஸ் இணைப்பை எதிர்த்தவர்கள் யாவரும் இணைந்து அமெரிக்காவின் விரிவாக்கக் கொள்கையை கண்டித்தனர்.

ஒருவருடைய சம்மதமில்லாமல் அவர்களை கட்டுப்படுத்துவது முறையல்ல என்பது இவருடைய வாதம். பிற நாடுகளைக் கட்டுப்படுத்துவது அமெரிக்க அரசியலமைப்பிற்கு முரணானது என்று வாதிட்டனர்.

மாறாக அமெரிக்கர்களின் விரிவாக்கத்தை ஆதரிப்பவர்களின் கூற்றுப்படி, ஏகாதிபதிய எதிர்ப்புவாதிகள் முதியவர்கள், பழைய அமெரிக்காவை நினைத்துக் கொண்டு இருப்பவர்கள். ஏகாதிபத்திய வாதிகள் புதிய அமெரிக்காவைச் சேர்ந்த இளைஞர்கள், அமெரிக்கா உலக நாடுகளை காப்பாற்ற கடவுளே அருள்புரிந்துள்ளார் எனவும், நல்லாட்சியை உலகெங்கும் நிறுவுவதே அமெரிக்காவின் இலட்சியம் என்றும் முழங்கினர். புராடெஸ்டண்ட் மதவாதிகளும் அமெரிக விரிவாக்கத்தை வரவேற்றனர்.

# அலகு - IV

## தியோடர் ரூஸ்வெல்ட் 1901-1908

"அன்பாகச் பேசு, அதே நேரத்தில் பெருந்தழ ஒன்று கையிலிருக்கட்டும். அப்போதுதான் நீ முன்னேறிச் செல்ல முடியும்".

தியோடர் ரூஸ்வெல்ட்

இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்து வருடங்களில் அமெரிக்காவை வல்லரசாக ஆக்கும் பணியில் ஈடுபட்டவர் தியோடர் ரூஸ்வெல்ட் ஆவார், குடியரசுக் கட்சியைச் சார்ந்த இவர் மற்ற ஜனாதிபதிகளைப் போல் கட்சிக்கு அடிபணிந்து நடந்தவர் அல்ல. கட்சியை தன் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்தவர். ஆப்ரகாம் லிங்கனுக்குப் பிறகு ஒரு சிறந்த ஜனாதிபதி என கருதப்படுகிறார். தனது நாற்பத்தி இரண்டாவது வயதில் வெள்ளை மாளிகையின் அதிபராக வருவதற்கு முன்பே அரசியலில் நல்ல அனுபவம் பெற்றவர். நியுயார்க் நகரில் ஒரு செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில் பிறந்த இவர் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் கற்றார். நியுயார்க்கின் போலீஸ் கமிஷனர் பதவி வகித்தார். கடற்படையின் துணைச்செயலர் பதவி வகித்தார். ஸ்பானில் அமெரிக்கப் போரில் பங்கேற்றார். சான் ஜீவான் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் வெற்றி கண்டார். 1898 ஆம் ஆண்டு நியுயார்க் மாநில கவர்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1900 ஆம் ஆண்டு துணை ஜனாதிபதி தேர்தலுக்கு குடியரசு கட்சியினரால் நிறுத்தப்பட்டார். இவர் பல்வேறு துறைகளில் புகழ்பெற்ற விளங்கினார். அமெரிக்க மக்களுக்கு நன்கு அறிமுகமானவர். ஒரு எழுத்தாளராக, ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தனர். தான் நினைத்ததை தைரியத்துடன் செயலாற்றும் வல்லமை கொண்டவர். சுறுசுறுப்பானவர் பல சீர்திருத்தங்களை தொடங்கி வைத்து அமெரிக்க வரலாற்றில் ஒரு முற்போக்கு காலத்தைத் தொடங்கி வைத்தவர்.

1900 ஆம் வருட தேர்தலில் மெக்கன்லி இரண்டாம் முறையாக ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். தியோடர் ரூஸ்வெல்ட் துணை ஜனாதிபதியானார். ஆனால் 1901 செப்டம்பர் 14ல் மெக்கன்லி சுட்டுக் கொல்லப்பட்டபின் தியோடர் ரூஸ்வெல்ட் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். 1904 ஆம் ஆண்டு தேர்தலிலும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### முற்போக்கு காலம் (Progressive Period)

1901-1916க்குட்பட்ட ஆண்டுகள் அமெரிக்க வரலாற்றில் முற்போக்கு காலம் என்றழைக்கப்படுகின்றது. இக்காலகட்டத்தில் தியோடர் ரூஸ்வெல்ட், டாப்ட், உட்ரோவில்சன் ஆகிய சிறந்த முற்போக்குவாதிகள் நிர்வாகத்தை செம்மைப்படுத்தினர். அரசியலில் காணப்பட்ட ஊழல்கள், பெரும் வாணிப வளர்ச்சியினால் ஏற்பட்ட தீமைகள் போன்றவற்றை முற்போக்கு வாதிகள் எதிர்த்தனர். முதலாளித்துவத்தின் தீமைகளைக் களைய விரும்பவில்லை. மக்களின் நல்வாழ்வுக்கு ஏற்ற பொருளாதார அமைப்பை உருவாக்க

சட்டங்கள் திருத்தப்பட்டன. தைரியமாக இச்சீர்திருத்தங்களைத் தொடங்கி வைத்தவர் தியோடர் ரூஸ்வெல்ட் ஆவார்.

**உள்நாட்டுக் கொள்கை**

தனது கொள்கையான நேர்மையான ஏற்பாடு (Square) மூலம் சமுதாய நலன்களைப் பேணுவதற்கு பல வழிகளைக் கையாண்டார். ‘அரசாங்கம் ஒரு சிலருக்காக மட்டுமல்லாது எல்லோருக்கும் பணிபுரிய வேண்டும். மக்களுக்கும் அரசுக்குமிடையே உள்ள இடைவெளி குறைக்கப்பட வேண்டும். அரசு முன் யாவரும் சமம். நாட்டு நலன்களின் அடிப்படையிலேயே பெரும் வாணிபம் அமைய வேண்டும். உழைப்பிற்கும் திறமைக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். இயற்கை சக்தி சாதனங்கள் வீணாகப் போய்விடாதபழ பாதுகாத்து பயன்படுத்த வேண்டும்’ என்ற கொள்கைகளை இந்த நேர்மையான ஏற்பாட்ழன் மூலம் நடைமுறைப்படுத்தினார். இவர் இயற்றிய சீர்திருத்த சட்டங்களை மக்கள் ஏற்றுக்கொண்டனர்.

**வணிக கூட்டு நிறுவனங்களுக்கு எதிரான நடவடிக்கை**

பல வணிக கூட்டு நிறுவனங்கள் அரசியலில் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தன. 1890இல் இயற்றப்பட்ட ஷெர்மன் டிரஸ்ட் எதிர்ப்புச் சட்டம் சரியாகப் பயன்படுத்தவில்லை. டிரஸ்ட்களின் சில நடவடிக்கைகள் பொதுமக்களின் நலன்களுக்கு எதிராக உள்ளது என்றும், எனவே அவைகளைக் கட்டுப்படுத்துவது அவசியம் என்றும் கருதினார். வணிக கூட்டு நிறுவனங்களைக் கட்டுப்படுத்தவும், அரசியலில் தொழிலதிபர்களின் தலையீட்டை தடுக்கவும், பல சட்டங்கள் இயற்றப்பட்டன. வணிகக் கூட்டு நிறுவனங்களை அழிப்பதை விட அவற்றில் காணப்படும் குறைகளைக் களையவே ரூஸ்வெல்ட் விரும்பினார்.

**நார்தன் செக்யூரிட்டி கம்பெனிக் கெதிரான நடவடிக்கை**

அமெரிக்காவின் இயற்கை வளங்களை சிலர் சுரண்டி கோடீஸ்வரர்கள் ஆயினர். ரூஸ்வெல்ட்டின் முதலாவது நடவடிக்கை நார்தன் செக்யூட்டி கம்பெனி மீதுதான். இது ரயில்பாதைகளை நிறுவும் ஏகபோக நிறுவனமாகும். இதை நிறுவியவர் J.P. மார்கன் என்ற நிதியாளர். அமெரிக்காவின் வடமேற்குப் பகுதியை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். இந்நிறுவனத்தின் மீத வழக்கு தொடுக்கப்பட்டது. ஷெர்மன் சட்டத்தை மீறியதாக 1904இல் தீர்ப்பு வழங்கப்பட்டது. பெரும் நிறுவனங்களின் மீது தாக்குதல் தொடர்ந்தது. ஸ்டாண்டர்டு ஆயில் நிறுவனம் மீதும் வழக்குத் தொடரப்பட்டது. நாற்பது நிறுவனங்களுக்கு மேலாக வழக்கு தொடரப்பட்டது. டிரஸ்ட்கள் ஒரு கட்டுப்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. இவருக்குபின் வந்த டாப்ட் இன்னும் அதிக நிறுவனங்கள் மீது வழக்கு தொடுத்தார்.

1903 ஆம் ஆண்டு எல்கின்ஸ் சட்டம் இரயில்பாதை நிறுவனங்களை கட்டுப்படுத்த இயற்றப்பட்டது. ரயில் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது. தங்களுக்கு வேண்டியவர்களுக்குக் கட்டணச் சலுகை வழங்குவது குற்றமாகக் கருதப்பட்டது. வணிகக் கூட்டு நிறுவனங்களைப் பற்றி ஆராய்ந்து அவைகளைக் கட்டுப்படுத்த 1903 ஆம் ஆண்டு

‘வணிகத் தொழிற்துறை மற்றும் கூட்டு நிறுவனங்களின் அமைப்பு’ (Bureau of Corporations) ஒன்று அமைக்கப்பட்டது. 1906 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட ஹெப்பார்ன் சட்டப்படி இரயில்பாதை போக்குவரத்தில் காணப்பட்ட கட்டண ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட்டன. இரயில்வே பணியாளர்கள் தவிர மற்ற பயணிகளுக்கு இலவச அனுமதி சீட்டு வழங்குவது தடைசெய்யப்பட்டது. மேலும் இரயில்வே நிறுவனங்கள் தாங்கள் விரும்பும் சரக்குகளை மட்டும் ஏற்றிச் செல்வதும் தடுக்கப்பட்டது.

தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்ட ரூஸ்வெல்ட், தொழிலாளர்களின் வேலைநேரம், ஊதிய உயர்வு, சங்க அங்கீகாரம் போன்றவற்றை ஒழுங்குபடுத்தலானார். 1902 ஆம் ஆண்ழல் நடைபெற்ற பென்சில்வேனியா நிலக்கரி தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் தொழிலாளர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டார். சுரங்க முதலாளி மார்கனுடன் தனது போர்த்துறை செயலர் எலிகுரூட் என்பவர் பேச்சுவார்த்தை நடத்தினார். சுரங்க முதலாளிகள் விட்டுக்கொடுக்க மறுக்கவே, சுரங்ககளை அரசே ஏற்று நடத்தும் என மிரட்ழ பணியவைத்தார். நடுவர் குழு தீர்ப்புக்கு சம்மதித்தனர். அதன்படி தொழிலாளர்களுக்கு பத்து சதவீத ஊதிய உயர்வும், நாளொன்றுக்கு ஒன்பது மணி நேர வேலையும் நிர்ணயம் செய்யப்பட்டது.

**இறைச்சி, உணவு, மருந்து தொடர்பான சட்டங்கள் 1906**

பொது மக்களின் நலனை காப்பதிலும் அக்கறை எடுத்துக் கொண்டார். இறைச்சியை பதப்படுத்தும் தொழிலில் கலப்படம் செய்தனர். சுகாதாரமற்ற முறையில் அந்நிலையங்கள் செயல்பட்டன. அப்டன் சின் க்ளேர் (Upton Sinclair) என்பர் ஜங்கிள் (Jungle) என்ற தனது நூலில் இறைச்சிக் கூடங்களின் அவல நிலையை படம்பிடித்துக் காட்டினார். இறைச்சிக் கூடங்களின் நிலையை ஆராய குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைப்பழ 1906 ஆம் ஆண்டு ‘இறைச்சி சோதனைக் சட்டம்’ (Meat Inspection Act) இயற்றப்பட்டது.

சுத்தமான உணவு, மருந்து சட்டம் (Pure food and Drug Act) 1906 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. உடலுக்கு கேடு விளைவிக்கக்கூடிய உணவு, மருந்து, பானங்கள் ஆகியவற்றைத் தடுப்பதெ இந்தச் சட்டத்தின் நோக்கமாகும். உணவு மற்றும் மருந்து டப்பாக்களில் அவற்றின் உள்ளே இருப்பது பற்றிய உண்மைத் தகவல்களைக் கூறும் அறிவிப்புகள் இருத்தல் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறிய முதலாவது ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டேயாவார். நாட்டின் மேற்குபுறம் மக்கள் குடியேற்றத்தின் விளைவாக ஐந்தில் நான்கு பங்கு காடுகள் அழிக்கப்பட்டன. நிலவளம் கெட்டது. சுகாதாரம் கெட்டது. இவற்றைப் பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தினார். கிப்பர்ட் பிஞ்சாட் (Gifford Pinchot), ஜேம்ஸ் கார்பீல்ட் (James Garfield) போன்றோர் ரூஸ்வெல்டிற்கு ஆதரவாக செயல்பட்டனர். 1902 ஆம் ஆண்டு நில சீர்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி மேற்குப் பகுதிகளில் நில விற்பனை மூலம் கிடைத்த நிதியை அந்தப் பகுதிகளின் நில நீர்வளத்தை பெருக்க

செலவு செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. 1907இல் பதினான்கு மாநிலங்களில் இருபத்தெட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. பிஞ்சாட் தலைமை வன அதிகாரியாக நியமிக்கப்பட்டார். பதின்மூன்று கோடி ஏக்கர் நிலம் காடுகளாக காப்பாற்றப்பட்டது. ஒன்பது கோடி ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டது.

1907 ஆம் ஆண்டு உள்நாட்டு நீர்நிலை ஆணையம் ஒன்று நிறுவப்பட்டது. 1908 மே 13இல் அனைத்து கட்சியிலிருந்தும் நிபுணர்கள் சந்தித்துப் பேசினர். இதன் விளைவாக வன நிலங்கள் அனைத்தையும் நிர்வகிக்க, 'ஐக்கிய நாடுகளின் காட்டிலாகா பணி' உருவாக்கப்பட்டது. இதன் விளைவாக இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட்டது. விவசாய வளர்ச்சிக்கும் உதவியது.

**ஊழல்கள் அம்பலப்படுத்துவர்கள் (Muckrakers)**

ரூஸ்வெல்டின் நேர்மையான ஏற்பாட்டிற்கு (Square Deal) உறுதுணையாக நின்றவர்கள் 'மக்கிராக்கர்கள்' என்பவர்கள் ஆவார்கள். நாட்டில் நிலவிய ஊழல்களை தங்கள் எழுத்துக்கள் மூலம் அம்பலப்படுத்தியவர்கள் இவர்களே. வணிக கூட்டு நிறுவனங்களின் ஏகபோக உரிமை, அரசியல்வாதிகளின் முறைகேடுகள், விலைவாசி உயர்வு போன்றவைகளுக்கு எதிராக பொதுமக்களின் கருத்துக்களை திரட்டும் நோக்கத்துடன் பத்திரிகைகளில் எழுதினார்கள். இவர்களது கட்டுரைகள், மெக்லூரஸ் (Mclure's) காஸ்மாபாலிட்டன் (Casmopolitan), அமெரிக்கன் (American), பியர்சன்ஸ் (Pearson's) போன்ற பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டன. சில நூல்களும் வெளிவந்தன. ஐடாடார்பெல் (Ida M. Tarbell) என்பவர் 'ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனி' என்ற நூலை எழுதினார். அதில் ராக்பெல்லர் எவ்வாறு கோடீஸ்வரர் ஆனார் என்பது விவரிக்கப்பட்டிருந்தது. லிங்கன் ஸ்டீவன்ஸ் என்பவர் (Shame of the Citites) என்ற நூலையும், சார்லஸ் எட்வர்ட் ரசல் (Charles Edward Rassel) என்பவர் The Beef Trust என்ற நூலையும் எழுதினார். அப்டன் சிங்ளேர் The Jungle என்ற நூலை எழுதினார். இதன் விளைவாக சமுதாய நலன் காக்க பல சட்டங்களும், கூட்டு வணிக நிறுவனங்களுக்கெதிரான சட்டங்களும் இயற்றப்பட்டன.

**தியோடர் ரூஸ்வெல்டின் வெளிநாட்டுக் கொள்கை பெருந்தடிக் கொள்கை (Big Stick Policy)**

ரூஸ்வெல்டின் காலம் அமெரிக்கா ஒரு வல்லரசு நாடாக மாறிவரும் காலமாகும். உலக விவகாரங்களில் அமெரிக்காவின் தலையீடு இவர் காலத்தில் ஆரம்பமாயிற்று மெல்ல மெல்ல அமெரிக்கா உலக அரசியலில் தலைமைப் பொறுப்பைப் பெறுவதற்கு ரூஸ்வெல்ட் முயற்சி செய்தார்.

"அன்பாகப் பேசு, அதே நேரத்தில் பெருந்தடி கையிலிருக்கட்டும். அப்போது தான் நீ முன்னேறிச் செல்ல முடியும்". (Speak softly, and carry a big stick and you will go far) என்ற

பழமொழிக்கு ஏற்ப இவர் பனாமா நாட்டுடன் தனது அயலுறவுக் கொள்கையை நடைமுறைப்படுத்தினார். அதுவே பெருந்தழக் கொள்கை எனப்பட்டது.

பசிபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவின் செல்வாக்கு அதிகாரத்தின் காரணமாக பனாமா கால்வாய் பகுதி இராணுவ ரீதியில் ஒரு முக்கியமான பகுதியாக விளங்கியது. 1903 ஆம் ஆண்டிற்கு முன்பு பனாமா, கொலம்பியா நாட்டின் பகுதியாக இருந்தது. பனாமா பகுதியில் வெட்டப்படும் கால்வாய் இரு சமுத்திரங்களையும் இணைத்து போக்குவரத்தை எளிதாக்கும். 1878 ஆம் ஆண்டு ஒரு பிரெஞ்சு நிறுவனம் கொல்பியா நாட்டுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு கால்வாய் வெட்டும் பணியை மேற்கொண்டது. 1881இல் சூயெஸ் கால்வாய்யை வெட்டிய பொறியாளர் பெர்டினான்ட்டி லெஸ்ஸெப்ஸ் என்பவரே இப்பணியை மேற்கொண்டார். நிலச்சரிவு, மஞ்சள் ஜீரம் போன்றவை காரணமாக எட்டு ஆண்டுகள் சிரமப்பட்ட பின்னர் பணியை நிறுத்திவிட்டனர். 1898 ஆம் ஆண்டு நடைபெற்ற ஸ்பானிய போரின் காரணமாக பிலிப்பைன்ஸ் அமெரிக்காவிற்குக் கிடைத்ததினால் கால்வாய் பகுதியில் அமெரிக்கா அதிக கவனம் செலுத்தலாயிற்று. நொடித்துப் போன கால்வாய் கம்பெனியை ஒரு நிறுவனம் வாங்கி அதனை அமெரிக்காவிற்கு விற்பதற்கு முயற்சி செய்தது. 1902இல் ஸ்பூனர் சட்டம் (Spooner) அமெரிக்க பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டு அக்கால்வாய் பகுதியை வாங்குவதற்கு அனுமதியளித்தது.

அமெரிக்காவிலுள்ள கொலம்பியாவின் தூதுவர் ஹெரனிடம், அமெரிக்க அயலுறவுச் செயலர் ஹே (Hay) பேச்சுவார்த்தை நடத்தி 1903 இல் ஒரு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தை கொலம்பியா பாராளுமன்றம் ஏற்க மறுத்துவிட்டது. பனாமா கம்பெனிக்குக் செலுத்தும் தொகையில் ஒரு பகுதி தங்களுக்கு லஞ்சமாகத் தர வேண்டும் என கொலம்பியாவின் செனட்டர்கள் கோரினர். இதனால் ரூஸ்வெல்ட் மிகவும் பொறுமையிழந்தார்.

பனாமாவில் உள்ள அமெரிக்கர்களும், பனாமியர்களும், அமெரிக்க ஆதரவுடன் கிளர்ச்சியில் ஈடுபட்டு பனாமாவைச் சுதந்திரக் குடியரசாக்க திட்டமிட்டனர். 1903 ஆம் ஆண்டு புரட்சி நடந்தது. மூன்று நாட்களுக்குள் பனாமாவின் சுதந்திரத்தை அமெரிக்கா அங்கீகரித்தது. 1903இல் வாஷிங்டனில் ஹே-புனாவ் வாரியா ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதன்படி பத்து மைல் அகலமும் ஐம்பது மைல் நீளமும் உள்ள கால்வாய் பிரதேசம் 99 ஆண்டுகளுக்கு குத்தகையாக அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டது. பனாமா அரசுக்கு ரொக்கமாக ஒரு கோடி டாலரும், ஆண்டு குத்தகையாக இரண்டரை லட்சம் டாலரும் கொடுக்க அமெரிக்கா சம்மதித்தது. இந்தக் கால்வாய் பகுதியில் ஒழுங்கினைப் பராமரிக்கவும் அமெரிக்கா உரிமை பெற்றது. பனாமா கால்வாய் 380 மில்லியன் டாலர்கள் செலவில் 1914ல் வெட்டி முடிக்கப்பட்டது. 1920 முதல் கப்பல் போக்குவரத்து தொடங்கியது. 1979ல் இந்த பனாமா கால்வாய் பகுதி மீண்டும் பனாமாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

**ரூஸ்வெட்டின் துணைக் கோட்பாடு**

பனாமா விசயத்தில் ரூஸ்வெல்ட் மேற்கொண்ட கொள்கை உலக நாடுகளை வியப்பில் ஆழ்த்தியது. அமெரிக்கா மன்றோ கோட்பாடு என்ற பெயரில் உலக நாட்டு விவகாரங்களில் தலையிடாமல் இருந்துவந்தது. ஆனால் இப்போது அமெரிக்கா கொலம்பியா நாட்டில் தலையிட்டு பனாமாவை தனியாகப் பிரித்தது மன்றோ கோட்பாட்டிற்கு உடன்பட்டதா?என ஐயப்பாடு கொண்டன ஐரோப்பிய நாடுகள். 1904 டிசம்பரில் காங்கிரசுக்கு அனுப்பிய செய்தியில் தனது லத்தீன் அமெரிக்க கொள்கை எப்படிப்பட்டது என்பதினை தெளிவுபடுத்தினார். மன்றோ கொள்கைக்கு புதிய விளக்கம் கொடுக்கப்பட்டது. அதன் செயல்பாட்டு எல்லை விரிவுபடுத்தப்பட்டது. இதுவே "ரூஸ்வெட்டின் துணைக் கோட்பாடு" என்று அழைக்கப்பட்டது.

"அமெரிக்காவிலோ அல்லது அமெரிக்கக் கண்டத்திலுள்ள வேறு நாடுகளிலோ தொடர்ந்து தவறுகள் நடைபெற்று வந்தால் நாகரிகமுற்ற ஒரு நாடு தலையிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அமெரிக்கக் கண்டத்தில் மன்றோக் கோட்பாட்டினை அமெரிக்க ஐக்கிய நாடகள் கடைப்பிடித்து வருவதால் அங்கு சர்வதேச காவற்பணியை அது மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது" என்பது வலியுறுத்தப்பட்டது. இதன்படி இலத்தீன் அமெரிக்க நாடுகளிடமிருந்து கடன் வசூல் செய்ய ஐரோப்பிய நாடகள் தலையிடுவதை தடுப்பதற்கு கடன் வசூல் அதிகாரத்தை அமெரிக்காவே ஏற்றுக்கொள்ளும் என்பது தெளிவுபடுத்தப்பட்டது. இதுவே "ரூஸ்வெல்டின் துணைக் கோட்பாடு" என்று அழைக்கப்படுகிறது.

**டொமினிக்கள் குடியரசு**

ரூஸ்வெல்ட்டின் துணைக் கோட்பாடு முதன்முறையாக 1905ம் ஆண்டு டொமினிக்கன் குடியரசில் செயல்படுத்தப்பட்டது. டொமினிக்கன் அரசு பிரான்சுக்கும், இத்தாலிக்கும் கடன்பட்டிருந்தன. கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. எனவே அந்த இரண்டு நாடகளும் டொமினிக்கன் உள்ள விவகாரத்தில் தலையிடப் போவதாக மிரட்டின. ஆனால் ரூஸ்வெல்ட் தனது துணைக்கோட்பாட்டின்படி டொமினினக்கன் நாட்டின் சுங்கவரி வசூல் அதிகாரத்தை மேற்கொண்டார். அமெரிக்க அதிகாரிகள் வரிகளை வசூலித்து ஒரு பகுதியை டொமினிக்கன் அரசுக்க கொடுத்துவிட்டு மற்றொரு பகுதியை வெளிநாட்டுக் கடன்களை அடைக்கப்பயன்படுத்தியது. இவ்வாறு டொமினிக்கன் அரசின் நிதிநிலை கட்டுப்படுத்தப்பட்டது.

**கியுபாவில் தலையீடு**

கியுபாவில் 1906ம் ஆண்டில் கிளர்ச்சியில் ஈடுபட்ட பரட்சிக்காரர்களை அமெரிக்கப் படைகள் அடக்கின. அங்கு அமைதியை நிலைநாட்ட ரூஸ்வெல்ட் தனது துணைக்கோட்பாட்டின் படி படையை அனுப்பி தனது அதிகாரத்தை நிலைநாட்டினார்.

**ரஷ்யா ஜப்பான் விவகாரம்**

ஜப்பானும், ரஷ்யாவும் மஞ்சூரியாவிலும், கொரியாவிலும் ஆதிக்கம் செய்வது யார் என்ற பிரச்சனையில் ஈடுபட்டது. இதனால் ரஷ்ய ஜப்பானிய போர் 1906ல் ஏற்பட்டது. இப்போரில் ஜப்பானே வெற்றிபெறும் நிலையிருந்தது. இச்சமயம் ரஷ்யாவில் உள்நாட்டுப் பிரச்சனை ஏற்படவே போரை முடிவிற்கு கொண்டுவர ரஷ்யா தயாராக இருந்தது. போரை முடிவிற்கு கொண்டுவர ரஷ்யா தயாராக இருந்தது. இதில் அமெரிக்கா மத்தியஸ்தம் செய்ய வேண்டும் என ஜப்பான் கேட்டுக்கொண்டது. ஆனால் சீனாவில் அமெரிக்காவின் திறந்தவெளிக் கொள்கையை ஜப்பான் ஏற்றுக்கொண்டதால் மத்தியஸ்தம் செய்ய முடியும் என்று ரூஸ்வெல்ட் அறிவித்தார். இதற்கு ஜப்பான் சம்மதித்தது. 1905 செப்டம்பரில் போர்ட்ஸ்மவுத் நகரில் சமாதான மாநாடு கூட்டப்பட்டது. ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்குமிடையே போர்ட்மவுத் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இதனால் 1906ம் வருட சமாதானத்திற்கான நோபல் பரிசு தியோடர் ரூஸ்வெல்டிற்கு வழங்கப்பட்டது. நோபல் பரிச பெற்ற முதலாவது ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் ஆவார்.

**ஐரோப்பிய நாடுகளுடன் உறவு**

ஐரோப்பிய நாடுகளின் பிரச்சனைகளில் ரூஸ்வெல்ட் ஒரு நடுநிலையாளராக இருந்து பல பிரச்சனைகளை தீர்த்து வைத்தார். பிரான்சும் ஜெர்மனியும் ஆப்பிரிக்காவில் உள்ள மொராக்கோ விவகாரத்தில் மோதிக் கொண்டன. இந்த மோதல் உலக அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் எனக் கருதப்பட்டது. இப்பிரச்சனையை தீர்க்க ரூஸ்வெல்ட் அனைத்து நாடுகளின் மாநாடு ஒன்று ஸ்பெயின் நாட்டில் உள்ள அல்ஜிசிராசில் கூட்டப்பட்டது. இம்மாநாட்டு முடிவின்படி மொராக்கோவின் ஒருமைப்பாடு அங்கீகரிக்கப்பட்டது. இதனால் உலக அரங்கில் அமெரிக்காவின் செல்வாக்க உயர்ந்தது.

1. தியோடர் ரூஸ்வெல்டின் உள்நாட்டு கொள்கைகளைப் பற்றி எழுதுக.
2. தியோடர் ரூஸ்வெல்டின் வெளியுறவு கொள்கைகளைப் பற்றி எழுதுக.
3. தியோடர் ரூஸ்வெல்டின் சாதனைகள் பற்றி எழுதுக.

## தாமஸ் உட்ரோ வில்சன்

"அரசியலில் நேர்மைஇ பொதுவாழ்வில் தூய்மை என்ற கொள்கை உடைய பேராசிரியர். உட்ரோ வில்சன் நம்மை உலகப்போரிலிருந்து காப்பார் என அமெரிக்க மக்கள் நம்பினர்".

உட்ரோ வில்சன் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதியாகப் பதவியேற்றது அமெரிக்க வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கியது. இவர் பின்பற்றிய கொள்கைகள் அமெரிக்காவை உலக அரசியலில் முக்கியமான பங்கைப் பெறும் நிலை ஏற்பட்டது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு தென்பகுதிக்காரர் தாமஸ் ஜெபர்சன் மாடிசனுக்குப் பிறகு

விர்ஜீனியா மாநிலத்தவர் வெள்ளை மாளிகைக்கு அதிபரானார். நல்ல படித்த பேராசிரியர் ஒருவர் முதன்முதலில் ஜனாதிபதி பதவி பெறுவதை மக்கள் ஆமோதித்தனர். தான் பதவியேற்க வாஷிங்டன் வந்தபோது பிரின்ஸ்டன் பல்கலைக்கழக மாணவர்கள் இதுவரை வரவேற்று, பதவியேற்பு மண்டபத்திற்கு வழிநடத்திச் சென்றனர். பெரிய மக்கள் கூட்டமும் பின்தொடர்ந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

உட்ரோ வில்சன் 1856 ம் ஆண்டு விர்ஜீனியா மாநிலத்தில் ஸ்டாண்டர் என்ற இடத்தில் பிறந்தார். கொலம்பியாவில் பள்ளிப் படிப்பையும், கல்லூரி படிப்பை 1873ல் டேவிட்சன் கல்லூரியிலும். சட்டக் கல்வியை 1879ல் வர்ஜீனியா பல்கலைக்கழகத்திலும் கற்று முடித்தார். வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்ட இவர். மீண்டும் ஆராய்ச்சி கல்விக்காக பால்டிமோரில் உள்ள ஜான்ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். அங்கு Congressional Government என்ற தலைப்பில் ஆராய்சிக் கட்டுரை எழுதி 1885ல் டாக்டர் பட்டம் பெற்றார்.

1902லிருந்து 1910 வரை பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். பேராசிரியராகவும், பின்னர் பல்கலைக்கழகத்தின் தலைவராகவும் பணியாற்றினார். 1911ல் ஜனநாயகக் கட்சியின் சார்பாக நியுஜெர்ஸி மாநில கவர்னராக பதவியேற்றார். சமூக சீர்திருத்தங்களை கவர்னராக இருந்த போதே கொண்டுவந்தவர். 1912ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக் கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்பட்டு வெற்றி பெற்றார். எளிமையான தோற்றமுடையவராக இருந்தாலும் செயலில் உறுதி மிக்கவராகத் திகழ்ந்தார். பழமையான மரபுகளில் பற்று கொண்டவர். அதே நேரத்தில் சீர்திருத்தங்களை அமல்படுத்துவதில் தீவிரமாகச் செயல்பட்டார். இவரது கொள்கைகள் புதிய சுதந்திரம் New Freedom என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

வில்சன் 1912ம் வருட ஜனாதிபதி தேர்தலின் போது நிகழ்த்திய கருத்துக்கள் தொகுக்கப்பட்டு New Freedom என்ற நூலாக வெளியிடப்பட்டது. கூட்டு வணிக நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இருந்து வரும் சிறு வணிகர்களுக்கு விடுதலை பெற்றுத்தர வேண்டும். பெரிய தொழிலதிபர்களின் பிடியிலிருந்து அரசை விடுவிக்க வேண்டும். சுங்கவரி சீர்திருத்தப்பட வேண்டும். தொழிலாளர்களுக்கு வசதிகள் செய்து தரப்பட வேண்டும். விவசாயத்திற்கு ஊக்கம் அளிக்கப்பட வேண்டும். புதிய சமுதாயத்தினை உருவாக்க வேண்டும் ஆகிய கருத்துக்களே வில்சனின் புதிய சுதந்திர கோட்பாடுகளாகும். மக்காளட்சி அரசுக்கு புதியதொரு பொருள் கற்பித்தாக வேண்டும். இயற்கை சாதனங்களைப் போற்றிப் பாதுகாத்து சேமிக்க வேண்டும். மக்களிடம் தடையில்லா போட்டியிருக்க வேண்டும் என்றார்.

தனது ஆட்சியில் 1913 முதல் 1917 முடிய புதிய சுதந்திர கோட்பாட்டின் கருத்துக்களை நடைமுறைப்படுத்த முற்பட்டார். செல்வத்தின் மூன்று அடிப்படைத் தூண்களாக விளங்கும் (Trusts, Tariffs and Banks) டிரஸ்ட்கள், காப்பு வரிகள், வங்கிகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்த வேண்டும் என திட்டமிட்டார்.

**1. அண்டரவுட் காப்பு வரிச் சட்டம்**

முறைகேடான வணிக நடைமுறைகளையும், அந்நிய நாட்டு வாணிபத்தின் முறைகேடான போட்டிமுறைகளையும் தடை செய்ய இச்சட்டம் கொண்டு வரப்பட்டது. காப்பு வரி 41லிருந்து 27 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. கம்பளம், இருப்புத்தாது, சர்க்கரை போன்ற இன்றியமையாத பொருட்களின் மீதான காப்பு வரி முற்றிலும் நீக்கப்பட்டது.

**2. வங்கிகளை சீர்திருத்த கூட்டாட்சி ஒதுக்கீட்டுச் சட்டம்**

வங்கிகளை சீர்திருத்த கூட்டாட்சி ஒதுக்கீட்டுச் சட்டம் கொண்டு வரப்பட்டது. பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்தி வங்கிகளின் அதிகாரத்தையும் செயல்பாட்டையும் பரவலாக்கியது.

- அமெரிக்க ஐக்கிய நாடுகள் பன்னரெண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூட்டாட்சி ஒதுக்கீடு வங்கி நிறுவப்பட்டது.
- இந்த வங்கிகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிட வாஷிங்டனில் ஏழு உறுப்பினர் கொண்ட கூட்டாட்சி ஒதுக்கீடுக் குழு அமைக்கப்பட்டது.
- "பெடரல் ரிசர்வ் நோட்டுகள்" என்ற புதிய காகித நாணயங்களை இவ்வங்கிகள் வெளியிடும். நாட்டிலுள்ள எல்லா வங்கிகளும் பெடரல் ரிசர்வ் அமைப்பு என்பதில் உறுப்பினராகும்படி கேட்டுக் கொள்ளப்பட்டன.

இந்த சட்டத்தின்படி நாட்டின் மொத்த வங்கி மூலதனத்தில் சுமார் ஐம்பது சதவீதம் இந்த அமைப்பின் மேற்பார்வையில் வந்தது. சரியான நேரத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் நிதி நிலைமை உறுதிப்படுத்தப்பட்டது முதல் உலகப் போருக்கு தயாராக நாட்டை வலுப்படுத்தியது.

**வணிகக் கூட்டு நிறுவனங்கள்**

வணிகக் கூட்டு நிறுவனங்களை ஆராய பிரதிநிதிகள் சபை பூஜோ கமிட்டியை அமைத்திருந்தது. தனியார் நிறுவனங்களின் முற்றுரிமை தவறானது. ஷெர்மனின் டிரஸ்ட் எதிர்ப்புச் சட்டத்தை மேலும் வலுப்படுத்த வேண்டுமென்று காங்கிரசுக்கு வில்சன் சிபாரிச செய்தார். 1914ல் கூட்டாட்சி வணிகக் கமிசன் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஐந்து பேர் அடங்கிய குழு அமைக்கப்பட்டது. தனி நபர்களும், நிறுவனங்களும் நியாயமற்ற முறையில் போட்டியிடுவதைத் தடை செய்ய அதிகாரம் வழங்கப்பட்டது. மேலும் இக்கமிசனின் ஆணைகளை மதிக்காத தொழில் நிறுவனங்களுக்கெதிராக வழக்கு தொடுப்பதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. தனது ஆட்சிக் காலத்தில் 379 கைவிடு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு டிரஸ்ட்கள் கலைக்கப்பட்டன.

**கிளேட்டன் டிரஸ்ட் எதிர்ப்புச் சட்டம்**

ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஹென்றி கிளேட்டன் என்பவரால் பிரதிநிதிகள் சபையில் இச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தின்படி.

1. தனி உரிமை பெற்ற வணிக நிறுவனங்கள் பிற நிறுவனங்களின் பங்குகளை வாங்கக் கூடாது.
2. ஒரு வணிகக் கூட்டு நிறுவனத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றொரு நிறுவனத்தின் நிர்வாகக் குழு உறுப்பினராக இருக்க கூடாது.
3. தொழிலாளர்களின் உழைப்ப ஒரு விளைபொருள் அல்ல என்றும் அது ஒரு வாணிகப் பொருள் என்று விளக்கம் கூறப்பட்டது. அதன்படி தொழிற்சங்கங்களுக்கு கூட்டு நிறுவன எதிர்ப்பு சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. இச்சட்டத்தின் தொழிலாளர்கள் தங்களுக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகக் கருதினர். தொழிலாளர் சங்கங்கள் அமைக்கவும், வேலை நிறுத்தம் செய்யும் உரிமையைப் பெறவும் இன்னும் சில காலம் காத்திருக்க வேண்டியிருந்தது.

**விவசாயிகளின் நலன் - ஸ்மித் லீவர் சட்டம்**

கூட்டாட்சி ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி தேசிய வங்கிகள் சொத்து அடமானத்தின் பேரில் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கலாம் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் இது விவசாயிகளுக்கு மன நிறைவு அளிக்கவில்லை. 1914ல் இயற்றப்பட்ட ஸ்மித் லீவர் சட்டப்படி விவசாய செய்திகளையும், புதிய கண்டுபிடிப்புகளையும் விவசாயிகளுக்கு அறிவிக்க ஒரு இயக்கம் தொடங்கப்பட்டது. நில மானிய கல்லூரிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய இச்சட்டம் வழி வகுத்தது.

**கூட்டாட்சி பண்ணைக் கடன் சட்டம்**

இச்சட்டத்தின்படி பன்னிரண்டு கூட்டாட்சி நில வள வங்கிகள் உருவாக்கப்பட்டன. இந்த வங்கிகள் குறைந்த வட்டியில் நீண்ட கால கடன்பெற வழிவகை செய்யப்பட்டது.

**தொழிலாளர் நலன்**

தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்க 1915ல் லபாலட் கப்பல் தொழிலாளர் சட்டம் (La Follett Seaman's Act) மாலுமிகள் தொழில் நிலையினை மாற்றியமைத்தது. மாலுமிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய குறைந்த அளவு ஊதியம், உணவு, இருப்பிடம் ஆகியவை குறிப்பிடப்பட்டிருந்தது. 1916 ல் கொண்டுவரப்பட்ட ஆடம்சன் சட்டப்படி இரயில்வே துறையில் பணிபுரிபவர்களுக்கு எட்டு மணி நேர வேலையும், அதற்குமேல் செய்யும் வேலைக்கு அதிக சம்பளமும் கொடுக்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தியது.

**அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்கள்**

பதினாறாவது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி மாநிலங்களைக் கலந்து கொள்ளாமலேயே கூட்டாட்சி அரசு வருமான வரி விதிக்கலாம் என்பது சட்டமானது. 1913 ம் வருட 17வது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி செனட் சபை உறுப்பினர்கள் இனிமேல் மக்களால் நேரடியாத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இது பாப்புலிஸ்ட் கட்சியின் கோரிக்கையாகும். 1919ம் வருடம் 18வது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி மது விலக்கு நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது வெற்றியைத் தரவில்லை.

ஆயிரக்கணக்கான இரவு விடுதிகள், கள்ளத்தனமான மது வடித்தல் போன்ற முறைகேடான காரியங்கள் பெருகின. எனவே 1933ம் ஆண்டு 21வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தின்படி 18வது திருத்தம் ரத்து செய்யப்பட்டது. 1920 ம் வருடம் 19ம் நாள் அரசியலமைப்பு திருத்தத்தின்படி பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. 1933ம் வருடம் இயற்றப்பட்ட 20வது அரசியலமைப்புச் திருத்தத்தின்படி ஜனாதிபதி பதவி ஏற்கும் நாள் ஜனவரி இருபது என நிர்ணயிக்கப்பட்டது.

**வெளிநாட்டுக் கொள்கை**

உட்ரோ வில்சனின் வெளிநாட்டுக் கொள்கையை அவரது வெளியுறவுச் செயலர் வில்லியம் பிரையன் செயல்படுத்திக் காட்டினார். புதிய ராஜதந்திரம் என்றழைக்கப்பட்ட இவரது கொள்கை சர்வதேச தார்மீக முறையை வற்புறுத்தியது. வில்சனின் ஆட்சிக் காலத்தில் முதல் உலகப் போர் உருவானது. இதனால் ஐரோப்பிய மற்றும் அண்டை நாடுகள் விவகாரங்களில் அமெரிக்கா தலையிட வேண்டியதாயிற்று.

**மெக்ஸிகோ**

மெக்ஸிகோவில் அமெரிக்க முதலாளிகள் எண்ணெய் வயல்கள், ரயில்வே, சுரங்கத்தொழில் ஆகியவற்றில் முதலீடு செய்திருந்தனர். மெக்சிகோவில் ஏற்பட்ட புரட்சிகளின் விளைவாக 1913ல் விக்டோரியா ஹீவர்ட் என்பவர் பதவி எற்றார். அப்போது வில்சன் அலபாமாவில் ஆற்றிய சொற்பொழிவில் போர் மூலம் எந்த ஒரு பகுதியையும் அமெரிக்கா சேர்ந்துக் கொள்ளாது என்றார். ஆனால் 1914 ஏப்ரலில் டாம்பிகோ என்ற இடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியினால் இரு நாடுகளின் உறவில் பாதிப்பு ஏற்பட்டது. மெக்ஸிகோவின் அதிபரின் வீரர்கள் சில அமெரிக்க வீரர்களை கைது செய்தனர். உடனே விடுவிக்கப்பட்டனர். ஆனால் ஹீவர்டா மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், அமெரிக்க கொடிக்கு 21 குண்டுகள் முழங்க மரியாதை செய்ய வேண்டுமென்றும் அமெரிக்கா கோரியது. இதற்கு ஹீவர்ட்டா மறுத்தார். வீராகுருஸ் நகரை கைப்பற்ற வில்சன் படைகளை அனுப்பினார். அர்ஜென்டினா, பிரேசில்,சிலி ஆகிய நாடுகள் தலையீட்டால் போர் தவிர்க்கப்பட்டது. சமரசம் ஏற்பட்டது.

1914 ஜூலையில் ஹீவர்ட்டா ராஜினாமா செய்தார். கரான்சா என்பவர் புதிய அதிபரானார். அமெரிக்கா இவரை அங்கீகரித்தது. இவருக்கு எதிராக பாஞ்சோவில்லோ என்ற புரட்சியாளர் கிளர்ச்சியில் ஈடுபட்டார். இவரது வீரர்கள் 1916, மார்ச் மாதம் 17 அமெரிக்கர்களை கொன்று விட்டனர். எனவே ஜான் பெர்ஷிப் என்பவர் தலைமையில் வில்சன் ஒரு படையை அனுப்பினார். மெக்ஸிகோ மக்கள் படையெடுப்பை விரும்பவில்லை. கரான்சாவை எதிர்த்து கிளர்ச்சி செய்தனர். 1917 பிப்ரவரியில் போர் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. இதற்கிடையில் ஜெர்மனி மெக்ஸிகோவுடன் கூட்டு சேர விருப்பம் தெரிவிக்கவே அமெரிக்கப் படைகள் கரான்சாவுக்கு ஆதரவாக நிறுத்தி வைக்கப்பட்டன.

**ஹெயிட்டி**

மேற்கு இந்தியத் தீவுக் கூட்டங்களில் ஒன்றான ஹெயிட்டி இராணுவ சர்வாதிகாரிகளாலேயே ஆளப்பட்டு வந்தது. அமெரிக்கர்கள் இந்நாட்டில் வங்கிகளிலும், இரயில்வே பாதைகளிலும் முதலீடு செய்திருந்தனர். அங்கு ஏற்படும் கிளர்சிகளின் காரணமாக அரசியல் ஸ்திரத் தன்மை ஏற்படவில்லை. 1915ல் நடைபெற்ற கிளர்ச்சியில் அதிபர் லோமிசாம் கொல்லப்பட்டார். வில்சன் அனுப்பிய படைகள் ஹெட்டியை முற்றுகையிட்டன. அமெரிக்காவின் சொற்படி நடக்க குயேரஸ் என்பவர் ஒப்புக் கொண்டதினால் அவர் அதிபராக்கப்பட்டார். ஹெயிட்டடியின் நிதி நிர்வாகமும், வெளியுறவுத்துறையும், அமெரிக்காவின் கட்டுப்பாட்டிற்கு வந்தது. அமெரிக்காவின் காப்பரசாக 1934 வரை ஹெயிட்டி இருந்து வந்தது.

**டொமினிக்கன் குடியரசு**

தியோடர் ரூஸ்வெல்ட் காலத்திலேயே இந்நாட்டின் நிதி நிலையை அமெரிக்கா கட்டுப்படுத்தி வந்தது. டொமினிக்கன் அரசாங்கத்தின் செலவினை கட்டுப்படுத்த அமெரிக்க அதிகாரி அனுப்பப்பட்டார். ஆனால இதனை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்தனர். அதிபர் ராஜினாமா செய்தார். உடனே அமெரிக்கா 1916 நவம்பரில் இக்குடியரச கைப்பற்றியது. போலீஸ் படையையும், நிதி அதிகாரத்தையும் தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டது. 1924 வரை அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது.

**நிகாராகுவா**

1914ல் நிகாராகுவாவுடன் செய்து கொள்ளப்பட்ட பிரையன் சார்மரோ உடன்படிக்கையின் படி மூன்று மில்லியன் டாலர்கள் கொடுக்கப்பட்டு நிகாராகுவாவுக்குச் சொந்தமான தீவுகளையும், கடற்படை தளம் அமைக்கவும் 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்குப் பெற்றது. 1917ல் இருபத்தைந்து மில்லியன் டாலர்கள் கொடுத்து வெர்ஜின் தீவுகளையும் அமெரிக்கா வாங்கியது. அங்கு வாழ்ந்த நீக்ரோ மக்களுக்கு சொற்ப உரிமைகளே வழங்கப்பட்டன. 1917ல் கியுபாவின் மக்கள் புரட்சி ஏற்பட்ட போது அமெரிக்கப் படைகள் அனுப்பப்பட்டு அந்த நாடும் அமெரிக்க கட்டுப்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. 1921 வரை அமெரிக்க படைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

## முதல் உலகப் போர்

1914 ஜூன் 28ம் தேதி ஆஸ்திரிய இளவரசர் ஆர்ச்டியுக் பெர்டினாண்டு செர்பியா தலைநகர் சராஜிவோவில் சுட்டுக்கொல்லப்பட்டார். இதுவே முதல் உலகப்போருக்கு உடனடி காரணமாயிற்று. ஐந்து வாரங்களுக்குள் ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் உலகப்போரில் சிக்கிக் கொண்டன. ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி ஆகிய நாடுகள் ஒரு அணியிலும், இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் மற்றொரு அணியிலும் இணைந்து கொண்டன. போர் ஆரம்பித்த இரண்டு நாளில் 1914 ஆகஸ்ட் 4ல் வில்சன் நடுநிலைப்

பிரகடனம் ஒன்றை வெளியிட்டார். அதன்படி அமெரிக்கா நடுநிலை வகிக்கும் என்று அறிவித்தார். போரில் ஈடபடுவதை அமெரிக்க மக்கள் விரும்பவில்லை. ஆனால் அவர்கள் உள்ளத்தாலும் உணர்வாலும் இங்கிலாந்துடன் நெருங்கிய தொடர்ப்பு கொண்டவர்கள். மொழியாலும், பண்பாட்டாலும் நெருங்கிய உறவு கொண்டவர்கள். ஆங்கிலேயர்கள் ஜனநாயகம் காக்கவே போரிடுகின்றனர் என்று அமெரிக்க மக்கள் கருதினர். பிரான்ஸ் நாட்டின் மீது அமெரிக்க மக்கள் நல்லுறவு கொண்டிருந்தனர். அமெரிக்க சுதந்திரப் போரின்போது தங்களுக்கு பிரான்ஸ் உதவியதை மறக்கவில்லை. வில்சனும் மனதார நேச நாடுகள் பக்கமே பரிவுடன் இருந்தார். ஆனால் வெளியில் நடுநிலை வகிப்பதாகக் கூறிக்கொண்டார்.

நடுநிலை வகித்த அமெரிக்கா இறுதியில் போரில் இங்கிலாந்திற்கு ஆதரவாக களத்தில் இறங்கியது. ஜெர்மனி வெற்றி பெற்றதால் அது தங்களின் கோட்பாடுகளுக்கும் நலன்களுக்கும் அழிவை ஏற்படுத்தும் என்று அமெரிக்கா அஞ்சியது. இங்கிலாந்தின் நலனில் ஆர்வம் கொண்டவர்களின் பிரச்சாரம் நேச நாடுகளுக்கு ஆதரவு தரும் போக்கை அமெரிக்க மக்களிடம் ஏற்படுத்தியது. இலண்டனிலிருந்து வெளிவரும் பத்திரிக்கைகளின் பிரச்சாரம் ஜெர்மனிக்கு எதிராக இருந்தது. போருக்கு ஜெர்மனிதான் காரணம் என விவரிக்கப்பட்டது. போரில் ஜெர்மனி வெற்றி பெற்றதால் ஜனநாயகத்தின் மீது ஏதேச்சதிகாரம் வெற்றி பெற்று விடும் என்று பிரச்சாரம் செய்யப்பட்டது.

பெல்ஜியத்தின் நடுநிலையை மீறியது ஜெர்மனிதான் என்று கூறப்பட்டது. ஆங்கில இலக்கியம், வரலாறு, ஆங்கில அரசாங்கம் பற்றி படித்த அமெரிக்க பட்டதாரிகள் இங்கிலாந்திற்கு ஆதரவாகவே இருந்தனர். அமெரிக்காவின் உயர் அதிகாரிகளும் இங்கிலாந்திறகு ஆதரவு தர வேண்டும் என்ற கொள்கை உடையவர்களாக இருந்தனர். இச்சயம் இங்கிலாந்தின் ஆதரவாளரான ராபர்ட் லேட்சிங் வெளியுறவுத்துறை செயலரானார்.

1915 மே மாதம் பிரிட்டிஷ் விசாரணை கமிஷன் ஜெர்மனியின் சில கொடுஞ்செயல்களை வெளிப்படுத்தியது. பெல்ஜியத்தில் உள்ள லாவின் நூலகம் அழிக்கப்பட்டது. எடித்கேவல் என்ற செவிலிய பெண்ணை கொலை செய்தது போன்ற செயல்கள் பிரசுரிக்கப்பட்டன. மேலும் இங்கிலாந்தை வெற்றி கொண்ட பின் ஜெர்மனி அமெரிக்கா மீது படையெடுக்கும் என்றும் செய்தி பரப்பப்பட்டது. இவையனைத்தும் நேச நாடுகளின் மீது பரிவை ஏற்படுத்தியது.

**நடுநிலை உரிமை மீறல்**

போரிடும் நாடுகள் நடுநிலை நாடுகளின் உரிமைகளை மதிக்கவில்லை. இங்கிலாந்து ஜெர்மனிய துறைமுகங்களை முற்றுகையிட்டது. கடலில் செல்லும் கப்பல்களை சோதனையிட்டது. இதற்கு அமெரிக்க கப்பல் முதலாளிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். பிரிட்டனுக்கு எதிராக ஜெர்மனி தனது நீர் மூழ்கி கப்பல்கள் மூலம் தாக்குதல் நடத்தி பிரிட்டிஷ் கடல் பிரதேசத்தில் உள்ள கப்பல்களை மூழ்கடிக்கப்போவதாக அறிவித்தது.

அமெரிக்க கப்பல்களுக்கோ உயிர்களுக்கோ நீர் முழ்கிக் கப்பல்களினால் பாதிப்பு ஏற்பட்டால் ஜெர்மனியே பொறுப்பு என வில்சன் எச்சரித்தார்.

ஆனால் சில அமெரிக்கக் கப்பல்கள் ஜெர்மனியால் தாக்குதலுக்கு உள்ளாயின. 1915 மார்ச் 28ம் தேதி "பலபா" என்ற பிரிட்டிஷ் கப்பல் தாக்கப்பட்டது. ஒரு அமெரிக்கர் உயிரிழந்தார். 1915 மே 7ம் தேதி ஆங்கில பயணக் கப்பல் "லூசிட்டானியா" மூழ்கடிப்பட்டது. 1198 பேர் இறந்தனர். இதில் 128 பேர் அமெரிக்கர்கள். இதற்கு வில்சன் கடுமையான கண்டனக் குறிப்பு மட்டுமே அனுப்ப முடிந்தது. ஜெர்மனி மன்னிப்பு கோரியது. 1915 ஆகஸ்ட் 9 ல் "அராபிக்" என்ற கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. இரண்டு அமெரிக்கர்கள் உயிரிழந்தனர். 1916 மார்ச் 24ல் "சுசெக்ஸ்" என்ற பிரெஞ்சு கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகள் யாவும் அமெரிக்க மக்களை கோபம் கொள்ளச் செய்தது. ஜெர்மனிக்கு எதிராக அமெரிக்கா போரில் இறங்க வேண்டும் என்று மக்கள் கோரினர்.

**நேச நாடுகளுடன் வாணிபம்**

இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளுக்கு அமெரிக்கா பெருமளவில் போர்த்தளவாடங்களை ஏற்றுமதி செய்தது. அமெரிக்க முதலாளிகள் அதிக லாபம் ஈட்டினர். தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு கிடைத்தது. 1914ல் 250 கோடி டாலர்களிலிருந்து 1916 ல் 550 கோடி டாலர்கள் மதிப்புள்ள பொருட்டகள் ஏற்றுமதியாயின. நேச நாடுகள் அமெரிக்க வங்கிகளிடம் கடன் பெற்று போர்த்தளவாடங்கள் வாங்கினர். நேச நாடுகளுக்கு ஆயுதம் அளிப்பகை ஜெர்மனி ஆட்சேபித்தது. ஆயுத விற்பனை சர்வதேச சட்டத்திற்கு முரணானது அல்ல என்று வில்சன் விளக்கமளித்தார்.

**அமெரிக்காவின் தயார்நிலை**

அமெரிக்காவின் நடுநிலை காக்கப்பட வேண்டுமானால் போர் முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும் என்று வில்சன் கருதினார். வில்சனின் தூதுவர் ஹவுஸ் ஐரோப்பிய தலைநகரங்களுக்குச் சென்று பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இங்கிலாந்து வெளியுறவு அமைச்சர் எட்வர்டு கிரேயுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி அமைதிக்காக ஒரு மாநாடு கூட்டுவது என்றும் அதை நேக நாடுகள் ஏற்று ஜெர்மனி ஏற்றுக் கொள்ளாவிட்டால் நேச நாடுகளுக்கு ஆதரவாக அமெரிக்கா போரில் இறங்கும் என்றும் ரகசிய முடிவு எடுக்கப்பட்டது.

ஜெர்மனியின் நீர் மூழ்கிக் கப்பல்கள் பல ஆங்கிலக் கப்பல்களை மூழ்கடித்தது. இதனை Tribune என்ற அமெரிக்க பத்திரிக்கை கடுமையாக விமர்சனம் செய்தது. பிரிட்டிஷ் கப்பற்படை தோற்கடிக்கப்பட்டால் அமெரிக்க நலன்களுக்கு ஆபத்து ஏற்படும் என எச்சரித்தது. அமெரிக்காவுக்கு தன்னை தயார்படுத்திக் கொள்ள முடிவு செய்தது. 1916ல் இயற்றப்பட்ட தேசிய பாதுகாப்புச் சட்டப்படி 1,75,000 பேர் கொண்ட நிலைப்படை திரட்டப்பட்டது. போர்க்கப்பல்கள் கட்ட 313 மில்லியன் டாலர்கள் ஒதுக்கப்பட்டது. நிவேதா,

பென்சில்வேனியா,அகலகோமா என்ற பெரிய போர்க்கப்பல்கள் கட்டப்பட்டன. போர் ஏற்பட்டால் அதனை சமாளிக்க "தேசிய பாதுகாப்பு கவுன்சில்" உருவாக்கப்பட்டது.

**1916 தேர்தல்**

1916ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் பற்றிய பிரச்சினையை மையமாகக் கொண்டிருந்தது. இரு கட்சிகளுக்குமிடையே போர் பற்றிய கருத்துவேறுபாடுகள் இல்லையென்றாலும் குடியரசுக் கட்சி வேட்பாளர் சார்லஸ் ஹக்ஸ் வெற்றி பெற்றால் அமெரிக்காவை போரில் ஈடுபடுத்துவார் என்ற அச்சம் நிலவியது. இருந்தபோதிலும் இரண்டாம் முறை வில்சனே தேர்ந்தெடுக்கப்பட்டார். 1917 ஜனவரி 22ல் செனட் சபையில் வில்சன் உரையாற்றிய போது "வெற்றியில்லா சமாதானம்" என்ற கோட்பாட்டை வெளியிட்டார். அமெரிக்க மக்கள் கருத்தை ஜெர்மனிக்கு எதிராகத் திரட்டி நேச நாடுகளுக்கு ஆதரவாக போரில் இறங்குவது என திட்டமிட்டார்.

**எதிர்பாரா நிகழ்ச்சிகள்**

சில எதிர்பாரா நிகழ்ச்சிகள் அமெரிக்காவை போரில் இறங்கும்படி செய்தது. 1917 ஜனவரி 31ம் தேதி ஜெர்மனி தனது அறிவிப்பின் மூலம் கட்டுப்பாடற்ற நீர்மூழ்கித் தாக்குதலில் இறங்கியது. 1917 பிப்ரவரி 3ம் தேதி அமெரிக்கக் கப்பல் "ஹிஸ்டானிக்" மூழ்கடிக்கப்பட்டது. இதனால் ஜெர்மனியுடன் ராஜதந்திர உறவு முறித்துக் கொள்ளப்பட்டது. 1917 மார்ச் 18 ல் மேலும் மூன்று அமெரிக்கக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. பிரிட்டன் செல்லும் அமெரிக்க வணிகக் கப்பல்களில் தற்காப்புக்காக பீரங்கிகளையும், ராணுவ வீரர்களையும் வைத்துக் கொள்ள வில்சன் ஆணை பிறப்பித்தார். பல வணிகக் கப்பல்கள் துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டன. நேச நாடுகளுக்கு அமெரிக்க உதவி கிடைக்கவில்லை.

அமெரிக்கா போரில் இறங்க முக்கிய நிகழ்ச்சி ஒன்று காரணமாக அமைந்தது. ஜெர்மனி வெளியுறவு அமைச்சர் சிம்பர்மேன் மெக்ஸிகோவில் இருந்த ஜெர்மனிய தூதர் வான்எக்காட்டிற்கு ஒரு ரகசிய செய்தியை அனுப்பினார். இந்தச் செய்தி இங்கிலாந்து உளவுத்துறையினர் மூலம் அமெரிக்காவிற்கு தெரிவிக்கப்பட்டது. அமெரிக்கா போரில் இறங்கினால் மெக்ஸிகோ ஜெர்மனியுடன் சேர்ந்து போரிட வேண்டும் என்றும், நியுமெக்ஸிகோ, டெக்டஸாஸ், அரிசோனா போன்ற பகுதிகளை மீண்டும் பெற ஜெர்மனி உதவும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தச் செய்தியை 1911 மார்ச் 1ல் வில்சன் வெளியிட்டார். இச்செய்தி அமெரிக்கர்களை ஆத்திரமடையச் செய்தது.

இந்நிலையில் ரஷ்யாவில் புரட்சி ஏற்பட்டு புதிய அரசு ஆட்சிக்கு வந்தது. அங்கு நிலவிய குழப்பமான நிலை போர் நடவடிக்கைகளைப் பாதித்தது. பிரான்ஸ் முறியடிக்கப்படும் சூழ்நிலை உருவானது. இந்நிகழ்வுகளால் 1917 ஏப்ரல் 2 ம் தேதி ஜெர்மனி மீது போர் பிரகடனம் செய்ய காங்கிரசின் அனுமதியை வில்சன் கேட்டார். காங்கிரசின் ஒப்புதலுடன் 1917 ஏப்ரல் 6 ம் தேதி புனித வெள்ளியன்று ஜெர்மனி மீது அமெரிக்கா போர் தொடுத்தது.

**முதல் உலகப் போரில் அமெரிக்காவின் பங்கு**

நடுநிலை நாடுகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும், பன்னாட்டு சட்டதிட்டங்களைப் பாதுகாக்கவும். உலகில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் அமெரிக்கா போரில் இறங்குவதாக அறிவித்தது. போரை முடித்து வைப்பதற்கான போர் என்றும் குறிப்பிடப்பட்டது. தாம் ஜெர்மானிய அரசின் மீதுதான் போர் தொடுப்பதாகவும். ஜெர்மானிய அரசின் மீதுதான் போர் தொடுப்பதாகவும், ஜெர்மானிய மக்கள் மீது அல்ல என்றும். அவர்கள் மீது அன்பும். நட்பும் கொண்டுள்ளதாகவும் அறிவித்தார். போரை திறம்பட நடத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. ஜார்ஜ்கில் தலைமையில் பொதுத் தகவல் கமிட்டி அமைக்கப்பட்டது.
2. ஆறு அம்சங்களைக் கொண்ட தேசிய பாதுகாப்பு கவுன்சில் அமைக்கப்பட்டது.
3. தொழில் அதிபர்கள் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.
4. கப்பல் கம்பெனிகள், ரயில்வேக்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றை அரசு எடுத்துக் கொள்ள ஓவர்மேன் சட்டம் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கியது.
5. சிறப்புப் பணிச் சட்டப்படி பெரும்படை திரட்டப்பட்டது.
6. போர்த்தொழில்கள் வாரியம் நிறுவப்பட்டது.
7. உணவு உற்பத்தியைப் பெருக்கவும், உணவுப் பொருட்களை வாங்கி நேச நாட்டினருக்கு அனுப்பவும் ஹெர்பர்ட் ஹீலர் தலைமையில் உணவு வாரியம் அமைக்கப்பட்டது.
8. ஜெர்மானிய சொத்துக்கள் அமெரிக்க அரசாங்கம் எடுத்துக்கொண்டன.
9. நிதி அமைச்சர் மக்காடுவின் தலைமையில் ரயில்வே வாரியம் அமைக்கப்பட்டது. இவ்வாரியம் ராணுவத்திற்குத் தேவையான பொருட்களை விரைந்து அனுப்பும்.
10. National War Labour Board, War Reveneue Board அமைக்கப்பட்டன.

**போர் நடவடிக்கைகள்**

1917 ஜூன் மாதம் அமெரிக்க ராணுவம் மேஜர் ஜான்பெர்ஷிங் தலைமையில் பிரான்சில் தரையிறங்கியது. இதனால் நேச நாட்டுப் படைகள் தைரியமடைந்தது. படிப்படியாக அமெரிக்க இராணுவத்தால் ஜெர்மனி பல போர்களில் தோற்கடிக்கப்பட்டது. மேலும் மாதந்தோறும் மூன்று லட்சம் அமெரிக்க வீரர்கள் ஐரோப்பா வந்திறங்கினர். 1919 ம் ஆண்டு தொடக்கத்தில் ஜெர்மனி பிரான்சைத் தாக்கியது. நேச படைகள் எதிர் தாக்குதல் தொடுத்தன. தளபதி பெர்ஷிங் வெர்டனுக்கு அருகில் புதிய போர்முனையைத் துவக்கினார். இவரது படைகள் மெட்ஸ், செடான் நகர்களை நோக்கி முன்னேறின. 1919 நவம்பர் மாதம் நேசப்படையினர் ஜெர்மனியப் படையை பிரான்சிலிருந்து விரட்டியடித்தனர்.

வில்லியம் சிம்ஸ் என்பவர் தலைமையில் அமெரிக்க கடற்படை பணிபுரிந்தது. 300 போர்க்கப்பல்களும், 75000 கடற்படை வீரர்களும் போரில் ஈடுபட்டனர். பிரிட்டிஷ், பிரெஞ்சு

கடற்படைகளின் உதவியுடன் ஜெர்மானிய படகுகள் அழிக்கப்பட்டன. நீர் மூழ்கிக் கப்பல்கள் பாதியளவு அழிக்கப்பட்டன.

**வில்சனின் 14 அம்சக் கோட்பாடுகள்**

"வெற்றியில்லாமல் அமைதி" என்ற கோட்பாட்டை வலியுறுத்திய வில்சன் இப்போது "வெற்றிக்குப் பிறகு அமைதி" என்ற நிலைக்கு மாறினார். போப் பதினைந்தாம் பெனடிக்ட்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு கேட்டுக் கொண்டார். 1918 ஜனவரி 8ம் தேதி வில்சன் தனது அமைதி திட்டத்தை காங்கிரஸில் சமர்ப்பித்தார். அவைகள் தான் 14 அம்சத் திட்டமாகும்.

1. உலக நாடுகள் தங்களுக்குள் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் அனைத்தும் வெளிப்படையாகவே செய்து கொள்ளப்பட வேண்டும். மறைமுக ஒப்பந்தங்கள் உலக அமைதிக்கு கேடு விளைவிப்பவை ஆகும்.
2. அமைதி மற்றும் போர்க்காலங்களில் கடலில் கப்பல்களைச் செலுத்திட எல்லா நாட்களுக்கும் முழு உரிமை அளிக்கப்பட வேண்டும்.
3. அமைதிக்கு இணங்கும் நாடுகளின் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட வேண்டும்.
4. உள்நாட்டு பாதுகாப்புக்கு மட்டும் குறைந்த அளவ போர்க்கருவிகளை உற்பத்தி செய்து கொள்ள வேண்டும்.
5. குடியேற்ற நாடுகளில் வாழும் மக்களின் விருப்பதிற்கிணங்க சார்பற்ற வகையில் பங்கிட்டுக்கொள்ள வேண்டும்.
6. ரஷ்யாவிடமிருந்து கைப்பற்றிய பகுதிகளை ஜெர்மனி திருப்பித்தர வேண்டடும்.
7. பெல்ஜியத்தின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். ஜெர்மன் படைகள் அங்கிருந்து வெளியேற வேண்டும்.
8. பிரான்சிடமிருந்து கைப்பற்றிய பகுதிகள் அனைத்தும் திருப்பித் தரப்பட வேண்டும். குறிப்பாக 1871ல் ஜெர்மனி பெற்ற அல்சேய்ஸ், லொரைன் பகுதிகள் பிரான்சிற்கு தரப்படவேண்டும்.
9. தேசிய உணர்வின் அடிப்படையில் இத்தாலியின் எல்லைகள் வரையறுக்கப்படவேண்டும்.
10. ஆஸ்திரிய, ஹங்கேரி நாட்டு மக்களுக்குத் தன்னுரிமை வழங்கப்படவேண்டும்.
11. பால்கன் நாடுகளின் எல்லைகள் வரையறுக்கப்பட வேண்டும். ருமேனியா, செர்பியா, மாண்டிநெக்ரோ ஆகிய நாடுகளிலிருந்து அந்நிய படைகள் வெளியேற வேண்டும். கடல் பகுதியை அடைய செர்பியாவிற்கு வழி ஒன்று அமைத்துத் தரப்பட வேண்டும்.
12. துருக்கிய பேரரசிற்கு அதன் பகுதிகளில் இறைமை தன்மை வழங்கப்பட வேண்டும். பிற பகுதிகளில் மக்கள் தன்னுரிமை பெற வழி செய்யப்பட வேண்டும். டார்டன்ல்ஸ் ஜலசந்தி உலக நாடுகளின் வாணிபத்திற்கு திறந்து விடப்பட வேண்டும்.

13. போலந்து தன்னுரிமை பெற்ற நாடாக வேண்டும். அதற்கு கடல்பகுதியை அடைய வழி அமைத்துத் தர வேண்டும்.
14. உலக நாடுகள் யாவும் தங்களின் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள சர்வதேச சங்கம் ஒன்றை நிறுவ வேண்டும்.

**போரின் முடிவு**

நேச நாடுகளின் தாக்குதலால் ஜெர்மனி தோல்வியைத் தழுவியது. ஜெர்மனியின் தோல்விச் செய்தியை மன்னர் கெய்சர் வில்லியத்திடம் அந்நாட்டு தளபதிகள் லுடன்டார்ட் ஹிண்டன்பர்க் தெரிவித்தனர். வில்சனின் 14 அம்சத்திட்டப்படி அமைதி ஒப்பந்தம் செய்து கொள்ள ஜெர்மனி சம்மதித்தது. ஜெர்மனியின் புதிய சான்சலர் இளவரசர் மாக்ஸ் 1918 ம் ஆண்டு 3ம் தேதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட சம்மதித்தார். நவம்பர் 9 ம் தேதி கெய்சர் முடிதுறந்து நெதர்லாந்திற்கு ஓடினார். இறுதியாக 1918 நவம்பர் 11ம் தேதி காலை 11 மணியளவில் அமைதி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. முதல் உலகப்போர் முடிவிற்கு வந்தது.

**பாரீஸ் அமைதி உடன்படிக்கை 1919**

பிரான்சின் தலைநகர் பாரீஸீக்கு அருகிலுள்ள வெர்செய்ல்ஸ் மாளிகையில் மாநாடு கூட்டப்பட்டது. 32 நாடுகளின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டனர். ஜெர்மனி, ஆஸ்திரியா, பல்கேரியா, துருக்கி அழைக்கப்படவில்லை. 1918ல் நடைபெற்ற பிரதிநிதிகள் சபை தேர்தலில் குடியரசுக் கட்சியினர் பெரும்பான்மை பெற்றனர். இருந்தபோதிலும் வில்சன் குடியரசுக் கட்சியின் தலைவர்களை அழைத்துச் செல்லாமல் தான் மட்டும் பாரீஸ் சென்றார். அமைதி பேச்சுவார்த்தைகள் 1919 ஜனவரி முதல் ஜுன் வரை நடைபெற்றது. அமெரிக்காவின் வில்சன், பிரான்சின் ஜார்ஜ் கிளமன்சோ, இங்கிலாந்தின் லாயிட் ஜார்ஜ் ஆகியோர்தான் முடிவுகள் எடுத்தனர். வில்சன் தனது பதினாக்கு அம்சத்திட்டத்தின் அடிப்படையில் முடிவுகள் அமைய வேண்டும் என எதிர்பர்த்தார். ஐரோப்பிய நாடுகளோ பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்ற அடிப்படையில் இருக்க வேண்டும் என விரும்பினர். பொருக்கு நஷ்டஈடும், ஜெர்மனிய பகுதிகளிலிருந்து நிலங்களையும் அபகரிக்க வேண்டும் என விரும்பினர். ஆனால் வில்சனின் கணிப்ப சரியானதாக இல்லை. இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலியின் கட்டுப்பாட்டிற்கு வில்சன் பணிய வேண்டியதாயிற்று. அவருடைய சில கருத்துக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ஜெர்மனி தான் கைப்பற்றிய நிலங்களை அனைத்தையும் திருப்பித்தர வேண்டும். மக்களின் சுயநிர்ணக் கோட்பாட்டின்படி செக்கோஸ்லோவாக்கியா, யுகோஸ்லாவியா உருவாக்கப்பட வேண்டும். ஜெர்மனியின் குடியேற்ற நாடுகள் விடுவிக்கப்பட்டு பதிதாக அமைக்கப்பட உள்ள சர்வதேச சங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் போன்றவை தீர்மானிக்கப்பட்டன.

வில்சனின் மகத்தான வெற்றி சர்வதேச சங்கம் உருவானதுதான். அதன் நோக்கங்கள் உடன்படிக்கையில் முதல் ஆறு ஷரத்துக்களுடன் இணைக்கப்பட்டது. சர்வதேச சங்கத்தின் அலுவலகம் ஸ்விட்சர்லாந்து நாட்டில் ஜெனிவா நகரில் அமைக்கப்பட்டது. இச்சங்கத்தில் 42 நாடுகள் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். 1935 ல் 62 நாடுகள் உறுப்பிர்களாக இருந்தனர். 1936க்குப் பிறகு இச்சங்கம் செயல்பட முடியவில்லை. வில்சனால் உருவாக்கப்பட்ட இச்சங்கத்தில் அமெரிக்கா இணையவில்லை.

வில்சன் தனது சமாதான ஒப்பந்தத்தை செனட் சபையின் ஒப்புதலுக்குச் சமர்ப்பித்தார். செனட் சபையில் குடியரசுக் கட்சியினர் பெரும்பான்மை பலத்துடன் இருந்ததினால் வில்சனின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. சர்வதேச சங்கத்தில் அமெரிக்கா சேருவதை எதிர்த்தனர். அப்படிச் சேர்ந்தால் வெளிநாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தனது சுதந்திரத்தை இழந்து விடும் என கருதினர். மேலும் பாரீஸ் மாநாட்டில் தங்களுக்குரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என குற்றம் சாட்டினர். வில்சனின் உடன்படிக்கையை சபையில் தோற்கடிக்க முடிவு செய்தனர். வில்சனின் அரசியல் எதிரி ஹென்றி கபாட் லாட்ஜ் செனட்டில் வெளிவிவகார ஆய்வுக்குழுவின் தலைவராக இருந்தார். இவரே வில்சனின் திட்டத்தை முறியடித்தவர்.

வில்சன் தனது முடிவுகளை மக்களிடம் எடுத்துக்கூற நாடு முழுவதும் பயணம் மேற்கொண்டார். சொற்பொழிவுகள் ஆற்றினார். பாரீஸ் மாநாட்டில் ஓய்வில்லாமல் உழைத்ததினாலும், சுற்றுப் பயணத்தாலும் உடல் நலிவுற்றார். இதற்கிடையில் செனட் மன்றம் ஒப்பந்தத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று கூறியது. இறுதி வாக்கெடுப்பின் போது நிராகரிக்கப்பட்டது. வில்சனின் செல்வாக்கும் குறையலாயிற்று. 1920 ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சியின் வேட்பாளர் வாரன் ஹார்டிங் வெற்றி பெற்றார். வில்சன் 1924 பிப்ரவரி 3ல் காலமானார். உட்ரோ வில்சனுக்கு உலக சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இது அவருக்கு சற்று ஆறுதல் தந்தது.

**போரின் விளைவுகள்**

அமெரிக்க வாழ்க்கை முறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. உணவு விநியோகம். ரயில் பாதைகள். தொழிற்துறை அனைத்தும் அரசின் மேற்பார்வையில் நடைபெறலாயிற்று. அமெரிக்க தொழில் உற்பத்தியும். ஏற்றுமதி வர்த்தகமும் இரு மடங்காக உயர்ந்தது. விலைவாசிகள் உயர்ந்தன. ஊதியங்களும் அதிகரிக்கப்பட்டன. தேசிய வருமானமும் பெருகியது. பொருளாதாரம் மேம்பாடு அடைந்தத. உலகிலேயே பொருளாதாரத்திலும், இராணுவ வலிமையிலும் அமெரிக்கா தலை சிறந்த நாடாக மாறியது. அமெரிக்காவிற்குள் நுழையும் குடியேற்றத் தொழிலாளர்களை கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 18வது அரசியல் சட்டத்திருத்தத்தின்படி மது விலக்கு அமல் நடத்தப்பட்டன. 19வது திருத்தத்தின்படி பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

இப்போரில் அமெரிக்கா 22000 கோடி டாலர்கள் செலவ செய்தது. 1,25,000 அமெரிக்க வீரர்கள் உயிரிழந்தனர். அமெரிக்கா 15 இலட்சம் இராணுவ வீரர்களை பயன்படுத்தியது. 44000 ஜெர்மானியர்கள் கைது செய்யப்பட்டனர். 1400 டாங்குகளையும். 755 விமானங்களையும் அமெரிக்கா வீழ்த்தினர்.

1. குடியரசுத் தலைவர் வில்சனின் புதிய விடுதலை திட்டங்கள் குறித்து விவரி.
2. உட்ரோ வில்சனின் வெளியுறவுக் கொள்கை பற்றி ஆய்க.
3. உட்ரோ வில்சனின் சாதனைகள் பற்றி எழுதுக.

## பெரும் மந்தம்

"ஏழ்மையை வெற்றி கொள்ளக்கூடிய இறுதிக் கட்டத்தில் நமது பொருளாதாரம் வளர்ந்தோங்கியுள்ளது. எந்த நாட்டு வரலாற்றிலும் இல்லாத ஒரு சாதனையை நாம் படைத்துள்ளோம்" என்று ஹெர்பர் ஹீவர் அடைந்து அதனை வெற்றிகரமாகக் கொண்டாடுவார் என அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால், அமெரிக்க பொருளாதாரத்தில் விதி விளையாடிவிட்டது என நெவின்ஸ் கூறுகிறார். 1929 அக்டோபர் 24ம் தேதி 12 மில்லியன் பங்குகள் விற்க்கப்பட்டன. அதன் விளைவு அக்டோபர் 29ல் பங்கு சந்தை வீழ்சியடைந்து விட்டது. அந்த ஆண்டின் இறுதிக்குள் 15 பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள பங்குகள் மதிப்பிழந்துவிட்டன. தங்கள் வாழ்நாள் எல்லாம் சேமித்து வைத்துள்ள பணத்தை முதலீட்டாளர்கள் இழந்து விட்டனர். இந்த வீழ்ச்சியினால் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. வங்கிகள் விவாலாயின. பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்தனர். இலட்சக்கணக்கான பேர் வீடு இழந்தனர். பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க முடியவில்லை. கட்டிடப்பணி நின்றுவிட்டது. வெளிநாட்டு வர்த்தகம் படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்தது. இதுவே பெரும் மந்தத்தின் பாதிப்பு.

அமெரிக்கப் பொருளாதாரத்தில் 1929ம் ஆண்டு 78 சதவீதம் பங்குத் தொகை லாபங்கள் 0.3 சதவீத மக்களிடம் சென்றடைந்தன. அவர்கள் அனைவரும் அமெரிக்காவின் மிகப்பெரிய பணக்காரர்கள் ஆவார்கள். பங்குத் தொகைகள் மூலம் பணம் சம்பாதிப்பதைவிட மற்றொரு எளிமையான வழி பங்குகளை வாங்கி விற்பது தான். நாட்டில் ஒவ்வொருவரும் பங்குகளை வாங்கி விற்க ஆரம்பித்தனர். பங்குகளின் விலைகள் ஏற ஆரம்பித்தன. பங்குகளும் வேகமாக வாங்கி விற்க்கப்பட்டன. நியாயமான பங்குத் தொகை பெறுவதைவிட பங்குகளை வாங்கி விற்பதில் பல மடங்கு லாபம் இருப்பதாகக் கருதி இந்த வியாபாரத்தில் இறங்கினார்கள். இதுவே "ஊக வணிகம்" ஆகும். பங்கு மார்க்கெட் மோகம் மத்திய மேற்கிலுள்ள சாதாரண மனிதர்களிலிருந்து நிய இங்கிலாந்து பகுதியில் உள்ள பேராசிரியர்கள், கவிஞர்கள், கடைக்காரர்கள், முதிய பெண்கள், வீட்டு வேலைபுரிவோர் என பலதரப்பட்ட மக்கள் இந்த ஊக வணிகத்தில் ஈடுபடலாயினர். இவர்களுக்கு உதவி புரிய

தரகர்கள் இருந்தனர். இந்த சூதாட்டத்தில் பல்லாயிரக்கணக்கான பேர் ஈடுபட்டனர். கடன் வாங்கி பங்குகளை வாங்கலாயினர். பங்குகளின் விலைகள் படுவேகமாக உயர்ந்தன. எடுத்துக்காட்டாக மார்ச் 1928 ல் ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனியின் பங்குகள் 128.75 புள்ளிகள் இருந்தன. பதினெட்டு மாதங்களுக்குப் பிறகு 396.25 ஆக உயர்ந்தன. தினசரி வாணிபம் 5 மில்லியன் டாலர்கள் அளவில் இருந்தன. உலகில் இந்த அளவிற்கு வாணிபம் எங்கும் நடந்ததில்லை. ஆனால் 1929 அக்டோபர் 24ல் பங்குகள் விற்க்கப்பட்டன. வாங்கப்படவில்லை. வீழ்ச்சி தொடங்கியது. வீழ்ச்சிக்கு மேல் வீழ்ச்சி எங்கும் ஒரு நம்பிக்கையின்மை பதற்றம் நிலவியது. பங்கு சந்தை மீண்டும் உயரவில்லை. பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. இந்தப் பொருளாதார வீழ்ச்சிக்கு பங்கு வர்த்தகம் ம்டடும் காரணமாகாது. அடிப்படையிலே அமெரிக்க வர்த்தகம் தனியார் கட்டுப்பாட்டில் இயற்கி வந்ததுதான் ஒரு தவறான செயலாகும். வேறு சில காரணங்களும் உள்ளன. இந்த வீழ்சசி அமெரிக்காவை மட்டும் தாக்கவில்லை. பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகள் மற்றும் உலகின் பிற நாடுகளிலும் இது பரவியிருந்தது. முதல் உலகப் போரினால் பாதிக்கப்பட்ட உலக வர்த்தகம் சரி செய்யப்பட தாமதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன் விளைவே இந்த வீழ்ச்சி.

இரண்டாவதாக, பொருளாதார செழிப்பின் போது அமெரிக்க உற்பத்தியாளர்கள் அதிகப்படியான லாபத்தை நோக்கமாகக் கொண்டு அதிக பொருட்களை உற்பத்தி செய்துவிட்டனர். இதனால் இப்போது உற்பத்தியை குறைக்கத் தொடங்கினர். அதன் காரணமாக தொழிலாளர்கள் குறைக்கப்ட்டனர். வேலையிலாதவர்களால் அதிகப்படியாக செலவழிக்க முடியவில்லை. குறைவான பொருட்களே விற்பனையாயின. எனவே மேலும் உற்பத்தி பொருட்களை குறைத்தனர். அதனால் மேலும் தொழிலாளர்கள் குறைக்கப்பட்டனர். வேலையில்லாதோர் எண்ணிக்கை அதிகமாயிற்று. இந்த விதமாக வீழ்ச்சி போய் கொண்டேயிருந்தது.

மூன்றாவதாக 78 சதவீத லாபங்கள் 0.3 சதவீத மக்களை சென்றடைந்தது. இந்த 0.3 சதவீத மக்கள் அதிகப்படியான பொருட்களை வாங்கமுடிவதில்லை. லாபம் அனைவரிடமு் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தால் அனைவரும் பொருட்களை வாங்க இயலும். உள்நாட்டுச் சந்தையில் பொருட்களை வாங்கக்கூடிய பெரும்பான்மையான மக்கள் விவசாயிகளாகத்தான் இருந்தனர். அவர்களோ பொருளாதார வளமையான காலத்திலிருந்து ஏழ்மையில்தான் இருந்தனர்.

நான்காவதாக அமெரிக்காவின் வெளிநாட்டு வர்த்தகம் வீழ்ந்துவிட்டது. இதற்கு அமெரிக்காவின் காப்புவரி கொள்கை முக்கிய காரணம் ஆகும். அமெரிக்கா வெளிநாட்டுப் பொருட்களுக்கு காப்புவரி, தடை விதித்தது. போலவே அந்நிய நாடுகளும் அமெரிக்கப் பொருட்கள் அந்நிய நாடுகளில் விற்க முடிவில்லை.

ஐந்தாவதாக கூட்டு வணிக நிறுவனங்களும் சரி. தனிநபர்களும் சரி கடன் வாங்குதல் அல்லது தவணை முறையில் பொருட்களை வாங்கும் வழக்கம் வைத்திருந்தனர். வளமையான போது வங்கிகள் கடன்கள் வழங்கின. வளமை மெல்ல சரியத் தொடங்கியபோது கடன்கள் திரும்ப செலுத்தப்படவில்லை. நிறுவனங்கள் திவாலாயின. பங்குகளை வைத்திருந்தோர் சீரழிந்தனர். தாங்கள் வாங்கிய பொருட்களுக்கு தவணைப் பணம் கூட கட்ட இயலவில்லை.

இறுதியாக சில ஆழமான காரணங்களும் இருக்கின்றன. எல்லைப்புறம் முடிவிற்கு வந்துவிட்டது. மோசமான காலங்களில் மக்கள் மேற்கு நோக்கி நகருவதுண்டு. இப்போது செல்ல வழியில்லை. இந்த வீழ்ச்சி 1929ஆம் ஆண்டு தொடங்கி ஹீவரின் ஆட்சிக்காலம் முழுவதும் நீடித்தது. வேலை இழந்தோர் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டேயிருந்தன. 1929ல் 30 லட்சம் பேர் வேலையிழந்தனர். 1933 ல் 140 இலட்சம் பேர் வேலையில்லாமல் இருந்தனர். 1929ல் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்ததில் பாதி அளவு கூட 1933ல் உற்பத்தி செய்யப்படவில்லை. வெளிவர்த்தகம் மூன்றில் ஒரு பங்கு தான் இருந்தது. தொழிற்சாலைகள், நெசவாலைகள், சுரங்கங்கள் வங்கிகள் யாவும் மூடப்பட்டன. அமெரிக்கக் குடும்பங்கள் வசதியான வாழ்க்கையிலிருந்து ஏழ்மைக்கு தள்ளப்பட்டனர். நகரங்களில் ரொட்டிக்காக வரிசைகளில் பசித்தவர்கள் காத்திருந்தனர். உலக வரலாற்றில் செல்வச் செழிப்பில் உச்ச நிலையை அடைந்த ஒரு நாடு இப்படி பொருளாதார வீழ்ச்சியில் சிக்கிகக்கொண்டது அமெரிக்காவாகத் தான் இருக்க முடியும்.

**ஹீவரின் நடவடிக்கைகள்**

ஹீவர் இந்தச் சிக்கலைத் தீர்க்க முடியாத குழப்பத்தில் இருந்தார். அரசாங்கத்தை குறை கூறினார். பலர் இந்த வீழ்ச்சியை நம்ப மறுத்தனர். நிதித்துறை செயலராக இருந்த மெல்லன் விரைவில் சகஜ நிலைக்கு திரும்பி விடுவோம் என 1930ல் கூறினார். ஹீவர் தனது கோட்பாட்டில் பிடிவாதமாக இருந்தார். அரசாங்கம் சில கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கூறிய போது அவர் செயலாற்ற மறுத்து விட்டார். 1931ல் தென்னகி நதி அணைக்கட்டு பகுதியில் தயாரிக்கும் மின்சாரத்தை அரசாங்கம் விற்பதற்க ஒரு மசோதா கொண்டு வந்த போது ஹீவர் தனது தடுப்பாணை மூலம் தடுத்து நிறுத்தி விட்டார். தொழிற்துறையை அரசாங்கம் கட்டுப்படுத்துவதை அவர் விரும்பவில்லை. தனியார் முயற்சியால் நிலைமை தானாக சீர்திருத்திவிடும் என்று ஹீவர் நினைத்தார். மக்கள் தங்களுக்குத்தாமே உதவி செய்து கொள்ள வேண்டும் என்று கருதினார். சில நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

1. தொழிலதிபர்களை வெள்ளை மாளிகைக்கு அழைத்து கருத்தரங்கு நடத்தினார். தொழிலாளர்களின் ஊதியங்களைக் குறைக்க வேண்டாமெனவும், தொழிலாளர்களை வேலையைவிட்டு நீக்க வேண்டாமெனவும் கேட்டுக்கொண்டார்.
2. விவசாயிகளுக்கு தாராளமாகக் கடன்கள் வழங்கப்பட்டன.

3. 1932ல் புனரமைப்பு நிதி கார்ப்பரேசன் ஒன்று நிறுவப்பட்டு வங்கிகளுக்கு ரயில்பாதை நிறுவனங்களுக்கு, தொழிற்துறைக்கு கடன்கள் வழங்கப்பட்ட அவை நொடித்துப் போகாமல் காப்பாற்றினார். கூட்டாட்சி அரசாங்கம் தனிப்பட்ட கொடையாளர்களை அணுகி துயரத்திலிருப்போருக்கு உதவி புரிய கேட்டுக்கொண்டார்.

4. வேலையற்றோருக்கு வேலை அளிக்கும் திட்டம ஒன்று செயல்படுத்தப்பட்டது. ஏற்றுமதி செய்தது போக எஞ்சிய ஆப்பிள் பழங்களை வேலையற்றோருக்கு வழங்கி அவற்றை விற்று அதனால் கிடைக்கும் ஊதியத்தை அவர்களுக்கே அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதனால் நியுயார்க். சிகாகோ நகரங்களில் பல்லாயிரக்கணக்கானோர் ஆப்பிள் விற்பனை ஈடுபட்டனர்.

5. வீடுகளை இழந்தோர் "ஹீவர் வில்லாக்கள்" என்றழைக்கப்பட்ட குடிசைகளிலும், சுரங்க ரயில் பாதைகளிலும், சரக்கு ரெயில் பெட்டிகளிலும், தகரம், அட்டை ஆகியவற்றால் செய்யப்பட்ட குடிசைகளிலும் வாழ்ந்தனர். பசியால் வாடியவர்களுக்கு தொண்டு நிறுவனங்கள் ரொட்டிகள் வழங்கின. பொதுமக்களுக்கு பயனளிக்கும் திட்டங்கள் மீதான செலவை இருமடங்கு உயர்த்தினார்.

**பெருமந்தத்தின் விளைவுகள்**

1929ல் ஆரம்பித்து பெருமந்தம் மூன்று ஆண்டுகள் நிலவின. செய்பொருட்களையம் செல்வத்தினையும் தவறான முறையில் பகிர்நதளித்தின் விளைவாக ஏற்பட்டதுதான் பெருமந்தம். இதன் தாக்கம் பத்து ஆண்டுகள் தொடர்ந்தன. முதலாளித்துவக் கொள்கையின் மீது நம்பிக்கை குறைந்தது. பேராசிரியர்கள். மாணவர்கள், பத்திரிக்கை ஆசிரியர்கள் போன்றோர் சோசலிச கருத்துக்களால் ஈர்க்கப்பட்டனர். ரஷ்யாவில் இருப்பது போன்ற திட்டமிட்ட பொருளாதாரம் சிறந்த வழிமுறையாக இருக்கும் என்று நம்பினர். இதனால் கம்யூனிஸ்ட்கள் எண்ணிக்கை வளரலாயிற்று. ஐரோப்பியாவிலும் விடுதலை, முதலாளித்துவம் ஆகிய கோட்பாடுகளின் மீது நம்பிக்கை குறைந்தன. இதனால் இத்தாலியில் பாசிசமும், ஜெர்மனியில் நாசிசமும் வளர்ந்தன.

பெரும் மந்தத்தினால் குடியரச கட்சியின் செல்வாக்க குறைந்தது. எந்த விதமான வன்முறை நடவடிக்கைகளிலும் அல்லது புரட்சியிலும் ஈடுபடவில்லை. ஒரு சரியான தலைவர் தோன்றி இந்த நிலையை மாற்றியமைப்பார் என நம்பினர். சீர்திருத்தக் குடியரசு கட்சியினர் செனட்டர் நோரிஸ், லாபோலெட், காஸ்டிகன் மற்றும் கட்டிங் ஆகியோர்ஹீவரின் கொள்கைகளுக்குச் சவால் விட்டனர். ஆனால் பழமைவாதிகளிடமிருந்து கட்சியை மீட்க அவர்கள் பலம் பொருந்தியவர்களாக இல்லை. ஜனநாயக் கட்சியினர் ஒரு விமோசனத்தைக் கொண்டு வருவார்கள் என மக்கள் எதிர்பார்த்தனர். பழைய அனுபவங்களிலிருந்து எந்தவிதமான படிப்பினையைக் கற்றுக்கொள்ளாத குடியரசுக் கட்சியின் பழம்பெரும் தலைவர்கள் மீண்டும் ஹீவரை தேர்தலுக்கு நிறுத்தினார்கள். ஜனநாயக்க கட்சியினர்

பிராங்களின் டி.ரூஸ்வெல்ட் என்ற காந்தசக்தி மிக்க உணர்ச்சிபூர்வமான சக்திவாய்ந்த தைரியமான தலைவரை தங்களது வேட்பாளராக நிறுத்தினார்கள் அவரும் வெற்றி பெற்றார்.

1. பொருளாதாரப் பெரும் மந்தத்திற்குக் காரணங்கள் யாவை?
2. பொருளாதாரப் பெரும் மந்தத்திற்கான விளைவுகள் யாவை?

## புதிய சீரமைப்புத் திட்டம்

Relief, Recovery, and Reform நிவாரணம், மீட்பு, சீர்திருத்தம் என்று செயல்திட்டத்தை வகுத்துக் கொண்டார். முதலாவது தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் வேலையிழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கவும், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டு எதிர்காலத்தில் இத்தகைய நலிவு ஏற்படாமல் தடுக்க சீர்திருத்தம் கொண்டு வருதல் ஆகியவையே தனது புதிய சீரமைப்புத் திட்டத்தின் சாராம்சம் ஆகும் என்றார். பொதுநலனைப் பேணி சமுதாய நீதியை நிலைநாட்டுவதே புதிய சீரமைப்புத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும் என்றார். முதலாவது சீரமைப்புத் திட்டம் 1933-1935 ஆண்டுகளுக்குட்பட்டது. இதில் உடனடியாகச் செய்யக்கூடிய செயல்திட்டங்கள் இடம் பெற்றன. இரண்டாவது சீரமைப்புத் திட்டம் 1933-1935 வரையுள்ள காலமாகும். இதில் எதிர்கால சீரமைப்பிற்கு ஏராளமான பணச்செலவுடன் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் இடம் பெற்றிருந்தன.

ரூஸ்வெல்டின் சீர்திருத்தங்கள் உடனடியாக பெரிய மாற்றங்களை கொண்டுவரை முடியவில்லை. பொருளாதார மந்தம் மீண்டும் புத்துயிர் பெற தாமதம் ஏற்பட்டது. சீர்திருத்தம் தொடங்கி இரண்டாண்டுகளுக்குப் பிறகு 1934ல் 1929ஆம்ஆண்டை விட பாதியளவு வயர்ச்சிதான் ஏற்பட்டிருந்தது. இன்னும் 10 மில்லியன் நபர்கள் வேலையில்லாமல் இருந்தனர். கடுமையான சீர்திருத்த நடவடிக்கைகள் தேவைப்பட்டன. இரண்டாவது வணிகத்துறையினர் புதிய திட்டத்தால் பல வழிகளில் சிக்கலை வளர்த்திருந்தனர். இவர்களை எதிர்த்துச் செயல்பட ரூஸ்வெல்ட் எந்த வழிமுறைகளைக் பின்பற்றுவது என குழம்பினார். மூன்றாவது சில தீவிரவாதிகள் தங்களது திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இவர்களுக்கு மக்கள் செல்வாக்கு இருந்தது. லூசியானாவைச் சேர்ந்த ஹியுவலாங் என்பவர் "செல்வத்தை பகிர்வோம்" என்ற ஒரு இயக்கத்தைத் தொடங்கினார். பிரான்ஸ் டவுண்சென்ட் என்பவர் ஒரு ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்தார். அதன்படி 60 வயது கடந்தவர்களுக்கு 200 டாலர்கள் ஒரு மாதத்திற்கு ஓய்வூதியமாக வழங்க வேண்டும் என்று அறிவித்தார். மேலும் சில தொழிலாளர்கள் சங்கங்கள் வேலைநிறுத்தம் செய்து வந்தது கண்டு ரூஸ்வெல்ட் அதிருப்தி அடைந்தார். இருந்தபோதும் தனது செயல்திட்டங்களை ஒவ்வொன்றாக நிறைவேற்றினார்.

ரூஸ்வெட்டின் எண்ணப்படி காங்கிரஸ் அவர் விரும்பிய சட்டங்களை நிறைவேற்றித் தந்தது முதல் நூறு நாட்களில் ஏராளமான சட்டங்கள் நிறைவேற்றின.

**I. நிவாரண நடவடிக்கை**

**1. நெருக்கடி கால வங்கி மசோதா**

தான் பதவியேற்ற போது அனைத்து வங்கிகளும் மூடப்பட்டிருந்தன. தான் பதவியேற்ற 1932 மார்ச் 5 முதல் 9 ஆம் தேதி வரை வங்கிகளுக்கு விடுமுறை என அறிவித்தார். வங்கிகளை கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர நெருக்கடி கால வங்கி சட்டம் கொண்டு வரப்பட்டது. வங்கிகளுக்கு கடன் உதவி அளிக்க புனரமைப்பு நிதிக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டது. திவாலான வங்கிகள் மூடப்படுவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. "மீண்டும் திறக்கப்பட்ட வங்கிகளின் பணம் போடுவது பாதுகாப்பானது" என வானொலியில் உரையாற்றினார். மூன்று நாட்களில் பெரும்பாலான வங்கிகள் திறக்கப்பட்டன. தகுதியற்ற 1700 வங்கிகளுக்கு உரிமம் அளிக்கப்படவில்லை.

**2. கூட்டாட்சி அவசர கால நிவாரண நிர்வாகம்**

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க 1933, மே 12ம் தேதி "கூட்டாட்சி அவசர கால நிவாரண நிர்வாகம்" ஹேரி ஹாய்கின்ஸ் என்பவர் தலைமையில் அமைக்கப்ட்டது. இதன் மூலம் சில சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

**அ. சிவில் பணி நிர்வாகம்**

இந்த அமைப்பின் மூலம் லட்சக்கணக்கான வேலையிலாமல் திரிந்த ஆண்களுக்கு மரங்கள் நடுதல், சாலைகள் பூங்காக்கள் அமைத்தல், வீடுகள் கட்டுதல் போன்ற வேலைகள் வழங்கப்பட்டன.

**ஆ. வேலைவாய்ப்பு முன்னேற்ற நிர்வாகம்**

1935 ஏப்ரல் 8ம் தேதி நிவாரணச் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது. நிவாரணப் பணிகளுக்க ஐந்து மில்லியன் டாலர்கள் ஒதுக்கப்பட்டன. ஜூன் மாதம் வேலைவாய்ப்பு முன்னேற்ற நிர்வாகம் உருவாக்கப்பட்டு வேலையற்றவர்களுக்கு வேலைகள் அளிக்கப்பட்டன. வீடுகள், அணைகள் கட்டப்பட்டன, பள்ளிகள், நூலகங்கள், சமுதாயக்கூடங்கள் கட்டப்பட்டன. நீர்ப்பாசன திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. எழுத்தாளர்கள், கவிஞர்கள், நடிகங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகள் கலை, கல்வி ஆகியவற்றை வளர்க்க உதவியது. ஆறு ஆண்டு காலத்தில் 11.3 மில்லியன் டாலர்கள் செலவு செய்யப்பட்டன. 1941 ல் எட்டு மில்லியன் மக்கள் வேலைவாய்ப்பு பெற்றனர்.

**இ. தேசிய இளைஞர் நிர்வாகம்**

இளம் வயது மாணவர்கள் தங்கள் பள்ளி மற்றும் கல்லூரி படிப்பை தொடர தேசிய இளைஞர் நிர்வாகம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. பள்ளிகள் நடத்த பல மாநிலங்களுக்கு நிதி வசதியளிக்கப்பட்டது. பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் மாணவர்களுக்கு சில வேலைகள் கொடுக்கப்பட்டு அதற்கான ஊதியமும் வழங்கப்பட்டது.

இதன் மூலம் 11 மில்லியன் இளைஞர்கள் தற்காலிக வேலைவாய்ப்பு பெற்றனர். இளைஞர்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டது.

**II. மீட்பு நடவடிக்கைகள்**

**அ) தேசிய மீட்பு நிர்வாகம்**

நாட்டில் தொழில்துறை பொருட்களுக்கு, வேளாண்மைப் பொருட்களுக்கு வாங்குவாரற்று கிடந்தன. இதற்காக தேசிய தொழில்துறை மீட்புச் சங்கம் இயற்றப்பட்டது. ஹக்ஜான்சன் என்பவரின் தலைமையில் தேசிய மீட்ப நிர்வாகம் உருவாக்கப்பட்டது. விலையினைக் கட்டுப்படுத்தி போட்டியினைக் குறைத்து வணிகத்தை மீட்டு உயிர்ப்பிக்கவும், தொழிலதிபர்கள் தொழிலாளர்களுக்குச் சலுகைகள் அளிக்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டன. பொதுப்பணிகளுக்கு ஏராளமான நிதி ஒதுக்கப்பட்டன. தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் பெருகியது. வேலை நேரம் குறைக்கப்பட்டது. குழந்தைத் தொழிலாளர்கள் முறை நீக்கப்பட்டது. தொழிலாளர்கள் தொழிலதிபர்களுடன் பேசி குறைகளைத் தீர்க்க வழிவகுக்கப்பட்டது. கூட்டு வாணிப கம்பெனி எதிர்ப்புச் சட்டங்கள் பல தளத்தப்பட்டன. கம்யூனிஸ்ட் இயக்கம் போன்ற அணிவகுப்புகள், வாணவேடிக்கைகள் வழியாக தேசிய மீட்பு நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**ஆ. வாக்னர் சட்டம்**

தேசிய தொழிற்துறை மீட்புச் சட்டத்தை சட்டவிரோதமானது என்று 1935 ல் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. எனவே செனட்டர் வாக்னர் என்பவரால் ஒரு புதிய சட்டம் இயற்றப்பட்டது. வாக்னர் சட்டப்படி தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களில் சேர்வதற்கும், கூட்டாகப் பேசி குறைகளைத் தீர்த்துக் கொள்ளவும் உரிமை பெற்றனர். தொழிலாளர்கள் பல உரிமைகளைப் பெற்றனர். தொழிலாளர்கள் வளர வாக்னர் சட்டம் குறைந்தபட்ச ஊதியத்தையும் வேலை நேரத்தையும் வரையறை செய்தது. வாரத்திற்கு 40 மணி நேர வேலையும், மணிக்கு 40 சென்ட் ஊதியமும் பெற வழி பிறந்தது.

**2. தொழிற்துறை அமைப்புக்குழு**

1934ல் அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பு ஒன்று சான்பிரான்சிஸ்கோவில் நிறுவப்பட்டது. இதன் இணை உறுப்பினர்களாக இருந்த ஐந்து தொழிற்சங்கங்கள் ஒன்றுகூடி தொழிற்துறை அமைப்புக்குழு ஒன்று ஜான்லெவிஸ் என்ற தலைவரினால் உருவாக்கப்பட்டது. தொழிலாளர்களின் தொழிற்சங்கங்கள் உருவாயின. 1935, நவம்பரில் "தொழில் நிறுவனங்களின் பேரவை" என்ற அமைப்பு உருவாயின.

**3. வேளாண்மைச் சீரமைப்புச் சட்டம்**

விவசாயத்தை மீட்க 1933, மே 12ம் தேதி வேளாண்மைச் சீரமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி விவசாய உற்பத்தியைக் குறைக்கவும் விளைபொருட்களின் விலையை அதிகரிக்கவும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. விவசாயிகள் தரிசாக விடப்படும் நிலங்களுக்குப் பதிலாக இழப்பீடு தொகை வழங்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளை மேற்பார்வையிட "பொருள் கடனளிப்பு நிறுவனம்" ஒன்று நிறுவப்பட்டது. ஆனால் இந்த வேளாண்மைச் சீரமைப்புச் சட்டம் மாநில உரிமைகளுக்கு எதிரானது என்று கூறி தலைமை நீதிமன்றம் 1936 ஜனவரி 6ல் தள்ளுபடி செய்தது. இதற்குப்பதிலாக 1938ல் இரண்டாவது வேளாண்மைச் சீரமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது. விளைச்சலை குறைக்கிறோம் என்றுகூறி லட்சக்கணக்கான பண்ணையாட்களும், குத்தகைதாரர்களும் பண்ணை முதலாளிகளால் வெளியேற்றப்பட்டனர். 1934, 1936ம் ஆண்டுகளில் மழையின்மையால் ஏற்பட்ட வறட்சியால் வோண் விளைபொருட்கள் தேவை அதிகரித்தது. விலைகளும் உயர்ந்தன. விவசாயிகளின் வருமானமும் உயர்ந்தது.

**4. மண் வள பாதுகாப்பு**

1936, பிப்ரவரி மாதம் மண்வள பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. மண் அரிப்பைத் தடுத்து விளைநிலங்களை சரியான முறையில் பயன்படுத்துதல் மண்வளத்தை அதிகரித்தல் ஆகியவற்றிற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இதனால் 1937ல் பருத்தி உற்பத்தி அதிகமானது.

**III. சீர்திருத்த நடவடிக்கைகள்**

எதிர்காலத்தில் பொருளாதார சீராக இயங்க பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**1. சமூக நலன் பாதுகாப்பு சீர்திருத்தங்கள்**

"சமூக பாதுகாப்பு வாரியம்" ஒன்று 1935 ஆகஸ்ட் 14ல் இயற்றப்பட்ட சட்டத்தின்படி உருவாக்கப்பட்டது. இதன்படி வயதானவர்களுக்கும், வேலையற்றவர்களுக்கும், ஆற்றல் இழந்தவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் சில திட்டங்கள் இயற்றப்பட்டன.

**அ) வேலையற்றவர்களுக்கு இழப்பீடு**

1939ல் சமுதாய பாதுகாப்பு வாரியம் அமெரிக்க வேலைவாய்ப்பு நிறுவனத்தை தன் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டது. வேலையில்லாதவர்களுக்கு வாரத்திற்கு ஐந்து டாலர் முதல் 15 டாலர் வரை நிதி உதவி செய்யப்பட்டது. வேலையில்லாத தொழிலாளர்களுக்கு காப்புறுதியும் பணிப்பாதுகாப்பும் கொடுக்கப்பட்டது.

**ஆ) வயது முதிர்ந்தவர்களுக்கு ஓய்வு கால ஊதியத்திட்டம்**

65 வயதில் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு மாதம் 15 முதல் 80 டாலர் வரை அவர்கள் இறக்கும் வரை ஓய்வு ஊதியம் வழங்க வழி செய்யப்பட்டது. 25.5 மில்லியன் மக்கள் இதனால் பயனடைந்தனர்.

**இ. ஆற்றல் இழந்தவர்களுக்கு ஆதரவு**

கண் பார்வை இழந்தவர்கள், பிறர் ஆதரவை நம்பி வாழும் தாய்மார்கள், முடமான குழந்தைகள், பெரியவர்கள் ஆகியோர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்பட்டது.

**ஈ. வீட்டு வசதி**

நகரங்களில் உள்ள சேரிப்பகுதிகளில் நல்ல வீடுகளை அமைத்துக் கொடுக்கவும், சொந்த வீடுகள் கட்டிக்கொள்ள கடன்களும் வழங்கப்பட்டன. நகரப்பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்காக சுமார் 50 மில்லியன் டாலர்கள் கடன் வழங்கப்பட்டது. நான்கு ஆண்டுகளில் இரண்டு இலட்சம் வீடுகள் கட்டப்பட்டன.

**2. நிதிச் சீர்திருத்தங்கள்**

நாடு முழுவதும் இயங்கி வந்த வங்கிகள் மீது கூட்டாட்சி அரசின் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**அ. கிளாஸ் ஸ்டீகல் சட்டம்**

இச்சட்டத்தின்படி முதலீட்டு வணிகங்களில் வங்கிகள் ஈடுபடுவது தடுக்கப்பட்டது. வங்கிக்கடன்களை யூக வணிகத்திற்கு பயன்படுத்துவது கட்டுப்படுத்தப்பட்டது. நாட்டில் உள்ள எல்லா வங்கிகளும் சேர்ந்து கூட்டாட்சி வைப்பு நிதி பாதுகாப்பீட்டுக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கின. பத்தாயிரம் டாலர் சேமித்து வைத்திருந்தவர்களின் சேமிப்புகள் காப்பீடு செய்யப்பட்டது.

**ஆ. தங்க ஒதுக்கீட்டு சட்டம்**

இந்தச் சட்டத்தின்படி கூட்டாட்சி ஒதுக்கீட்டு வங்கிகளின் கட்டுப்பாட்டில் இருந்த தங்கம் அரசு கருவூலத்திற்று மாற்றப்பட்டது. அதற்கு ஈடாக டாலர் பத்திரங்கள் வழங்கப்பட்டன. மேலும் தங்க நாணய முறையும் கைவிடப்பட்டது. புழக்கத்தில் இருந்த தங்க நாணங்கள் திரும்பப் பெறப்பட்டன. ஒரு டாலருக்கு இணையான தங்கத்தின் மதிப்பு 59.06 சென்டாக நிர்ணயிக்கப்பட்டது.

**இ. கடன் பத்திரம் மற்றும் நாணய மாற்றுச் சட்டம்**

இச்சட்டத்தின்படி கடனீட்டுப் பத்திரம் மற்றும நாணய மாற்றுக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. மேற்கண்ட சட்டங்களினால் வங்கிகளின் நடவடிக்கைகள் வரையறை செய்யப்பட்டது. பணத்தாள் புழக்கம் சீர்திருத்தப்பட்டது. மக்கள் வங்கிகளின் மீது மீண்டும் நம்பிக்கை கொண்டனர். உள்நாட்டுப் பொருட்கள் விலை உயரத் தொடங்கியது. ஏற்றுமதி ஊக்கம் பெற்றது. டாலரின் மதிப்பு குறைக்கப்பட்டதால் பிற நாடுகளின் நாணயங்களுடன் அமெரிக்க டாலர் போட்டியிட முடிந்தது. பிற நாடுகள் அமெரிக்கப் பொருட்களை எளிய விலைக்கு வாங்க முடிந்தது.

**3. டென்னசி பள்ளத்தாக்குத் திட்டம்**

டென்னசி நதி பள்ளத்தாக்கு நாற்பதாயிரம் சதுரமைல் பரப்புடையது. வேளாண்மையில் மிகவும் பின்தங்கி இருந்தது. இந்நதியினால் ஏழு மாநிலங்கள் பயன்பெறும் வகையில் அணைகள், நீர்மின்திட்டங்கள் அமைக்க திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்த நெப்ராஸ்காவைச் சேர்ந்த செனட்டர் ஜார்ஜ் நோரிஸ் பெருமுயற்சி எடுத்தார். பிராங்ளின் ரூஸ்வெல்ட் சில நிபுணர்களுடன் சென்று டென்னசி பள்ளதாக்கை

பார்வையிட்டார். பின்னர் டென்னசி பள்ளத்தாக்கு மேம்பாட்டுத் திட்டம் தீட்டப்பட்டது. அணைகள் கட்டுதல், வெள்ளக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், உரங்கள் உற்பத்தி, நீர்மின் நிலையங்கள் அமைத்தல், மின்சார வினியோகம் செய்தல் ஆகிய பல நோக்கங்களைக் கொண்ட இத்திட்டம் செயல்வடிவம் பெற்றது. 1936க்குள் ஆறு அணைகள் கட்டப்பட்டன. வெள்ளப்பெருக்கு கட்டுப்படுத்தப்பட்டது. 650 மைல் நீளத்திற்கு கால்வாய் வெட்டப்பட்டது. மின் உற்பத்தி நிலையங்கள் தொடங்கப்பட்டன. பல புதிய இரசாயண தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. குறைந்த விலையில் பாஸ்பேட் உரம் கிடைத்தது. காடுகள் பராமரிக்கப்பட்டன. மண அரிப்பு தடுக்கப்பட்டது. இப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது.

**எதிர்ப்பு**

பிராங்களின் ரூஸ்வெல்டின் சீரமைப்புத் திட்டத்திற்கு பெரிய பணக்காரர்களும், குடியரசுக் கட்சியினரும் எரித்ப்பு தெரிவித்தனர். 1936ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ரூஸ்வெல்ட் மீண்டும் வெற்றி பெற்றார். அமெரிக்க தலைமை நீதிமன்றம் ரூஸ்வெல்டின் பல சீர்திருத்தச் சட்டங்களை எதிர்த்தது. தேசிய தொழில் மீட்புச் சட்டம் வேளாண்மைச் சீரமைப்புச் சட்டம ஆகிய சட்டங்களை செல்லாது என தீர்ப்பளித்தனர். "ஒன்பது பெருங்கிழவர்கள்" என்று ரூஸ்வெல்டின் ஆதரவாளர்கள் கேலி செய்தனர். இந்த ஒன்பது பேரில் ஆறு பேர் எழுபது வயதைக் கடந்தவர்கள். 1937 பிப்ரவரியில் நீதிபதிகளின் வயதை 70 என்று நிர்ணயிப்பதற்கு மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் புதிய ஆறு நீதிபதிகள் நியமிக்கவும் வகை செய்யப்பட்டது. ஆனால் இம்மசோதாவிற்கு செனட்டின் ஒப்புதல் கிடைக்கவில்லை. 1937க்கும் 1941க்கும் இடைப்பட்ட காலத்தில் மரணம், பதவி விலகல் போன்ற காரணங்களால் ஏழு நீதிபதி பதவிகள் காலியாயின. தனக்கு ஆதரவு தரக்கூடிய நீதிபதிகளையே ரூஸ்வெல்ட் நியமித்தார். ஹலலன்ஸ்டோன் என்பவரை தலைமை நீதிபதியாக நியமித்தார்.

1936ம் ஆண்டிற்குப் பிறகு ரூஸ்வெல்டிற்கு பல தோல்விகள் ஏற்பட்டன. 1937-39ம் வருடங்களில் தொழிற்துறையிலும் வாணிபத்திலும் மீண்டும் மந்த நிலை ஏற்பட்டது. இதற்கு "ரூஸ்வெல்ட் மந்தம்" எனப் பெயரிட்டது. 1939ம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் ஆரம்பிக்கவே நாட்டின் கவனம் அயல்நாட்டு விவகாரம் பக்கம் திரும்பியது.

**புதிய சீரமைப்புத் திட்டம பற்றிய மதிப்பீடு**

**நிறைகள்**

1. பொருளாதார மந்தத்தின் விளைவாக நாட்டில் ஏற்பட்ட நிலையினை மாற்றியமைக்க நிரந்தரமான திட்டங்களை தீட்டப்பட்டன. வேளாண்மை மற்றும் தொழிற்துறை புத்துயிர் பெற்றது.
2. அமெரிக்க முதலாளித்துவ முறையானது தற்கொலை செய்து கொள்ளாதபடிக்கு புதிய சீரமைப்புத் திட்டம் தடுத்து நிறுத்தியது.

3. சமூக நலன் பாதுகாப்புச் சட்டங்கள், தொழிலாளர் காப்புறுதி திட்டம், தொழில் சங்கம் அமைக்கும் உரிமை, வேலை நேரம் குறைப்பு போன்ற பல தொழிலாளர் நல சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.
4. குடியரசுக் கட்சியினர் செய்த தவறுகளைச் சீர்திருத்தி அமெரிக்காவை மேம்பாடு அடையச் செய்த ரூஸ்வெல்டின் திட்டங்கள் மக்களின் ஆதரவைத் தந்தது. நான்குமுறை ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றவர் ரூஸ்வெல்ட் ஒருவரே.

**குறைகள்**

1. நிவாரணம், மீட்பு நடவடிக்கைகளினல் பல பயனற்ற திட்டங்கள் மீது ஏராளமான பணம் செலவிடப்பட்டது. பொதுக்கடன் அதிகரித்தது.
2. அனைவருக்கும் வேலைவாய்ப்பை வழங்க முடியவில்லை. 1940ல் எட்டு மில்லியன் மக்கள் வேலையில்லாமல் இருந்தனர்.
3. நிர்வாகத்துறை தனது அதிகார வரம்பை அதிகரித்துக் கொண்டது.
4. புதிய சீரமைப்புச் சட்டங்கள் பல தனியார் நிறுவனங்களில் அதிக அளவில் தலையீட்டிற்கு வழி வகுத்தது.
5. தொழிலாளர்கள் உரிமை பெருகியதால் அவர்கள் வேலைநிறுத்தம் போன்றவற்றில் ஈடுபட்டனர். புதிய சீரமைப்புத் திட்டம் வர்க்கப் போராட்டங்களைத் தூண்டிவிட்டது என்றும், அமெரிக்க வாழ்க்கை மரபுகளை தகர்த்து விட்டது என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

## பிராங்களின் ரூஸ் வெட்டும் இரண்டாம் உலகப்போரும்

1939 ம் ஆண்டு ஐரோப்பியாவில் இரண்டாவது உலகப்போர் தொடங்கியது. சர்வதேச தொழிலாளர்கள் அமைப்பில் அமெரிக்கா இடம் பெறச் செய்தார். ஜப்பானின் ஆக்கரமிப்புகள் தூர கிழக்கு நாடுகளில் அதிகமாக இருந்தன. சீனாவில் மஞ்சூரியா பகுதியை கைப்பற்றிக் கொண்டது. இருந்தபோதும் 1934ல் பிலிப்ழபன்ஸ்ஸிற்கு சுதந்திரம் தரும் மசோதா காங்கிரஸில் நிறைவேற்றப்பட்டது. 1945ம் ஆண்டிற்குள் பிலிப்பைன்ஸிற்கு சுதந்திரம் வழங்க உறுதியளித்தது. ஆனால் ஜப்பானின் செயல்பாடுகளினால் ரூஸ்வெல்ட் சிரமத்திற்கு உள்ளானர். ஜப்பான் சர்வதேச சங்கத்திலிருந்து 1933ல் வெளியேறியது. மேலும் இலண்டன் கப்பல்படை ஒப்பந்தம் இனி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனவும் அறிவித்தது. 1935ம் ஆண்டு கூட்டப்பட்ட கப்பற்படை ஒப்பந்தத்தை ஜப்பான் ஏற்றுக்கொள்ளவில்லை. போர்க்கப்பல்கள் கட்டும் பணியில் ஈடுபட்டன. அமெரிக்காவும் போர்க்கப்பல்களை அதிகம் கட்டலாயின. 1937ல் ஜப்பான் சீனாவின் மீது மீண்டும் ஒரு தாக்குதல் நடத்தியது. அமெரிக்காவின் பானே என்ற பீரங்கிப்படகு சீன நதியில் மூழ்கடிக்கப்பட்டது. இதற்கு ஜப்பான் மன்னிப்பு கோரியது. 44000 டாலர்கள் நஷ்டஈடும் வழங்கியது. சீனாவில் ஜப்பானின் நடவடிக்கைகளின் தன்மைகளை அமெரிக்க மதபோதகர்கள், வணிகர்கள்

விவரித்தனர். இதனால் அமெரிக்க மக்கள் சீனாவிற்கு ஆதரவு தெரிவித்தனர். திறந்த வாசல் கொள்கையை கடைப்பிடிப்பதில் அமெரிக்கா தீவிரம் காட்டியது. பசிபிக் பிராந்தியத்தில் போர் ஏற்பட்டுவிடக்கூடாது என ஜாக்கிரதையுடன் அமெரிக்கா நடந்து கொண்டது.

ஆனால் சில நிகழ்ச்சிகள் ஐரோப்பிய விவகாரங்களில் அமெரிக்க தலையிட வேண்டியதாயிற்று. ஐரோப்பாவில் சர்வாதிகாரம் தலைதூக்கிற்று. ரூஸ்வெல்ட்டும் ஹிட்லரும் ஒரே நேரத்தில்தான் பதவிக்கு வந்தனர். இத்தாலியின் முசோலினி சர்வாதிகாரி ஆனார். முதல் உலகப்போர் ஜனநாயகத்தைக் காக்கக் தவறிவிட்டது. அமெரிக்க மக்களோ நடுநிலையைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என விரும்பினர்.

ஹீவர் காலத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு வழங்கப்பட்ட போர்க்கால கடன்கள் பின்லாந்தை தவிர மற்ற நாடுகள் செலுத்தவில்லை. எனவே ஜான்சன் சட்டம் 1934ல் கொண்டுவரப்பட்டு கடனை திருப்பிச் செலுத்தாத எந்தவொரு நாட்டிற்கும் இனி கடன்கள் வழங்கக்கூடாது என தீர்மானிக்கப்பட்டது. 1935ல் இயற்றப்பட்ட நடுநிலைச்சட்டம் அமெரிக்கா ஐரோப்பிய விவகாரங்களில் தலையிடுவதை தடை செய்தது. அமெரிக்கா இருதரப்பு நாடுகளுக்கும் ஏற்றுமதிகள் செய்யக்கூடாது எனவும் தடைவிதித்தது. அமெரிக்க பிரஜைகள் தங்ளுடைய பொறுப்பிலேதான் கடற்பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் அரசு எச்சரித்தது. உள்நாட்டுப் போரிலும் அமெரிக்கா தலையிடவில்லை. இதனால் ஆக்கிரமிப்பாளர்கள் பயன்பெற்றனர்.

ஆனால் ஐரோப்பாவில் 1937-39 ஆண்டுகளில் ஐரோப்பியாவில் ஏற்பட்ட சில நிகழ்வுகள் அமெரிக்காவை சிக்கலில் ஆழ்த்தியது. ஜெர்மனி மற்றும் இத்தாலிய படைகள், ஸ்பெயினைக் கைப்பற்ற தளபதி பிரான்கோவிற்கு உதவின. 1938ல் ஹிட்லர் ஆஸ்திரியாவை கைப்பற்றினார். பிரிட்டனையும் பிரான்சையும் மூனிக் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வற்புறுத்தினார். அதனால் செக்கோஸ்லோவாக்கியாவின் சுதர்டன்லாந்த் பகுதியை ஜெர்மனி கைப்பற்றியது. 1939 செப்டம்பரில் போலந்தின் மீது படையெடுத்தார். முசோலினி அல்பேனியாவை கைப்பற்றியது. அமெரிக்கர்கள் இந்த நடவடிக்கைகளைக் கண்டு அதிருப்தியடைந்தனர். இதை விட ஜெர்மனியின் நாஜிகள் யூதர்களைக் கொடுமைப்படுத்தியது கண்டு துயருற்றனர் இருந்தபோதும் ஐரோப்பிய விவகாரங்களிலிருந்து விலகியிருக்வே விரும்பினர்.

போலந்து தாக்கப்பட்டடை அறிந்து 1939 செப்டம்பர் 3ம் தேதி பிரிட்டனும் பிரான்சும் ஜெர்மனி மீது போர்பிரகடனம் செய்தது. இரண்டாம் உலகப்போர் தொடங்கி விட்டது.

**அமெரிக்கா இரண்டாம் உலகப்போரில் கலந்து கொள்ளுதல்**

ஐரோப்பாவில் ஏற்பட்ட நிகழ்வுகள் இரண்டாம் உலகப்போரை துவக்கிவிட்டன. அமெரிக்காவும் நடுநிலைக்கொள்கை என்ற பெயரில் போரில் ஈடுபடாமல் தவிர்த்து வந்தது. ஆனால ஜப்பானின் வேகமான வளர்ச்சி அமெரிக்காவிற்கு ஒரு சவாலாக இருந்தது. பசிபிக்

கடல் பிராந்தியத்தில் ஜப்பானின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் அமெரிக்காவை ஜப்பானுக்கு எதிராகப் போர்புரிய வைத்தது. ஏனெனில் ஜப்பான் ஜெர்மனியுடனும் இத்தாலியுடனும் ஒரு முக்கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டது அமெரிக்காவிற்கு ஆத்திரமூட்டியது. ஜப்பான் தொடர்ந்து தனது போர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது.

ஜப்பான், 1940 செப்டம்பரில் பிரெஞ் இந்தோ - சீனா பகுதியை கைப்பற்றிக் கொண்டது. தூரகிழக்குப் பகுதியில் இருந்த டச்சு, இங்கிலாந்தின் அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு ஆபத்து என்பதை உணர ஆரம்பித்தனர். 1941 ல் ஜப்பானின் சொத்துக்கள் அமெரிக்காவில் முடக்கப்பட்டன. 1941 அக்டோபரில், ஹிடேக்கி தோஜா என்பவர் தலைமையில் ஜப்பானின் புதிய அரசு உருவானது. ஆமெரிக்காவுடன் சமாதானம் பேசுவது என பாசாங்கு செய்தார். 1941 நவம்பர் 15ல் ஜப்பானிய தூதர் சபருகுருசு வாஷிங்டன் நகர் வந்தார்.

வாஷிங்டனில் சமாதான பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும் போது எவ்வித முன்னறிவிப்புமின்றி 1941, டிசம்பர் 7ம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு ஹாவாய் தீவுகளில் உள்ள முத்து துறைமுகத்தின் மீது ஜப்பானிய விமானங்கள் தாக்குதலை நடத்தியது. இரண்டு மணி நேரத்தில் எட்டு பெரிய அமெரிக்க போர்க்கப்பல்களும், நூற்றுக்கணக்கான பீரங்கிப்படகுகளும் மூழ்கடிக்கப்பட்டன. 2403 வீரர்கள் உயிரிழந்தனர். 1178 பேர் காயமடைந்தனர்.

அமெரிக்க மக்களும் அரசும் அதிர்ச்சியடைந்தன. மறுநாளே அமெரிக்க பாராளுமன்றம் ஜப்பான் மீது போர்பிரகடனம் செய்தது. இதற்கு மூன்று நாட்கள் கழித்து ஜெர்மனியும் இத்தாலியும் அமெரிக்கா மீது போர் தொடுத்தது. 1941 டிசம்பர் 12ல் அச்சு நாடுகள் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. இரண்டாம் உலகப்போரில் கலந்து கொள்வது தவிர்க்க முடியாததாகி விட்டது.

**போரில் அமெரிக்காவின் பங்கு**

1939, நவம்பரில் ஒரு புதிய நடுநிலை சட்டம் இயற்றப்பட்டது. போரில் ஈடுபடும் நாடுகள் தங்களுக்குத் தேவையான போர்தளவாடங்களை அமெரிக்காவில் "பணம் செலுத்தி அவர்களே எடுத்துக் செல்லலாம்" எனக் கூறப்பட்டது. அமெரிக்கக் கப்பல்களும், மக்களும் போர் நடைபெறும் பகுதிகளுக்குச் செல்ல தடை செய்யப்பட்டனர். இந்தத் திட்டத்தின் மூலம் ஐரோப்பிய நாடுகள் போர் தளவாடங்களைப் பெற்றனர். ஜெர்மனியை வெற்றி கொள்ளமுடியும் என நம்பினார்.

நவம்பர் 1939ல் பின்லாந்தை ரஷ்யா தாக்கியது. அமெரிக்க மக்கள் பின்லாந்திற்கு ஆதரவாக இருந்தனர். அமெரிக்கா நடுவராக இருந்து இவ்விரு நாட்டுப் பிரச்சனைகளை தீர்த்து வைக்க முன்வந்தபோது ரஷ்யா மறுத்து விட்டது. 1940ல் ஜெர்மனியின் தாக்குதல் அதிகமாயிற்று. டென்மார்க், நார்வே, ஹாலந்து, பெல்ஜியம் நாடுகளை வெற்றிகண்டபின்

பிரான்சை கைப்பற்ற திட்டமிட்டது. பிரான்ஸ் வீழ்ந்துவிடும் நிலையில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது.

அமெரிக்காவில் 1940ஆம் வருடம் ஜனாதிபதி தேர்தலில் ரூஸ்வெல்ட் மூன்றாம் முறையாக வெற்றி பெற்றார். குடியரச கட்சியினர் வெண்டல் வில்க்கி என்பவரை நிறுத்தினர். இரு கட்சியினரும் இங்கிலாந்திற்கு உதவி செய்வதாகவும், அமெரிக்காவை போரில் ஈடுபடுத்தப்பபோவதில்லை என்றும் உறுதியளித்தனர். ஆனால் போரின் போது அனுபவசாலியான ரூஸ்வெல்ட் ஜனாதிபதியாக இருப்பதே சிறந்தது என எண்ணி அவரைத் தேர்ந்தெடுத்தனர். தேர்தலுக்குப் பிறகு டிசம்பர் 1940ல் ரூஸ்வெல்ட் வானொலியில் உரையாற்றினார். "மக்களாட்சியில் நம்பிக்கை உடைய நாடுகளுக்கெல்லாம் அமெரிக்க நாடு உதவி செய்ய வேண்டும்" என்றார். இச்சமயம் இங்கிலாந்து ரொக்கம் செலுத்தி ராணுவ தளவாடங்களை வாங்க இயலாத நிலையில் இருந்தது. எனவே கடனாக வாங்குவதற்குச் சாதகமாக காங்கிரசில் புதிய சட்டம் மார்ச் 1941ல் இயற்றப்பட்டது. "அமெரிக்காவின் பாதுகாப்பை முன்னிட்டு எந்த ஒரு நாட்டின் பாதுகாப்பு அவசியம் என்று குடியரசுத் தலைவர் கருகிறாரோ அந்த நாட்டுக்குத் தேவையான பாதுகாப்புப் பொருட்கள், உதவிகள், செய்தி விவரங்கள் ஆகியவற்றை அளிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிப்பதாக அச்சட்டம் கூறியது. அச்சு நாடுகளுக்கு எதிராக போரிடும் அனைத்து நாடுகளுக்கும் இலவசமாக போர்க்கருவிகள் அனுப்பப்பட்டன.

**இங்கிலாந்து ஒத்துழைப்பு**

இங்கிலாந்திற்கு அனுப்பப்படும் கப்பல்கள் அட்லாண்டிக் கடற்பகுதியில் இருந்த ஜெர்மனியின் நீர்முழ்கிக் கப்பல்களால் தாக்கப்படும் நிலை ஏற்பட்டது. எனவே ஐஸ்லாந்து முதல் அமெரிக்கா வரையிலான கடற்பகுதி அட்லாண்டிக் நடுநிலை பிரதேசம் என்று அறிவித்தார். இப்பகுதியில் கப்பல் போக்குவரத்தை பாதுகாக்கும்படி அமெரிக்க கடற்படைக்கு உத்தரவிடப்பட்டது. ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்கள் இருக்கும் இடம் அறிந்து பிரிட்டிஷ் கப்பல்களுக்கு செய்திகளை அமெரிக்க கப்பல்கள் அனுப்பின. 1941 ஜூலையில் ஐஸ்லாந்தை பாதுகாக்கும் பொறுப்பை அமெரிக்கா ஏற்றுக்கொண்டது. 1941 செப்டம்பரில் அமெரிக்க கப்பல் கிரீர் ஜெர்மனிய நீர்மூழ்கிக் கப்பலால் மூழ்கடிக்கப்பட்டது. அக்டோபரில் ரூபன் ஜேம்ஸ் என்ற கப்பல் மூழ்கடிக்கப்பட்டது. எனவே ரூஸ்வெல்ட் அட்லாண்டிக் கடல்பகுதியில் உலாவம் ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்களை மூழ்கடிக்க உத்தரவிட்டார். அமெரிக்காவிலிருந்த ஜெர்மனி, இத்தாலி தூதரகங்கள் மூடப்பட்டன. ஐம்பதாயிரம் போர் விமானங்கள் தயாரிக்க உத்தரவிட்டார்.

**அட்லாண்டிக் சாசனம்**

1941 ஜூன் 22ல் ஹிட்லர் ரஷ்யாவின் மீது படையெடுத்தார். ரஷ்யா நேச நாடுகள் பக்கம் சேர்ந்து கொண்டது. இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டண்ட் சர்சிலும். அமெரிக்க

ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும் வடஅட்லாண்டிக் கடலில் ஒரு அமெரிக்க போர்க்கப்பலில் சந்தித்து போரின் குறிக்கோள் பற்றி பேசினர். 1941, ஆகஸ்ட் 14ல் ஒரு சாசனத்தை வெளியிட்டனர். இதுவே அட்லாண்டிக் சாசனம் ஆகும். இச்சாசனத்தின்படி அமெரிக்காவும், இங்கிலாந்தும் தங்கள் நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், எல்லைகளைப் பாதுகாக்கவும், கடல் போக்குவரத்து உரிமைகளை நிலைநாட்டவும் உறுதிமொழி எடுத்துக்கொண்டன. மக்களின் விருப்பதிற்கு மாறாக நாடுகளில் ஆட்சி அமைக்கப்பட்டது என்றும், அவரவர் விருப்பப்படி தங்களது ஆட்சியை அமைத்துக் கொள்ளலாம் என்றும் சாசனம் கூறியது. உலகில் அமைதியை நிலைநாட்டவும், மக்கள் பாதுகாப்புடன் வாழவும், அச்சம், வறுமை ஆகியவற்றிலிருந்து விடுதலை பெறவும், பகை நாடுகளின் படைக்கலன்கள் குறைக்கப்படவும் இச்சாசனம் வலியுறுத்தியது.

**அமெரிக்கா போரில் இறங்குதல்**

ஜப்பான் முத்து துறைமுகத்தை தாக்கிய பின்பு அமெரிக்கா போரில் நேரடியாக இறங்கியது. பெருமளவில் ஆயத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இராணுவத்தின் எண்ணிக்கை 50 லட்சமாக உயர்த்தப்பட்டது. 10 லட்சம் பேர் போர் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். போர்க்கப்பல்கள், ஆகாய விமானங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டன. பெண்கள் படைபிரிவு அமைக்கப்ட்டது. "போர் உற்பத்தி வாரியம்" ஒன்று டொனால்ட் நெல்சன் தலைமையில் அமைக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கிடையிலான தகராறுகளைத் தீர்க்க "தேசிய தொழிலாளர் நல வாரியம்" அமைக்கப்பட்டது. இதனால் வேலை நிறுத்தங்கள் தவிர்க்கப்பட்டன. போர் சம்பந்தமான செய்திகளைத் தெரிவிக்க "போர் செய்தி அலுவலகம்" அமைக்கப்பட்டது. செய்திகள் தணிக்கை செய்யப்பட்டன. மக்களின் சிவில் உரிமைகள் மீதும் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. எதிரிகளின் கையாட்கள் என்று சில ஆயிரம் அமெரிக்கர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். ஜப்பானிய இனத்தைச் சேர்ந்தவர்கள் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டனர்.

**போர் நடவடிக்கைகள்**

போர் இரண்டு முனைகளில் நடத்தப்பட வேண்டியிருந்தது. பசிபிக் கடல் பிராந்தியத்திலும், ஐரோப்பாவிலும் அமெரிக்கப் படைகள் போர் புரியத் திட்டமிட்டன.

ஐரோப்பாவிற்கு அமெரிக்கப் படைகள் அனுப்பி வைக்கப்பட்டு பிரிட்டிஷ் படைகள் ஒத்துழைப்போடு போர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஜெர்மனியை தோற்கடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஜெர்மனி ரஷ்யாவை முற்றுகையிட்டது. இதில் ஜெர்மனி வெற்றி வெற்றுவிட்டால் பின்னர் அது மிகப்பெரும் சக்திமிக்க நாடாகிவிடும் என அஞ்சப்பட்டது. அமெரிக்க இங்கிலாந்து படைகள் ஆப்பிரிக்காவில் அச்சுநாடுகளுக்கு எதிராக போர் நடவடிக்கைகளை மேற்கொண்டன. அமெரிக்க தளபதி டிவைட் ஐசனோவர் தலைமையில் கூட்டுப்படைகள் 1942ல் ஜூன் மாதம் மொராக்கோவிலும், அல்ஜீரியாவிலும் இறங்கின. ஆங்கிலத் தளபதி மான்ட்கோமரி 1943 மே மாதம் ரூனிஷியாவை

கைப்பற்றினார். ஜூன் மாதம் 10 ம் தேதி ஐசனோவரின் படைகள் சிசிலியில் இறங்கின. முசோலினின விரட்டப்பட்டார்.

மார்ஷல் பீட்ரோ படாக்லியோ என்பவர் தலைமையில் இத்தாலியில் புதிய அரசு அமைக்கப்பட்டது. 1944 ஜூன் 4ல் ரோம் வீழ்ந்தது. ஜூன் 6ம் தேதி ஆங்கிலோ அமெரிக்கப் படைகள் மேற்கு ஐரோப்பாவில் போர்முனையை துவக்கின. நார்மண்டியில் தரையிறங்கிய படைகள் பிரான்சை விடுவிக்க முயன்றன. ஆகஸ்ட் 25ம் தேதி பாரீஸ் விடுவிக்கப்பட்டது. பின் நேசப்படைகள் ஒன்றாக இணைந்து பெர்லினை நோக்கி முன்னேறிய. இதே சமயம் சோவியத் யூனியன் கிழக்கிலிருந்து முன்னேறி போலந்து, ஹங்கேரி, யூகோஸ்லோவியா, செக்கோஸ்லோவேகியா போன்ற நாடுகளை கைப்பற்றியபின் ஜெர்மனியை நோக்கி முன்னேறியது. 1945ல் மார்ச்சில் ஆங்கில அமெரிக்கப்படைகள் ரைன் நதியைக் கடந்து ஜெர்மனிக்குள் புகுந்தன. ஏப்ரல் 26ல் ரஷ்யப்படைகளும், அமெரிக்கப்படைகளும் சேர்ந்து பெர்லின் நகர் மீது தாக்குதல் தொடுத்தன. ஜெர்மானிய படை 1945 மே 2 ம் தேதி சரணடைந்தது. ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார். அவரது தளபதி கார்ல் டோனிட்ஸ் சரணாகதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். ஐரோப்பிய போர் முடிந்தது.

**ஜப்பானுடன் போர்**

1942 மே மாதத்தில் ஜப்பானின் தெற்கு நோக்கிய முன்னேற்றத்தினை அமெரிக்க விமானப்படை தடுத்து நிறுவத்தின. பவளக்கடல் பகுதியில் நடந்த போரில் ஜப்பான் பின்வாங்கியது. மிட்வே, சாலமன் தீவுகளில் நடந்த போர்களிலும் ஜப்பான் பின்வாங்கியது. 1942 ஆகஸ்ட் 7ல் நடைபெற்ற போரில் துலாகி துறைமுகம். குவாடல் கேனஸ் ஆகிய பகுதிகள் அமெரிக்கப் படைகளால் வெற்றி கொள்ளப்பட்டன.

ஐரோப்பாவில் போர் முடிந்தபிறகு தனது கவனத்தை ஜப்பான் மீது அமெரிக்கா செலுத்தியது. கடற்படை தளபதி வில்லியம் ஹான்சி நியுகினியா தீவுகளைக் கைப்பற்றினார். 1943 மே 11 அட்டுகிஸ்கா ஆகிய தீவுகளும் 1944, ஜனவரியில் மார்ஷல் தீவுகள் கைப்பற்றப்பட்டன. ஜூன் மாதம் பசிபிக்கில் இருந்த தலைமை கடற்படை தளபதி செஸ்டர் நிமிட்ஸ் மரியானா தீவுகளிலுள்ள சைப்பான் என்ற இடத்தைக் கைப்பற்றினார். இங்குள்ள விமான தளத்திலிருந்துதான் ஜப்பான் நகரங்கள் மீது 1944 நவம்பர் 23 முதல் அமெரிக்க விமானங்கள் குண்டுகளை வீசின. 1945 பிப்ரவரி 19ல் நடந்த கடற்போரில் ஐவோ, ஜிமா, ஓகினாவா ஆகிய தீவுகளை அமெரிக்கா கைப்பற்றியது. இச்சமயத்தில் ஜப்பானிய தற்கொலைப்படை விமானங்களான கமிக்சே அமெரிக்க கப்பல்கள் மீது குண்டுகளுடன் விழுந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தின.

1944 அக்டோபரில் அமெரிக்க தளபதி மேக் ஆர்தர் தலைமையில் அமெரிக்க தளபது ஜேசப் ஸ்டில்வெல் பர்மாவிலிருந்து ஜப்பானிய படைகளை விரட்டினார். 1945 பிப்ரவரி 3ல் மணிலா கைப்பற்றப்பட்டது. 1945 ஏப்ரல் 12ல் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் மரணமடைந்தார். துணை ஜனாதிபதி ஹேரிட்ரூமன் ஜனாதிபதியானார்.

பெர்லினுக்கு அருகே போட்ஸ்டம் என்ற இடத்தில் நடந்த மாநாட்டில் ட்ரூமன். சர்சில், ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர். 1945 ஜூலை 29க்குள் ஜப்பான் சரணடைந்து விட வேண்டும் என எச்சரிக்கை விடப்பட்டது. இதனை ஜப்பான் ஏற்றுக்கொள்ளவில்லை. இச்சமயம் 1945 ஜூன் மாதம் நியுமெக்சிகோ பாலைவனத்தில் அணுகுண்டு சோதனை வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டு, உபயோகப்படுத்தும் நிலையில் தயாராக இருந்தது. எனவே கெடுவை நிராகரித்த ஜப்பான் மீது அணுகுண்டு வீச முடிவு செய்யப்பட்டது.

1945 ஆகஸ்ட் 6ம் தேதி காலை 8.15 மணிக்கு ஹிரோஷிமா நகர் மீது அனலாகே என்ற அமெரிக்க விமானம் "லிட்டில்பாய்" என்ற பெயருடைய அணுகுண்டு வீசப்பட்டது. 78000 பேர் உடனடியாக மாண்டனர். ஐந்து சதுரமைல் பரப்பளவில் நகரம் எரிந்து சாம்பலானது. ஆனாலும் ஜப்பான் சரணடையவில்லை. சரணடைவது சம்பந்தமாக ஆகஸ்ட் 9ம் தேதி டோக்கியோவில் ராணுவ உயர்குழு கூடியது. ஆனால் அதே நாள் காலை 11 மணியளவில் பேட்மேன் என்ற புளூட்டோனியம் அணுகுண்டு நாகசாகி மீது வீசப்பட்டது. 38000 பேர் உடனடியாக மாண்டனர். இதற்கு மறுநாள் ஜப்பான் சரணடைய விரும்புவதாக அறிவித்தது. பேரரசர் ஹிரோஹிட்டோவின் தலைமையை மட்டும் மாற்ற வேண்டாம் என வேண்டுகோள் விடப்பட்டது. இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1945 செப்டம்பர் முதல் நாள் டோக்கியொகுடாவில் நின்ற "மிசௌரி" என்ற அமெரிக்க கப்பல் தளத்தில் சரணாகதி ஒப்பந்தத்தில் ஜப்பான் கையெழுத்திட்டது. மேக் ஆர்தர் தலைமையில் ஜப்பானில் புதிய அரசு அமைக்கப்பட்டது. 1945 செப்டம்பர் 2ம் நாள் V.J. Day கொண்டாடப்பட்டது. இரண்டாம் உலகப் போர் முடிவுற்றது.

**போரின் விளைவுகள்**

இரண்டாம் உலகப் போர் மனித சமுதாயத்திற்கு பேரழிவை ஏற்படுத்தியது. 80 மில்லியன் போர் வீரர்கள் போரில் ஈடுபட்டனர். 14 மில்லியர் போர் வீரர்கள் கொல்லப்பட்டனர். இதில் 3,75,000 போர் அமெரிக்க வீரர்கள் ஆவார்கள். ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர் பல இலட்சக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து அடிமைத் தொழிலாளர்களாக மாறினர். மனித இனத்தின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. அமெரிக்கா 300 மில்லியன் டாலர் செலவு செய்தது.

உலக அரங்கில் இங்கிலாந்தும், பிரான்சும் தங்கள் தலைமையை இழந்தது. அமெரிக்காவும், சோவியத்யூனியனும் தலைமையிடத்தைப் பிடித்தனர். அமெரிக்கா தனது தனித்திருத்தல் கொள்கையை கைவிட்டது. உலக அரசியலில் அமெரிக்கா தலைமையிடத்தைப் பிடித்தது.

போரின் போது அமெரிக்காவுடன் ஒத்துழைத்த சோவியத்யூனியன் போருக்குப் பிறகு கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்தது. அமெரிக்கா முதலாளித்துவ கருத்துக்களுக்கும், ரஷ்யா கம்யூனிச கொள்கைகளுக்கும் முக்கியத்துவம் தந்தது. உலகம் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தது. அமெரிக்க ரஷ்யாவிடையே கெடுபிடி போர் ஆரம்பமானது.

இரண்டாம் உலகப்போரின் விளைவாக உலகத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக ஐக்கிய நாடுகளின் சபை உருவாக்கப்பட்டது. இதற்கு அமெரிக்கா மிகவும் பாடுபட்டது.

1. பிராங்களின் டிரூஷ்வெல்டின் புதிய திட்டத்தின் சாதனைகள் பற்றி ஆராய்க.
2. பிராங்களின் டிரூஷ்வெல்டின் வெளியுறவுக் கொள்கை பற்றி ஆய்க
3. இரண்டாம் உலகப் போரில் அமெரிக்காவின் பங்கு என் என்பதை கூறுக.

# அலகு - V

## குடியேறியவர்களின் நிலப்பகுதி

மேற்கிந்திய இனத்தவர்களின் நலன்களுக்கு எதிராக விவசாய, தொழிலக வளர்ச்சிக் காலம் விளங்கியது. கிழக்கில் வாழ்ந்த கிளர்ச்சியுள்ளம் படைத்த மக்கள் ஐரோப்பாவிலிருந்து குடிபெயர்ந்தோர் ஆகியோர் இந்தியர்களுடைய நிலப்பகுதிக்குள் நுழைந்து, அவர்களுடைய உடைமைகளை அபகரித்து, ஏழ்மை நிலையை அடையச் செய்தனர்.

**இந்தியர் அடைந்த இன்னல்கள்**

மிஸிஸிப்பி நதியின் மேற்குப் பகுதியிலுள்ள இந்திய நிலப்பகுதிகளில் கிழக்குப் பகுதியிலிருந்து விரட்டப்பட்ட மக்களும் ராக்கீஸ் மலைப் பகுதியைத் தங்கள் உறைவிடமாகக் கொண்டவர்களும் வசித்து வந்தனர். இப் பகுதிகளில் வாழ்ந்து வந்த இந்தியர்களில் மிக முக்கியமானவர்கள் சியாக்ஸ், அரபாகோ, செயின்னி, நெஸ், பெரீஸ், அப்பாசி ஆகியோர் ஆவர் அவர்கள் மிஸிஸிப்பி சமவெளிப் பகுதியிலிருந்து, பசிபிக் கடற்கரைப் பகுதியிலிருந்தும் வந்த அமெரிக்கர்களுடன் போரிட்டுத் தோல்வியடைந்தனர்.

தங்களுடைய சமயச் சட்டங்களுக்கெதிராக அமெரிக்கர்கள் பிற நாட்டு நிலப்பகுதிகளைக் கைப்பற்ற எண்ணியதால் ஏற்பட்ட விளைவே இப்பிரச்சினைக்கான காரணமாகும். இந்நதியர்களுடைய நிலப்பகுதியைக் கவர வேண்டுமென்று விரும்பிய அமெரிக்கர்கள் கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த மக்களை அவர்களுடைய பூர்வீக விரோதிகள் வாழ்ந்த தூரமேற்குப் பகுதிக்கு விரட்டியழத்தனர். இப்பூர்வீக இனத்தவர் அப்பகுதியினை இந்திய நிலமாக பேணிப் பாதுகாக்க முடியுமென்ற நம்பிக்கையுடன் இருந்தனர். ஆனால் அவர்களுடைய நம்பிக்கையை குடியேறிய வெள்ளையர்கள் முறியடித்தனர். தங்கள் எண்ணெய் மற்றும் தாதுக்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சுரங்கத் தொழிலாளர்கள் பூர்வீக இனத்தவரின் கிராமங்களை அழித்தனர். இதற்கிடையில் கூட்டாட்சி அரசு, இரயில் பாதைகளை அமைக்க இந்திய நிலப்பகுதிகளில் பெரும் பகுதிகளை இரயில் பாதைக் கம்பெனிகளுக்கு இலவசமாகக் கொடுத்தது. இந்நடவடிக்கைகள் கொடுங்கோன்மையானதாகவும் இன்னல் இழைப்பனவாகவும் இருந்தன. அதனால் இந்திய நாடுகளின் நிலப்பகுதிகள் அபகரிக்கப்பட்டன. அரசியல் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டன.

வெள்ளையர், இந்தியர் போராட்டத்திற்கு வேறு பல காரணங்களும் எண்டு. உள்நாட்டுப் போர் அமெரிக்க மக்களுக்கும் பூர்வீக இந்தியர்களுக்கிடையே உள்ள வெறுப்புணர்ச்சியை நிரந்தரமாக்கியது உள்நாட்டுப் போருக்கு பின்பும் ஐக்கிய நாடுகள், இந்தியர்களை தொடர்ந்து துன்புறுத்தி வந்தன. இந்தியர்கள் அமெரிக்கரை எதிர்க்க முனைந்தனர்.

**போர்களினால் ஏற்பட்ட அழிவு**

கான்சாஸ், நெப்ராஸ்காட் பகுதிகளிலுள்ள இந்தியரை கைதி, முகாம்களில் அடைத்து வைத்துவிட்டு, அவர்களுக்குரிய நிலப்பகுதிகளைக் கைப்பற்ற அமெரிக்கா முற்பட்டபோதுதான் செய்யீனி-அரபா ஹோ (Cheyennc-Arapaho War) என்ற போர் ஏற்பட்டது இது 1861 ஆம் ஆண்டிலிருந்து 1864 வரை நடைபெற்றது. அமெரிக்கப்படைகளின் ஆதரவோடு சுரங்கத் தொழிலாளர்கள் கோலராடோவிலுள்ள செய்யீனி-அரபாஹோ இனத்தவர்களுக்குச் சொந்தமான நிலப்பகுதிகளைக் கைப்பற்றினர். எனவே இந்தியர் பாதுகாப்பைத் தேடி சான்ட் கிரீக்கிலுள்ள லையான்கோட்டையை அடைந்தனர். ஆனால் அங்கும் அவர்களை அமெரிக்கப் படைகள், சுட்டு வீழ்த்தினர்.

சான்ட் கிரீக் படுகொலையினால் வெகுண்டு, தங்களது நிலப் பகுதி முழுமையம் கவரப்பட்டுவிடும் என்று எண்ணி சியூக்ஸ் இந்தியர்கள் ரெட்க்ளெவுட் (Red Claud) என்பவரின் தலைமையில் மான்டானாவோடு அமெரிக்கர்கள் கொண்ட தொடர்பைத் துண்டித்தனர். எனவே சியூக்ஸ்போர் (1865-1867) ஏற்பட்டது. இப்போரில் இவ்வினத்தவர் ஒடுக்கப்பட்டு, பிளாக் ஹில்ஸ் (Black Hills) என்ற பகுதிக்கு விரட்டப்பட்டனர். இந்திய விவகாரங்களை ஆராய்ந்து ஒரு புதிய இந்தியக் கொள்கையை உருவாக்குவதற்கு ஆலோசனை வழங்க காங்கிரஸ் குழு ஒன்றை நியமித்தது. அக்குழுவினர் பரிந்துரையின் பேரில் பழங்குடியனருக்கென்று தனி இடங்களை ஒதுக்க அரசு தீர்மானித்தது. இதன்படி தென் பகுதியினத்தவர்களும் கிழக்குப் பகுதியில் எஞ்சியவர்களும் ஒக்லஹோமா (Oklahoma) என்ற தனிந்த பகுதிக்கு கட்டாயமாகத் துரத்தப்பட்டனர். பிற இனத்தவருக்கும் ஒதுங்கி வாழ இடங்கள் உருவாக்கப்பட்டன. நாளடைவில் எல்லா சுதந்திர இந்தியர்களும் வளமற்ற பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களுடைய நிலப்பகுதிகளனைத்தும் அமெரிக்கரால் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இவ்வொதுக்கிடங்களிலும் கூட அமைதியாக உயிர்வாழ இந்தியர்களை அனுமதிக்கவில்லை. தங்கமும், எண்ணையும் கண்டு பிடிக்கப்பட்டதல் அமெரிக்கர் இப்பகுதிகளுக்கு வந்து இந்தியர்களைத் தாக்கினர். இடாஹோவின் நெஸ் பெர்ஸ் (Nez Perce) இனத்தவர் தங்கள் இருப்பிடங்களை விட்டுவிட்டு பாலைவனப் பகுதிக்குச் செல்ல மறுத்ததால் 1877-ல் அமெரிக்கப்படை அவர்களை தாக்கி, அவ்வினத்தினரை அழித்தது. அமெரிக்கரின் மற்றொரு படை அரிஸோனா, நியூ மெக்ஸிகோ பகுதிகளில்ளள அப்பேச்சி இந்தியர்களைத் தாக்கி அவர்களை ஒர்லஹோமாவின் ஒதுக்கிடத்திற்கு அனுப்பியது.

1890-ல் ஐக்கிய நாடுகள் பூர்வீக இனத்தவர்களுக்கு எதிராக இறுதிப் போரில் ஈடுபட்டது. செல்வாக்கிழந்து இருந்த எஞ்சிய இந்தியர்கள் தீவிர சமயப் பற்றாளர்களாக மாறி, தங்களது பரம்பரை ஆவி நடனம் வழியாக புரட்சியை ஏற்படுத்த முயன்றனர். ஆவி நடன சமயக் கொள்கையானது மேற்குப் பகுதிக்கும் பரவி, சியுக்ஸ் பிரிவினரில் பலரை மதம் மாற்றியது. இதனால் கூட்டாட்சிப் படையினர் ஒதுக்கிடங்களுக்கு சென்று இந்தியர்களைக் சுட்டனர்.

### அமெரிக்க நீக்ரோக்கள்

**லிண்டன் B ஜான்சன்**

நீக்ரோ மக்களுக்கு சம உரிமை அளிப்பது தொடர்பாக 1964ல் "சிவில் உரிமைச் சட்டம்" கொண்டுவரப்பட்டது. "நீக்ரோக்களின் வாக்குரிமைகளைப் பாதுகாக்கவும், பள்ளிகள், பேருந்துகளில், பொது இடங்களில் இனப்பாகுபாட்டை அகற்றவும், சமவேலை வாய்ப்புகளை வழங்கவும்", கூட்டாட்சி அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. மார்டின் லூதர் கிங் அலபாமா மாநிலத்தில் செல்மா என்ற நகரிலிருந்து தலைநகர் மாண்ட்கோமரிக்கு 1965 பிப்ரவரியில் பாதயாத்திரை தொடங்கிய போது கைது செய்யப்பட்டார். இதனால் கலவரங்கள் ஏற்பட்டன.

Black Panther -கருஞ்சிறுத்தைகள் என்ற தீவிரவாத அமைப்பு 1966ல் கலிபோர்னியாவில் தொடங்கப்பட்டது. 1967ல் நூறு நகரங்களில் வன்முறை கலவலங்கள் நடந்தன. டெட்ராய்ட் நகரில் நடந்த வன்முறை மிகவும் மோசமானதாகும். நீக்ரோக்கள் வாக்குரிமை பெற கல்வி சோதனை முறையை ஜான்சன் ரத்து செய்தார். 1968ல் நீக்ரோக்களுக்கு வீடுகள் விற்பது, வாடகைக்கு விடப்படுவது தொடர்பாக உள்ள சிரமங்கள் களையப்பட்டன. 1968 ஏப்ரல் 4ம் தேதி மெம்பஸ் என்ற நகரில் இனவெறி கொண்ட வெள்ளையன் ஒருவனால் மார்டின்லூதர் கிங் சுடப்பட்டார். இனவெறி அடங்குவதாக இல்லை. நீக்ரோக்களின் வாழ்வு எதிர்பார்த்த அளவு முன்னேறவில்லை.

## கெடுபிடிப் போர்

ரஷியாவின் கம்யூனிசமும் அதன் உலகப் புரட்சிக் கோட்பாடும் அமெரிக்க ஆதிக்க விஸ்தரிப்புக் கொள்கைக்கும் அதன் முதலாளத்துவக் கொள்கைக்கும் மாபெரும் சவாலாக அமைந்தன. ரஷியா, பால்டிக் நாடுகளை இணைத்து, கிழக்கு ஐரொப்பாவில் கம்யூனிச அரசுகளை நிறுவியதோடு மட்டுமின்றி பிற நாடுகளல் புரட்சி இயக்கங்களுக்கும் ஆதரவு அளித்தது. கிரீசும், துருக்கியும் கம்யூனிச நாடாகி அதன் மூலம் ரஷியா தனது செல்வாக்கை மத்திய தரைப் பகுதியில் ஏற்படுத்திவிடும் அபாயம் தோன்றியது. எனவே உள்நாட்டிலிருந்தோ அல்லது வெளிநாட்டிலிருந்தோ அச்சுறுத்தப்படும் ஆக்கிரமிப்பிலிருந்து எந்த ஒரு நாட்டின் சுதநத்திரத்தையும் காக்க அமெரிக்க உதவ வேண்டுமென ட்ரூமன் 1947ல் காங்கிரசிற்கு கோரிக்கை விடுத்தார். இது ட்ரூமனின் கோட்பாடு எனப்பட்டது. இதற்குச் செவிமடுத்த காங்கிரஸ், கிரீஸ் மற்றும் துருக்கிய நாடுகளுக்கு இராணுவம் மற்றும் கடற்படைத் தளபதிகளை அனுப்பியது. ஆயுதங்களைப் பெறவும் பிற தேவைகளைப் பூர்த்தி செய்யவும் 40 கோடி டாலர்களை ஒதுக்கியது. இதன் மூலம் அந்நாடுகள் தங்களது படைகளை மாற்றியமைத்து கம்யூனிஸ்ட் திட்டங்களை முறியடித்தன.

இதனைத் தொடர்ந்து மார்ஷல் திட்டம் அல்லது ஐரோப்பிய மீட்சித் திட்டம் கொண்டுவரப்பட்டது. 1947ல் அயலுறுவுச் செயலாளரான ஜார்ஜ் மார்ஷல் புனரமைப்பிற்கான தேவைகள் குறித்து ஐரோப்பிய நாடுகள் ஓர் உடன்பாட்டிற்கு வந்தால் ஐக்கிய நாடுகள் அத்திட்டத்தைச் செயற்படுத்த உதவி செய்யும் என்று அறிவித்தார். இத்திட்டமானது எந்த ஒரு நாட்டின் கொள்கைக்கும் எதிரானதல்ல. ஆனால் பசி, வறுமை, குழப்ப நிலை ஆகியவற்றிக்கெதிராக செயல்படுத்தப்படுமென்று அவர் கூறினார். ரஷியா மற்றும் கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்டு நாடுகள் தவிர மற்ற ஐரோப்பிய நாடுகள் இவ்வறிக்கையை வரவேற்றன. மீட்சிக்கான திட்டங்களை செயற்படுத்த ஐக்கிய நாடுகள் ஏராளமான பணத்தைக் கொடுத்து உதவியது. மெதுவாகவே மீட்சி ஏற்பட்டபோதிலும், அது கம்யூனிசக் கருத்துக்களை பரவாது செய்தது. உண்மையில் ட்ரூமன் கோட்பாடும், மார்ஷல் திட்டமும் ஐரோப்பாவில் அமெரிக்க பிரிட்டிஷ் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு உருவான திட்டங்களாகும். இது ரஷியாவின் ஆதிக்கப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தக் கையாளப்பட்ட இராஜதந்திரக் கொள்கையின் ஒரு பகுதியாகும்.

1948ல் நட்பு நாடுகளின் ஒத்துழைப்போடு கூட்டுப் பாதுகாப்பு முயற்சியை விருத்தி செய்ய நடவடிக்கைகளை எடுக்க காங்கிரஸ் ட்ரூமனுக்கு அதிகாரம் வழங்கியது. இதற்கேற்ப கம்யூனிசக் கொள்கைக்கு எதிரான நாடுகளோடு ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். இதன் விளைவாகவே 1949ல் வட அட்லாண்டிக் உடன்படிக்கையும், 1950ல் வட அட்லாண்டிக் உடன்பாட்டு அமைப்பும் ஏற்பட்டன. இப்பாதுகாப்பு உடன்பாட்டில் சேர்ந்து கொண்ட பன்னிரண்டு நாடுகளும், படை பலத்தின் வழியாக வட அட்லாண்டிக் பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியது. இவற்றில் ஏதாவது ஒரு நாடு தாக்கப்பட்டாலும் அதனை அனைத்து உடன்பாட்டு நாடுகளின் பாதுகாப்பிற்கு ஏற்படட அச்சுறுத்தல் எனக் கருதுவதாகவும் உறுதிமொழி எடுத்தனர். இவைகளைத் தவிர கம்யூனிசத்திற்கு இடங்கொடுக்காமல் பின்தங்கிய நாடுகளைப் பார்த்துக் கொள்ளவும், அந்நாடுகளுக்கு விஞ்ஞான தொழில் நுட்ப உண்மைகளை உணர்த்தவும் ஏராளமான பணத்தை அமெரிக்கா ஒதுக்கியது. இதன் காரணமாக தனது செல்வாக்கை மேற்கு ஐரோப்பிய நாடுகளில் செலுத்துவது மிகக் கடினம் என்று ரஷியா உணர்ந்து கொண்டது.

**கொரியாப் போர் (1950)**

1950 ஜூன் 25 ஆம் நாள் ஏற்பட்ட கொரியாப் போர் அமெரிக்க ரஷிய ஆதரவு ஆதிக்கங்களுக்கிடையே மோதல் ஏற்படவும் கெடுபிடிப் போர் உண்மையான போராக உருவாகவும் காரணமாயிற்று. ரஷிய ஆதரவு பெற்ற வட கொரியப் படைகள் 38வது அட்சரேகையைக் கடந்து அமெரிக்க ஆதரவு பெற்ற தென் கொரியாவைத் தாக்கிய போது போர் ஏற்பட்டது. அமெரிக்காவின் தூண்டுதலினால் ஐக்கிய நாடுகள் சபை ஆக்கிரமிப்பைக் கண்டனம் செய்ததோடு படைகளைத் திரும்ப பெறுமாறு வட கொரியாவிடம் கோரிக்கை விடுத்தது. ஆனால் வட கொரியா இக்கோரிக்கையை நிராகரிக்கவே, பாதுகாப்புக்

குழுவானது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள அதிகாரம் வழங்கியதோடு கொரியாவில் ஐக்கிய நாடுகள் சபை படைக்குக் கூட்டுத் தலைமை வகிக்க அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு அனுமதி வழங்கியது.

தென் கொரியாவை ட்ரூமன் உடனடியாகவே படைகளை அனுப்பி, போர் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்க தளபதி மக்ஆர்தர் என்பவரை நியமித்தார். எனினும் கம்யூனிஸ்ட் தாக்குதல் தொடர்ந்து நடந்தது. இதனால் தென் கொரியாப் படைகள் தீபகற்பததின் தென் கோடியில் புசான் என்ற பகுதிக்குப் பின்வாங்க நேரிட்டது. உதவிக்கு அதிகமான படைப் பிரிவுகள் வந்து சேரவே அமெரிக்கப் படைகள் எதிர்தாக்குதலை மேற்கொண்டன. அவைகள் வட கொரியர்களை எல்லைக்கு அப்பால் துரத்தியடித்து அவர்களது தலைநகரான பியாங்யாங்கைக் கைப்பற்றி யாலு நதியில் சீனா எல்லை வரை முன்னேறிச் சென்றன. வட கொரியாப் படைகள் முறியடிக்கப்படும் நிலையில் சீனா வட கொரியாவிற்கு ஆதரவாக வந்த தாக்குதலை மேற்கொண்டபொது அமெரிக்கர் பின்வாங்கினர். வெற்றி தோல்வி யாருக்குமில்லை என்ற நிலை எற்படும் வரை இருதரப்புப் படைகளும் போரிட்டன. இறுதியில் பழைய எல்லைக்குச் சிறிது வடக்கே போர் நிறுத்தப்பட்டது.

பிரச்சினைக்குத் தீர்வு காண ஓராண்டு காலத்திற்கு மேலாக இரு சாராருமே பயனற்றப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். போர்க் கைதிகளை திருப்பி அனுப்புவதில் எத்தகைய உடன்பாடும் ஏற்படவில்லை. இரு கொரியாவிற்குமிடையே நிர்ணயிக்கப்பட்ட எல்லை அமெரிக்கா, ரஷியாவிற்குமிடையே கருத்து வேறுபாட்டினை ஏற்படுத்திற்று. பேச்சு வார்த்தையில் திருப்தியற்ற நிலையில் மறுபடியும் வட கொரியா மீது படையெடுத்துச் சென்று சீனாவிலும் போரை ஆரம்பிக்கும் அதிகாரத்தை மக் ஆர்தர் வேண்டினார். ஆனால் இத்தகைய நடவடிக்கை நாட்டை ஒரு பெரும் போருக்கு இட்டுச் செல்லும் என்றஞ்சிய ட்ரூமன், மக் ஆர்தரை தளபதிப் பொறுப்பிலிருந்து நீக்கினார். எத்தகைய உடன்பாடும் ஏற்படாததால் 1952, அக்டோபரில் ட்ரூமன் பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டார். எனினும் 1953ல் ஸ்டாலின் மரணத்திற்குப் பிறகு ரஷியப் பிரதமரான மாலன்கோவ் சமாதான வழிகளில் பிரச்சினையைத் தீர்க்க முயன்றார்.

கொரியாப் போரை நிறுத்த வேண்டுமென்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைத் தீர்மானத்திற்கு ரஷியச் சார்பு நாடுகளும், அமெரிக்கச் சார்பு நாடுகளும் சேர்ந்து ஆதரவளித்தன. இறுதியில் 1953, ஜூலையில் ஐசன் ஹோவர் ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியான பின்பு, சீனாவும் வட கொரியாவும் ஒரு போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. தங்கள் தாய்நாட்டிற்கு திரும்ப மறுக்கும் போர்க் கைதிகளை அவர்களின் விருப்பப்படி நாடுகளுக்கு அனுப்ப ஒப்புக் கொள்ளப்பட்டது. கொரியா முன் போலவே பிரிக்கப்பட்டிருந்தது.

**கொரியாப் போரின் விளைவுகள்**

(1) ஒரு பெரும் போர் ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகளை இது வெளிப்படுத்தியது. போர்க்காலச் சூழ்நிலையையும் அதோடு கூடிய படை பலத்தையும் அரசியல் ஆதிக்கத்தையும் வெளிக் கொணர்ந்தது. (2) இப்போர் உலக அரங்கில் கம்யூனிசத்திற்கெதிரான பாதுகாப்பை அதிகரிக்க வேண்டிய அவசியத்தை அமெரிக்கருக்கு உணர்த்திற்று. கொரியாவிலும் சீனாவிலும் ஏற்பட்ட சூழ்நிலைகள் அமெரிக்காவை கம்யூனிசத்திற்கெதிராக தக்க நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டின. ஜப்பானை ஒரு நேச நாடாக மாற்ற வேண்டியது மிகவும் இன்றியமையாததாக இருந்தது. இதன் விளைவாக 1951ல் ஜப்பானோடு ஓர் உடன்படிக்கை கையெழுத்தானது. இவ்வுடன்படிக்கை தாயாகத் தீவுகள் மீதான ஜப்பானின் இறைமையை அங்கீகரித்தது. ஜப்பானின் கடற்படைத் தளங்களையும், படைகளையும் அமெரிக்கா வைத்துக் கொள்ள மற்றொரு உடன்படிக்கை அனுமதி வழங்கியது. இவ்வேற்பாடு ஆசிய கம்யூனிசத்திற்கெதிராக ஜப்பானை அமெரிக்கப் பாதுகாப்பு முறையில் மையமாக்கியது. இப்பாதுகாப்பு முறையானது ஐக்கிய நாடுகள், ஜம்பான், நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் தங்களுக்குள் செய்து கொண்ட பாதுகாப்பு உடன்படிக்கையின் பயனாக மேலும் வலிமையானதாக்கப்பட்டது. (3) உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக, கம்யூனிசத்தின் வளர்ச்சியைத் தடை செய்ய காங்கிரஸ் நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1950 ஆம் ஆண்டின் மாக் காரன் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டமானது. கம்யூனிஸ்ட் முன்னணி அமைப்புகள் அட்டார்னி ஜெனரலிடம் பதிவு செய்து கொள்ள வேண்டுமென பணித்ததோடு வெளிநாட்டுக் கம்யூனிஸ்டுகள் அமெரிக்காவிற்குள் நுழைவதைத் தடை செய்தது. செனட்டர் ஜோசப் மக்காத்தி கம்யூனிசத்திற்கெதிராக புனிதப் போரை மேற்கொண்டார். இதன்படி சந்தேகத்துக்குரியவர் மீது கடினமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. எனவே மக்கார்திஸம் என்றால் சிவில் உரிமைகளை ஒடுக்குவது என்று பொருள் தந்தது. (4) எவ்வித நோக்கமும் இல்லாத கொரியாப் போரும் பேச்சு வார்த்தைகளின் முன்னேற்றமின்மையும் தளபதி மக் ஆர்தரை நடத்திய விதமும் ஜனநாயகக் கட்சியின் ஆட்சியை செல்வாக்கற்றதாக்கிற்று. (5) இறுதியில் போரின் விளைவாக கம்யூனிஸ்ட் சீனா வலிமை மிக்க ஆதிக்கமாக எழுச்சி பெற்றது. ஆசியாவிலேயே மிகவும் வலிமையான நாடாக சீனா மாறியது. எனினும் கொரியாப் போரின் சீனா தலையிட்டதன் காரணமாக ஐக்கிய நாடுகள் சபையில் கம்யூனிஸ்ட் சீனா நுழைவதைத் தொடர்ந்து அமெரிக்கா தடை செய்தது.

1. கெடுபிடிப் போரைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

## ஜான்சனும் வியட்நாம் போரும்

கென்னடிக்குப் பின் பதவிக்கு வந்த ஜான்சன், நிக்சன் ஆகிய இருவரது அரசியல் சிந்தனையும் "வியட்காங்" பிரச்சினை பற்றியே இருந்தது. வியட்நாம் விடுதலை வீரர்களே வியட்காங் எனப்பட்டனர். வியட்நாம் மக்கள் அமெரிக்கர்களுக்கு எவ்வகையிலும் தீங்கிழைக்கவில்லை. ஆனால் அதற்கு மாறாக, குடியேற்ற ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு அரசியல் விடுதலையும், அந்நியர் சதித் திட்டத்திலிருந்து விடுபட்டு தேசிய ஒற்றுமைப்பாட்டையும் பெற அவர்கள் பெரிதும் முயன்றனர். எனினும் இச்சிறிய நாட்டிற்கு அமெரிக்கர் படைகளை அனுப்பி அதனைத் தாக்கினர். இதனால் பலர் இறந்தனர். அமெரிக்கர் அமெரிக்கருக்கே என யாங்கியர்கள் எண்ணும் போது ஆசியா ஆசியருக்கே என ஆசியாவினர் கருதினர். தேசிய ஒருமைப்பாட்டில் அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கும் போது பிற மக்களும் இவ்வுரிமைக்கு உரித்தானவர்களே. ஆனால் இதனை ஏற்றுக் கொண்டு பிற மக்களை சுதந்திரமாக வாழவிட அமெரிக்கர் தயாராக இல்லை என்ற கருத்தை அவர்களது வியட்நாம் கொள்கை வெளிப்படுத்தியது.

தென் கிழக்கு ஆசியாவில் நசுக்கப்பட்ட நிலையிலிருந்து பிரெஞ்சு குடியேற்றங்களுக்கு உதவிக்குச் செல்ல அமெரிக்கர் எடுத்துக்கொண்ட தீர்மானமே வியட்நாம் துயர நிகழ்ச்சியின் ஆரம்பமாகும். ஊலகப் புரட்சியை ஊக்குவிக்க இப்பகுதி கைப்பற்றப்படுதல் மிக முக்கியமானதென கம்யூனிஸ்ட் நாடுகள் கருதின. ஆசிரியர்கள் குடியேற்றத்திற்காக ஆஸ்திரேலியாவை நோக்கி சென்றுவிடாது. வெள்ளை இன வம்சம் ஆஸ்திரேலியாவை நோக்கிச் சென்று விடாது வெள்ளை இன வம்சம் ஆஸ்திரேலியாவைக் காக்கவும், பசிபிக் சமுத்திரத்திலிருந்து இந்திய சமுத்திரம் வரை தங்கள் தொடர்பை நிலைநாட்டவும், வியட்நாம் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் இயங்க வேண்டுமென அமெரிக்கர் எண்ணினர். அவர்களின் இவ்வரசியல் ஆதிக்கக் கொள்கைக்கு வியட்நாமியர் பலியாயினர். வியட்நாமியரின் எதிரிக்கு அமெரிக்கர் ஏராளமான உதவி அளித்த போதிலும் அந்நாட்டு மக்கள் தீவிரப் போராட்டத்தை தொடர்ந்தனர். எனவே பிரெஞ்சு ஏகாதிபத்தியம் வீழ்ச்சி அடையத் தொடங்கியது. இதிலிருந்து விடுபட முயற்சி செய்த பிரெஞ்சுக்காரர்கள், சைகோனை தலைநகராகக் கொண்டு ஓர் அரசை அமைக்குமாறு 1949ல் பேரரசர் பாவோ தாயை கேட்டுக்கொண்டார். ஆனால் இதற்கு மாறாக தங்கள் திறமைமிக்கத் தலைவரான ஹோசிமின் தலைமையின் கீழ் ஹனாயைத் தலைவராகக் கொண்டு மற்றொரு அரசை கம்யூனிஸ்டுகள் அமைத்தனர். இவ்விரு அரசுகளும் நாட்டை கம்யூனிச ஆதரவு வட வியட்நாம், கம்யூனிச எதிர்ப்பு தென் வியட்நாம் என இரண்டாகப் பிரிந்தன.ள 1954ல் ஜெனிவாவில் நடைபெற்ற மாநாட்டில், இரு பிரிவுகளும் 17வது அட்சரேகையை இரு நாடுகளின் எல்லையென்று ஏற்றுக்கொண்டனர். மக்கள் தங்கள் நாடு ஒன்றாக இணைவதை விரும்புகிறார்களா என்பதை உறுதிப்படுத்த வியட்நாமில் தேர்தல் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது. எனினும் கம்யூனிஸ்ட் தலைமையின் கீழ் வியட்நாம் இணைந்து

விடுமென அச்சமுற்ற தென் வியட்நாமின் புதிய அதிபரான டின்-டியம் ஐக்கிய நாடுகளின் ஆதரவோடு 1954ம் ஆண்டின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தார். இதனால் ஏமாற்றமடைந்த கம்யூனீச ஆதரவு வியட்காங் மக்கள் இப்பகுதியில் ஒரு மாற்று நிர்வாகத்தை அமைத்தனர். வளர்ந்து வரும் வியட்காங் விமையை எதிர்த்துப் போராட கம்யூனிச எதிர்ப்பாளர்களை வலிமைபடுத்த வேண்டுமென்ற ஆர்வத்தால் ஜனாதிபதி கென்னடி இராணுவக் குழுக்களை அனுப்பி தென் வியட்நாம் படையினருக்குப் பயிற்சி அளித்தர் எனினும் இதனால் குறிப்பிடத்தக்க விளைவுகள் ஏதும் ஏற்படவில்லை டியம் தலைமையின் மீது அதிருப்தியுற்ற அமெரிக்க ஆதரவாளர்கள் அமெரிக்க ஜனாதிபதியின் ஒப்புதலோடு சதி செய்து 1963ல் அவரைக் கொலை செய்தனர். அதைத் தொடர்ந்து தென் வியட்நாமின் ஜனாதிபதியாக் தியூ தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வியட்நாமின் போக்கு அமெரிக்க நலன்களுக்கெதிரான துரிதமாக மாற்றிக்கொண்டு வந்தமையை ஜனாதிபதி லிண்டன் B. ஜான்சன் கண்டுணர்ந்தார். வட வியட்நாமை ஒடுக்க அளிக்கப்பட்ட உதவித் தொகை தவறான வழியில் செலவிடப்பட்டது. தென் வியட்நாம் படைகளிடையே நிலவிய பிளவு அதிகரித்தது. எனவே தலைநகரான சைகான் வீழ்ச்சியை நோக்கி விரைந்தது. நேரடியாகத் தலையிடுவதற்கான சூழ்நிலையை உருவாக்கத் திட்டமிட்ட ஜான்சன் அமெரிக்கக் கடற்படைகளை வட வியட்நாம் கடற்பகுதியில் டான்சின் வளைகுடாவிற்கு அனுப்பி கம்யூனிஸ்ட் பீரங்கிப் படைகளோடு மோதலில் ஈடுபடச் செய்தார். அதைத் தொடர்ந்து வியட்நாமில் போர் ஆரம்பமானது. கம்யூனிஸ்டுகளை எதிர்த்துப்போரிட அமெரிக்கப் படைகள் வியட்நாமிற்கு அனுப்பப்பட்டன. இதனால் அதிக உயிர்ச்சேதம் ஏற்பட்டது. வடக்கில் உள்ள கம்யூனிச அரசுகள் ஹனாய்க்கு ஆதரவாகத் தங்கள் படைகளை அனுப்பி அவ்வளவாக உதவி புரியவில்லை. எனவே அமெரிக்கத் தாக்குதலை தடுத்து நிறுத்தும் பொறுப்பு வியட்காங்கினிடம் தான் இருந்தது. எனினும் ஐக்கிய நாடுகள் தொடர்ந்து குண்டு வீசியது.

1963ஆம் ஆண்டு ஜனவரியில் வியட்காங் தேசியவாதிகள் ஜெட் தாக்குதலை மேற்கொண்டு குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றனர். ஆனால் அது நீடித்த வெற்றியாக இல்லை. எனினும் 1968ம் ஆண்டு மார்ச் மாதத்தில் 20வது அடசரேகக்கு அப்பால் குண்டு வீசுவதை நிறுத்துவதாக ஜாங்சன் அறிவித்தார். இதைத் தொடர்ந்து போரிடும் நாடுகள் இப்பிரச்சினைகள் பற்றி விவாதிக்க மே மாதம் பாரிசில் கூடினர். அந்நிய நாட்டுப் படைகள் வியட்நாமை விட்டு வெளியேற வேண்டுமென வட வியட்நாம் கோரியது. ஆனால் ஆக்கிரமிப்பாளர்கள் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்ததால் பேச்சு வார்த்தையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. போர் தொடர்ந்து நீடித்ததால் வியட்நாமில் தங்களுடைய வெளிநாட்டுக் கொள்கை தோல்வியடைவதாக அமெரிக்கர் உணர்ந்தனர். எனவே வியட்நாம் போரை நிறுத்துவதாக ஜான்சன் 1968ம் ஆண்டு வட வியட்நாம் அதிபரான ஹோசிமினுடம் பேச்சு வார்த்தை நடத்த முயன்றார்.

உள்நாட்டில் கென்னடி பின்பற்றிய தாராளக் கொள்கையைக் கடைப்பிடிக்க ஜான்சன் விரும்பினார். பெரும் சமுதாயக் கொள்ளையின் சிறப்பான அவர் சமுதாயத் திட்டங்களை நடைமுறைப்படுத்தினார். சமத்துவமின்மை, அறியாமை, பின்தங்கிய நிலைமை ஆகியவற்றிலிருந்து சமுதாயத்தில் நலிவுற்ற மக்களை விடுவிப்பதே பெரும் சமுதாயத்தின் நோக்கமாகும். அனுகூலக் கட்டம் என்ற தனது குறிப்பேட்டில் ஒவ்வொரு அவுன்ஸ் வலிமையையும் அமெரிக்க கறுப்பர்களுக்கு நியாயம் பெற்றுத்தர பயன்படுத்தபட வேண்டும் என்பதை அறிந்திருக்கின்றேன் என அவர் எழுதியுள்ளார். இதற்கேற்ப நீக்ரோக்களுக்கு ஆதரவாக பொது உரிமைகள் சட்டத்தை அவர் செயற்படுத்தினர். முதியோர்க்கு வைத்திய உதவி அளிக்கவும், கல்விக்கு பெருமளவில் கூட்டாட்சி அரசு உதவி அளிக்கவும், வறுமை, பின்தங்கிய நிலைமை ஆகியவற்றிற்கெதிராக புனிதப் போரை மேற்கொள்ளவும் வகை செய்யும் சமுதாயத் திட்டத்தை அவர் மேற்கொண்டார். வேலை வாய்ப்புக்கான சாத்தியக் கூறுகளை அதிகரிக்கவும், நலிவைத் தவிர்க்கவும் வகை செய்யும் நிதிக் கொள்கையை ஜான்சன் பின்பற்றினார். அவரது நிர்வாகத்தில் விஞ்ஞானத்துறையில் நாடு முன்னணியில் நின்றது. அமெரிக்க விண்வெளி வீரர்கள் விண்வெளியில் பவனி வந்தனர். லிங்கன் F.D ரூஸ்வெல்ட் ஆகியோரைப் போன்று ஜான்சனும் மிகச் சிறந்தவராக கருதப்படுகிறார். ஏனெனில் அவர்களைப் போன்றே போரின் மூலம் பொது உரிமை அமைதி ஆகியவற்றை பெற ஜான்சன் விரும்பினார்.

1. அமெரிக்காவின் வியட்நாம் தலையீட்டை விவரி.

## பொது உரிமை இயக்கம்

வெள்ளையர்களுக்குச் சமமாக கறுப்பர்களுக்கும் பிற நிறந்தவர்களுக்கும் பொது உரிமை பெறுவதற்கான இயக்கம் தான் பொது உரிமை இயக்கம் ஜசன் ஹோவர், கென்னடி மற்றும் ஜான்சன் பதவி காலத்தில் இவ்வியக்கம் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றது. ஏனென்றால் இந்த குடியரசுத் தலைவர்கள் இன ஒதுக்கல் செய்யப்பட்ட சிறுபான்மையினர் மீது அனுதாபம் காட்டியதோடு சட்டம் மற்றும் நிர்வாக ஏற்பாடுகள் மூலமாக அக்குறைபாட்டினை போக்க முயன்றனர்.

நாட்டின் மக்களுள், ஐரோப்பிய மரபுவழி வந்த வெள்ளையர்கள், ஆப்பிரிக்க கருப்பர்கள், மெக்ஸிகோ சிக்கானோக்கள், சீனா மற்றும் ஜப்பானிலிருந்து வந்த ஆசிரியர்கள் ஆகியோர் இருந்தனர். வெள்ளையர்களுள் ஆங்கிலோ-சாக்சானிய புரோட்டெஸ்டெண்டுகள் மிகவும் செல்வாக்குடன் திகழ்ந்தனர். 1980 வாக்கில் மொத்த மக்கள் தொகையில் 26.5 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் 11.7 சதவீதத்தையும், 14.6 மில்லியன் மக்கள் தொகையை கொண்ட சிக்கானோக்கள் 6.4 சதவீதத்தையும் 1.4 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட

இந்தியர்கள் 0.6 சதவீதத்தையும் கொண்டிருந்தனர். குறைந்த வருவாயும், ஏழ்மையும் கல்வியறிவின்மையும் அதிக இறப்பு விகிதமும் அவர்களிடையே மலிந்திருந்தது. வெள்ளையர்களிடமிருந்து பிரித்து ஒதுக்கப்பட்ட பெரும்பாலும் அவர்கள் ஒதுக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். 200 ஒதுக்கப்பட்ட இடங்களில் வாழ்ந்த செவ்விந்தியர்களிடையே சிசு மரணம் அதிக அளவில் இருந்தது. இது தேசிய வேலையற்றோர் விகிதத்தைவிட பத்து மடங்கு அதிகமிருந்தது. பெரும்பாலும் சீனர்களும், ஜப்பானியர்களுமாயிருந்த ஆசிரியர்கள் சீன நகரம், சிறிய டோக்கியோ எனப்பட்ட இடங்களில் வாழ்ந்தனர். இந்தியாவிலிருந்து சீக்கியர்கள் பெருமளவில் குடியேறியிருந்தனர். அவர்கள் தாடி தலைப்பாகை கூட்டம் எனப்பட்டனர்.

பிற நிறத்தவர்கள் மிக மோசமான இன ஒதுக்கல் முறைகட்கு உள்ளாக்கப்பட்டனர். எனவே உட்நாட்டுப் போருக்குப்பின் சட்டத்தின்முன் எனவே உள்நாட்டுப் போருக்குப்பின் சட்டத்தின்முன் அனைத்து குடிமக்களையும் சமமாகச் செய்யும் 14வது அரசியலமைப்புச் திருத்தமும் இனம், நிறம், முந்திய அடிமைநிலை ஆகியவற்றின் அடிப்படையில் வாக்குரிமையை மாநிலங்கள் பறிப்பதை தடை செய்யும் திருத்தமும் நிறைவேற்றப்பட்டன. விடுதிகள், உணவு விடுதிகள் மற்றும் பொது இடங்களுக்குச் செல்லும் சம உரிமை 1875ல் கருப்பர்களுக்கு உறுதி செய்யப்பட்டது. ஆனால் பிளஸ்ஸி எதிராக பெர்கூசன் வழக்கில் தலைமை நீதிமன்றமானது கருப்பர்களுக்கு தனியிடம் ஒதுக்குவது, இனங்களுக்கான அரசியலமைப்பின் சமத்துவ உரிமையை மீறியதாகாது எனத் தீர்ப்பு வழங்கியது. அதன் விளைவாக பல மாநிலங்கள் தனியாகப் பிரித்து வைக்கக் கூடிய ஜிம்க்ரோ எனப்பட்ட சட்டங்களை இயற்றின. அச்சுறுத்தலின் மூலம் அல்லது எழுத்தறிவு சோதனை மூலம் வாக்களிப்பதை தடைசெய்தல், குறைந்த கூலிக்கு நீண்ட நேரம் பணியாற்ற கட்டாயப்படுத்தப்படல், தனித்தொதுக்கப்பட்ட இடங்களில் வாழுமாறு கட்டாயப்படுத்தப்படல், விடுதிகளில் தனியிடங்களில் அமருமாறு செய்தல் போன்ற பல்வேறு இன ஒதுக்கல் முறைகளுக்கு கறுப்பர்கள் உள்ளாக்கப்பட்டனர். சமூகத் தடைகள் மற்றும் கடுமையாக நடத்தப்படல் ஆகிய கொடுமைகள் காரணமாக கருப்பர்கள் கடினமாக உழைப்பதிலோ, பொருள் சேர்ப்பதிலோ ஆர்வம் காட்டவில்லை. இவ்வாறு நீக்ரோக்கள் அவநம்பிக்கையில் முழ்கி கிடந்தபோது, வெள்ளை இன வெறியர்கள் அவர்களை கண்மூடித்தனமான முறையில் மிருகத்தனமாக நடத்தினர்.

எனினும் பல தலைவர்களும், நிறுவனங்களும் இந்த சமூகத் தீமையை அகற்றும் பணியிலிறங்கின அவர்களுள் வெள்ளையர்களும் கருப்பர்களும் இடங்குவர். சமுதாய அநீதிகளாலும் தடைகளாலும் உருவாக்கப்பட்ட ஒழுக்கமின்மை, நெறிபிறழ்வு மற்றும் சிதறிய குடும்பங்கள் ஆகியவைகளில் மனித வாழ்க்கை அச்சமூட்டுகின்ற வகையில் வீணழிவதை கருப்பினத் தலைவர்கள் குறிப்பாக, பிராங்களின் பிராஸியர் கண்டார். குன்னார் மிர்டல் என்ற ஸ்வீடிஷ் அறிஞர் நீக்ரோ பிரச்சினையானது சுதந்திரம், சமத்துவம் என்ற அமெரிக்க

கோட்பாடுகளிடையிலான அராஜகம் எனக் குறிப்பிட்டார். 1909 ல் கருப்பர்களின் முன்னேற்றத்திற்கான தேசியக்கழகம் நிறுவப்பட்டது. கறுப்பர்களுக்கு வாக்குரிமை, சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படல், சமமான வேலைவாய்ப்பு, பொது இடங்களில் தனித்தொதுக்கப்படுதலை ஒழித்தல், இன அடிப்படையில் ஊதியம் வழங்கப்படுவதை ஒழித்தல், தொழிற்சங்கங்களில் சேரும் சமவாய்ப்பு ஆகியவற்றை நிறைவேற்றல் அக்கழகத்தின் செயல்திட்டமாக இருந்தது. வாலி.ஃ.பார்டு என்பார். "இஸ்லாம் நாடு" என்ற அமைப்பை நிறுவினர். அது அனைத்து வெள்ளையர்களும் பேய்கள், கருப்பர்கள் எதிரிகள் எனப் பழித்தது. ஸ்டோக்கெலி கார்மைக்கேல், ராப்ப்ரௌன் ஆகியோர் "கருப்பர் சக்தி" என்ற குரலெழுப்பினர். 1943 ல் இன சமத்துவ காங்கிரஸ் என்ற அமைப்பை உருவாக்கினர். அது விடுதிகள், வானங்கள் மற்றும் பொது இடங்களில் தனியே ஒதுக்கி வைப்பது கைவிடப்படவேண்டுமென்றும் வன்முறையற்ற நேரடி நடவடிக்கை போன்ற போராட்ட முறைகளைக் கடைபிடிக்க வேண்டுமென்றும் கூறியது.

இவ்வியக்கத்தினால் மோதல்களும், ஒதுக்கி வைக்கப்பட்ட இடங்களில் கலகங்களும் மற்றும் அமைதியான நேரடி நடவடிக்கைகளும் நடைபெற்றன. 1944 ல் ஸ்மித் எதிராக ஆல்ரைட் வழக்கில் தலைமை நீதிமன்றம் இரயில் வண்டிகளில் தனி உணவு அறைகள் ஒக்லகாமா டெக்காஸ் பல்கலைக்கழகங்களில் தனித்தோதுக்கும் முறையைத் தடைசெய்து தீர்ப்பு வழங்கியது. இது அவ்வியக்கம் பெற்ற சிறப்பான வெற்றியாகும். 1954ல் டொபேகா கல்விக்கழகம் எதிராக பிரௌன் வழக்கில் தலைமை நீதிமன்றமானது, பொதுக் கல்வி நிறுவனங்களில் இன ஒதுக்கல் முறை அரசியலமைப்பிற்கு முரணானது எனத் தீர்ப்பு வழங்கியது. இந்த தீர்ப்புகளினால் ஊக்கமடைந்த "கருப்பர்களின் முன்னேற்றத்திற்கான தேசியக் கழகம்" ஐந்து கல்விக் கழகங்களுக்கு எதிராக வழக்க தொடர்ந்து தனியாக கல்வி வசதி அளிப்பது சட்டவிரோதமானது என்று அறிவிக்கச் செய்தது ஆனால் வெள்ளையர்கள் கூகிளக்ஸ் கிளான் வெள்ளை குடிமக்கள் கவுன்சில் ஆகிய அமைப்புகள் மூலம் வன்முறையில் ஈடுபட்டு வெள்ளையர் பள்ளிகளில் கருப்பு மாணவர்கள் சேராவண்ணம் தடுத்தனர். இது கறுப்பர்களின் எதிர் நடவடிக்கைகளைத் தூண்டியது. அதனால் ஆயுததாக்குதல்கள் உள்ளிருப்பு ஆர்ப்பாட்டங்கள், பேருந்து சுதந்திர கட்டணமில்லா சவாரி புறக்கணிப்பு ஆகியவைகள் நடைபெற்றன. 1955-56 மார்ட்டின் லூதர் கிங் அலபாமாவில் மாண்ட்கோமரி போக்குவரத்திற்கெதிராக 381 நாள் புறக்கணிப்பு போராட்டம் நடத்தினார். இது பேருந்துகள் ஒதுக்கல் முறைகளை கைவிடுமாறு நகராட்சி நிர்வாகத்தை கட்டாயப்படுத்தியது.

பரந்த நோக்குள்ள குடியரசுத் தலைவர்கள் அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமை என்ற கோரிக்கைக்கு ஆதரவாயிருந்தனர். போர் முயற்சிகளுக்கு கருப்பர்களின் ஆதரவு இன்றியமையாததாய் இருந்ததால் 1941ல் ரூஸ்வெல்ட் பதவி நியமனங்களில் இன ஒதுக்கலை ஒழிக்கும் சட்டதர்தை இயற்றினார். ட்ரூமன் படைகளில் இன ஒதுக்கலை

ஒழிக்கும் சட்டத்தை இயற்றினார். 1957 மற்றும் 1960 ஆண்டு பொது உரிமைச் சட்டங்களை இயற்றினார். நிறம், இனம், சமயம் காரணமாக வாக்குரிமை மறுக்கப்படும் நிலைகளை ஆராய்ந்தறிய பொது உரிமைக் குழு நிறுவப்பட முதற் சட்டம் வகை செய்தது. இரண்டாவது சட்டம் அக்குழுவின் முடிவுகளை மீறுபவர்களைத் தண்டிப்பதற்கு வகை செய்தது. இதனைத் தொடர்ந்து மேலும் அதிக அளவு சமத்துவம் கோரி ஆர்ப்பாட்டங்களும் கட்டணமில்லா சவாரிகளும் நடைபெற்றன. 1963ல் மார்ட்டின் லூதர் கிங் 1,50,000 பேர்களைக் கொண்ட அணிவகுப்பை வாஷிங்டனுக்கு நடத்திச் சென்றார். "கென்னடி மற்றும் ஜான்சன் பதவி காலத்தில் இன ஒதுக்கல் மற்றும் ஏழ்மை ஆகியவற்றை ஒழிக்க பரந்த அளவில் சட்டமியற்றும் திட்டத்தைத் தொடங்கினர். பொது உரிமைக்கான கென்னடியின் தீவிர திட்டங்கள் காங்கிரசில் எதிர்ப்பை உண்டுபண்ணின. ஆனால் படுகொலை செய்யப்பட்ட குடியரசுத் தலைவருக்கு ஆதரவு அலை காரணமாக 1964ம் ஆண்டு பொது உரிமைகள் சட்டம், 1965ம் ஆண்டு வாக்குரிமைகள் சட்டம், 1968ம் ஆண்ட பொது உரிமைகள் சட்டம ஆகியவை நிறைவேற்றப்பட்டன. இச்சட்டங்கள் இனம் மற்றும் பால் வேற்றுமை காரணமாக வாக்களித்தல், வேலைவாய்ப்பு, பொது இடங்கள் ஆகியவற்றில் காட்டப்படும் வேறுபாடுகளை ஒழித்தன. இவற்றின் விளைவாக கருப்பார்கள் வாக்களித்தல், தேர்தலில் போட்டியிடல், வேலைவாய்ப்பு, பொது இடங்களில் தங்குதல் போன்றவற்றில் வெள்ளையர்களுக்கு சமமான வாய்ப்பினைப் பெற்றனர்.

இத்தகைய சாதனைகளைப் புரிந்தபின் 1967ல் பொது உரிமை இயக்கம் வீழ்ச்சியுறச் தொடங்கியது. கருப்பர் நிறுவனங்களின் உட்பூசல்கள், அமெரிக்க வெளியுறவுக் கொள்கையை கருப்பர்கள் குறைகூறல் வெள்ளையர்களின் எதிர்ப்பியக்கம் ஆகியவை காரணமாக பொது உரிமை இயக்கம் வலுவிழந்தது. கருப்பர்களுக்க பொது உரிமை அளிப்பதை எதிர்க்கும் வெள்ளையர்கள் குடியரசுக் கட்சியின்கீழ் அணி திரண்டனர். அது நிக்சன் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வகை செய்தது. நிக்சனும் போர்டும் பொது உரிமைகளுக்கு கூட்டாட்சி அரசு ஆதரவளிப்பதை எதிர்த்தனர். கருப்பர்களின் வன்முறைகளை ஒடுக்கினர். இன வேற்றுமை தப்பெண்ணங்கறள் முற்றிலும் ஒடுக்கப்பட முடியாவிட்டாலும் அந்த இயக்கம் இதுவரை பெற்ற வெற்றிகளில் தாராளக் கோட்பாட்டினர் மனநிறைவடைந்தனர்.

1. பொது உரிமை இயக்கத்தைப் பற்றி நீவீர் அறிவது என்ன?

## அமெரிக்கா தொழில் வளர்ச்சி உருவாகுதல்

உலகப் போருக்குப்பின் ஏற்பட்ட கஷ்டமான நிலையிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஜனாதிபதி போர்ட் நிர்வாகத்தோடு தன்னை விடுவித்துக் கொண்டது. வியட்நாமும், கம்போடியாவும் தங்களுடைய சுதந்திரத்தை நிலைநாட்டியபோது,

தென்கிழக்காசியாவில் அமெரிக்கர்களின் தலையீடு முடிவுற்றது. தென்கிழக்கு ஆசியக் கூட்டமைப்பு சீர்குலைந்தது. ஐக்கிய நாட்டுச் சங்கத்தில் செஞ்சீனா அங்கீகாரம் பெற்றபோது தைவான் அதிலிருந்து விலகியது ஈரானில் ஏற்படுத்தப்பட்ட கிளர்ச்சியினால் ஷா பதவியிலிருந்து நீக்கப்பட்டார். நம்பிக்கைக்குரிய நாடு ஈரான் என்று கருதிய ஐக்கிய நாட்டிற்கு இப்போது அது நம்பிக்கையற்றதாகத் தோன்றியது. ரஷியா ஆப்கானிஸ்தானில் தலையிட்டு வளைகுடாவிலுள்ள எண்ணெய் பகுதிகளை அச்சுறுத்தியது. குவாடமாலாவில் இடதுசாரிகளின் ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்டது. நாடுகளுக்கிடையே பரஸ்பர உறவுகளை ஏற்படுத்துவதற்காக இராணுவக் கேந்திர குறைப்புப் பற்றி பேச்சு வார்த்தை நடைபெற்றது. ஆனால் அது ஆயுதக் குறைப்பில் எந்தவித திருப்திகரமான முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. மரபுரிமையாகிய புதிய திட்டம் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியது. பண வீக்கம் தொடர்ந்து இருந்து வந்தது. இத்தகைய கொடூரமான நடைமுறைகள் நாட்டில் தேவையற்ற தலைவர்களின் தலையீடுகளுக்கு வாய்ப்பளித்தது. ஜனாதிபதி கார்ட்டர் பின்பற்றிய அளவிற்கு நடப்பியல் கொள்கையை ஜனாதிபதி ரீகனால் பின்பற்ற இயலவில்லை.

**கார்ட்டரும் ஒழுக்க நெறியும்**

192 ஆம் ஆண்டு பிறந்த ஜிம்மி கார்ட்டர் நிலக்கடலை வியாபாரியாக இருந்து, பின் ஒரு அரசியல்வாதியாகவும், ஜார்ஜியாவின் கவர்னராகவும் பணியாற்றினார். 1976 ஆம் ஆண்டுத் தேர்தலில் ஜனநாகக் கட்சியின் வேட்பாளரான இவர் குடியரசுக் கட்சியின் வேட்பாளரான போர்டைத் தோற்கடித்து ஜனாதிபதியானார். கார்ட்டரின் நிர்வாகத்தின் போது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அமைதியின்மைக் காணப்பட்டது. இதன் விளைவாக போர் திறன் கண்ணோட்டத்துடன் ஒழுக்கநெறிக் கொள்கையை அனுமதித்தார்.

புண வீக்கத்தைக் குறைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து வேலையில்லாத திண்டாட்டம் இருந்து வந்தது. ஜப்பான், ஐரோப்பா போன்றவற்றிலிருந்து வந்த போட்டியினால் இரும்பு தொழிற்சாலை நஷ்டமடைந்தது. கோதுமை, தானியம், சோயா பீன்ஸ் போன்றவற்றில் காணப்பட்ட விளைச்சல் விவசாயப் பண்ணைப் பொருட்களின் விலையைக் குறைத்தது. இதன் விளைவாக விவசாயிகளிடையே பதட்ட நிலை ஏற்பட்டது. அரேபிய எண்ணெய் தடை உத்தரவினால் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறை, சமநிலை வாணிபத்தைப் பாதித்தது.

தாராளக் கொள்கையில் திட நம்பிக்கை கொண்டிருந்த இவர் ஒழுக்க நெறிக் கொள்கையைப் பின்பற்ற முயன்றார். ஆனால் அது ஆபத்தாக இருந்தது. மனித உரிமைகளுக்காக தன்னை அர்ப்பணம் செய்து கொண்டார். அதன்படி மனித உரிமைகளை மதிக்காத நாடுகளுக்கும் போர்த்திறம் சாராத நாடுகளுக்கும், பொருளாதார, இராணுவ உதவி வழங்குவதை நிறுத்தினார். அதன்படி அர்ஜென்டைனா, உருகுவே, எத்தியோப்பியா போன்ற நாடுகளுக்கு உதவி நிறுத்தப்பட்டது. ஆனால் தென் கொரியாவிற்கு அது தொடர்ந்து அளிக்கப்பட்டது. 1977ல் பனாமாவுடன் இரு உடன்படிக்கைகளைச் செய்தார்.

முதல் உடன்படிக்கையின் படி பனாமாவிற்கு கால்வாயினை நிர்வகிப்பதற்கும், அதிலிருந்து வரும் வருவாயின் ஒரு பகுதியைப் பெறுவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டது. இரண்டாவது உடன்படிக்கையின் படி கால்வாய் நிர்வாகம் கி.பி. 2000 லிருந்து அந்நாட்டிற்கு அளிக்கப்பட வகை செய்யப்பட்டது. எனினும் ஐக்கிய நாடுகளுக்குக் கால்வாயைப் பாதுகாப்பதற்கு உரிமை நிரந்தரமாக வழங்கப்பட்டது. போர்க்கப்பல்களும் செல்லுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. மத்திய கிழக்கில் அரேபிய நாடுகள் இஸ்ரேலுக்கு எதிராகப் போரிட்டன. வாஷிங்டன் முயற்சியினால் எகிப்தும், இஸ்ரேலும் 1978ல் ஒரு சமாதான உடன்படிக்கையைச் செய்து கொண்டன. வெளிநாட்டுச் செயலாளரான வான்ஸ் என்பவர் கொடிய அணு ஆயுதப் படைக்குறைப்பு பற்றி ரஷியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால் புதிய ஆயுத முறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியினால் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியவில்லை. எனினும் 1979ல் கார்ட்டரும், பிரஷ்னேவும் இரண்டாம் கொடிய அணு ஆயுதப் படைக்குறைப்பு உடன்படிக்கை செய்தனர். அதன்படி இரு நாடுகளும் பலவகையான வெடி குண்டுகளையும், வெகு தொலைவிற்கு விட்டெறியும் ஆயுதங்களையும் குறைத்துக் கொள்ளச் சம்மதித்தனர். குடியரசுவாதிகளின் தலைவரான ரீகன் இது நாட்டிற்கு நல்லதல்ல என்று கூறினார். செனட் இந்த கருத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தது.

சீனாவுடன் ஏற்படுத்தப்பட்ட சுமுகமான உறவானது ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. சீனாவில் கம்யூனிஸ்ட ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்டபின் முப்பதாண்டுகளாக ஐக்கிய நாடுகளும் சீனாவும் ஒன்றையொன்று எதிர்க்கும் நிலையிலிருந்தன. கொரியாவில் இவ்விரு நாடுகளும் போரில் ஈடுபட்டன. அமெரிக்காவின் சூழ்ச்சியினால் சீனா, ஐக்கிய நாடுகள் சங்கத்திலிருந்து விலக்க வைக்கப்பட்டபோது சியான்கே சேக்கினுடைய தைவான் அதன் இடத்தைப் பெற்றது. எனினும் கம்யூனிஸ்டுகள் ஆட்சியைப் பலப்படுத்தியதால் செஞ்சீனாவின் முறையான தகுதியை மறுப்பது சரியானதன்று என உணரத் தொடங்கியது. 1972ல் ஜனாதிபதி நிக்ஸன் பீகிங்கிற்கு விஜயம் செய்தார். ஏழு வருடங்களுக்குப் பிறகு சீனாவின் உதவிப் பிரதமரான தெங் கிஸோ பிங் (Teng Hsiago Ping) வாஷிங்டனுக்கு வந்தார். இதனால் பண்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது. 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் தேதியிலிருந்து இரு நாடுகளுக்கிடையில் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டன. இதன் விளைவாக தைவான் இராஜதந்திர அந்தஸ்தை இழந்துவிட்டது. ரஷியா, சீனாவிற்கு இடையில் ஏற்பட்ட சண்டையில் அமெரிக்கா சீனாவுடன் சேர்ந்து கொண்டது.

இரு நாடுகளின் வளர்ச்சியானது உலக நாடுகளின் ஆர்வத்திற்குக் கேடு விளைவிக்கக் கூடியதாக இருந்தது. அவை ஈரானில் மன்னராட்சியின் வீழ்ச்சியையும், ஆப்கானிஸ்தானில் ரஷியாவின் தலையீடும் ஆகும். நம்பிக்கைகுரியவராக ஈரானின் ஷாவை அமெரிக்கா கருதியது. அதனுடைய எண்ணெய் வளங்களைச் சுரண்டியது. பாதுகாப்பிற்கு போர்த் தளவாடங்களை வழங்கியது. எனினும் 1972 ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சியின் போது ஷா நாட்டை விட்டு ஓடினார். அவருக்குப் பின் அயோதுல்லா கோமினி (Ayotollah

Khomeini) பதவிக்கு வந்தார். ஷா அமெரிக்காவிற்குத் தப்பியோடினார். ஷாவிற்குத் தஞ்சம் அளித்ததால் ஈரானிலள்ள அமெரிக்கத் தூதரகத்தை ஈரானியர்கள் தாக்கினர். அங்குள்ள அதிகாரிகளைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வந்தனர். கார்ட்டர் போர்த் தளவாடங்களைப் பாரசீக வளைகுடாவிற்கு அனுப்பி, கைதிகளை விடுதலை செய்ய முயன்றார். அம்முயற்சியில் தோல்வியடைந்ததால் அவருடைய புகழ் மங்க ஆரம்பித்தது. 444 நாட்களுக்குப்பின் பணயக் கைதிகள் விடுதலை பெற்றனர். இச்சமயத்தில் ஆப்கானிஸ்தானில் ரஷியா தலையிட்டது. கூட்டுச் சேரா நாடான இது, ரஷியாவின் ஆதிக்கம் இந்தியக் கடலில் ஏற்படுவதற்குத் தடையாக இருந்தது. 1979ல் ரஷியா படைகளை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பி அங்கு தனக்கு ஆதரவான ஒரு அரசை ஏற்படுத்தியது. இந்த ரஷியாவின் தலையீட்டினால், பாரசீக வளைகுடாவிலுள்ள வளமான எண்ணெய் பகுதிகளுக்கு ஆபத்து ஏற்பட்டது. இதனாலும் அமெரிக்கப் படைகள் வியட்நாம், கம்போடிய, குவாடமாலா போன்ற இடங்களில் தோல்வியடைந்ததாலும் அமெரிக்க செல்வாக்கு மங்கியது. ஆகவே கார்ட்டர் நிர்வாகம், ரஷியாவின் முன்னேற்றம் ஆபத்து விளைவிக்கக்கூடும் என்று எண்ணி அதனை தடைசெய்ய விரும்பியது. இதன் விளைவாக கார்ட்டர் கொள்கை உருவாகியது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நலன்களுக்காக பாரசீக வளைகுடாவை போர்ப்படைகள் மூலம் பாதுகாக்கப் போவதாக கார்ட்டர் கூறினார். இக்கொள்கைக்கு ஆதரவாக அமெரிக்க ஐக்கிய நாடுகள் தன்னுடைய படை பலத்தை இந்தியக் கடலில் பெருக்கியது. குழப்பம் உள்ள இடங்களில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக விரைவாக விரிவுபடுத்தும் படை முறையைக் (Rapid Deployment Force) கார்ட்டர் கொண்டு வந்தார். இவற்றின் மூலம் அவரது நோக்கம் ஈடேறவில்லை. எனினும் மக்கள் ஜனநாயகக் கட்சியின் மீது அதிருப்தியடைந்தனர்.